424

தமிழ் இலக்கிய வரலாறு

ச. சாமிமுத்து எம்.ஏ.

O-V
N62-2
100581

தமிழ்
இலக்கிய வரலாறு

ஆசிரியர் :
ச. சாமிமுத்து, எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
தூய சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி–2.

யுனைட்டெட் பப்ளிஷர்ஸ்
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி-2.
1964

முதற் பதிப்பு : 1962 டிசம்பர்
இரண்டாம் பதிப்பு : 1964 ஏப்ரல்
(விரிவுபடுத்தப்பட்டது)

உரிமை ஆசிரியருக்கே

விலை ரூ. **3–50**

ஜோதி பிரிண்டர்ஸ்,
திருச்சி–2,

பதிப்புரை

பொதுவாக இலக்கியமென்பது ஈடுபாடுகொள்கின்றவர்களை உணர்வு வலையில் சிக்கவைத்து, சிந்தைக்கு விருந்து வைப்பதாகும். சிறப்பாக, தமிழிலக்கியம் இவ்வியல்புகளோடு சொல்லாலும், பொருளாலும் சுவையூட்டி, இன்பங்கூட்டி எல்லோரையும் மகிழச்செய்யும் மாண்பு கொண்டது.

இத் தமிழிலக்கியச் செல்வம் மிகு பழங்காலத்தே தோன்றி, காலத்திற்கும் சமயத்திற்கும் ஏற்ப வளர்ச்சியுற்று வாழ்ந்து வரும் வாய்மையுடையதாகும். இச் சொற்செல்வத்தின் அந்தந்தக் கால வளர்ச்சியையும், வாழ்வையும் வரலாற்று முறையில் பேராசிரியர் திரு. ச. சாமிமுத்து, எம்.ஏ. அவர்கள் தமிழ் மாணவர்களின் தேவை கருதியும், தமிழ் மக்களின் பயன் கருதியும் இனிக்கும் புதிய தமிழ் நடையில் விரிவாகவும், விளக்கமாகவும் ஆக்கி அளித்துள்ள திறம் பாராட்டுதற்குரியதே. ஆகவே, இவ்வரிய நூலை இரண்டாம் பதிப்பாக வெளியிடுவதில் நாங்கள் பெருமைகொள்ளுகின்றோம்.

தமிழ் பயிலும் மாணவர்களும், தமிழ்ப் பெருங்குடி மக்களும் நூலாசிரியரின் நற்பணியைப் போற்றவும், எங்கள் தமிழ்த்தொண்டை ஆதரிக்கவும் விழைந்து வேண்டுகின்றோம்.

யுனைட்டெட் பப்ளிஷர்ஸ்

அணிந்துரை

மக்கள் வாழ்விலிருந்து அரும்பி, அவர்தம் எண்ணத்திற்கு உருவளித்து மலர்வது இலக்கியம். அதனை மக்கள் வாழ்க்கைப் படமென்றே கூறலாம்.

ஓரினத்தின் வரலாற்றை அறிதற்கும், அவ்வினத்தின் வாழ்வியலை உணர்தற்கும், அவ்வினத்தின் தாய்மொழி இலக்கியங்களைத் துய்ப்பதற்கும் இலக்கிய வரலாற்றறிவு இன்றியமையாதது.

தாய்மொழி மூவாயிரமாண்டுகட்கு மேலாகத் தோன்றிய எண்ணற்ற இலக்கியங்களைத் தன்பால் கொண்டுள்ளது. இவ்விலக்கியங்கள் பன்னூற்றுக் கணக்கான புலவர்தம் உள்ளங்களோடும், கோடிக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்வோடும் பின்னிப் பிணைந்துள்ளன. இவ்விலக்கியங்களைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மேலும் மேலும் பயின்று பயனெய்துதற்குத் தமிழ் இலக்கிய வரலாற்றறிவு இன்றியமையாதது என்ற நோக்கத்தோடு சென்னைப் பல்கலைக் கழகத்தார் அண்மையில் பாடத் திட்டம் ஒன்று வெளியிட்டுள்ளனர்.

அப்பாடத் திட்டத்தை யொட்டி, பேராசிரியர் திரு. ச. சாமிமுத்து, எம். ஏ. அவர்கள் கல்லூரிகளில் பயிலும் மாணவர் நிலைக்கு ஏற்பத் தமிழ் இலக்கிய வரலாற்றைச் சங்ககால இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், பிற்கால இலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள் என வகுத்துக்கொண்டு மேனாட்டு இலக்கிய வரலாற்றாசிரியர்கள் போக்கைத் தழுவி, விளக்கமாகவும், தெளிவாகவும் இனிய எளிய நடையில் எழுதியுள்ளார். இந்நூல் கல்லூரிகளில் தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பெருந்துணை செய்யும். ஆசிரியரின் முயற்சி வெற்றிபெறுக.

திரு. ஐயன்பெருமாள் கோனார்

மதிப்புரை

ஒரு நாட்டின் வரலாற்றில் நிலைபெற்ற போற்றுதலுக்குப் பெரிதும் உரியது அதன் இலக்கிய வரலாறு ஆகும். எழுத்து, சொல், பேச்சு, பாட்டு, பண்பாடு, கலை, ஒழுகலாறு, நாகரிகம் முதலியவற்றின் தோற்றம் வளர்ச்சி பற்றிய பல துறைகளை இலக்கியம் தன்னகத்தே கொண்டுள்ளது. என்றாலும், அறிஞர் அருளிய வண்ண எண்ணங்களான நல்லுரைக் கோவைகளையும் கவிஞர் அணிபெறப்பொதிந்த பாமணிக் கோவைகளையும் இலக்கியம் என்ற சொல் சிறப்பாகக் குறிக்கின்றது. இந்தக் குறிப்பின் வழி நின்று சங்க காலம் தொடங்கி அண்மைக்காலம் வரை அமைந்த இலக்கியப் படையல்களை வரிசைப்படுத்திச் சீர்தூக்கி அவற்றின் நல்லியல்புகளைத் தொகுத்துக் காணும் காட்சியே இந்த வரலாற்றின் உட்கிடக்கை.

தமிழ் இலக்கியம் மிகத் தொன்மைவாய்ந்தது; மேன்மை மிக்கது. உலக இலக்கிய மன்றங்களில் ஒளிர்மணி மன்றமாக விளங்குவது தமிழ் இலக்கிய மன்றம். இதில் எல்லாத் திசையும் இசைந்து வருகின்றது. சாதி சமய இன நிற வேறுபாடு இதில் இல்லை. இங்குள்ள பணியாளர் தமிழகத்தினர் மட்டுமல்லர்; பல்வேறு நாட்டினர்; பற்பல சமயச்சார்பினர்; பலப்பல நிலையினர். தமிழ்த்தொண்டர்கள் என்ற தன்மையில் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்; உடன் பிறப்பு நேயம் பூண்டவர்; நம் மணிமொழி மன்றத்தின் பொறுப்பான உறுப்பினர்.

நம் இலக்கியத்தை உருவாக்கி வளர்த்த சான்றோர்களின் சேவைகளைத் திறனாய்வு நோக்குடன் மதிப்பிடுவது இந்த இலக்கிய வரலாறு. காய்தல் உவத்தல் இன்றி ஒரே சீரான அளவுடன் கட்டுரைக்கின்ற இந்நூலாசிரியர் திரு **ச. சாமிமுத்து**, எம்.ஏ., அவர்கள் இக்காலத்துத் தேவை அறிந்து சேவை செய்துள்ளார். பொதுவாகத் தமிழ் இலக்கிய ஆர்வமுடையார்க்கும் சிறப்பாகப் பல்கலைக்கழக மாணவர்க்கும் இந்நூல் நிறைந்த பயன்தரும் என்று நம்புகின்றேன்.

ரம்போலா மாஸ்கரேனஸ்

முதற் பதிப்பு முன்னுரை

தித்திக்குந் தீந்தமிழ் கற்றேன்; அதன் சொற்றேனைப் பருகினேன். மற்றையோரும் நற்றமிழின் வாழ்வறிந்து, வரலாறறிந்து போற்றவேண்டும், போற்றிக் கற்கவேண்டும் என்றெண்ணினேன். ஆகவே, புதுமை குன்றாத் தமிழ்ப் பூங்காவிலே பூத்த பொலிவுறு மலர்களை மனம்வைத்துப் பறித்தேன்; வரிசைப்படுத்தி வண்ணமுறு மாலையாகத் தொடுத்தேன்; உங்கள் உள்ளங் குளிரக் கொடுத்தேன்.

பெற்றீர்கள்; பெருமகிழ்ச்சி உற்றீர்கள். எனக்கு வெற்றி கிட்டிற்று. நீங்கள் தந்த ஊக்கம் எண்ணுள்ளத்திற்கு ஆக்கம். ஆகவே, மீண்டும் இந்நூலை வெளிக்கொணர எனக்கு நோக்கம்.

இரண்டாம் பதிப்பு முன்னுரை

ஓராண்டிற்கு முன்பு என் முயற்சிக் கழனியிலிருந்து பூத்துப் புதுமணம் பரப்பிய புத்தகங்கள் யாவும் அன்பர்கள் பெற்று அரவணைத்துக் கொண்டதால் அவர்கள்தம் ஆதரவின் அடிப்படையில் மீண்டும் பாடத்திட்டத்தை ஒட்டி விரிவுபடுத்தி இந்நூலை இரண்டாம் பதிப்பாக வெளிக் கொணர்ந்துள்ளேன்.

தமிழ் பயிலும் அன்பு மாணவர்களும், ஆதரவு நல்கும் பெரியோர்களும் என் முயற்சியை மேலும் வரவேற்பார்கள் என்று எண்ணுகின்றேன். நல்லுள்ளங் கொண்டோர்க்கு என் நன்றி.

எழுத்துலகிற்கு என்னை அழைத்து வந்து இந் நன்முயற்சியில் ஈடுபடச் செய்து நூல் பல ஆக்க தக்க ஆதரவு நல்கிவரும் யுனைட்டெட் பப்ளிஷர்ஸ் உரிமையாளர் உயர்திரு. ப. கோவிந்தனர் அவர்கட்கும், இந்நூல் நன்முறையில் வெளிவர உதவி புரிந்த தமிழ்த் தொண்டர் திரு. அ. அரங்கராசன் அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி.

தூய சூசையப்பர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி,
27—4—1964.

ச. சாமிமுத்து

SYLLABUS

B. A., & B. Sc., Part II (b), Paper III

A General History of Tamil Literature.

(Scope : as mush as for a non-detailed book)

I. Ancient Tamil Literature:

(*i*) *Sangam Period*: Three Sangams-their existence-different opinions-Nakkirar's reference to the Sangams-First sangam and Second sangam–Agattiyanar and his disciples-Agattiyam, Tolkappiyam, and other works-Third Sangam-Anthologies-Ettutokai and Pattuppattu-Classifications as Agam and Puram-its significance.

(*ii*) *Kilkanakku*-Eighteen works: Ethical works and other Literary works-Tirukkural and Naladiyar.

(*iii*) *Kavyams*: Twin Epics-Silappadhikaram and Manimekhalai-their forms and message.

II. Medieval literature:

(*i*) *Religious Hymns*: Nayanmars and Alwars Thevaram, Thiruvacagam and the Sacred four thousand Hymns-Twelve Thirumarais.

(*ii*) *Contribution of religious institutions to Tamil literature and grammar*: Jains and Buddhists-Perungathai Jivaka chindamani and other Kavyams-Grammatical works-Yapparungalam, Nannul etc.–Saivites and Vaishnavites-Periyapuranam and Kambaramayanam-other puranas-Adaptations from Sanskrit works.

III. Later works:

(*i*) *Minor Literary Works*: Prabandams-Some important works among them-lack of originality in most of the Prabandams.

(*ii*) *Commentaries*: Commentators on Alwar's work-Commentaries on grammatical works-Ilampuranar, Nachinarkkiniyar and Parimelalagar.

(*iii*) *Minor Poets*: Included in Thanippadal Thirattu-Sthalapuranams-Kumaraguruparar and Sivaprakasar-Their important works.

IV. Modern Literatur :

Contact with Western Scholars-Rev. Beschi's service Thempavani-other European Scholors-Dr. Caldwell and Dr. G. U. Pope-Islamic Literature-Seerapuranam-Arutpa of Ramalinga Swamigal-Arumuga Navalar, Meenakshisundaram Pillai-Vedanayagam Pillai's Prathapa Mudaliar Charitram, the first novel in Tamil-Professor Sundaram-Pillai's Manon maneeyam-Maraimalai Adigal and V. G. Suryanarayana Sastriyar-Dr. Swaminatha Aiyar, Subrahmanya Bharatiyar and Vi. Kalyanasundra Mudaliar-Journalism-Growth of Novels and Short stories-Pammal Sambanda Mudaliyar and his dramas.

உள்ளுறை

முதற் பாகம்

I. சங்ககாலத் தமிழிலக்கியங்கள்

எண்	பொருள்		பக்கம்
1.	உலகமும் தமிழரும்	...	1
2.	தமிழகமும் தமிழரும்	...	9
3.	தமிழும் தமிழரும்	...	16
	i. தமிழின் தொன்மை	...	17
	ii. தமிழ்மொழியின் தனிச் சிறப்பு	...	22
	iii. முத்தமிழ்	...	28
4.	முச்சங்கச் செய்திகள்	...	43
	i. சங்கங்கள் இருந்தனவா?	...	44
	ii. சங்கங்களும் சான்றுகளும்	...	46
	iii. தலைச்சங்க வரலாறு	...	48
	iv. இடைச்சங்க வரலாறு	...	50
	v. கடைச்சங்க வரலாறு	...	51
5.	அகத்தியரும் அகத்தியமும்	...	54
6.	தொல்காப்பியரும் தொல்காப்பியமும்	...	59
7.	சுவைமிகு எட்டுத்தொகை	...	70
	i. நற்றிணை	...	71
	ii. குறுந்தொகை	...	74
	iii. ஐங்குறுநூறு	...	77
	iv. பதிற்றுப்பத்து	...	81

எண்	பொருள்	பக்கம்
	v. பரிபாடல்	... 86
	vi. கலித்தொகை	... 89
	vii. அகநானூறு	... 95
	viii புறநானூறு	... 99
8.	பதம்மிகு பத்துப்பாட்டு	... 107
	i. திருமுருகாற்றுப்படை	... 108
	ii. பொருநராற்றுப்படை	... 112
	iii. சிறுபாணாற்றுப்படை	... 116
	iv. பெரும்பாணாற்றுப்படை	... 119
	v. முல்லைப்பாட்டு	... 123
	vi. மதுரைக்காஞ்சி	... 125
	vii. நெடுநல்வாடை	... 130
	viii. குறிஞ்சிப்பாட்டு	... 133
	ix. பட்டினப்பாலை	... 136
	x. மலைபடுகடாம்	... 140
9.	முத்தொள்ளாயிரம்	... 144
10.	பதினெண்பாக்கள்	... 147
11.	சிலப்பதிகாரம்	... 164
12.	மணிமேகலை	... 170
13.	சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகள்	... 174

இரண்டாம் பாகம்

II. இடைக்காலத் தமிழிலக்கியங்கள்

14. இறையுணர்வூட்டும் இசைப்பாக்கள் ... 182
i. நாயன்மார்கள் ... 182
ii. ஆழ்வார்கள் ... 189
15. பல்சமயத் தமிழிலக்கியப் பணி ... 194
i. சமணர் செய்த தமிழ்ப்பணி ... 194
ii. பௌத்தர் வளர்த்த பைந்தமிழ் ... 201
iii. சைவ இலக்கியங்கள் ... 204
iv. வைணவ இலக்கியங்கள் ... 209
16. இடைக்காலச் சிற்றிலக்கியங்கள் ... 214
i. கலிங்கத்துப்பரணி ... 214
ii. இரண்டாம் குலோத்துங்க சோழன் உலா ... 217
iii. நளவெண்பா ... 219
iv. தஞ்சைவாணன்கோவை ... 221
17. உரையாசிரியர்களும் உரைநூல்களும் ... 222

மூன்றும் பாகம்

III. பிற்காலத் தமிழிலக்கியங்கள்

8. பிரபந்தங்கள் ... 227
i. அஷ்டபிரபந்தம் ... 227
ii. குமரகுருபரசுவாமிகள் பிரபந்தங்கள் ... 229
iii. சிவப்பிரகாச சுவாமிகளின் பிரபந்தங்கள் ... 232
iv. சிவஞான முனிவரின் பிரபந்தங்கள் ... 234
19. தமிழில் பாரதம் ... 235
20. தமிழில் தலபுராணங்கள் ... 238
21. தமிழ்ப் புலவர்களும் தனிப்பாடல்திரட்டும் ... 241

நான்காம் பாகம்

IV. தற்காலத் தமிழிலக்கியங்கள்

22. மேல்நாட்டார் தமிழ்த் தொடர்பும் தொண்டும் ... 248

i. மேல்நாட்டுக் கிறிஸ்துவர் ... 248

ii. தமிழ்நாட்டுக் கிறிஸ்துவர் ... 254

23. இசுலாமிய இலக்கியங்கள் ... 257

24. பெருமைக்குரிய நாடகப் பிரபந்தங்கள் ... 262

25. வளமளித்த வல்லவர்கள் ... 269

i. தாயுமான சுவாமிகள் ... 269

ii. இராமலிங்க அடிகள் ... 270

iii. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ... 272

iv. ஆறுமுகநாவலர் ... 273

v. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 275

vi. சூரியநாராயண சாத்திரியார் ... 276

vii. டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 277

viii. மறைமலையடிகள் ... 279

ix. திரு. வி. க. ... 280

x. பேராசிரியர் சம்பந்த முதலியார் ... 282

26. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சி ... 283

i. வளர்தமிழும் உரைநடை வரலாறும் ... 284

ii. விரைந்து வளரும் வெளியீடுகள் ... 287

iii. கதைகள் வளர்ச்சியும் கன்னித்தமிழ் மலர்ச்சியும் ... 290

iv. புதியபாக்களின் போக்கும் புன்மையறுத்த புலவர்களும் ... 293

v. தமிழ் இலக்கியம் அன்றும் இன்றும் ... 302

வினாக்கள் ... 305

முதற்பாகம்

I. சங்ககாலத் தமிழிலக்கியங்கள்

1. உலகமும் தமிழரும்

வளமுறு தமிழிலக்கிய வரலாற்றை நன்முறையில் நாமறிதற்கு முன்பு அவ்விலக்கியச் செஞ்சொற் செல்வங்களை ஆக்கியருளிய, அரவணைத்துக் காத்த நம் முன்னேரின் தொன்மை பற்றியும், உலக மக்களோடு அவர்கள் கொண்டிருந்த தொடர்பு பற்றியும் சீரிய செய்திகளைத் தெரிந்து கொள்வது நல்லது.

தமிழர் யாவர்? திராவிடர் யாவர்?

மொழிநூல் வல்லுநர்களையும், வரலாற்ருசிரியர்களையும் இவ்விரு கேள்விகளும் பெருங் குழப்பத்தில் ஆழ்த்தி விட்டன. தமிழர்தான் திராவிடர் எனக் கூறுவோர் பலர்; தமிழர் வேறு, திராவிடர் வேறு என்று முரண்படுவோர் சிலர். இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கும் ஆராய்ச்சிக் கருத்துக்களைக் கொண்டு பார்த்தால் பழங்காலத்துத் தமிழர்களே திராவிடர்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியும்.

கி. பி. 8 ஆம் நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்த குமாரிலபட்டர் என்ற வடமொழி நூலாசிரியரால் தமிழ் மொழியையும், அதன் இனமொழிகளையும் குறிப்பதற்கு,

"ஆந்த்ர-திராவிட பாஷா" என்ற வடமொழிச் சொற்ருெடர் ஆளப்பட்டது. அவருக்கும் முன்பே 'திராவிடர்' என்ற சொல் ஆரியரல்லாத இந்தியரைக் குறிப்பதற்கு வடமொழி யாளர்களால் எடுத்தாளப்பட்டிருக்கின்றது. எனவே, ஆரியர்கள் கைபர்க்கணவாய் வழியாக இந்தியாவில் நுழைந்தபொழுது இந்தியத் திருவிடம் முழுதும் பரவி யிருந்த மக்களைத் திராவிடர்களென்றும், அவர்கள் பேசிய மொழியைத் திராவிட மொழியென்றும் அழைத்தனர். அவ்வாறு அழைக்கப்பட்ட மக்களும், மொழியும் முறையே தமிழரும், தமிழுமாகும்.

ஆரிய மக்கள் 'தமிழ்' என்ற சொல்லை உச்சரிக்க முடியாது உறுதுயரடைந்தனர். ஆகையால் 'தமிழ்' என்ற இன்சொல் தமிழறியார் நாவில் 'தமிளா'கி, பிறகு 'திரமில்'ஆகி, அதன்பின் 'திரவிடம்', 'திராவிடமா'கத் திரிந்திருக்கவேண்டும். 'தமிழ்' என்றசொல்லே 'திராவிடம்' என்ற சொல்லிலிருந்து திரிந்ததுதான் என்று செப்புவாரும் உளர். அவர்கள் தமிழிலக்கியத்தையும், இலக்கணத்தையும் ஆராய்ந்து பார்த்தால் தம் கருத்துத் தவறென்றறிவர். பழந்தமிழ்ச் சங்க நூற்களில் 'தமிழ்', 'தமிழகம்' என்ற சொற் கள் பயிலப்பட்டு வந்திருக்கின்றன. தொல்காப்பியத்தில் "தமிழென் கிளவியும் அதனோரற்றே" (தொல். எழு. 186) என்ற நூற்பாவில் 'தமிழ்' என்ற சொல்லைக் காண்கின் ரோம். "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்று பிங்கலம் பேசுகின்றது. புறநானூறு "வையக வரப்பின் தமிழகம் கேட்ப" என்கின்றது. "இமிழ் கடல் வரைப்பின் தமிழகம்" என்று சிலப்பதிகாரமும், "சம்புத் தீவினுள் தமிழக மருங்கின்" என்று மணிமேகலையும் நற்சான்றுகள் நவிலுகின்றன. எனவே, மொழியைக் குறிப்பதற்கும், நாட்டைக் குறிப்பதற்கும் 'தமிழ்', 'தமிழகம்' என்ற சொற்கள் இருந்திருக்கின்றன. இவ்வுண்மைகளிலிருந்து திராவிடர் என்போர் பழந் தமிழரென்றும், திராவிடமொழி யென்பது பழங்காலத்துத் தமிழ்மொழியே யென்றும், திராவிடம் என்பது பண்டையத் தமிழகமே யென்றும் அறிகின்ரோம்.

தரணி போற்றும் தமிழினம்

உலகில் வழங்கும் பழமையான மொழிகளைப் பேசும் மக்களைப் பல இனங்களாக மொழிநூல்வல்லார் பாகுபாடு செய்துள்ளார்கள். அப்படிப்பட்ட ஒவ்வொரு மனித இனத்திற்கும் வரலாறுண்டு. அவ்வரலாற்று வழிதான் அவ்வவ்வினத்தின் வளத்தையும், வாழ்வையும் வரையறுக்கவேண்டியிருக்கின்றது. அவ்வினம் தோன்றிய தேயம், பரவிய பகுதிகள், தொடர்புகொண்ட மக்கள், பேசிய மொழி, அதன் வழிவந்த வண்ணமுறு இலக்கியங்கள்— இலக்கணங்கள், மேற்கொண்டொழுகிய பண்பாடுகள் —பழக்கவழக்கங்கள், வளர்த்த கவின் கலைகள், அவை காலமாற்றத்திற்கேற்ப திரிந்திருந்த நிலைகள், அரசியல்—பொருளியல் முறைகள் முதலியன அவ்வின வரலாற்றால் நாமறியும் செய்திகள்.

இவ்வாறு பேசிய மொழியாலும், வாழ்ந்த இடத்தாலும், கொண்டிருந்த கோட்பாட்டாலும் வேறுபட்ட மனித இனங்களில் பழமையானது தமிழினம். இவ்வினம் பழைய கற்கருவி காலத்திற்கும் முற்பட்டது; முந்நூருயிரம் ஆண்டுகட்கு முன்பே தனியோரினமாகத் தரணியில் தழைத்தோங்கி வளர்ந்தது. இவ்வின வரலாற்றை நன்முறையில் நாமறிதல் வேண்டும். மேலைநாட்டு வரலாற்ருசிரியர்களெல்லாம் தங்கள் நூல்களிலே தமிழினத்திற்குத் தகுந்த இடம் தரவில்லை. அவர்களின் கண்ணுக்குப் பட்டிருப்பவையெல்லாம் விந்திய, சாத்பூரா மலைகளுக்கு வடபால் இருக்கும் இந்திய நிலப்பரப்பும் அதில் வாழ்ந்த உயிரினங்களுமே! "இதுகாறும் தோன்றியுள்ள இந்திய வரலாற்று நூற்கள் பெரும்பாலும் வட இந்தியாவைப்பற்றி மட்டுமே கூறியுள்ளன. தென்னுட்டில் தொன்றுதொட்டே நிலவிவந்த பண்பாட்டையும், பண்டை மக்களின் (தமிழினம்) வீரச்செயல்களையும், கலைத்திறனையும் அவர் அறவே மறந்தனர்போலும்!" என்று முன்னுள் சென்னை மாநில ஆளுநர் உயர்திரு ஸ்ரீபிரகாசா அவர்கள், டாக்டர் கே. கே. பிள்ளையின் 'தென் இந்திய வரலாறு' என்னும் நூலுக்குத் தந்துள்ள அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளையும், "இதுகாறும் இந்திய வரலாற்று நூல் இயற்ற முன்வந்தோர் அனைவரும் கங்கையாற்றுச் சம

வெளியைமட்டுமே அடிப்படையாக்கி, அதனை உருவாக்க முயன்றுள்ளது பெருந்தவறு. இக்குறையை நீக்கி,தென்னாட்டுக் கிருஷ்ணா, காவேரி, வைகை முதலான பேரியாறுகளின் பள்ளத்தாக்குகளில் முதன்முதல் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து, இந்தியவரலாறு தொடங்கி முறைப்படி வரைதல் வேண்டும்" என்று நம்மையெல்லாம் நோக்கிச் சொல்லிச் சென்றிருக்கின்றார். ஆகவே, தமிழின வரலாறு சரியாக எழுதப்பட்டால்தான் நமக்கும், நம் மொழிக்கும் மாநிலத்திலே மதிப்பு ஏற்படும். இப்படிப் பட்ட சிறந்த செயலைச் செய்யப் புகுகின்றவர்கள் இவ்வினம் வளர்த்து வைத்திருக்கும் இலக்கியங்களை நுண்மாண் நுழைபுலங்கொண்டு ஆய்ந்துணர்தல் இன்றியமையாதது.

பண்பாட்டைப் பாரெங்கும் பரப்பினர்

தமிழ்மக்கள் ஒருகாலத்தில் இந்தியப் பெருநிலப் பகுதி முழுதும் பரவியிருந்தார்கள். இந்தியாவுக்கு வெளியிலும் சென்று தங்கள் பண்பாட்டையும், நாகரிகத்தையும் மற்றை யோரிடத்து நிலைநிறுத்தினார்கள். பழங்காலத் தமிழர்களில் சிலர் ஒரே இடத்தில் தங்காது நாடோடிகளாக பல இடங் களுக்குஞ் சென்றார்கள் ; பல மக்களோடுந் தொடர்பு கொண் டார்கள். மேலும், சங்ககாலத்தில் மேல்நாட்டாரோடும், கீழ் நாட்டாரோடும் நெருங்கிய வாணிபத்தொடர்புங் கொண்டு வாழ்ந்தனர். பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலிய நூல் களின் வாயிலாக இவ்வுண்மைகளை நாமறிகின்றோம்.

ஒருகாலத்தில் இந்தியாவெங்கும் தமிழர்கள் பரவியிருந் தார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள. [1] 'ஆரியர்கள் இந்தியாவின்மேல் படையெடுப்பதற்கு மூவாயிரம் அல்லது நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திராவிடயினம் இந்தியப்

---

[1] "Three or four thousand years before the Aryan invasion of India the Dravidian race not only occupied the whole of the Indian Peninsula but had apparently spread over Arya and Persia."

—Rev. Fr. T. C. Closset S. J.

பரப்பு முழுவதிலும் பரவியிருந்ததோடல்லாமல் இதற்கும் வெளியில் ஆரியா, பெர்சியா போன்ற பகுதிகளிலும் பரவியிருந்தார்கள்' என்று, வணக்கத்திற்குரிய டி. சி. குலோசெட் சே.ச. (Rev. Fr. T. C. Closset S. J.) கூறுகின்ருர். பேரறிஞர் எவ். லினுர்மெண்ட் (F. Lenormant) என்பாரும் இக்கருத்தையே வலியுறுத்துகின்ருர். மேலும், [2] இந்தியாவிற்கும் வெளியில் பரவியிருந்த திராவிடர்களை ஆரியர்கள் முன்னவரின் பிறப்பிடம் நோக்கியே விரட்டினுர்கள் என்றும் விளம்புகின்ருர். நம் நாட்டு வரலாற்ருசிரியர்களாகிய ஆர். சி. மஜூம்தார், ஹச். சி. ராய் சௌத்திரி போன்றவர்களும் மேலே காணுங் கருத்துக்களை ஒத்துக்கொள்ளுகின்ருர்கள். [3] ஒரு காலத்தில் திராவிடர்கள் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான் முதலிய பகுதிகள் அடங்கிய இந்தியா முழுதும் வாழ்ந்திருந்து படிப்படியாக மெசப்பொடேமியாவிலும் குடியேறினர் என்று இயம்புகின்றனர். பலுசிஸ்தானத்தில் வாழும் பிராகுவி மக்களால் இன்னும் திராவிட மொழி பேசப்படுவதொன்றே இக்கூற்றை வலிவுடையதாக்கப் போதுமானதென்கின்றனர்.

---

[2] "The Dravidians seemed to have spread primitively over Ariana and Persia and were driven back later on by the Aryas of these countries into the Hindustan Peninsula."

Francois Lenormant 'Manual de I' Histoire Ancienne de l' orient' (PP. 9. 11.)

[3] "The Dravidians at one time inhabited the whole of India, including the Punjab, Sind and Baluchistan and gradually migrated to Mesopotamia The fact that the Dravidian language is still spoken by the Brahui people of Baluchistan is taken to lend strength to this view.' R. C. Majumdar, H. C. Roy Chaudhri and Kalikinkar Datta. —'An Advanced History of India' PP. 23.

இந்தியப் பெரும் நிலப்பரப்பினின்றும் வெளியேறிய தமிழ்மக்கள் சுமேரியப் பகுதியிலும் சென்று குடியேறினர். பாபிலோனுக்கும் தென்பகுதியில் வாழ்ந்த சுமேரியர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்களே என்று, 'இந்தியாவில் ஆரியராட்சியின் வரலாறு' என்ற நூலில் ஹேவல் (Havell) என்பார் எழுதுகின்றார். டாக்டர் ஹால் (Dr. Hall) என்பாரும் 'தென்னிந்தியர் வழி வந்தோரே சுமேரியர்' என்றெண்ணுகின்றார். அண்மையில் சுமேரியப் பகுதியிலும், தென்னிந்தியப் பரப்பிலும் கண்டெடுக்கப்பட்ட புதை பொருட்கள் மேற்கருத்தை உறுதிப்படுத்துகின்றன.

கி. மு. 2500 அளவில் கிரீட்டிலும் இந்தியாவிலும் ஒரே வகையான நாகரிகம் நிலைபெற்றிருந்தது. இதற்குக் காரணம் கிரீட்டில் வாழ்ந்த துரேனியர்களுக்கும், திராவிட மக்களுக்குமிடையே இருந்த நெருங்கிய தொடர்பேயென்று எவ். லினர்மெண்ட், டி. மாம்சென் (T. Mommsen) போன்றோர் ஆய்ந்துரைக்கின்றனர். துரேனியரோடு கலந்துறைந்த திராவிடர் கிரேக்கர்களோடும் தொடர்பு கொண்டனர். இவ்வாறு இந்தியாவிலிருந்து வெளியேறிய திராவிடர் அல்லது பழங்காலத் தமிழர் ஆரியா, பெர்சியா, சுமேரியா, ஆசியாமைனர், லிசியா போன்ற பகுதிகளில் பரவி இறுதியில் கிரீசிலும் புகுந்தனர். இவ்வுண்மையால் தான் தமிழ்மொழிச் சொற்கள் பல கிரேக்க மொழியில் காணப்படுகின்றனவென்று [4] ரைஸ் டேவிட்ஸ் என்பார் கூறுகின்றார். இலத்தீன், ஹீப்ரு, சமஸ்கிருதம் போன்ற பிற தொன்மையான மொழிகளிலும் தமிழ்மொழிச் சொற்கள் காணப்படுகின்றன என்ற உண்மையை மொழி நூலறிஞர்களாகிய டாக்டர் கால்டுவெல் (Dr. Caldwell), டாக்டர் ஜி. யு. போப் (Dr. G. U. Pope) போன்றவர்களும் ஒத்துக்கொள்ளுகின்றார்கள். பாலஸ்தீனத்தைக் கி. மு. 8 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சாலமோன் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து தங்கம், வெள்ளி, தந்தம், குரங்குகள், மயில்கள், சந்தனக்கட்டைகள், வைரங்

[4] "The three classic languages of the world namely Sanskrit, Hebrew and Greek contain Tamil words in their vocabulary."—Rhys Davids.

கள் முதலியன அந்நாட்டிற்குக் கொண்டுசெல்லப் பட்டனவாம். அதன் காரணத்தால்தான் 'தோகை', 'அகில்' என்ற நம் மொழிச் சொற்கள் முறையே 'துக்கீம்', 'ஆல்மக்' என ஹீப்ரூ மொழியில் திரிந்து வழங்குகின்றனவென்று சொல்லுகின்றூர்கள். மேலும் திராவிடர்களுக்கும், கிரேக்கர் களுக்கும் நீண்டகாலமாய்க் கலாச்சாரத் தொடர்பும், வாணிபத் தொடர்பும் உண்டு. ஆகவே, தென்னிந்தியப் பொருட்கள் சிலவற்றின் தமிழ்ப்பெயர்கள் கிரேக்கமொழியில் புகுந்துள்ளன. சோபாக்கிளிஸ், அரிஸ்டோபேனிஸ் முதலி யோரின் நூல்களில் இவ்வாறு புகுந்த சொற்கள் காணப் படுகின்றன. 'அரிசி' என்ற தமிழ்ச்சொல் 'ஓரிசி'யென்றும், 'பிப்பலி'யென்ற சொல் 'பெப்பரி'யென்றும் கிரேக்க மொழியில் வழங்குகின்றன. இன்னும் துரேனியர் மூல மாகத் தமிழர் நாகரிகம் ஐரோப்பாவின் பிறபகுதிகளிலும் பரவிற்று. அதன் வழி தமிழ்மொழிச் சொற்கள் ஆங்காங்கு வழங்கிய மொழிகளில் சென்று கலந்தன. இதுபற்றி நன்கு ஆய்ந்த வணக்கத்திற்குரிய அடிகளார் [5] நல்லூர் ஞானப்பிரகாசம் அவர்கள், இந்தியத் தொடர்பு கொண்ட ஐரோப்பிய மொழிச் சொற்களின் வேர்ச்சொற்கள் மிகவும் தொன்மையுடைய தமிழில் காணப்படுகின்றனவென்பது ஆராய்ச்சியுணர்த்தும் முடிவென்கின்றூர்.

திராவிடர்கள் கீழ்நாடுகளோடும் பண்டிருந்து நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். கி. மு. 7ஆம் நூற்றூண்டிலேயே இந்தியாவிலிருந்து சீனுவிற்குப் பல பொருட்கள் கொண்டுசெல்லப்பட்டன. "தமிழில் பட்டுக்குச் 'சீன' மென்றும், சர்க்கரைக்குச் 'சீனி' யென்றும் வழங்கி வரும் பெயர்கள், சீன நாட்டுடன் முற்காலத்தில் இருந்த தொடர்பை நன்கு துலக்குகின்றன. மேலும் பிலிப்பியன் நாடுகளில் கிடைத்த கத்திகள், கோடரிகள், ஈட்டிகள் முதலான புதைபொருட்கள், தென்னிந்தியாவில் சுமார்

---

[5] "That the roots of a large majority of Indo-European words are to be found in ancient Tamil is not a mere theory but a fact ascertained by extensive induction."

—Rev. Fr. Gnanapragasam.

கி. மு. 10ஆம் நூற்றுண்டில் வழங்கிய பொருட்களை ஒத்திருக்கின்றன. இவைபோன்ற புதைபொருட்களை மலாயா, ஜாவா, வடக்குப் போர்னியோ முதலிய இடங்களிலும் கண்டுள்ளனர். இவற்றையெல்லாம் கண்டுபிடித்த செயல்களால், வட பிலிப்பியனேடு தென்னிந்தியாவிற்குக் கி. மு. 1000 ஆண்டு முதலே வாணிபத்தொடர்பு இருந்தமை தெளிவாகின்றது'', என்று டாக்டர் கே. கே. பிள்ளை 'தென்னிந்திய வரலாறு' என்ற நூலில் எழுதுகின்ருர். இவ்வாறு நம் மக்கள் கீழ்நாடுகளோடு உறவுகொண்டு வாழ்ந்த காரணத்தால்தான் இன்றும் தமிழ் மக்கள் இந்தியாவிற்கும் வெளியில் பர்மா, மலாயா, சுமத்திரா, ஜாவா போன்ற இடங்களில் வாழ்ந்துவருகின்ருர்கள். கி. பி. முதல் நூற்றுண்டு முதலே தென்னகத்திற்கும், பர்மாவிற்குமிடையே வாணிபம் நடந்து வந்ததைப் பெரிப்ளுஸிலிருந்தும், தாலமியின் நூலிலிருந்தும் அறிகின்ருேம். பர்மாவில் பாகன் என்ற ஊரில் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வூரில் தமிழர் சிலர் குடியேறியிருந்தனர் என்றும் தெரிகின்றது. மலாயா மொழியில் தமிழ்ச்சார்புடைய பல சொற்கள் காணப்படுவதுவும், ஊர்களின் பெயர்கள் தமிழ்ச்சொற்களாய் இருப்பதுவும் மேற்கருத்தை உறுதிப்படுத்துகின்றன. மலாயா என்ற சொல்லே 'மலை' யென்ற தமிழ்ச்சொல்லிலிருந்து தோன்றியது என்று பலர் கருதுகின்றனர். இன்னும் இலை, மணம்புரிதல், உறுதிமொழி, இணை, வண்ணுன் முதலியவற்றைக் குறிக்கும் மலாயாச் சொற்கள் தமிழிடமிருந்து பெறப்பட்ட சொற்களே.

கில்பர்ட் சிலேட்டர் (Gilbert Slater) என்பார், 'இந்திய நாகரிகத்தில் திராவிடர் பண்பு,' (The Dravidian Element in Indian Culture) என்ற தம் நூலில், ''சிறிதளவு கருநிறக் கூறும், நீண்ட தலைவடிவும் உடைய மனித இனம் ஐபீரியத் தீவக்குறை தொடங்கி வட ஆபிரிக்கா, தென்மேற்கு ஆசியா, தென் இந்தியா ஆகிய இடங்களாகிய ஒரு மண்டலத்தில் பரவியிருந்தது என்று கொள்ளலாம்'' என்று எழுதுகின்ருர். இவர் இவ்வாறு எழுதுவதற்குக் காரணம், ஆபிரிக்க மக்களுக்கும், திராவிட மக்களுக்குமிடையே காணும் நெருங்கிய நிறவொற்றுமையும், உடலமைப்புமாகும்.

சுமேரியப்பகுதியில் காணப்பட்ட திராவிட மக்கள் ஆபிரிக்காவில் சென்று பரவினர் என்று எண்ணுதற்கும் இடமுண்டு. டாக்டர் டிறெக்சல் (Dr. A. Drexel) என்பார் திராவிடர்களுக்கும், ஆபிரிக்கர்களுக்கும் ஒற்றுமை யிருப்ப தைச் சுட்டிக்காட்டுகின்ருர்.

இவ்வாறு நாம் பழந்தமிழ் மக்களின் உலகத் தொடர்பை ஆராய்ந்து பார்த்தால் பற்பல புதிய உண்மைகள் புலப்படுகின்றன. நம்மவரின் நாகரிகமும், பழக்கவழக்கமும், பண்பாடும் மற்றைய மக்களிடத்தும் பரவின. இந்நாட்டின் சீரும், சிறப்பும், பொருளும், போகமும் கிரேக்கர்களையும், இத்தாலியர்களையும், அரேபியர்களையும், சீனர்களையும் ஈர்த்தன. ஆகவே, உலகின் பல பகுதி மக்களும் நம்மவரோடு அரசியல் தொடர்பும், வாணிபத் தொடர்புங் கொண்டொழு கினர். காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில், "மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப் புலம்பெயர் மாக்கள்" பலர் வந்து இனிது உறைந்ததாகப் பட்டினப்பாலை சான்று பகருகின்றது. முல்லைப்பாட்டில் வரும் 'வன் கண் யவனர்' என்ற சொற்றொடரும், சிலப்பதிகாரத்தில் ஊர்காண் காதையில் காணப்படும், 'காவலிற் சிறந்த அடல்வாள் யவனர்' என்ற பகுதியும் பிறதேயத்தவர்கள் நம்நாட்டு அரசர்களுக்கு மெய்க்காப்பாளர்களாகவும், வாயில் காவலர்களாகவும் அமைந்திருந்தனர் என்ற உண்மையை உணர்த்துகின்றன.

2. தமிழகமும் தமிழரும்

இன்றையத் தமிழகம் மைசூர், ஆந்திர நாடுகளை வடக் கெல்லையாகவும், இந்துமாக்கடலைத் தெற்கெல்லையாகவும், வங்காளக் குடாக்கடலைக் கிழக்கெல்லையாகவும், கேரள நாட்டை மேற்கெல்லையாகவும் கொண்டு 50,170 சதுரமைல் பரப்புடையதாகத் திகழ்கின்றது. இதே தமிழகம் சிலப்பதி காரக் காலத்தில் சேர நாடென்றும், சோழநாடென்றும், பாண்டியநாடென்றும் முப்பெரும் நாடுகளாக, மூவேந்தர் நாடாக விரிந்து பரந்து விளங்கிற்று.

நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு
மாட மதுரையும் பீடார் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரும்

என்று நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் அக்காலத் தமிழகத்தெல்லையைக் குறிக்கின்றது. 'தொடியோள்பௌவம்' என்பது இன்று தென்னகத்தின் தெற்குக்கோடியில் திகழும் குமரிக்கடலாகும். ஆந்திர நாடென இன்று பிரிந்திருப்பது அன்று தமிழ்நிலத்தின் ஒரு பகுதியாக இருந்ததால் வேங்கடமலை இத்திருவிடத்தின் வடவெல்லையாகக் கருதப் பட்டது.

இளங்கோவடிகளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தனிப்பெரும் புலவராய்ச் சங்கத்தில் தங்கத்தமிழ் வளர்த்த தொல்காப்பியர் காலத்தில் இத்தமிழகத்தின் எல்லை இன்றையக் குமரிமுனையின் தென்பால் பல காவத தூரம் பரந்து கிடந்தது.

வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து

என்று அன்றையத் தமிழகத்தின் எல்லையைப் பனம்பாரனார் தொல்காப்பியப்பாயிரத்தில் குறிப்பிடுகின்றார்.

பழந்தமிழகம்

மிகப் பழங்காலத்தில் தமிழகம் எவ்வளவு அகன்றிருந்தது என்பதை ஆராய்ந்து பார்த்தால் இன்றிருக்கும் தமிழகத்தின் எல்லைகுறித்து இரங்காமல் இருக்கமுடியாது. ஆரியமக்கள் மத்திய ஆசியாப் பகுதியிலிருந்து வந்து, சிந்து சமவெளியில் குடியேறுவதற்கு முன்பு அப்பகுதியில் தமிழ்மக்கள் குடியேறி, எழுநூறு காவத தூரம் பரவி, நாற்பத்தியொன்பது நாடுகளைக் கொண்டிலங்கிய இலெமூரியாப் பகுதியில் தாங்கள் உருவாக்கிய நாகரிகத்தைப் பரப்பி நிலைநிறுத்தினர். அவர்கள் தென்புலத்திலிருந்து வடபுலம் நோக்கிச் சென்றதற்குக் காரணமுண்டு. பரந்திருந்த பாண்டிய நாட்டின் இலெமூரியாப் பகுதியைக் கடல் விழுங்கித் தன் தீராப்பசியைத் தீர்த்துக்கொண்டது. அதுபோழ்து மக்கள் வேற்றிடம்நாடி, கடல் புகமுடியாத இடங்

களைத் தேடி விந்திய, சாத்பூரா மலைகளைக் கடந்து இமயமலை நோக்கிச் சென்றனர். ஆங்கு எம்மக்களும் இல்லா திருக்கவே நம் மக்கள் வளமிகு பகுதியில் தங்கி வாழத் தலைப்பட்டனர். பாண்டியனும் மக்களுக்கு உறுதுணையாக இமயம்வரை சென்று எல்லாப் பகுதியையும் தன்னுணைக் குட்படுத்தித் தென்திசையிலிருந்து ஆண்டான். இச் செய்தியை,

பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக் கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி

என்று சிலப்பதிகாரக் காடுகாண் காதையில் சிந்தனைச் சிற்பி இளங்கோவடிகள் இசைக்கின்றார். இச்செந்தமிழ்க் காதைக்குச் சிந்தையள்ளும் உரைவகுத்த அடியார்க்கு நல் லாரும் இக்கருத்தையே வற்புறுத்துகின்றார்.

ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு நான்காயிரம் ஆண்டுகட்கு முன்பே இப்பெரு நிலப்பரப்பெங்கும் தமிழர் பரவியிருந்தனர் என்று முற்பகுதியில் கண்டோம். எனவே, மிகவும் தொன்மையான காலத்தில் குமரிமுனைக்கும் இமய மலைக்கும் இடைப்பட்ட இப்பாரதம் தமிழ்மக்கள் வாழ்ந்த-அவர்களுக்குரிய நாடாக இருந்தது.

நம் முன்னோர் கண்ட நாகரிகம்

கடல் கொள்வதற்கு முன்பிருந்த இலெமூரியாப் பகுதி குமரிநாடு என்று தமிழ் நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. இந்நாடு கிழக்கே சந்தாத் தீவுகள் வரையிலும், மேற்கே மடகாசிகர் தீவு வரையிலும் அகன்று கிடந்தது. அவ்வள நாட்டில் வாழ்ந்த தமிழர்கள் ஆங்கு உலக நாகரிகத்திற்கே வித்திட்டிருக்க வேண்டுமென்று ஹெக்கல் (Haeckel) என்பார் கருதுகின்றார். மனித இனம் தோன்றுதற்கிடமாய் இருந்தது தென்னகமே என்பது ஒருசாராரெண்ணம். அத்தென்ன கத்தின் ஒரு கூறான சாவகத்தில்தான் மனித வாழ்வே ஆரம்பமாகியிருக்கவேண்டுமென்று கீன் (Keane) என்ற உடல்நூல் பேராசிரியர் தமது ஆழ்ந்த ஆராய்ச்சியின்

முடிவாகக் கூறுகின்றார். நிலநூலாசிரியராகிய ஸ்காட் எலியட் (Scott Elliot) என்பார் ஈழத்திலும், தென்னகத்திலும் காணக்கூடிய பாறைகள் பாரின் பிற பகுதிகளில் காணக் கூடியவைகளைவிட மிகமிகப் பழமையானவைகள் என்கின் றார். ஆகவே, இப்பகுதியில் தோன்றிய மக்களும் பழமை யானவர்களாகத்தான் இருக்கவேண்டும். அதன் அடிப் படையில்தான் புறப்பொருள்வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் தமிழ்க்குடியைப்பற்றிக் கூறுகின்றபொழுது,

> கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
> வாளொடு முன்தோன்றி மூத்த குடி

என்கின்றார்.

செந்தமிழ் நாட்டிலிருந்து சிந்துசமவெளியில் சென்று குடியேறிய தமிழர்கள் உலகம் வியக்கும் நாகரிகத்தை அப்பகுதியில் நிலைநிறுத்தினர். அவர்களே உலகின் மற்றப் பகுதிகளுக்கும் பரவி ஆங்காங்குப் பல நாகரிகங்கள் உருவாகக் காரணமானார்கள்.

சிந்துசமவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே

கி. மு. 3000இல் இந்நாகரிகம் உயர்நிலையில் இருந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூரில் சில பல ஆண்டுகளுக்கு முன்பு புருஸ்வுட் (Bruce–Foote) என்ற ஆங்கிலப் புதைபொருள் ஆராய்ச்சியாளரால் தமிழ் மக்களின் வாழ்க்கைச் சின்னங்கள் சவக் குழிகளில் தோண்டி யெடுக்கப்பட்டன. இப்படிப்பட்ட பொருட்கள் சிந்து சம வெளியிலும் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. சானுதாரோ என்ற இடத்தில் கிடைத்த ஹரப்பா காலத்திய மண்டை ஓடுகள் பெரிதும் தமிழ்மொழி பேசுவோருடைய மண்டை யோடுகளையே ஒத்திருக்கின்றனவென்று தென்னிந்திய வரலாற்றுவல்லுநர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி கூறுகின்றார்.

சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் தோண்டியெடுக்கப்பட்ட புதைபொருட்கள் பலவற்றில் பாண்டியருக்குரிய மீன் சின்னங் காணப்படுகின்றது. இங்குக் காணப்படும் பல சாசனங்களும் தமிழ்மொழிச் சார்புடையவையே. இவற்றா லும், இன்னும் பலவுண்மைகளாலும் சிந்து சமவெளி

நாகரிகம் தமிழர் (திராவிடர்) நாகரிகமே என்பது உறுதியாகின்றது.

இவ்வுண்மையைச் சரியாகப் புரியாத ஒருசிலர் மனித நாகரிகத் தொடக்கம் சுமேரியாவில் ஏற்பட்டிருக்கவேண்டுமென்றும், வேறுசிலர் எகிப்தில் (Egypt) ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் எண்ணுகின்றனர். இவ்வாறு எண்ணுவதற்குக் காரணம், தமிழர்களுக்கும், சுமேரியர்களுக்கும், அக்கேடியர்களுக்கும், எகிப்தியர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுவதுதான் என்று டாக்டர். எல். எ. வாட்டல் (Dr. L. A. Waddell) நமக்குத் தெரிவிக்கின்றார்.

சர் ஜான் மார்ஷல் (Sir John Marshall), வணக்கத்திற்குரிய ஹீராஸ் (Rev. Fr. Heras S. J.) அடிகளார் போன்றவர்கள் சிந்து சமவெளி நாகரிகத்தைச் சிறந்த முறையில் ஆராய்ந்து கண்ட உண்மைகளை வெளியிட்டுள்ளார்கள். மோகன்சோ–தாரோ, ஹரப்பா போன்ற பழைய இடங்களிலிருந்து தோண்டியெடுக்கப்படும் புதைபொருட்களில் காணப்படும் எழுத்துக்களும், சொற்களும் பெரிதும் தமிழ் மொழியைச் சார்ந்தவை யென்றும், சுமேரியாப் பகுதியில் காணக்கூடிய எழுத்துக்களைவிட தொன்மையானவை யென்றும் ஹீராஸ் அடிகளார் கூறுகின்றார். ஆகவே, தமிழர்களின் சிந்து சமவெளி நாகரிகந்தான் சுமேரிய நாகரிகத்தையும், எகிப்திய நாகரிகத்தையும், கிரேக்க நாகரிகத்தையும்விட மிகப் பழமைவாய்ந்தது எனத் தெரிய வருகின்றது.

தமிழகத்தில் ஆரியமக்கள்

ஆரியப் பெருமக்களின் ஆதியிடங்கள் மத்திய ஆசியா, லிதுவேனியா, ஸ்காந்திநேவியா, காக்கேசியா போன்ற பகுதிகளாகும். இவ்விடங்களில் வாழ்ந்த ஆரியர்களில் ஒரு கூட்டத்தினர் வடமேற்குக் கணவாய்கள் வழியாக வந்து பஞ்சாப்பை அடைந்தனர். கி. மு. 2000க்கும், கி. மு. 1400க்கும் இடையில்தான் இவர்கள் இந்தியாவை வந்தடைந்தார்கள் என்று 'இந்தியாவின் பழைய நாகரிகம்' என்ற

நூலில் ஆர். சி. தத்தர் கூறுகின்ருர். "ஆரிய மக்கள் இந்தியாவை அடைந்தபோது இந்தியா முழுமையும் பரவி வாழ்ந்தோர் திராவிட மக்களேயாவர்" என்று பல்லோர் கூற்றுக்களை ஆய்ந்து ந. சி. கந்தையா அவர்கள் 'உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு' என்ற நூலில் நுவலுகின்ருர்.

அவ்வாறு வந்த ஆரியர்கள் திராவிடரோடு மோதினர். பழங்காலத் தமிழர்களாகிய திராவிடர்களோ தங்களைத் தாக்க முனைந்த ஆரியர்களுக்குப் பயம் விளைவித்தனர். அதனல், தங்களை எதிர்த்த மக்களை இராக்கதர், அசுரர் என்று ஆரியப் பெருமக்கள் அழைத்தனர். காலப்போக்கில் ஈரின மக்களும் தங்கள் பகைமையை மறந்து ஒருசில இடங்களில் ஒன்றித்தும், மற்றும் சில்லிடங்களில் மாறுபட்டும் வாழத்தலைப்பட்டனர்.

இன்று சமஸ்கிருதம் பேசுகின்ற மக்கள் அனைவரும் ஆரியர்களாகக் கருதப்படுகின்றனர். உண்மையிதுவன்று. ஆரியர் அல்லாதார் பலர் சமஸ்கிருதம் பேசும் வழக்கத்தைப் பற்றி மனுநூல் குறிப்பிடுகின்றது. மேலும் விந்திய மலைக்கு வடக்கேயுள்ள ஆரியாவர்த்தம் மட்டும் அவர்கள் வாழ்வதற்கு ஏற்றதென்றும், பழமையைப் போற்றிப் பின்பற்றும் பிராமணர் பஞ்சாப்புக்கும், இராஜபுதனத்துக்கும் இடையிலுள்ள பிரமவர்த்தத்தில் வாழவேண்டுமென்றும் அது கூறுகின்றது. கலப்பற்ற ஆரியர் பஞ்சாப், இராஜபுதனம், காஷ்மீரம் முதலிய இடங்களில் வாழ்கின்ருர்கள் என்று இந்திய மக்கள் இன ஆராய்ச்சித் தலைவராய் இருந்த சர் ஹெர்பெர்ட் ரைஸ்லி (Sir Herbert Risly) என்பார் எடுத்துரைத்துள்ளார். கலப்பற்ற திராவிட இனத்தினர் கன்னியாகுமரி முதல் கங்கைக்கரைவரையும், மேற்கே ஆக்ராவரையும் காணப்படுகின்றனர் என்று அவர் மேலும் அறிவிக்கின்ருர். இந்தியா முழுமையிலும் பிராமணர் காணப்பட்டாலும் அவர்களின் எண் மிகக் குறைவு. இந்திய மக்களில் ஐந்தில் நான்கு பகுதியினர் ஆரிய இரத்தக் கலப்பற்றவர்களேயாவர். 1872இல் அரசினர் எடுத்த மக்கள் எண்ணிக்கையின்படி இந்தியாவில் ஒருகோடி அறுபது இலட்சம் ஆரியரும், ஒருகோடி பத்துலட்சம் ஆரியத் திராவிடக் கலப்புமக்களும்

வாழ்ந்தார்கள். மீதியுள்ளவர்கள் ஆரியக் கலப்பில்லாதவர்கள்.

தமிழர்கள் வாழ்ந்த பழைய தமிழகமாகிய பாரதத்தில் ஆரியமக்கள் வந்து நுழைந்த பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆரிய திராவிடக் கலப்பு ஏற்பட்டதென்று, 'இந்து நாகரிகம்' என்ற நூலில் [6] ஆர். கே முகர்ஜி கூறுகின்றார். ஆரியர்கள் தங்கள் அழகு மகளிரைக் கருநிறமுடைய திராவிட இளைஞர்களுக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்கு எத்தடையும் இருக்கவில்லை யென்று [7] ஹேவல் (E. B. Havell) என்பாரும் எழுதுகின்றார். ஆகவே, இந்தியாவிற்கு வந்த ஆரியமக்கள் இங்கு வாழ்ந்த பழந் தமிழர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு இமயம் முதல் குமரிவரைக்கும் பரவலாகப் பரவினர்.

இன்றையத் தமிழகம்

பழந் தமிழகத்திற்கும் இன்றையத் தமிழகத்திற்கும் இடையே எத்தனையோ மாற்றங்களைக் காண்கின்றோம். சேர, சோழ, பாண்டிய நாடு என்ற பிரிவெல்லாம் இன்று இல்லை. இதன் பரப்பிலும், தமிழ் மொழியிலும் எவ்வளவோ வேறுபாடுகள் நிகழ்ந்திருக்கின்றன.

தாய்மொழியாம் தமிழ்மொழியிலிருந்து பல சேய் மொழிகள் தோன்றிவிட்டன. அச் சேய்மொழிகளைப் பேசிய மக்களும், அம்மொழிகள் வழங்கிய தேயங்களும்

---

6 "There was also inevitably at work a process of fusion between the Aryans and the non-Aryans by inter-marriage or by alliance"

—Hindu Civilization R. K. Mookerji.

7 "The fair women of Aryan descent ware an irresistible attraction for Dravidian chieftains and racial pride did not prevent Indo-Aryan families from giving a daughter in marriage to a dark skinned neighbour for a suffiicient consideration."

—A Short History of India. E. B. Havell.

தமிழகத்தினின்று பிரிந்திருப்பதை அறிவோம். இவ்வுண்மையை மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்,

கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்

என்று பாயிரத்தில் கூறுகின்றார். கன்னடமொழியும், தெலுங்குமொழியும், மலையாளமொழியும், துளுவமொழியும் இன்று தனித்தனி மாநில மொழிகளாக விளங்குகின்றன. அம்மாநிலங்களும் தமிழகத்தினின்றும் பிரிக்கப்பட்டுத் தனி மாநிலங்களாகத் திகழ்கின்றன.

மேலே கண்ட பலவற்றால் பழந் தமிழகம் மிகவும் பரந்துபட்டதென்பதுவும், தமிழர் பழமையானவரென்பதுவும், இவர்களின் நாகரிகம் உலக நாகரிகங்களுக்கெல்லாம் முன்னோடி யென்பதுவும், காலப்போக்கில் தமிழ் மொழியிலிருந்து பல சேய்மொழிகள் தோன்றின வென்பதுவும், பரந்திருந்த தமிழகம் இன்று பரப்பில் குறுகிவிட்டதென்பதுவும் தெளிவாகின்றன.

3. தமிழும் தமிழரும்

பல்லுயிரும் பலஉலகும் படைத்தளித்துத்
துடைக்கினும்ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி
இருப்பதுபோல்
இருக்கின்ற எழிழ் தமிழை,
திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நாங்கள்

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போற்றுகின்ற புகழுடைய தமிழை நம்மவர்கள் மிகுபழங் காலத்திலிருந்தே வளமளித்து வாழவைத்து வந்திருக்கின்றார்கள். எழுத்துக்களைச்

செப்பம் செய்து, இனிமையும், பொருட்செறிவுமுடைய சொற்களை உருவாக்கி, அவைகளால் இலக்கிய இலக்கணங்களைப் பாங்காகப் படைத்துப் பாரிலே அதன் புகழை ஓங்கச்செய்திருக்கின்றார்கள். அதன் காரணத்தால், இன்று இம்மொழி எம்மொழியினும் தொன்மைமிக்கதாக, முறையான முத்தமிழ்ப் பாகுபாடுடையதாக, உயர்தனிச் செம்மொழியாகச் செழிப்புடன் திகழ்கின்றது.

i. தமிழின் தொன்மை

தமிழர்கள் தொன்மையானவர்கள் என்பதை முற்பகுதியில் பல்லோருடைய நல்லுரை கொண்டு ஆய்ந்துணர்ந்தோம். மக்கள் தொன்மையுடையவர்களாக இருக்கும் போழ்து அவர்கள் பேசிய மொழியும் தொன்மையுடையதாகத்தான் இருக்கவேண்டும். தமிழ்மொழி வரலாற்றிற்கு எட்டாத ஆதிகாலத்தே தோன்றிய மொழி. இம்மொழியின் தோற்றம் தெரியாத காரணத்தால் ஒருசிலர் இது சிவபெருமானல் அகத்திய முனிவருக்குக் கற்பிக்கப் பட்டதென்பர். ஏறத்தாழ கி. மு. 3000 ஆண்டுக் காலத்திற்கும் முன்பே இம்மொழி உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்ந்தது. பேசப்பட்டும், எழுதப்பட்டும் வந்தது. இலக்கிய இலக்கணங்களைத் தன்னகத்தேகொண்டு இணையற்று இலங்கிற்று.

தமிழ்மொழி சமஸ்கிருத மொழிக்கும் முந்தியது

மனோன்மணீய ஆசிரியர் தமிழ்மொழி சமஸ்கிருதமொழி தோன்றுதற்கு முன் தோன்றிய மொழியென்கின்றார்.

சதுமறையா ரியம்வருமுன்
சகமுழுது நினதாயின்
முதுமொழி நீ அநாதியென
மொழிகுவதும் வியப்பாமே.

'சமஸ்கிருதம்' என்றலே 'செப்பம் செய்யப்பட்டது' என்று பொருள். ஆரியர்கள் மத்திய ஆசியாப் பகுதியில் வாழ்ந்த காலத்து சமஸ்கிருதத்தைப் பேசியதாக எக்குறிப்பும் இல்லை. இவர்கள் சிந்து சமவெளியில் குடியேறிய பிறகே சமஸ்கிருதம் என்ற ஒரு புதுமொழியை உருவாக்கி அதில்

வேதங்களை எழுதினர்கள். ஆரியர்கள் வருவதற்கு முன்பே சிந்துசமவெளியில் சென்று குடியேறிய தமிழ்மக்கள் தமிழைப் பேசியும், எழுதியும் வந்தனர் என்று தெரிகின்றது.

வணக்கத்திற்குரிய ஹீராஸ் அடிகளாரும் இந்தியாவில் இருக்கும் மொழிகளிலெல்லாம் மிகவும் தொன்மையான மொழி தமிழ்மொழியென்றே குறிப்பிடுகின்ருர். [8] "வட இந்தியாவிலிருந்த மோகன்சோ—தாரோவில் வாழ்ந்தவர்கள் திராவிட மக்களாய் இருந்ததால் இயல்பாகவே அவர்கள் ஒரு திராவிடமொழியைப் பேசினர்கள். அம்மொழியில் பயன்பட்ட மிகுதியான சொற்கள் தமிழ்மொழியில் காணப்படுகின்றன. தற்கால மொழிகளில் மிகவும் தொன்மையானது தமிழ்மொழி என்ற பொதுமக்கள் நம்பிக்கையை இவ்வுண்மை உறுதிப்படுத்துகின்றது."

பழைய பண்பட்ட மொழிகளாகிய ஹீப்ரு, கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளில் தமிழ்மொழியின் சொற்கள் காணப்படுகின்றன என்பதை முன்பே கண்டோம். ஆகவே, பழைய உலக மொழிகளோடு தமிழும் பழமையுடையது என்பது தெளிவாகின்றது.

தமிழ்மொழியின் தொன்மைபற்றிக் கால்டுவெல்

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆசிரியராகிய டாக்டர் கால்டுவெல் என்னும் மொழிநூல் அறிஞர் தமிழ்மொழி மிகத் தொன்மையுடையது என்பதற்குப் பல காரணங்களைக் காட்டுகின்ருர்.

இலக்கியத் தமிழுக்கும், பேச்சுத் தமிழுக்கும் இடையே இருக்கும் பெரும் வேறுபாடு மொழியின் தொன்மையைக் காட்டுகின்றது. மொழியப்பட்டது மொழி. அதுவே

---

[8] "Being Dravidians, the inhabitants of Mohenjo—Daro in Northern India naturally spoke a Dravidian language in which the largest proportion of the words used are found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present languages."

—Rev. Fr. Heras S. J.

எழுதப்பட்டபொழுது இலக்கிய மொழியாயிற்று. இன்று இலக்கியச் சொற்களாக இருக்கின்ற அனைத்துமே ஒரு காலத்தில் பேச்சு வழக்கில் இருந்தவையாகும். நீ, அது, போ, வா போன்ற சொற்கள் பேச்சுவழக்கிலும், இலக்கிய வழக்கிலும் மாருமல் இருக்கின்றன. ஆனால், எண்ணிறந்த சொற்கள் இன்று உருக்குலைந்து காணப்படுகின்றன. 'இரவு வருகிறேன்' என்று எழுதுவதை 'ராத்திரிக்கு வர்றேன்' என்ருே, 'ரவைக்கி வர்றேன்' என்ருே சொல்கின்ருேம். 'இரவு' என்ற சொல்தான் 'ரவைக்கி' என்று மாறிற்று என்பதை நம்மால் எண்ணிப் பார்க்கக்கூட முடியவில்லை. இவ்வாறு, தமிழ்ச்சொற்கள் பல இலக்கியவழக்கில் இருப்பவை ஒருகாலத்தில் பேச்சுவழக்கில் இருந்து, இன்று அச்சொற்களே பேச்சுவழக்கில் திரிந்தும், சிதைந்தும், குறைந்தும் இருப்பதைக் காண்கின்றபொழுது இந்நிலையை அச்சொற்கள் அடைய எத்துணையோ ஆயிரமாண்டுக் காலம் ஆகியிருக்கவேண்டும் என்பது வெள்ளிடைமலையாய் விளங்குகின்றது.

இலக்கியத் தமிழில் சாதாரண மக்கள் பொருள்புரிய முடியாத கடினமான சொற்களும், எண்ணிக்கையில் மிகக் குறைந்த அளவு வடமொழிக் கலப்பும் காணப்படுவது மொழியின் தொன்மையினுல்தான். பழங்காலத்தில் தோன்றிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற இலக்கியங்களைத் தமிழ்தெரிந்த எல்லோரும் எடுத்துப் படிப்பது இல்லை. காரணம், அவ்விலக்கியங்களில், மொழியில் ஆழ்ந்த புலமைபெருத சாதாரணத் தமிழ்மக்கள் புரிந்துகொள்ள முடியாத கடினமான சொற்கள் பல காணப்படுவதுதான். பழங்காலப் பேச்சுவழக்கில் இருந்த அத்தனைச் சொற்களும் இன்று பேச்சுவழக்கில் இடம்பெறுவது இல்லை. அவ்வாறு இடம் பெற்ருலும் உருமாறியிருப்பதால் பொதுமக்களுக்குப் பொருள் புரிவதில்லை. 'சூருவளி' என்பதைச் சுற்றி வீசுங் காற்று என்று தெரிந்திருக்கும் மக்கள் 'வளி' என்ற சொல் இலக்கியத்தில் வரும்பொழுது அதன் பொருள் புரியாது புலம்புகின்ருர்கள். எத்தனையோ சொற்கள் இலக்கியவழக்கு மட்டும் பெற்றுப் பேச்சுவழக்கற்றுப் போனதற்கு எவ்வளவோ ஆண்டுகள் ஆகியிருக்கவேண்டும்.

சங்ககால இலக்கியங்களில் வடமொழிக் கலப்பே இல்லாத பாக்களும், ஒருசில வடமொழிச் சொற்கள் உள்ள பாக்களும் உள. இதற்குக் காரணம், வடமொழியாளர்கள் நம்மவரோடு கலப்பதற்கு முன்பு — பழங்காலத்தில் இவ்விலக்கியங்கள் தோன்றியதுதான்.

தமிழ் மொழியில் சொற்கள் ஒருலட்சத்திற்கும் மேலாக இருக்கின்றன. 'அரி' என்ற சொல்லுக்குமட்டும் 59 பொருட்கள் இருக்கின்றன. இவை யாவும் தூய தமிழ்ச் சொற்களே. ஒரு சொல்லுக்கு வேறுபட்ட பொருள் வர வேண்டுமென்றால் அச்சொல் நீண்ட காலமாக வழக்கிலிருந்து வரவேண்டும். இன்று நம் பேச்சிலும், எழுத்திலும் பயிலப்பட்டுவரும் சொற்கள் புலவர்களால் ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் உருவாக்கப்பட்டவை அல்ல; படிப்படியாக அவைகள் உருப்பெற்றிருக்கவேண்டும். அவ்வாறு உருப்பெறுதற்குப் பல நூற்றாண்டுகள் உருண்டோடியிருக்க வேண்டுமென்பது கால்டுவெல்லார் கருத்து.

செந்தமிழ் இலக்கணப் பாகுபாடும் மொழியின் தொன்மைக்குச் சான்றாகும். ஒரு மொழியில் இலக்கியங்கள் தோன்றிய பல்லாண்டுகளுக்குப் பிறகே அம்மொழியின் இலக்கணம் தோன்றும். நம் தமிழ்மொழியில் நமக்குக் கிடைத்திருக்கிற முதல் நூலே இலக்கண நூலாகிய தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் தோன்றுதற்குக் காரணமாய் இருந்த இலக்கியங்களெல்லாம் கடலலைகளுக்கு இரையாகிவிட்டன. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களும் தொன்மைக் காலத்தே நம் மொழியில் தோன்றித் துலங்கின.

[9] "இன்றையத் தமிழ்மொழிக்கும் கன்னட, தெலுங்கு மொழிகளுக்கும் இடையே காணப்படும் வேற்றுமையும், பழைய தமிழ்மொழிக்கும் கன்னட, மலையாள, துளுவ மொழி

---

[9] "Another evidence of the antiquity and purity of Tamil consists in the agreement of the ancient Canarese, the ancient Malayalam, the Tulu, and also the Tuda, Gond and Ku with Tamil in many of the particulars in which modern Canarese and modern Telugu differ from it."

—Dr. Caldwell.

களுக்கும் இடையே காணும் நெருங்கிய ஒற்றுமையுமே தமிழ் மொழியின் தொன்மைக்குச் சான்றாக அமைந்துள்ளன."

மேலும், தமிழகத்தின் பல பகுதிகளில் காணப்படும் சாசனங்களில் பல, மிகத் தொன்மையான காலத்தில் வடமொழிக் கலப்பற்ற செந்தமிழ்ச் சொற்களால் ஆனவை. தமிழகத்தில் காணப்படும் சமஸ்கிருத சாசனங்கள் ஒன்றுகூட கி. பி. 14ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது கிடையாது என்று கால்டுவெல்லார் கூறுகின்றார். ஆகவே, சாசனத் தமிழும் தமிழ்மொழியின் தொன்மையை விளக்கி நிற்கின்றது.

முச்சங்கங்களும் மொழித் தொன்மையும்

கி.மு. 5000இலிருந்து கி.பி. 300 வரைக்கும் தலை, இடை, கடைச் சங்கங்களை முறையே தென்மதுரையிலும், கபாடபுரத்திலும், கூடல்மாநகரிலும் நிறுவி புலவர்களைக்கொண்டு பாண்டியர்கள் தமிழை ஆய்ந்து வந்தார்கள்; இலக்கிய இலக்கணங்களை வளப்படுத்தி வெளிக்கொணர்ந்தார்கள். அக்காலச் சங்கங்கள் இக்காலப் பல்கலைக் கழகங்கள்போல் இலங்கின. அவற்றில் மொழியை ஆராய்ந்து எழுத்துக்களின் பிறப்பைப்பற்றியும், அவற்றின் ஒலிநயங்களைப் பற்றியும், சொற்களைப்பற்றியும், அவைகளின் பிரிவுகளைப் பற்றியும், பல உண்மைகளை உணர்ந்து எடுத்துரைத்துள்ளார்கள். ஒரு மொழி பண்பட்ட நிலையை அடைந்தபிறகு தான் அதில் ஆராய்ச்சி நடத்துவது இயலும். ஆகவே, தமிழ்மொழி கி. மு. 5000க்கும் முன்பே பண்பட்ட மொழியாக விளங்கியதனால்தான் சங்கம் வைத்து ஆராய்ந்திருக்கின்றார்கள் என்பது தெளிவு.

சேய்மொழிகளை ஈன்ற தமிழ்

பல ஆயிரமாண்டுக் காலமாக ஞாலத்தில் தமிழ்மொழி வளர்ந்து வாழ்ந்துவருவதால் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, குடகு போன்ற திருந்திய மொழிகளையும் (Cultivated Languages), துதம், கோதம், கோண்ட், கூ, ஒரியன், இராஜ்மஹால் போன்ற திருந்தா மொழிகளையும் (Uncultivated Languages) தோற்றுவித்திருக்கின்றது. பதி

னேரு பிள்ளைகளைப் பெற்றெடுத்தும் குன்ரு இளமையோடு குமரியாகத் தமிழ் இருப்பதுதான் எல்லோருக்கும் வியப்பைத் தருகின்றது! முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நம் மொழி பிறங்கு கின்றது.

தமிழும் பகலவனும்

ஞாலத்து இருள்போக்கும் ஞாயிறு தன்னிகரற்று விளங்குதல்போல் தமிழும் நம் உளயிருள் போக்கி இணையற்று இலங்குகின்றது. இன்னும் பகலவன் எவ்வளவு தொன்மையானவனே அவ்வளவு தொன்மையானது தமிழ். இச்சிறப்புக்களை எண்ணி வியந்துதான் பிற்காலத்து ஒளவையார்,

ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர்ஒன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்

என்று பாங்குறப் பாடியுள்ளார்.

ii. தமிழ்மொழியின் தனிச் சிறப்பு

தமிழ்மொழி தொன்மையான உலகமொழிகளில் ஒன் றென்றும், கன்னடம், தெலுங்கு, மலையாளம். துளுபோன்ற சேய்மொழிகளின் தாய்மொழியென்றும் ஆய்ந்துணர்ந் தோம். இப்பகுதியில், தமிழ்மொழிக்கே உரித்தான தனிச் சிறப்புக்கள் யாவை என்று அறிவோம்.

தமிழ்மொழி கலைமகட்கு வலது விழி

ஆரியமொழிபோல் உலகவழக்கு அழிந்து ஒழிந்து சிதையாமல், சீரிளமை குன்ருமல் இருக்கும் உயர்தனிச் செம்மொழி தமிழ்மொழியாகும். இம்மொழி கலைமகட்கு வலதுவிழியாக விளங்குகிறதென்று உரைக்கின்ருர் மனேன் மணீய ஆசிரியர்.

கலைமகள்தன் பூர்வதிசை
காணுங்கால் அவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா
மதியாரோ மதியுடையார்?

கிழக்குத் திசை தெரியாதவர்கள்தான் வடமொழியைக் கலைமகளின் வலதுவிழி என்பர். ஆனால், அறிவுடைய பெருமக்கள் கலைமகள் கிழக்கு முகமாகத் திரும்பியிருக்கின்றாள் என்றுரைப்பதால் தமிழ்மொழியே அவளுக்குரிய வலதுவிழியாக விளங்குகின்றது.

பாரதி கூறும் பைந்தமிழ்ச் சிறப்பு

பாரதியார் பன்மொழிப் புலவர். அப்புலவர் தமிழ் மொழிதான் தாமறிந்த மொழிகளிலெல்லாம் தலையாயது; தனிச் சிறப்புடையது; தணியாயின்பம் பயக்கவல்லது என்கின்றார்.

ஆம், தமிழை நினைத்தாலும் இன்பம்; பேசினாலும் இன்பம்; கேட்டாலும் இன்பம்; தமிழே இன்பம். செந்தமிழ் நாடென்று சொன்னாலே, இன்பத் தேன் வந்து பாயுதாம் காதினிலே. எனவேதான்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

என்றும்,

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

என்றும் வாழ்த்தி வணங்குகின்றார், தமிழை.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் பகருஞ் சிறப்பு

இனிமை பயப்பது தமிழ்மொழி; நல்லின்பம் தருவது தமிழ்மொழி. சுவை மிகு செம்மைச் சொற்கள், நம் தொன்மைத் தமிழினில் பல உள. தமிழைத் தம்முயிராகப் பேணும் பாரதிதாசனார் பகருவதைப் பாருங்கள்!

இனிமைத் தமிழ்மொழி எமது—எமக்
கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு—எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல்—தமிழ்
நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில்.

நாம் தமிழைக் காதலிக்கின்றோம்; கண்ணேபோல் போற்றுகின்றோம். காரணம், தமிழ் கொண்டிருக்கும் சிறப்புக்களே.

அறிஞர் கண்ட தமிழ்ச் சிறப்பு

உலகில் 1500க்கும் மேற்பட்ட மொழிகள் வழக்கில் உள்ளன. அவைகளில் 220க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில்மட்டும் உள்ளன. இந்திய அரசியலார் தகுதியுடைய மொழிகளாக ஒப்புக்கொண்டவைகள் 14. அவைகளுள் தமிழ்மொழியும் ஒன்று. "தமிழ்மொழி வடமொழியினும் பண்டையது; வேறு மொழி உதவியின்றித் தனித்து இயங்கவல்லது; உயர்ந்த இலக்கணங்களையும், வியக்கத்தக்க இலக்கியங்களையும் உடையது. இயற்கை ஒலியால் ஆனது; மிகப் பழமையானது. எனினும், காலத்துக்கு ஏற்றவாறு வளரவல்லது. முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் பிறங்குவது; இறந்துபோகாமல் சிறந்து விளங்கும் பேச்சுமொழியாய் இருப்பது; தர்க்க முறையில் அமைந்திருப்பது" என்று தமிழின் பல்வகைச் சிறப்புக்களையும் பேராசிரியர் அ. கி. பரந்தாமனுர் 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' என்ற நூலில் இயம்புகின்ருர்.

"தென்னிந்திய மொழிகளில் மிகவும் தொன்மையானதும் பண்பட்டதும் தமிழ்மொழியே" என்று தமது "தமிழாராய்ச்சி" எனும் நூலில் திரு. சீனிவாச ஐயங்கார், நுவலுகின்ருர். தமிழ்மொழியில் ஈடுபாடு கொண்டு அதன் அருமை பெருமையை அறிந்த ஐரோப்பியரும் சிறப்பியல்புகள் பல வற்றை எடுத்துரைத்துள்ளார்கள்.[10] தமிழ் கவிதையமைப்பில் மிகவும் பண்பட்டதென்றும், கிரேக்க மொழியை விட உயர்தன்மை உடையதென்றும், இலத்தீன் மொழியை விட மிகுதியான சொற்களைக் கொண்டதென்றும் டாக்டர் வின்ஸ்லோ என்பார் கூறுகின்ருர். மேலும், மற்றைய

---

[10] "It is not perhaps extravagant to say that in its poetic form the Tamil is more polished and exact than that Greek and in both dialects, with its borrowed treasures more copious than the Latin. In its fulness and power, it more resembles English and German than any other living language."

—Dr. Winslow.

மொழிகளைவிட நிறைவிலும், ஆற்றலிலும் செர்மானிய மொழியையும், ஆங்கிலமொழியையும் பெரிதும் ஒத்துக் காணப்படுகிறதென்றும் உரைக்கின்றார்.

டாக்டர் சிலேட்டர் (Dr. G. Slater) என்பார், தமிழ் மொழி உயர்தன்மையிலும், தர்க்க முறையிலும் சிறந்து விளங்குவதாகப் பாராட்டியுள்ளார். மேலும், நம் மொழி திராவிட மொழிகளுள் பண்பாட்டில் தலைசிறந்ததும், தூய்மை மிக்கதும் என்றுரைக்கின்றார். தமிழைத் தவிர பிற திராவிட மொழிகள் குறிப்பாக மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு ஆகியவைகள் மிகுதியான சமஸ்கிருதச் சொற்களைக் கொண்டுள்ளன. சமஸ்கிருதச் சொற்களைப் பிரித்தெடுத்துவிட்டால் அவைகள் தனித்தியங்கமுடியா நிலையை உடையன. ஆனல், தமிழ்மொழியில் வந்து கலந்துள்ள ஒருசில வடசொற்களை நாம் களைந்துவிட்டாலும் நம் மொழி தூய்மை கெடாது தனித்தியங்கும் தரமுடையது; தன்னுற்றலுடையது. "தமிழ், தெலுங்கு கன்னடம் ஆகிய இம் மூன்றனுள்ளும், தமிழ்மொழி ஒன்றே தூய்மை கெடாது தனித்தியங்க வல்லது. மேலும், தமிழையே மற்றிரண்டின் தாய்மொழியாகப் பலகாலும் கருதுகின்றனர் ஆராய்ச்சிவல்லுநர்." என்கிறுர் சேவியர் ரேய்மாண்ட் (Xavier Raymond) என்பார்.

பேராசிரியப் பேரறிஞர் சி. இலக்குவனர், ' Semantemes and Morphemes in Tamil Language ' என்னும் தமது ஆங்கில ஆராய்ச்சி நூலில் தமிழின் சிறப்பியல்புகளை மேல் நாட்டு ஆராய்ச்சி முறையில் பல கோணங்களிலிருந்து கண்டுரைத்துள்ளார். தமிழ்மொழியில் காணும் இலக்கணக் கூறுகளும், முறைகளும் நம் மொழியின் சிறப்புக்கும், செம்மைக்கும் காரணமென்கிறுர். [11] "தமிழ்மொழிச் சொற்களில் காணும் அசைகளின் ஒருமைப்பாடும், ஒலியின் இனிமையும், சொற்களின் வளமும் நம் மொழியின் உயர் தன்மைகளிலே மிகச் சிறந்தவைகள்" என்கிறுர்.

---

[11] "The harmony of its rhythm, the grace of its sounds and the richness of its vocabulary are the most precious of its qualities."

—Prof. S. Ilakkuvanar M.A., M.O.L.

இலக்கணங் காட்டும் எழிற்றமிழ்ச் சிறப்பு

அவசரக்குடுக்கை, அதோகதி, ஆகாயத்தாமரை, ஆயிரங்காலத்துப்பயிர், இந்திரசாலம், ஓலைகிழிந்தது, தாளம்போடுகிறன், நாமம்போட்டுவிட்டான், புத்தகப் பூச்சி போன்ற மரபுத்தொடர்களாலும் (Idioms), ஓட்டமும் நடையுமாய், தட்டுத்தடுமாறி, கொள்ளைகொள்ளையாக, நன்மைதிமை, மேலும்கீழும் போன்ற இனிய சொற்றொடர் களாலும் (Phrases) தமிழ்மொழி சிறப்புடன் திகழ்கின்றது. நம் மொழியில் காணும் பலவகையான தொகைகள் சொற் சுருக்கத்துக்கும், சொல்லினிமைக்கும் பெரிதும் பயன்படு கின்றன. கபிலரும், பரணரும் என்பதைக் கபிலபரணர் என்று சொல்லும்பொழுது எவ்வளவு இனிமையாக இருக் கின்றது! மொழிநூல் வல்லார் தனிநிலை (Isolation), உட்பிணைப்பு நிலை (Inflection), ஒட்டுநிலை (Agglutination) என்று மொழிகளின் நிலைகளைப் பாகுபாடு செய்துள்ளார் கள். தமிழ்மொழி ஒட்டுநிலையைக் கொண்டது. அடிச்சொல் (Root) இரண்டும், பலவும் ஒட்டிநிற்கும் நிலை ஒட்டு நிலை. கண் + ஆன் (அன்) என்ற இரண்டும் சேர்ந்து ஒட்டுவதால் 'கண்ணன்' என்ற சொல் கிடைக்கின்றது. இவ்வாறு பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகியவற்றை ஒன்றேடு ஒன்றை ஒட்டித்தான் தமிழ்ச் சொற்களை உரு வாக்குகின்றேம். இம்முறையால் பல புதிய சொற்களை உண்டுபண்ணவும், இடைநிலைகளாலேயே காலங்களை அறியவும் முடிகின்றது.

தமிழின் திணைப்பாகுபாடும், எண்பாகுபாடும் போற்றற் குரியன. உலகில் உள்ள பொருள்களை உயர்திணையென்றும், அஃறிணையென்றும் பிரித்து,

> உயர்திணை யென்மனர் மக்கட் சுட்டே ;
> அஃறிணை யென்மனர் அவரல பிறவே (தொல். சொல்-1)

என்று வரையறுத்துள்ளார்கள் நம் முன்னேர்கள். தமிழில் ஒன்றை ஒருமையென்றும், ஒன்றுக்கு மேற்பட்ட வற்றைப் பன்மையென்றும் கூறுகின்றேம். ஆனல், உலகில் சில மொழிகளில் ஒருமை, இருமை, பன்மை என்று பொருத் தமின்றிக் குறிப்பிடுகின்றர்கள்.

தமிழ்நெடுங்கணக்கின் அமைப்பே எண்ணி மகிழ்ந்து ஏற்றியுரைப்பதற்குரியது. உயிர் பன்னிரெண்டையும், மெய் பதினெட்டையும், ஆய்தம் ஒன்றையும் ஆக மொத்தம் முப்பத்தோரெழுத்துக்களைக் கொண்டது நம் மொழி. இவையே முதலெழுத்துக்கள். பன்னீருயிரும், பதினெண் மெய்யும் சேர இருநூற்றுப் பதினறு உயிர்மெய்யெழுத் துக்கள் பிறக்கும். இவைகளில் 'ற, ழ, ன' ஆகிய மூன் றெழுத்துக்களும் இம் மொழியின் சிறப்பெழுத்துக்களாகும். மனிதனின் உயிர்போன்று மொழிக்கு உயிராகஇருக்கக் கூடிய எழுத்துக்களை உயிரெழுத்தென்ருர்கள்; மனிதனின் மெய்போன்று இருக்கக்கூடிய புள்ளி எழுத்துக்களை மெய் யெழுத்துக்களென்ருர்கள். உயிரும், மெய்யும் இணைகின்ற பொழுது இயக்கம் ஏற்படுவதைப்போல், உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் சேர்கின்றபொழுது மொழி இயங்கு கின்றது. மெய் மட்டும் கண்ணுக்குப் புலனகி உயிர் கண் ணுக்குப் புலப்படாததுபோல், 'க்+அ→க' என்ருகின்ற பொழுது 'க' கரத்தில் 'அ' கரவுயிர் மறைந்திருக்கும் சிறப்பை நோக்குங்கள்! இவ்வாறு எத்தனையோ சிறப் புக்கள் நம் மொழி நெடுங்கணக்கில் உள.

உலக மொழிகளுக்கு இல்லாத ஒலிச்சிறப்பு நம் மொழிக்கு உண்டு. வல்லோசையென்றும், இடையோசை யென்றும், மெல்லோசையென்றும் நம் மொழியொலியைப் பிரித்திருக்கின்ருேம். இச்சிறப்பைப்பற்றி டாக்டர் மு. வரதராசனர் அவர்கள், "தமிழ்மொழியின் ஒலிகள் எல்லா உறுப்புக்களுக்கும் அளவான உழைப்புத் தருவன வாக வுள்ளன. அதனல், தமிழ் ஒலிகளில் பயின்றவர் ஒலி உறுப்புக்கள் (Ocal Organs) எல்லாவற்றிற்கும் பயிற்சி தந்தவராய் இருத்தலால் பிற மொழிகளைக் கற்க முயலும் போது அவற்றின் ஒலிகளை எளிதில் ஒலிக்க வல்லவரா கின்றனர்" என்று தமது 'மொழிநூலில்' கூறுகின்ருர் கள்.

இத்துணை அரிய சிறப்புக்களைத் தமிழ்மொழி கொண்டு விளங்குவதால்தான் புலவர்களெல்லாம் இதனைப் போற்று

கின்றனர். தமிழ் கற்ருேரெல்லாம் இதைத் தாயைப்போல் கருதித் தலைதாழ்த்தி வணங்குகின்றனர்.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னுடு விளங்குறத் திகழுந் தென்மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக்(கு) உணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக்(கு) இருகணுய் வயங்குநன் மொழியே!
தானியல் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

—கா. நமச்சிவாய முதலியார்.

iii. முத்தமிழ்

தமிழ்மொழி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்று பண்டைக்காலத்திலிருந்தே முப்பெரும் பிரிவாகப் பிரிந்து செப்பரிய செம்மைபெற்றுத் தழைத்தோங்கி வளர்ந்து வண்ணமுற வாழ்ந்துவருகிறது. மனக் கூறுபாட்டை நம் முன்ஞேர்கள் நன்கறிந்திருந்ததால் அம்மனம் முழு வளர்ச்சி பெறுதற்கு முத்தமிழ் வேண்டற்பாலதென்பதை விரிவாக உணர்ந்திருந்தனர். "மனத்தில் பொதுவாக அறிவுக்கூறு, உணர்ச்சிக்கூறு, முயற்சிக்கூறு (Knowing, feeling and willing) என்ற மூன்று கூறுகள் உள்ளன. இந்த மூன்று கூறுகளும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத தொடர்பைப் பெற்று ஒத்துழைத்து ஒருங்கே வளர்ந்தால்தான் மனம் சரியான வளர்ச்சி எய்தும். ...... இயல் வாயிலாகத் தமிழ் மனத்தின் அறிவுக்கூற்றை வளர்க்கின்றது. இசை உணர்ச்சிக்கூற்றை வளர்க்கின்றது இயலும் இசையும் சேர்ந்து பிறக்கின்ற நாடகம், முயற்சிக் கூறு என்ற பகுதியை இயல், இசை என்னும் துணை கொண்டு நடித்துக் காட்டி முற்றுவிக்கின்றது," என்று இலக்கிய ஓவியங்கள் என்ற தம் நூலில் திரு. ச. ஆறுமுக முதலியார் எடுத்துக் கூறுகின்ருர்.

முத்தமிழ்ப் பாகுபாடு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே நம் தத்துவ மொழியில் அமைந்து இருந்தது.

தொல்காப்பியரும் நாடகம் என்ற சொல்லையும், இசையென்ற சொல்லையும், உரையென்ற சொல்லையும் பல்லிடங்களிலே பயன்படுத்தியுள்ளார். "நாடக வழக்கினும்" என்றும், "இசையோடு சிவணிய" என்றும், "உரைநடை வகையே" என்றும், தொல்காப்பிய நூற்பாக்களிலே முத்தமிழைக் குறிக்கும் சொற்களையும், சொற்றொடர்களையும் காண்கின்றோம்.

கண்ணகியின் கற்பு மேம்பாட்டைக் கூறும் செஞ்சொல் சிலப்பதிகாரம் தித்திக்கும் முத்தமிழ்க் காப்பியம். இதில் உரையும் செய்யுளுமுண்டு; பண்ணமைந்த பாக்கள் உண்டு; இவைகளிருப்பதால் இதில் நாடகத் தமிழுண்டு.

உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள
மதுரைக் கூலவாணிகச் சாத்தன் கேட்டனன்

என்ற சிலப்பதிகாரப் பாயிர அடிகள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன.

குடக்கோ முனிசேரன்
தண்டாவுரை முத்தமிழ்

என்கின்றது சிலப்பதிகார நூற்சிறப்புப் பாயிரம். இன்னும் சிலம்புக்காதை முத்தமிழ்க் காப்பியம் என்பதை,

"பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யான்"
"ஒருந் தமிழொரு மூன்றும் உலகின் புறவகுத்துச்
சேரன் தெரித்த சிலப்பதிகாரம்" என்று

பாங்குறப் பேசுகின்றது அடியார்க்குநல்லார் உரைப் பாயிரம்.

முத்தமிழ்ப் பாகுபாட்டைப் பிங்கல நிகண்டும்,

இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழென
வகைப்பட சாற்றினர் மதியுணர்ந் தோரே

என்று எடுத்துரைக்கின்றது. பிற்காலத்து ஔவையாரும், "சங்கத் தமிழ்மூன்றுந் தா" என்று துங்கக் கரிமுகத்தோனிடம் வேண்டுகோள் விடுக்கின்றார். உம்பர் போற்றும் கம்பரும், "ஏழுலகும் புகழ் முத்து முத்தமிழ்" என்று இத் தமிழ்ச் சிறப்பை எடுத்துரைக்கின்றார்.

இயற்றமிழ் வரலாறு

இசைத்தமிழுக்கும், நாடகத்தமிழுக்கும் முன்பு தோன்றிய தமிழ் இயற்றமிழாகும். தமிழ்மொழியின் உரைநடை நூல்கள் பலவும், செய்யுள் நூல்கள் பலவும் இத்தமிழின் பாற்படும். இயற்றமிழால் ஆகிய இலக்கியங்களும், இலக்கணங்களும் எண்ணிறந்தன.

இலக்கியங்கள்

சங்ககாலச் செய்யுட்களும் அவற்றின் உரைகளும், இடைக்காலத்தில் தோன்றிய கம்பராமாயணம் போன்ற நூல்களும் அவற்றின் உரைகளும், இக்காலத்து வெளியாகும் செய்யுள் நூல்களும் உரைநூல்களும் இயற்றமிழில் அடங்கும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, சிற்றட்டகம், குணநாற்பது, முத்தொள்ளாயிரம், வச்சத்தொள்ளாயிரம், தகடூர்யாத்திரை, இரும்பல்காஞ்சி முதலிய சங்கநூல்களும் இயற்றமிழ் இலக்கியங்களுள் பழையனவாகும். இவையேயன்றிச் சைவ வைணவ சமண பௌத்த நூல்களும், புராணங்களும், இதிகாசங்களும், சிற்பம், கணிதம், சோதிடம், மருத்துவம் முதலிய பல்கலை நூல்களும், தொண்ணூற்ருறுவகைப் பிரபந்தங்களைச் சார்ந்த நன்னூல்களும் இயற்றமிழ் நூல்களே.

இலக்கணங்கள்

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என இயற்றமிழ் இலக்கணங்கள் ஐந்து வகைப்படும். தொல்காப்பியம், அவிநயம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல், முத்துவீரியம் போன்றவைகள் ஐந்திலக்கண நூல்களாகும்.

பொருள் இலக்கணம் அகப்பொருள் இலக்கணமென்றும் புறப்பொருள் இலக்கணமென்றும் இருவகைப்படும். அகப்பொருளைப்பற்றிக் கூறும் நூல்கள் இறையனார் அகப்பொருளும், நாற்கவிராய நம்பியகப்பொருளும், மாறனகப் பொருளுமாகும். புறப்பொருள் இலக்கண நூல்கள் பன்னிருபடலமும், புறப்பொருள்வெண்பாமாலையுமாகும்.

யாப்பிலக்கணத்தை மட்டும் அறிவிக்கும் நூல்கள் யாப்பருங்கலமும், யாப்பருங்கலக்காரிகையுமாகும்.

அணியிலக்கணத்தைத் தனியே அறிவிக்கும் நூல்கள் அணியியல், தண்டியலங்காரம், குவலயாநந்தம், மாறனலங் காரமாகும்.

பன்னிருபாட்டியல், இந்திரகாளியம், வாருணப் பாட்டியல், வச்சணந்திமாலை, நவநீதப்பாட்டியல், தத் தாத்திரேயப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், வரையறுத்த பாட்டியல் முதலியன பொருத்த இலக்கணத்தையும், பிர பந்த இலக்கணத்தையும் தெரிவிக்கும் நூல்களாகும்.

இயற்றமிழின் இரு பிரிவு

இயற்றமிழ் செந்தமிழென்றும், கொடுந்தமிழென்றும் இருவகைப்படும். பிறமொழிச் சொற்களின் கலப்பின்றி தனித்தமிழ்ச் சொற்களாலாகி நடப்பதைச் செந்தமி ழென்றும், மலையாளம், தெலுங்கு போன்ற பிறமொழிச் சொற்களின் கலப்பாலாகி நடப்பதைக் கொடுந்தமிழென்றும் கூறுவர்.

செந்தமிழ் வழங்கிய நாடு செந்தமிழ்நாடு என்று பெயர்பெற்றது. செந்தமிழ்நாட்டின் சிறப்பை யுணர்ந்த பைந்தமிழ்ப் பாரதியும்,

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
    தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
    சக்தி பிறக்குது மூச்சினிலே

எனப் பாடியுள்ளார்.

செந்தமிழ் நாடே
சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்
சௌந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநாடென்ப

என்ற நூற்பா, பாண்டியநாடே செந்தமிழ்நாடென்பதை வற்புறுத்துகின்றது. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த

பன்னிரண்டு குறுநிலங்களும் கொடுந்தமிழ்ப் பகுதிகளென்று அழைக்கப்பட்டன. அவை,

தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன் வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்

என்று பழைய வெண்பாவால் தெரியவருகின்றன.

இசைத்தமிழ் வரலாறு

பண்ணோடு கலந்து, தாளத்தோடுகூடி இயங்கும் செந்தமிழ், கொடுந்தமிழ்ப் பாட்டுக்களால் ஆகிய இலக்கிய இலக்கணங்கள் இசைத்தமிழுள் அடங்கும். இதன்கண் கீர்த்தனங்கள், வரிப்பாட்டுக்கள், சிந்து, ஆனந்தக்களிப்பு, கும்மி, தெம்பாங்கு முதலியவை இடம்பெறுகின்றன. ஒரு சாரார் தமிழ்மொழியில் காணும் எல்லாச் செய்யுட்களையும் இசைத்தமிழின்கீழ்க் கொணர்வர்.

முற்காலத்தில் பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசைநுணுக்கம், பஞ்சமரபு, தாளசமுத்திரம், சச்சபுடவெண்பா, இந்திரகாளியம், பதினறுபடலம், தாளவகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யுள்துறைக்கோவை முதலியன இசைவகையைப் புலப்படுத்தும் இசைநூல்களாய் விளங்கின.

பண்களின் பாங்கு

எழில் தமிழ்இசை ஏழு வகைப்படும். அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை. இளி, விளரி, தாரம் எனப் பெயர்பெறும். இந்த ஏழிலிருந்து பிறப்பவையே பண்களும், திறங்களும். பண்கள் என்பவை இராகங்களாகும். திறங்கள் பண்களில் இருந்து உண்டாகி வேறு வேறு பெயர்பெற்று விளங்கும்.

நிறைநரம் பிற்றே பண்ணெண லாகும்
குறைநரம் பிற்றே திறமெனப் படுமே

என்று திவாகரம் பண்ணின் இயல்பையும், திறத்தின் இயல்பையும் தெளிவுபடுத்துகின்றது.

பண்கள் பகற்பண்கள் எனவும், இராப்பண்கள் எனவும், பொதுப்பண்கள் எனவும், பெரும்பண்கள் எனவும், ஐந்திணைப்பண்கள் எனவும், சிறுபொழுதுகளுக்குரிய பண்கள் எனவும், பெரும்பொழுதுகளுக்குரிய பண்கள் எனவும் பலவகைப்படும். இப்பண்களால் ஆகிய பாட்டுக்களே கீர்த்தனங்கள். அவைகள் உருக்கள், வரிகள் முதலிய பெயர்களால் வழங்கப்பெறும்.

பண்களோடு பழகக்கூடியவர்கள் அவைகளின் பாங்கறிந்து, பதமறிந்து பழகவேண்டும். காலையாக இருந்தால் காலை நேரத்திற்குரிய பண்ணையும், மாலையாக இருந்தால் மாலை நேரத்திற்குரிய பண்ணையும், பாலையாக இருந்தால் பாலை நிலத்திற்குரிய பண்ணையும் பாடவேண்டும். ஏற்றவாறு பாடாமல் பிழைபடப் பாடினால் கேட்டு இன்பம் பெறுதற்கு விழையும் மக்களுக்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் அப்பண்கள் இன்பம் பயவா.

முறைதெரிந்து, வரையறிந்து பாடினால் இசை யானையையும் தன்வயப்படுத்தும்; வணங்கா மகளிரையும் வணங்கப்பண்ணும். இவ்வுண்மையை,

> அணியிழை மகளிரும் யானையும் வணக்கும்
> மணியொலி வீணையும்

என்று பெருங்கதை பேசுகின்றது.

சங்ககாலத்தில் இசைத்தமிழ்

சங்ககாலத்தில் நம்மவர்கள் இசைத்தமிழை ஏற்றமுறு நிலையில் வைத்துப் போற்றி இருந்திருக்கின்றார்கள். கனிவுறு இசைதரும் இசைக் கருவிகளைக் கண்டு, இசைக் கலைஞர்களுக்குப் பொன்னும், பொருளும் கொடுத்து அவர்கள் வழியாய் ஏழிசைத் தமிழை வாழவைத்திருக்கின்றார்கள். நாடாண்ட அரசர்களும், நல்லுள்ளங்கொண்ட வள்ளல்களும் இசைச் செல்வர்களை நகையுடன் வரவேற்று வாரி வழங்கி, வண்டமிழ் இசைவளம் பெருக்கித் திசையெங்கும் அதன் புகழைப் பரப்பியிருக்கின்றார்கள்.

பொருநராற்றுப்படையும், சிறுபாணாற்றுப்படையும், பெரும்பாணாற்றுப்படையும் இசைத்தமிழ்ச் செய்தி கொண்ட இலக்கியங்கள். பொருநராற்றுப்படை பாடினி கையில்உள்ள பாலையாழின் பலவித சிறப்புக்களை, நல்லிலக்கணங்களை எடுத்துரைக்கும் திறத்தாலும், பாடினியின் அழகு நலன்களை வரைந்துகாட்டும் வளத்தாலும் ஒப்புயர்வற்று விளங்குகின்றது. சிறுபாணாற்றுப்படை பாலை நெடுவழியில் பாணர் இருவர் எதிர்ப்படுவதையும், பரிசில் பெற்ருன் பெருதானை வழிப்படுத்துவதையும் எடுத்துரைக்கின்றது. பரிசில் பெருேடு இருக்கும் பாவையின் அழகிற்கும் அளவு உண்டோ! கார்மேகமொத்த கவினுறு நெய்கனிந்த இருண்ட கூந்தலாம் அவளுக்கு! ஓகை கொண்டு தோகை விரித்தாடும் மயிலின் சாயலாம் அந்த மங்கைக்கு! மான் நோக்கினையும், மங்கா ஒளிவிளங்கும் நுதலினையும் உடையவளாம் அந்த ஒண்டொடி! பெரும்பாணாற்றுப்படை பேரியாழ் பெற்ற பெரும்பாணனின் வறுமையையும், அவனைப் புரக்கும் இளந்திரையனின் உளப்பாங்கையும் எடுத்தியம்புகின்றது.

எட்டுத்தொகையில் ஒன்ருகிய பரிபாடல் இன்னிசை அமைக்கப்பட்ட பாக்களின் தொகுப்பாகும். நாகனுர், நல்லச் சுதனுர் போன்ருேர் இதிற்காணும் பாடல்களுக்கு இசை வகுத்த ஏந்தல்களாவர்.

சிலம்பில்

செந்தமிழ்ச் சிலப்பதிகாரம் இன்னிசைப் பாக்களின் களஞ்சியமாக இலங்குகின்றது. இதன்கண் காணப்படும் மங்கலவாழ்த்துப் பாடலும், கானல்வரியும், வேட்டுவ வரியும், ஆய்ச்சியர் குரவையும், ஊர்சூழ் வரியும், குன்றக் குரவையும் வாழ்த்தும், இசையும், நாடகமும் பயின்றுவரும் பகுதிகளாகும். துன்பமாலையிலும், வஞ்சினமாலையிலும் இசைகலந்த அழுகைச்சுவை உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. இன்னும் அரங்கேற்றுகாதையில் பண்டை இசைநூல் குறிப்புக்கள் செறிந்து காணப்படுகின்றன.

சோழனுடைய ஆடலரங்கில் ஆடிய ஆரணங்கு மாதவி ஆடற்கலையிலும், பாடற்கலையிலும், அழகுக்கலையிலும் ஒப்பாரும் மிக்காருமின்றி உயர்ந்தவளாய்த் திகழ்ந்தாள்.

ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
கூறிய மூன்றில் ஒன்றுகுறை படாமல்

அவள் பன்னிரண்டு வயதுப் பதுமையாய்ப் பாரோர் போற்றச் சீரோடு விளங்கினுள் என்றுரைக்கின்றது அரங் கேற்றுகாதை. அவளது தளிர்க்கரத்தில், "மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தித்" திகழ்ந்த இன் னிசைக் கருவியாம் யாழ் விளைத்த நிகழ்ச்சியை இவ்வையமே அறியும்.

அதோ, காவிரி கடலோடு கலக்கும் இடத்திலே வெண் மணல் பரப்பு பாருங்கள்! ஆங்கு நறுமணம் பரப்பும் திரு விதழ் தாழைசூழ, பொன்னெத்த பூப்பூக்கும் புன்னைமரத்தின் நிழலிலே அண்ணல்யானைக் கொம்புகளைக் காலாகக் கொண்ட கட்டிலின்மேலே கோவலனும், மாதவியும் அமர்ந் திருக்கின்றார்கள். வயந்தமாலை வைத்திருந்த யாழைத் தலைக்கோல் பட்டம்பெற்ற தையல் வணங்கி வாங்கித் தன் மணிக்காந்தள் மெல்விரல்கள் கொண்டு பன்னரம்பின் இயல்புகளைத் தடவி ஆராய்கின்றாள். அதன்பிறகு, கோவலன் அவ்வியாழை வாங்கி, மாதவியின் மனம் மகிழ கடற்கானல்வரிப்பாணி வாசிக்கின்றான்.

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி.

இவ்வாறு காவிரி வெள்ளம்போல் இசைவெள்ளம் பெருக் கெடுக்க ஆற்றுவரிப்பாடல்களையும், சார்த்துவரிப் பாடல் களையும், முகமில்வரிப் பாடலையும், கானல்வரிப் பாடல் களையும் நிலைவரிப் பாடல்களையும், முரிவரிப் பாடல்களை யும், திணைநிலைவரிப் பாடல்களையும் இசைக்கலைஞனாகிய கோவலன் பாடுகின்றான். இவன் பிற ஒருத்திமீது காதல் கொண்டு பாடுகின்றானென்று பிறழ நினைத்த பேதைப்பெண்

மாதவி போதைதரும் யாழைவாங்கித் தானும் பிற ஒருவன் மீது ஆசை வைத்திருப்பதைப் போன்ற குறிப்புத் தோன்ற பாடுகின்ருள்.

அன்னந் துணையோ டாடக் கண்டு
நென்ன ஞேக்கி நின்ரு ரொருவர்
நென்ன ஞேக்கி நின்ரு ரவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர்.

இப்படிப்பட்ட சாயல்வரிப் பாடல்களையும், ஆற்றுவரிப் பாடல்களையும், சார்த்துவரிப் பாடல்களையும், திணைநிலை வரிப் பாடல்களையும், மயங்குதிணைநிலைவரிப் பாடல்களையும், முகமில்வரிப் பாடல்களையும் தனக்குரியாள் பாடக் கேட்ட கோவலன்,

கானல்வரி யான்பாடத் தான்ஒன்றின்மேல் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினளென
யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினை வந்து உருத்ததாகலின்

அவளை அன்போடு அரவணைத்திருந்த தன் கரம் நெகிழ்த்து வெறுத்து எழுந்து நடக்கின்ருன்.

மாதவியின் இசைக்கலைதான் கோவலனை ஈர்த்தது அன்று; அதே கலைதான் அவனைப் பிரித்தது இன்று!

இடைக்கால இசைத்தமிழ்

இடைக்காலத்தில் தேவாரம், திருவாசகம், கந்த புராணக் கீர்த்தனை, பெரியபுராணக் கீர்த்தனை முதலியன தோன்றின. மாணிக்கவாசகரும், திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்திநாயஞரும் இசைத் தமிழ் வளர்த்த பெருந்தகையாளராவர். அவர்கள் செவ்விசை நிறைந்த பாக்களைச் செந்தமிழில் யாத்தனர்; சிவத்தலங்கள்தோறும் சென்று பக்தியோடு பாடினர். அதனுல் மக்கள் மத்தியில் இசைத்தமிழ் ஆர்வம் மேலோங் கிற்று.

மாணிக்கவாசகப்பெருமான் சிவபிரானைச் சிந்தையால் பிடித்து உளவீட்டில் அடைத்து உணர்ச்சி உந்தலால் பாடும் பாட்டைப் பாருங்கள்; செவியால் ஒருங்கள்:

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

சிவபெருமானை மறந்து திரிந்த நாட்களை நினைந்து வருந்திப் பாடும் திருநாவுக்கரசரின் தீந்தமிழ்ப் பாட்டைச் செவிகொடுத்துக் கேளுங்கள் :

பாலனாய்க் கழிந்தநாளும்
பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்தநாளும்
மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்தநாளும்
குறிக்கோளி லாதுகெட்டேன்
சேலுலாம் பழனவேலித்
திருக்கொண்டீச் சரத்துளானே.

பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரந்தாமனைப் பரவிய ஆழ்வார்களும் தெள்ளுதமிழ் இசைப்பாக்களைச் சிந்தை மகிழப் பாடினர்; இசைத்தமிழை வளர்த்து வாழவைத்தனர். ஆண்டாள் பாடிய திருப்பாவை கேட்டு நெஞ்சம் மகிழாதவரும் நீணிலத்தில் உண்டோ? மார்கழித் திங்களில் ஆயர்குலச் சிறுமியர் தங்கள் குலத்தில் உதித்த கார்முகிலானைக் கருத்தில் கொண்டு இதோ பாடுகின்றார்கள்:

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

பிற்காலத்தில் இசைத்தமிழ்

19ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த வேதநாயகம் பிள்ளை சிறந்த இசைவல்லுநராக விளங்கினுர். சத்தியவேதக் கீர்த்தனை, சர்வசமய சமரசக் கீர்த்தனை முதலிய இசை நூல்களை இயற்றினுர். மாதா வாழ்த்துப் பாடல்கள் என்ற நூலையும் ஆக்கியருளினுர். யேசுவை ஈன்றெடுத்த மரியன்னையை நாளும் பரவுதல் சாலுமென்கிருர்.

காவைத் துதிப்பது பூவைப்பற்றியல்லோ
காரைத் துதிப்பது நீரைப்பற்றியல்லோ
ஆவைத் துதிப்பது சேயைப்பற்றியல்லோ
ஐயமேன் காணும்-இனி நீங்கள்—உய்யவேணும்
அஞ்சொற் குயிலின்தாளை-நெஞ்சுற்றிட இதுவேளை.

அவர் அந்தத் தாயின் பனிமலர் போன்ற பாதத்தைப் பிரிந்திருந்ததற்காக வருந்தி நிற்கின்ருர்.

அற்ப வாழ்க்கையைச் சதமெனநாடிப்-பாவம்
அநுதினமும் புரிந்தேன் பலகோடி
செப்பருந்துயரா லென்மனம்வாடி-வந்தேன்
தேவதாயேயுன் பாதாம் புயந்தேடி.

நாடகத்தமிழ் வரலாறு

இயற்றமிழும், இசைத்தமிழும் கலக்க நாடகத்தமிழ் பிறக்கும். இவ்வாறு பிறந்து பிறங்கிய பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலிய பழைய நாடகத்தமிழ் நூல்களெல்லாம் அழிந்துவிட்டன. எஞ்சி யிருந்த ஒருசில நூல்களும் பிற்காலத்தில் தமிழகத்தில் புகுந்த சமண பௌத்த சமயங்களால் வெறுக்கப்பட்டு அழிந்தொழிந்தன.

கூத்து

இன்று நாம் கண்டு களிக்கும்படியான நாடகங் களைப்போல் பண்டு இல்லை. அக்காலத்தில் நடிக்கப்பட்ட வைகளெல்லாம் நாட்டியங்களேயாகும். அவைகள் **கூத்து** என்ற பெயரால் வழங்கப்பட்டன. பிங்கல நிகண்டு ஆசிரியர் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கூறி

நாடகத்தை விளக்குகின்றபொழுது அதைக் கூத்தென்று குறிப்பிட்டு அதன் பல வகைகளையும் எடுத்துரைக்கின்றார். நாடகம் என்ற சொல் "நாடக வழக்கினும்" என்று தொல்காப்பியத்திலும்,

> நாடக மகளி ராடுகளத் தெடுத்த
> வீசிவீங் கின்னியங் கடுப்ப

என்று பெரும்பாணாற்றுப்படையிலும்,

> நாடக நன்னூல் நன்கு கடைப்பிடித்து

என்று சிலப்பதிகாரத்திலும்,

> நடமே நாடகம் கண்ணுள் நாட்டம்

என்று திவாகர நிகண்டிலும், இன்னும் பல இலக்கிய இலக்கணங்களிலும் இடம் பெற்றிருக்கின்றது. பழைய நூல்களில் நுழைந்த நாடகம் என்ற சொல் கூத்தென்பதைக் குறித்தே வந்திருக்கின்றது. பட்டினப்பாலையில் உருத்திரங் கண்ணனார் "பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்" என்று குறிப்பிடுகின்றார். இந்த இடத்திலும் நாடகம் என்ற சொல் நாட்டியத்தையே காட்டிநிற்கின்றது என்பது இலக்கிய ஆராய்ச்சியாளர்களின் துணிபு.

விநோதக் கூத்து என்பது நாட்டிய வகைகளுள் ஒன்று. இதை அடியார்க்குநல்லார், "கொடித்தேர் வேந்தரும் குறுநில மன்னருமாக உடையோர் பகைவென்றிருந்த விடத்து விநோதங் காணுங் கூத்து" என்று விளக்குகின்றார். ஆகவே, அக்காலத்தில் சிறந்த நாட்களில் அரசர்கள்முன்பு இக்கூத்துக்கள் நடைபெறுவது வழக்கமாய் இருந்தது என்பது தெரிகின்றது. விறலியர் பாணருடன் பாராளும் வேந்தர்களின் அவைக்குச் சென்று பாங்குறப் பாடிக் கூத்து நிகழ்த்தி, அரசர்களை மகிழ்வித்து மாண்புறு பொருள் பெற்று வாழ்ந்துவந்தனர் என்பது சங்கஇலக்கியங்கள் எங்கணுங் காணும் செய்தி.

சோழன் நலங்கிள்ளி நல்ல வள்ளியோனாக விளங்கினான். கூத்தரையும், பாணரையும், பொருநரையும்,

விறலியரையும் போற்றிப் புரந்தான். அவனைக் கோவூர் கிழார் பாடுகின்றபொழுது,

> வண்ணம் நீவிய வணங்கிறைப் பணைத்தோள்
> ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
> மாட மதுரையும் தருகுவன்

என்று, அவன் விறலியரைப் போற்றுந் திறத்தினைப் புறநானூற்றுப் பாட்டால் காட்டுகின்றார்.

கி. பி. 6ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ்க்கூத்து மறுமலர்ச்சியுற்று அரும்வளர்ச்சி கண்டது. சைவ, வைணவச் சமயங்களின் கிளர்ச்சியால் இசைப்பாட்டு பெரிதும் பேணப்பட்டது. இதன்காரணத்தால் கூத்தும் மக்களால் நன்கு போற்றப்பட்டது. கோயில்களின் முற்றமே கூத்தாடுதற்குரிய அரங்கமாயிற்று. அரசனும், பொது மக்களும் கூடிப் பார்க்குமளவிற்குக் கூத்து வளர்ந்தது. இச்செய்திகள் பல கோயில் கல்வெட்டுக்களால் புலனாகின்றன. திருவாரூர்க் கோயிலில் ஒரு நாடக மகள் தனது கூத்தாற்றலை அரசன்முன்பு அரங்கேற்றி, “பூங்கோயில் நாயகத் தலைக்கோலி” என்ற பட்டம் பெற்றனள் என்று சோழர்காலக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

தொடக்கத்தில் கூத்து பாட்டும், அபிநயமும் கொண்டதாக இருந்தது. பிறகு அஃது ஒரு கதையைத் தழுவியதாக மாறியது. சாந்திக்கூத்தென்பது கதையைத் தழுவி வரும் நாடகமென்கின்றார் அடியார்க்குநல்லார். பொதுவாக இக் கூத்துக்களிலெல்லாம் திறல்மிக்க விறலியொருத்தியே ஒரு கதையைப் பின்பற்றி அதில் வரும் பல பாத்திரங்களையும் தானே மேற்கொண்டு பாட்டுக்களாலும், அபிநயங்களாலும் கதையை நிகழ்த்தி முற்றுவிப்பாள்.

நாடகம்

பழங்காலக் கூத்துவகைகளில் இருந்துதான் தற்கால நாடகங்கள் பிறந்தன. சமயச் சார்பான கதைகள் கோயில் அரங்குகளிலேயே திருவிழாக்கள் போன்ற முக்கியமான நாட்களில் நாடகங்களாக நடிக்கப்பட்டன. முதல் இராசராசன் (கி. பி. 985-1017) தஞ்சைப் பெரியகோயிலைக்

கட்டியவன். அக்கோயிலில் 'இராஜராஜேஸ்வர நாடகம்' வருடந்தோறும் நடந்துவந்ததாகக் கல்வெட்டொன்று கூறுகின்றது. 1119இல் கமலாலயபட்டர் என்பவர் பூம்புலியூர் நாடகம் என்பதை இயற்றி மன்னனால் இறையிலி நிலம் பெற்றார் என்று தென்னாற்காட்டுக் கடலூரிலுள்ள கல்வெட்டொன்று சொல்லுகின்றது.

17ஆம் நூற்றாண்டில் உழத்திப்பாட்டு, குறத்திப்பாட்டு என்று இரண்டுவகை நாடகநூல்கள் தோன்றின. அவைகளில் குறிப்பிடத்தக்கவை முக்கூடற்பள்ளு, குருகூர்ப் பள்ளு, குற்றாலக்குறவஞ்சி முதலியவையாகும்.

18ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயர் கீர்த்தனங்கள் நிறைந்த இராமநாடகக் கீர்த்தனை என்ற நூலை இயற்றினார். இதுமுதல் கதாக்காலட்சேபத்திற்குரியனவும், நடிப்பதற்கு உரியனவுமாகப் பல கீர்த்தன நாடகங்கள் தோன்றின. பாரதக்கீர்த்தனை, பெரியபுராணக்கீர்த்தனை, நந்தன் சரித்திரக் கீர்த்தனை, திருவிளையாடற் கீர்த்தனை முதலியனவும் சகுந்தலை நாடகம், அரிச்சந்திர நாடகம் போன்றவையும் தோன்றின.

19ஆம் நூற்றாண்டில்தான் தமிழ் நாடக வளர்ச்சி பெருமளவிற்கு ஏற்பட்டது. மேல்நாட்டு நாடக முறையையும் பல்லோர் தழுவி தமிழில் நாடகங்கள் ஆக்கத் தலைப்பட்டனர். வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பல நாடகங்களை எழுதினார். நாடக இயல் என்ற நாடக இலக்கண நூலொன்றும் ஆக்கியருளினார். கலாவதி, ரூபாவதி, மானவிஜயம் போன்ற நாடகங்கள் அருமைத் தமிழ் மொழியில் அவர் ஆக்கியவைகள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல சமயத்தினரும் தங்கள் தங்கள் சமயக்கருத்துக்களை நயம் பொருந்திய நாடகங்களின் வாயிலாகப் பரப்ப முனைந்தனர். முசுலிம்கள் அல்லிபாதுஷா நாடகம், அப்பாசு நாடகம் போன்றவற்றையும், கிறிஸ்துவப் பெரியார்கள் ஞானத்தச்சன் நாடகம், தேவசகாயம் பிள்ளை நாடகம், ஞானசௌந்தரி

நாடகம் போன்றவற்றையும் ஆன்ற புலமையோடு ஆக்கி நாடகத்தமிழ் வளர்ச்சியை ஊக்கினர்.

இந்நூற்றுண்டில்தான் மனோன்மணீயம் என்ற இலக்கிய நாடகத்தைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் தமிழ் மொழி வளமுற வெளியிட்டார்கள். இந்நாடகம் நாடகத் தமிழுக்கு ஒப்பற்ற ஒளிவிளக்காக விளங்குகின்றது. லிட்டன் கோமகன் ஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி (The Secret Way) என்ற நாடகத்தைத் தழுவியே இதைப் பொலிவுடன் படைத்துள்ளார்.

பம்மல் சம்பந்த முதலியார் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் 1891ஆம் ஆண்டு லீலாவதி — சுலோசனு என்ற நாடகத்தை உரைநடையில் எழுதி வெளியிட்டார். இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை உருவாக்கி அருந்தமிழ் மொழிக்கு அருங்கலன்களாக அருளியிருக்கின்றுர். இவருடைய நாடகங்களில் மனோகரா மக்களிடையே நல்ல மதிப்போடு உலவிய ஒன்றுகும். இந்நாடகப் பேராசிரியர் இன்றும் தமிழ்நாடக உலகில் தமிழ் நாடகத் தந்தை என்ற பெரும் பெயருடன், பெரும் மதிப்புடன், அதிசிறப்புடன் திகழ்கின்றுர். நாடகக் கலைஞர்களுக்கு இருந்த இழிநிலையை அழித்தொழித்த பெருமை இந்த அறிஞரையே சாரும்.

நாடகத்தமிழ்பற்றி நற்கருத்து

தமிழ்த்தென்றல் திரு. வி. க. முத்தமிழும் தழைத்து ஓங்க வேண்டுமென்று தமிழ்த்தொண்டு புரிந்த பெரியாராவார். "ஆடல்நெறி, பாடல்நெறி, ஒழுக்கநெறி அமையப்பெற்ற நாடகங்கள் நன்முறையில் வளரவேண்டும்" என்றுரைத்துள்ளார். மேலும், "நாடக உலகம் செம்மையுறுவதாக! நாடகத்தமிழ் வளம் பெறுவதாக! இப்பணிக்கு இளங்கோக்களும், முத்தமிழ்விரகர்களும் தோன்றுவார்களாக! தமிழ் வாழ்க! தமிழ் வெல்க! நாடகக்கலை வளர்க!" என்று வாழ்த்தியும் உள்ளார்.

முத்தமிழ்குறித்து திரு. வி. க.

" வாழ்க்கை என்பது ஒரு நிலையம். இந்நிலையத்துக்குக் கால் எது? சுவர் எது? கூரை எது? இயல் கால், இசை சுவர், நாடகம் கூரை. இவ்வாறு அமைவது வாழ்க்கை நிலையம். இதுவே தமிழ்நிலையம்; முத்தமிழ்நிலையம். "

இவ்வாறாக நம் தமிழ்மொழி முத்துத்தமிழாக, முத்தமிழ் மொழியாக இத்தரை பிறங்கி, எழிலுடன் விளங்கி எத் திசையிலும் நற்புகழ் ஈட்டிப் புதுப்பொலிவுடனும், வலி வுடனும் வளர்கின்றது; வாழ்கின்றது.

4. முச்சங்கச் செய்திகள்

இக்காலப் பல்கலைக்கழகங்கள் (Universities) போன்று அக்காலத்தில் நம் தமிழகத்தில் தமிழ்ச்சங்கங்கள் விளங் கின. " மாணவர்கள் சங்கத்திலேயே இருக்க—படுக்க உண்ண—உடுத்த முதலிய எல்லா வசதிகளையும் பெற்று வந்தார்கள். அஃதாவது, குருகுலவாசம் (Residential University) என்னப்பட்ட சங்கங்களாக இருந்தன " என் கின்றார் அ. சிதம்பரனார். அக்காலத்துத் தண்டமிழ்ப் பாண்டியர்கள் தமிழ்வளர்ச்சிக்கு வேண்டியதைச் செய் தார்கள் என்பதில் எவரும் ஐயம் கொள்ளுதற்கில்லை. ஆகவே, புலவர்களையும், மாணவர்களையும் சங்கங்களில் சேர்த்துத் தமிழ்வாயிலாகப் பல கலைகளையும் மலைபோல் வளர்த்தார்கள் என்பது வெள்ளிடைமலை.

சீனா, ஆப்கனிஸ்தான், எகிப்து, பாபிலோனியா, பாரசீகம், அக்கேடியா, சுமேரியா, இலங்கை முதலிய இடங்களிலிருந்தும் மாணவர்கள் விருப்புற்று வந்து சங்கங் களில் தங்கிப் படித்துச் சென்றார்கள் என்று சிலபல குறிப்புக்களால் தெரியவருகின்றது. வடபுலத்தில் நாலந்தா (Nalanda), தக்கசீலம் (Taxilla) போன்ற பல்கலைக் கழ கங்கள் விளங்கினவென்று அறிகின்றோம். இவைகளைப் போல் ஆனால், இவைகள் தோன்றுதற்கு முன்பே தமிழ்ச் சங்கங்கள் தோன்றித் துலங்கின. புலத்துறை முற்றிய

புலவர்பெருமக்கள் உளமுவந்து ஒருங்குகூடிச் சங்கங்களில் அருந்தமிழை ஆய்ந்தார்கள். நயக்கும்படியான இலக்கியங்களையும், வியக்கும்படியான இலக்கணங்களையும் உருவாக்கி உலகிற்கீந்தார்கள். அவர்களின் அரிய பெரிய தொண்டால் சீரிளமை குன்ரு நம் தீந்தமிழ்மொழி நிறைவாழ்வு பெற்றுப் பிறங்கிற்று.

i. சங்கங்கள் இருந்தனவா ?

பாண்டிய மன்னர்கள் பைந்தமிழ்ப் பற்றுக்கொண்டு தங்கள் தலைநகரங்களில் சங்கங்கள் வைத்துத் தமிழை வளர்த்தார்களென்று பல சான்றுகளால் நாம் அறிகின்ரேம். ஆனல், ஒருசிலர் சங்கங்கள் இருக்கவில்லை என்று காரணங்கள் காட்டி மறுக்கின்றனர்.

சங்கம் என்ற சொல்

''சங்கம்'' என்ற சொல் தமிழ்ச்சொல் அன்று என்றும், வடமொழிச் சொல்லேயென்றும் கூறுகின்றனர். மேலும், வடநாட்டில் நடந்த நாலந்தா, தக்கசீலம் முதலிய சங்கங்களைப் பார்த்துத் தென்னுட்டிலும் தென்மொழிக்குச் சங்கங்கள் இருந்தனவாகப் பொய்க்கதைபுனைந்துள்ளனர் என்றும் பகருகின்றனர். தொல்காப்பியர் காலத்தில் சகர ஒற்று அ, ஐ, ஔ என்னும் மூவுயிரோடுங்கூடி மொழிக்கு முதலில் வாராதென்று தர்க்கித்து, அவ்வமைப்பைக் குறிக்கவே தமிழில் சொல்லின்றி எவ்வாறு ஓர் இயக்கம் இருந்திருக்க முடியும் என்கின்ருர்கள். மேலும், பழைய தமிழ்இலக்கியங்களில் சங்கமென்ற சொல் காணப்படவில்லை என்பதையும் ஒருகாரணமாகக் காட்டுகின்ருர்கள். முச்சங்கச் செய்திகள் முழுப்பொய் என்று கூறுவோரில் முன்வரிசையில் நிற்போர் பி. டி. சீனிவாச ஐயங்காரும், கே. என். சிவராசப் பிள்ளையுமாவார்கள். இவர்கள் சிவபெருமான், முருகன்போன்ற கடவுளர்கள் சங்கங்களில் கலந்துகொண்டதைக் கற்பனைக் கதையென்றும், அரசர்கள், புலவர்கள் எண்ணிக்கைகள்

எல்லாம் அறிவுக்குப் பொருந்தாப் புள்ளிவிவரங்கள் என்றும், போரும் பூசலும் நிறைந்து ஒற்றுமை சிதைந்து ஒண்டமிழ்நாடு பல பகுதிகளாகப் பிரிந்திருந்த காலத்தில் வேற்றிடங்களுக்குரிய புலவர்களெல்லாம் ஓரிடத்தில் ஒன்று கூடினர் என்பது நம்புதற்குரியது அன்று என்றும் குறிப்பிடுகின்றார்கள்.

ஆனால், இன்றைய ஆராய்ச்சிப் பேரறிஞர்கள் மேலே காணும் கூற்றுக்களைப் பல காரணங்கள் காட்டி மறுக்கின்றார்கள். சங்கம் என்ற சொல் தமிழ்ச்சொல்லே என்று கார்த்திகேய முதலியார், யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாச அடிகளார், தேவநேயப் பாவாணர் போன்ற மொழிநூல் வல்லுநர்கள் தங்கள் தங்கள் நூல்களில் விளக்கிக் காட்டியுள்ளார்கள். 'சங்கம்' என்ற சொல் தமிழ்ச்சொல் இல்லையென்பதற்கு,

சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ, ஐ, ஔ எனும் மூன்றலங்கடையே

என்னும் தொல்காப்பிய நூற்பாவை ஆதாரமாகக் காட்டுகின்றார்கள்.

"அ, ஐ, ஔ எனும் மூன்றலங்கடையே" என்ற அடியின்படி பொருள்கொள்வோமானால் க், ச், த், ந், ப், ம் என்ற ஆறு மெய்யெழுத்துக்களும் அ, ஐ, ஔ என்ற மூன்று உயிரெழுத்துக்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வராமல் இருக்கவேண்டும். தொல்காப்பியரே சகரத்தை மொழிக்கு முதலில் வைத்து இரண்டு சூத்திரங்கள் செய்துள்ளார். அவை,

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே"
"சகார ஞகாரம் இடைநா அண்ணம்"

என்பவையாகும்.

தொல்காப்பியத்தை இலக்கணமாகக்கொண்டு சங்க காலப் புலவர்களும் சகரத்தை மொழிக்கு முதலில் வைத்துப் பாடியிருக்கின்றார்கள்.

தந்த கள்வன் சமழ்ப்புமுகம் காண்மின்
(பரிபாடல்—20)

மன்பதை சவட்டும் கூற்றம் என்ப
(பதிற்றுப்பத்து—84)

பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டி
(பெரும்பாணாற்றுப்படை—217)

சந்து நீவிய புன்முடிந் திடுமின்
(மலைபடுகடாம்—393)

தொல்காப்பியர் காலத்தில் சங்கம் என்ற சொல் பழக்கத்தில் இல்லாதிருந்திருக்கலாம். அவ்வமைப்பைக் குறிக்க சங்கநூல்களில் காணப்படும் நிலையம், புணர்ப்பு, அவை, கழகம், கூடல் என்ற பழஞ்சொற்கள் பயன்பட்டிருக்கலாம். சங்கமென்ற சொல்லைக் கடைச்சங்கப் புலவராகிய சீத்தலைச் சாத்தனார்,

புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க

என்று மணிமேகலையில் எடுத்தாண்டுள்ளார். எனவே, சங்கங்கள் இருக்கவில்லை எனக் கூறுவோர் காட்டுங் காரணங்கள், பல்லாண்டுகளாக நல்லறிஞர்களால் நம்பப்பட்டுவந்த ஒன்றை இல்லையென்று இயம்பற்குப் பொருந்தியவை அன்று என்பது நன்கு புலனாகின்றது.

ii. சங்கங்களும் சான்றுகளும்

1. தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்.
—மதுரைக்காஞ்சி 761—763

2. தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை
—சிறுபாணாற்றுப்படை 66—67

3. நிலனாவிற் றிரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ
—கலித்தொகை—35

4\. மதிமொழி யிடன்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர

—கலித்தொகை-68

5\. பொத்தி யாண்ட பெரும்சோ ழனையும்
வித்தை யாண்ட விளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று

—பதிற்றுப்பத்து- ஒன்பதாம்பத்துப் பதிகம்.

இங்கு, "வித்தை யாண்ட விளம்பழையன் மாறன்" என்பது, முத்தமிழையும் ஆண்டு ஆராய்ந்த மாறனாகிய பாண்டியனைக் குறித்து நிற்கின்றது.

6\. பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்
அறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந்தமிழ் மூன்றும் தெரிந்த காலை

அகநானூற்றின் உரைப்பாயிரத்தில் இடைவளநாட்டு மணக்குடியான் பால் வண்ண தேவனான வில்லவதரையன் நல்லிசைப் புலவர்கள் சங்கத்தில் கூடி முத்தமிழை ஆய்ந்த திறத்தைக் கூறுகின்றார்.

7\. இமிழ்குரல் முரசம் மூன்றுடன் நாளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே

—காரிக்கண்ணனார்—புறம்-58

8\. மதுராபுரிச் சங்கம் வைத்தும்
மகாபாரதம் தமிழ்ப்படுத்தும்

—சின்னமனூர்ச்செப்பேடு-பாண்டியன் மெய்க்கீர்த்தி

9\. தலைச்சங்கப் புலவனார் தம்முள்

—பெரியபுராணம்.

10\. சங்கத்தமிழ் மூன்றுந் தா

— ஔவையார்.

11\. புகலி ஞானசம்பந்தன் உரைசெய்
சங்கமலி செந்தமிழ்கள்

—திருஞானசம்பந்தர்-திருத்தேவூர்.

12. சங்கமுத்தமிழ்

—ஆண்டாள்-பெரியதிருமொழி

13. பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடாது

—புறத்திரட்டு-புகழ்மாலை.

மேலே கண்ட பல்லிலக்கியச் சான்றுகளாலும் முச்சங்கங்கள் இருந்தவுண்மை தெள்ளத்தெளியத் தெரிகின்றது. இவைகளேயன்றி, கி. பி. முதல்நூற்றுண்டில் வாழ்ந்த நக்கீரனாின் இறையனார் அகப்பொருளுரையும் கடைச் சங்கத்தைப்பற்றிப் பரக்கப் பேசுகின்றது. அடியார்க்கு நல்லாரின் உரைப்பகுதியும் தலைச்சங்கத்தைப்பற்றியும், தென்மதுரையைப்பற்றியும் பல செய்திகளை நமக்கு வழங்குகின்றது.

iii. தலைச்சங்க வரலாறு

அரசரும் புலவரும்

குமரியாற்றங்கரையில் இருந்த தென்மதுரையில் பாண்டிய மன்னனான காய்சினவழுதி என்பான் தலைச் சங்கத்தை நிறுவினான். இச்சங்கத்தைப் புரந்தவர்கள் முதலாம் கடுங்கோன் இறுதியாக எண்பத்தொன்பது பாண்டிய மன்னர்கள். அதில் உறுப்பினர்களாக இருந்து தமிழை ஆய்ந்த புலவர்கள் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன் பதின்மர். அவர்களில் அகத்தியர் தலைசிறந்த புலவராக விளங்கினார். மார்க்கண்டேயர், வான்மீகர், கௌதமர் முதலியோரும் தலைச்சங்கத்தில் தமிழாய்ந்த புலவர்களாய்த் திகழ்ந்தார்களென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் நவில்கின்றார். முரஞ்சியூர் முடிநாகராயரும் தலைச்சங்க காலத்தவராக இறையனார் அகப்பொருளுரையுள் குறிக்கப்பட்டுள்ளார். இறையனாரும், குன்றம் எறிந்த குமரவேளும், குபேரனும் இச்சங்கத்தில் அங்கம்பெற்றிருந்தனர்.

காலமும் இடமும்

தலைச்சங்கம் ஏறக்குறைய கி. மு. 5000 ஆண்டுகட்கு முன்பே ஆரம்பமாகி இருக்கவேண்டும். அக்காலத்து ஈழம் பாண்டியநாட்டின் ஒரு பகுதியாக விளங்கிற்று. பஃறுளி

யாற்றையும், பன்மலை யடுக்கத்தையும் கொண்ட பகுதியில் இருந்த தென்மதுரையில்தான் தலைச்சங்கம் திகழ்ந்தது. பஃறுளியாற்றிற்கும், குமரிக்கோட்டிற்கும் இடையே இருந்த நிலம் எழுநூற்றுக்காவத தூரம் உடையதென்றும், ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குணகரைநாடு, ஏழ்குறும்பனைநாடு என்று நாற்பத்தொன்பது நாடுகளும், மலைகளும், காடுகளும், ஆறுகளும் இருந்தனவென்றும் அடியார்க்குநல்லார் அறிவிக்கின்றார்.

சுமார் கி. மு. 3000 ஆண்டுகட்குமுன் நிகழ்ந்த கடற்கோளால் பஃறுளியாறும், பன்மலையடுக்கமும், குமரிக்கோடும், கொடுங்கடலுக்குணவாயின. தலைச்சங்ககாலத்து நூல்களெல்லாம் அழிந்தன. ஒருசில நூல்களின் பகுதிகளே இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் செங்கோன்றரைச் செலவு என்பது ஒன்று; மற்றொன்று அகத்தியர் செய்த அகத்தியம்.

கடலால் அழிந்தது

கடற்பெருவெள்ளம் நிகழ்ந்ததைப்பற்றி வடமொழியில் சதபதபிராமணம் என்னும் வேதநூலும், விவிலிய நூலின் பழைய ஏற்பாடும் விளக்கம் தருகின்றன. இக்கடற்கோளால் தலைச்சங்கமிருந்த தென்மதுரைப் பகுதிமட்டும் அழிந்ததென்பதை நாம் மறத்தல் கூடாது. இஃது அளவில் சிறிதேயாகும். இதற்குமுன் நிகழ்ந்த ஒரு பெருங்கடற்கோளானது தமிழகமும், ஆபிரிக்காக்கண்டமும் தரைப்பகுதியால் இணைந்திருந்ததை அழித்துப் பெரும் நிலப்பகுதியைக் கடற்பகுதியாய் மாற்றிற்றென்று ஹெக்கல் என்ற பேராசிரியர் அக்கடற் பகுதியை ஆராய்ந்து கூறுகின்றார். தொன்மை வாய்ந்த இலெமூரியாவும் அக்கடற்கோளால் தான் அழிக்கப்பட்டது.

iv. இடைச்சங்க வரலாறு

அரசரும் புலவரும்

தலைச்சங்கமிருந்த தென்மதுரை அழிந்துபடவே, குமரி முனைக்கும் தென்பால் கடல் புகாதிருந்த வளநாட்டில் கடுங்கோன் என்பான் கபாடபுரத்தை அமைத்து அதில் மீண்டும் இடைச்சங்கத்தை நிறுவித் தமிழ்மொழியைப் போற்றிப் புரந்தான்.

இச்சங்கம் சுமார் கி. மு. 3000 இல் இருந்து கி. மு. 1500 வரைக்கும் நிலைபெற்றிருந்தது. தொல்காப்பியர், கீரந்தை போன்ற பெரும் புலவர்கள் சங்கப்புலவர்களாய்த் திகழ்ந்தனர். இவர்களுக்கு அகத்தியம் நூலாகத் துணைபுரிந்தது.

கபாடபுரம்

வடமொழிக் காவியங்களான வால்மீகிராமாயணத்திலும், வியாசபாரதத்திலும் கபாடபுரமிருந்த செய்தி பேசப்படுகின்றது. வான்மீகத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில், "வானரர்களே! பொன்மயமானதும், அழகானதும், முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டதும், பாண்டியர்க்குத் தகுதியுடையதுமான கபாடபுரத்தைப் பார்க்கக்கடவீர்!" என்ற பகுதி கபாடபுரத்தை நமக்கு அறிமுகப் படுத்துகின்றது. சாணக்கியர் தம் பொருள்நூலில் முத்துக்களின் வகைகளை எடுத்துக் கூறுமிடத்துக் கபாடபுரத் துறையில் குளித்த முத்தின் வகையைப் பாண்டிய கவாடகம் என்று குறித்துள்ளார்.

அடியார்க்குநல்லார் சிலப்பதிகார உரையில், "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கம்" என்று குறித்துள்ளார். மேலும், அவர் உரைப்பகுதியில் முதல் சங்கம், இடைச்சங்கம் இருந்த நகரங்களின் செய்திகளும், கவியரங்கேறிய பாண்டியர் செய்திகளும் தெரியவருகின்றன

> இவ்வகை யரசிற் கவியரங் கேறினுர்
> ஐவகை யரசர் ஆயிடைச் சங்கம்
> விண்ணகம் பரவும் மேதகு கீர்த்திக்
> கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப

என்ற பழைய அகவற்பாவும் கபாடபுரத்தில் இடைச்சங்கம் இருந்த செய்தியைச் சுட்டுகின்றது.

நூல்கள்

இடைச்சங்கத்தில் பல இலக்கியங்களும், இலக்கணங்களும் வெளிவந்தன. பெருங்கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, மாபுராணம், இசைநுணுக்கம், தொல்காப்பியம், பன்னிருபடலம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் தலைசிறந்த நூல் தொல்காப்பியர் செய்த தொல்காப்பியமாகும். கி. மு. 1500 அளவில் ஏற்பட்ட கடற்கோளானது கபாடபுரம் இருந்த பகுதி முழுவதையும் அழித்துவிட்டது. ஆகையால் இடைச்சங்கத்தின் இறுதியில் இருந்த முடத்திருமாறன் என்னும் பாண்டியன் தன்னாட்டுள் கூடல் என்னும் மதுரைமாநகரை உண்டுபண்ணி மூன்றும் தமிழ்ச்சங்கமான கடைச்சங்கத்தை நிறுவினான்.

தலை, இடைச் சங்கங்களைப்பற்றிய சிறந்த செய்திகள் நமக்கு மிகுதியாகக் கிடைக்கவில்லை. இறையனார் களவியல் உரையே ஒருசில செய்திகளை நமக்கு வழங்குகின்றது.

V. கடைச்சங்க வரலாறு

புலவர்கள்

கடைச்சங்கம் சுமார் கி. மு. 1500 இல் இருந்து கி. பி. 250 வரைக்கும் இப்பொழுது உள்ள மதுரையில் நிலைபெற்றிருந்ததென்று இறையனார் அகப்பொருளுரை கூறுகின்றது. இச்சங்கத்தைப்பற்றிய செய்திகளே நமக்கு இன்று நிறையக் கிடைத்துள்ளன. நக்கீரர், நல்லந்துவனார், சித்தலைச்சாத்தனார் போன்ற 49 புலவர்கள் கடைச்சங்கத்திலிருந்து தொகைநூல்களை இயற்றினார்கள். கபிலர், பரணர் போன்ற பெரும் புலவர்களும் கடைச்சங்க காலத்தவர்களே. இச்சங்கத்தில்தான் திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றினாரென்று தெரிகின்றது. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும் இச்சங்கத்தின் இறுதிக் காலத்து வாழ்ந்தவரே. சிறந்த சிலப்பதிகாரமும், செந்நெறி காட்டும் மணிமேகலையும் இச்சங்கத்தில் விளைந்தவைகளே.

சிறப்புக்கள்

இச்சங்கத்தில் சங்கப்பலகை ஒன்று இருந்த செய்தியும் பல சான்றுகளால் நாமறிகின்றோம். பழைய திருவிளையாடற் புராணம், "மொழியறி சங்கப்பலகை" என்றும், "பாவறி சங்கப்பலகை," என்றும் சங்கப் பலகையை நமக்குத்தெரிவிக்கின்றது. பாடிக் கொண்டுவரும் பாடல்களைச் சங்கப்பலகை ஏற்றால்தான் புலவர்பெருமக்கள் அவைகளைப் போற்றுவார்களாம்!

பாண்டிய மன்னன் ஒருவன் கடைச்சங்கத்திலிருந்த நாற்பத்தொன்பது புலவர்களின் உருவங்களைச் சிலைகளாகச் செய்து நிறுவினனும். ஒருசமயம் பொய்யாமொழிப் புலவர் அச்சிலைகள் முன்னின்று பாடினாராம். அவர் பாட்டிலே ஈடுபட்ட அப்பதுமைகள் தலையசைத்ததாகப் பழஞ்செய்தி கூறுகின்றது!

கடைச்சங்கம் அழிந்த காரணம்

இவ்வாறு விளங்கிய கடைச்சங்கமானது பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் காலத்திற்குப்பின் நின்று நிலவாது மறைந்தொழிந்தது. அவனுக்குப்பின் வந்த பாண்டியர்கள் சங்கம் நிறுவாது, தமிழை வளர்க்காது போயினர். அதற்குக் காரணம் அரசியலில் நிகழ்ந்த மாற்றமே. அரசியல் குழப்பம் பல விளைந்தன. களப்பிரர் படையெடுத்து தமிழகத்தைக் கைக்கொண்டனர். அவர்களுக்குப்பின் வந்த பல்லவர்களும் தமிழைப் புரக்காது புறக்கணித்துவிட்டனர்.

கடைச்சங்கம் அழிந்ததற்கு இலக்கிய வரலாற்றாராய்ச்சியாளர்கள் பல காரணங்களைக் காட்டுகின்றார்கள். கி பி. 3ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இச்சங்கம் அழிய. இடைப்பகுதியில் பல்லவர்கள் வந்தார்கள். இவர்கள் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டார்கள். சோழமன்னர்களோடும், சிற்றரசர்களோடும் போர்புரிந்து தமிழகத்தின் வடபகுதியைக் கைப்பற்றினார்கள். பல்லவர்களின் படையெழுச்சியையாவது, போர் நிகழ்ச்சிகளையாவது கடைச்

சங்கப் புலவர்கள் தாங்கள் இயற்றிய பாடல்களில் யாண்டும் குறிப்பிடாததால் பல்லவர்களின் வருகைக்கு முன்பே கடைச் சங்கம் அழிந்திருக்க வேண்டும்.

பாண்டிய நாட்டில் பன்னீராண்டு பஞ்சம் ஏற்பட்டதென்றும், பாண்டியன் சங்கப் புலவர்களைப் பாதுகாக்க முடியாமற்போகவே அவர்கள் சேர, சோழ நாடுகள் நோக்கிச் சென்றுவிட்டார்களென்றும், அதன் பிறகு மதுரையில் சங்கம் நிகழாது போய்விட்டதென்றும் இறையனார் அகப்பொருளுரை தெரிவிக்கின்றது. அப்பஞ்சத்தைப் பற்றி மணிமேகலை,

பன்னீ ராண்டு பாண்டி நன்னாடு
மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது

என்று தெரிவிக்கின்றது.

இன்னும் களப்பிரர் என்ற ஓரினத்தார் படையெடுத்து வந்து மதுரையை அழித்ததால்—பாண்டியர் தோல்வியுற்ற காரணத்தால் பாதுகாப்பாரற்றுச் சங்கம் பாழ்பட்டிருக்கலாம். களப்பிரர் வருகையைப்பற்றி வேள்விக்குடிச் செப்பேடுகள் பல செய்திகளை விளம்புகின்றன. அவர்களின் படையெழுச்சியும், ஆட்சியும் பாண்டிய நாட்டில் எத்துணையோ மாறுதல்களையும், புரட்சிகளையும் உண்டு பண்ணித் தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம் ஆகியவற்றை வீழ்ச்சியுறச் செய்துவிட்டன என்பது அச் செப்பேடுகளால் நன்கறியக் கிடக்கின்றது.

எனவே, பன்னீராண்டு பஞ்சத்தின் காரணத்தாலோ, களப்பிரர் படையெடுப்பாலோ மதுரையில் நடைபெற்ற கடைச்சங்கம் கி. பி. 3 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அழிவுற்றது உண்மை.

இவ்வாறு முச்சங்கங்கள் முறையே தென்மதுரையிலும், கபாடபுரத்திலும், மதுரையிலும், நடைபெற்றனவென்றும், முதுபுலவர்கள் அச்சங்கங்களிலிருந்து தமிழை ஆய்ந்தனரென்றும், பாண்டிய மன்னர்கள் தமிழைப் பேணிப் பாதுகாத்தனரென்றும் முதலிருசங்கங்கள் கடற்கோள்களாலும், கடைச்சங்கம் அரசியல் குழப்பத்தாலும் அழிந்தனவென்றும் அறிகின்றோம்.

5. அகத்தியரும் அகத்தியமும்

அகத்தியர் வரலாறு

முதற்சங்கத்துத் தலையாய புலவர் அகத்தியர். இவர் சிவபெருமானிடத்தும், முருகவேளிடத்தும் நூல் கேட்டவ ரென்பர். "ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய மாதொரு பாகன்" என்று சேனாவரையர் தொல்காப்பிய உரை யின் கடவுள் வாழ்த்தாகக் கூறுகின்றார். உமையம்மையை ஒருபாகத்தில் கொண்ட சிவபெருமான் பழங்காலத்தில் தமிழை அகத்தியர்க்குக் கற்பித்த உண்மை இதனால் புலனாகின்றது.

அரும்மறை ஆகமம் அங்கம்
அருங்கலை நூல் தெரிந்த அகத்தியனுக்கு
உரைக்கும் அருள்குருவாம் குருளை

என்று சிவஞானசித்தியார் நூலில் காணப்படுகின்றது. இங்குக் 'குருளை' முருகவேளைக் குறிக்கின்றது. ஆகவே, முருகனும் இவருக்கு நூல் கற்றுக்கொடுத்தாரென்பது தெரி கின்றது. கந்தபுராணம் அகத்தியரைப்பற்றிய செய்தி களையும் நமக்குத் தருகின்றது. அரக்கனாகிய வாதாபி வில்வலனை அகத்தியர் அடக்கியதையும், தென்னாடு போந் தக்கால் விந்திய மலையைத் தன்னடிப்படுத்தித் தாழ்த்திய தையும் தெரிவிக்கின்றது.

சிவபெருமானுடைய திருமணக்காலத்தில் தேவகணங் கள் இமயமலையில் கூட, வடக்கும் தெற்கும் நிலை குலைந்த தாம். அவ்வமயம் சிவபெருமானது ஆணையை ஏற்று இம் முனிவர் தென்புலம் சேர்ந்து பொதியமலையில் தங்கி வடக் கையும் தெற்கையும் சமன்செய்தாராம். இவர் விதர்ப்ப நாட்டு அரசன் மகளாகிய உலோபா என்பவளை மணம் செய்ததாகவும், சித்தன் என்ற மகன் பிறந்ததாகவும் செய்தி கிட்டுகின்றது.

இவர் வடநாட்டுப் பெண்ணை மணந்துகொண்டதால் இவரை வடநாட்டினர் என்று சிலர் கருதுகின்றனர். மேலும் இவரின் தங்கை வடநாட்டில் மணம்செய்து மகனைப்

பெற்றதை ஆரியவேதம் பேசுகின்றது. 'ரிக்வேத'த்தில் அகத்தியரைப்பற்றிய குறிப்பு 10ஆவது மண்டலத்தில் 90ஆவது சூத்திரத்தில் வருகின்றது. ஆனல், அகத்தியரே எழுதியதாக எதுவும் சூத்திரமோ, வேதமோ வடமொழியில் இல்லை. அதனல், இவரை ஆரியவேத முனிவரில் ஒருவராகக் கருதமுடியாது.

இவர் தென்னடு போந்தகாலத்து இவரது கமண்டல நீரைக் காகம் கவிழ்த்துவிட அந்நீர் காவிரியாக ஓடிற்றென்று சிவப்பிரகாச சுவாமிகள் 'பிரபுலிங்கலீலை'யில் கூறுகின்ருர். மணிமேகலையும்.

அமர முனிவன் அகத்தியன் தனது
கரகங் கவிழ்த்தக் காவிரிப் பாவை

என்று எடுத்துரைக்கின்றது.

பொதிகை, காவிரித்தோற்றம், கோதாவரித் தோற்றம் முதலிய இடங்களில் அகத்தியரின் இருப்பிடங்கள் இருந்தனவென்றும், இராமர் வடக்கிலிருந்து தென்னடடைந்த காலத்து அகத்தியரைச் சந்தித்து வில்லையும், அம்பையும் பெற்றுச் சென்ருரென்றும் அகத்தியரைப்பற்றிய குறிப்பு வால்மீகிராமாயணத்தில் காணப்படுகின்றது. அகத்தியர் தமிழரென்றும், தேவர் அல்லரென்றும், பாண்டிய மரபாகிய திங்கள் மரபைச் சேர்ந்தவரென்றும் கொள்ளுவதே பொருந்தியதாகும்.

அகத்தியம்

அகத்தியர் சிறந்த இலக்கண அறிவுடையவர். இவர் நக்கீரருக்கு இலக்கணம் அறிவுறுத்தியதாகத் திருவிளையாடற் புராணங் கூறுகின்றது. இவரே அகத்தியம் என்னும் இலக்கண நூலை எழுதினரென்றும், அதில் பன்னீராயிரம் சூத்திரங்கள் இருந்தனவென்றும் கூறுகின்ருர்கள். உலகத்தில் இவ்வளவு பெரிய இலக்கண நூல் வேறு எந்த மொழியிலும் தோன்றவில்லை. தலைச்சங்கத்தார்க்கும், இடைச் சங்கத்தார்க்கும் நூல் அகத்தியமென்று இறையனர் அகப்

பொருளுரை இயம்புகின்றது. பன்னிருபடலப் பாயிரமாகக் கூறப்படும் செய்யுளொன்றில் அகத்தியமென்பது குறிக்கப் படுகின்றது. அப்பா,

ஆனுப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோன்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்

என்பதாகும்.

இலக்கியமும், இலக்கணமும்பற்றி அகத்திய நூற்பா வொன்று அருமையாகக் கூறுகின்றது. இலக்கியத்தி லிருந்துதான் இலக்கணம் பிறக்கிறதென்பது அகத்தியரின் கருத்தாகும். அஃது,

இலக்கிய மின்றி இலக்கணம் இன்றே;
எள்ளின் றுகில் எண்ணெயும் இன்றே;
எள்ளினின்(று) எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்(று) எடுபடும் இலக்கணம்

என்பதாகும்.

பன்னீராயிரம் நூற்பாக்களும் இன்று நமக்குக்கிடைக்க வில்லை. ஆனல், உரையாசிரியர்களும், இலக்கண ஆசிரி யர்களும் சில நூற்பாக்களை எடுத்தாண்டுள்ளார்கள். அவற்றைக்கொண்டு ஆராயுமிடத்து அகத்தியம் முத்தமிழி லக்கணமும் அடங்கியதெனத் தெரிகின்றது. எனினும், இயற்றமிழ் இலக்கண நூற்பாக்கள் சிலவே நமக்குக் கிடைத்துள்ளன.

அகத்தியர் இசைத்தமிழ் இலக்கணம் செய்தார் என் பதை அடியார்க்குநல்லார் சிலப்பதிகார அந்திமாலைச் சிறப்புச்செய்காதையில் உரைமேற்கோளாகக் காட்டிய பாடல் ஒன்றால் அறியலாம். அது,

தக்கராக நோதிறங் காந்தார பஞ்சமமே
துக்கங் கழிசோம ராகமே—மிக்கதிறற்
காந்தார மென்றைந்தும் பாலைத் திறமென்றார்
பூந்தார் அகத்தியனுர் போந்து

என்ற வெண்பாவாகும். கூத்திலக்கணம் செய்தார் என்ற உண்மையை,

> அவைதாம்
>
> சாந்திக் கூத்தும் விநோதக் கூத்தும்என்
> ருய்ந்துற வகுத்தனன் அகத்தியன் ருனே,
>
> எழுவகைக் கூத்தும் இழிகுலத் தோரை
> யாட வகுத்தனன் அகத்தியன் ருனே

என்பனபோன்ற மேற்கோள்களால் உணரலாம்.

அகத்திய நூற்பாக்கள்

1. அ இ உ எ ஒக் குறிலாகும். (நூற்பா 12)
2. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடிலாகும் (நூற். 14)
3. அ இ உ அம் மூன்றும் சுட்டிற் சுட்டே (நூற். 16)
4. வல்லெழுத் தாவன க ச ட த ப ற (நூற். 30)
5. மெல்லெழுத்தாவன ங ஞ ண ந ம ன (நூற். 32)
6. கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை. (நூற். 45)

தொல்காப்பிய உரையில் இளம்பூரணர் சில அகத்திய நூற் பாக்களை மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளார். பொரு ளதிகாரச் செய்யுளியலில் 126ஆவது நூற்பாவில், "ஒத்தாழிசைக் கலியும் கலிவெண்பாட்டும் கொச்சகமும் உறழ்கலியும் என நான்கு வகைப்படும் கலிப்பா" என்கின் ருர். கலிப்பா அகப்பொருளென வழங்கும் என்பதை,

> இருவயின் ஒத்தும் ஒவ்வா இயலினுந்
> தெரியிழை மகளிரொடு மைந்தரிடை வருஉங்
> கலப்பே யாயினும் புலப்பே யாயினும்
> ஐந்திணை மரபின் அறிவுவரத் தோன்றிப்
> பொலிவொடு புணர்ந்த பொருட் டிறமுடையது
> கலியெனப் படூஉங் காட்சித் தாகும்

என்ற அகத்திய நூற்பாவை மேற்கோளாகக் காட்டி நிலை நாட்டுகின்ருர்.

நன்னூலுக்கு உரைவகுத்த மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர் போன்றோர் ஆங்காங்குச் சில அகத்திய நூற்பாக்களை எடுத்தாண்டுள்ளார்கள். மயிலைநாதர்,

பெயரினும், வினையினும் மொழிமுத லடங்கும்

என்ற அகத்திய நூற்பாவை நன்னூலின் 130 ஆவது நூற்பாவுக்கு மேற்கோளாகவும், சங்கரநமச்சிவாயர்,

வயிர வூசியும் மயன்வினை யிருப்பும்
செயிரறு பொன்னைச் செம்மைசெய் யாணியும்
தமக்கமை கருவியும் தாமா மவைபோல்
உரைத்திற முணர்த்தலும் உரையது தொழிலே

என்ற அகத்திய நூற்பாவை நன்னூலின் 265 ஆவது நூற்பாவுக்கு மேற்கோளாகவும் எடுத்தாண்டுள்ளார்கள்.

தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகள், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினி, நற்றத்தன், வாமனன் ஆகிய பன்னிரு மாணவர்கள் அகத்தியருக்கு இருந்தார்கள். அவர்கள் ஆக்கிய நூல் பன்னிருபடலமென்று புறப்பொருள் வெண்பா மாலையின் சிறப்புப்பாயிரம் கூறுகின்றது. அது,

மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்

என்பது. இவர்களுள் தொல்காப்பியர் நல்லிசை மாணவராக விளங்கினர் என்பது புலனாகின்றது.

அகத்தியரைப்பற்றிப் பல கற்பனைக் கதைகள் இருப்பினும் அவர் தமிழாழியில் திளைத்துத் திகழ்ந்த முதுபுலவர் என்பதுவும், அகத்தியமென்ற அரிய பெரிய இலக்கண நூலை ஆக்கியளித்த அறிவாளர் என்பதுவும் மேற்காணும் செய்திகளிலிருந்து வெளிப்படும் உண்மைகளாகும்.

6. தொல்காப்பியரும் தொல்காப்பியமும்

தொல்காப்பியர் வரலாறு

தொல்காப்பியர் தொல்காப்பியக் குடியைச் சேர்ந்ததால் இப்பெயர் அவருக்கு வாய்த்ததாக இளம்பூரணர் கூறுகின்றார். சீர்காழிப் பக்கத்தில் காப்பியக்குடி என்ற ஊர் ஒன்றுண்டு. அவ்வூரில் பிறந்தாராகையால் காப்பியரென்று பெயராயிற்றென்பாரும் உளர். இவர் பழைய நூல்களுக்குக் காப்பாக அமைந்த காரணத்தால் தொல்காப்பியரெனப் பெயர்பெற்றாரென்றும் மற்றும் பலர் பகர்வர்.

இவர் சேரநாட்டைச் சேர்ந்தவரென்று பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை சொல்லுகின்றார். சேரநாட்டுப் பகுதியில் 'இன்' சாரியைக்குப் பதிலாக 'அத்து'ச் சாரியை அக்காலத்து மிகுதியாக வழக்கில் இருந்தது. தொல்காப்பியர் 241ஆவதுபோன்ற சில நூற்பாக்களில் 'மழையத்து' 'பனியத்து' என்னும் சொற்களில் அத்துச் சாரியைப் பயன் படுத்தியிருப்பதால் அவர் சேரநாட்டைச் சேர்ந்தவராக இருக்கவேண்டுமென்கின்றார். ஆனால், வையாபுரிப் பிள்ளையவர்களின் கூற்று அவ்வளவு பொருந்தியதாகத் தோன்றவில்லை.

மு. இராகவையங்கார், இவர் பெயர் திரண தூமாக்கினியென்றும், சமதக்கினியார் புதல்வரென்றும் சொல்லுகின்றார். இவரை ஆரியராக்குவாரும் உளர். முதன்முதலாகத் தொல்காப்பியத்தை வடமொழியில் எழுதினாரென்றும், அதைப் பிறகு தமிழில் மொழிபெயர்த்தார் என்றும் துணிந்து கூறுவாரும் தமிழகத்தில் உளர்.

இவர் தென்மொழி வடமொழிகளில் சிறந்த புலமை பெற்றவரென்றும், அகத்தியத்தை முதல்நூலாகக்கொண்டு தொல்காப்பியத்தைச் செய்தாரென்றும் கூறுகின்றனர். ஆனால், அகத்தியத்தைவிட தொல்காப்பியம் எத்தனையோ மடங்கு சிறந்தது.

தமிழில் தோன்றியிருந்த பழைய தமிழ் நூல்களைக் கற்றுத் தொல்காப்பியத்தை இயற்றினர். அந்நூலை அரங் கேற்ற அகத்தியர் வர மறுத்ததால், அதங்கோட்டாசான் என்பவர் அந்நூலைக் குற்றமற்றதெனக் கண்டு நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து ஏற்றுக்கொண்டார். அகத்தியரின் பன்னிரு மாணவர்களில் ஒருவரான பனம்பாரனர் அந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கினர்.

தொல்காப்பியச் செய்தி

எழுத்ததிகாரம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தை முப்பெரும் பிரிவுகளில் கூறி எழுத் தென்றும், சொல்லென்றும், பொருளென்றும் பெயரிட்டார். தமிழ் எழுத்துக்களைப்பற்றிப் பேசுவது எழுத்ததிகாரம். இஃது ஒன்பது இயல்களைக் கொண்டது. அவை நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றிய லுகரப் புணரியல் என்பவை. இப்பகுதியில் எழுத்தின் இலக்கணங்கள், அவற்றின் இயைபு, புணர்ச்சி முதலியவை களும், தமிழ் எழுத்தொலிகளின் சிறப்புக்களும், செவ்விய அமைப்புக்களும் பேசப்படுகின்றன. இதில் காணும் ஒலி நுட்ப அமைதி வியத்தற்குரிய ஒன்றென்று திருவாளர். பா. வே. மாணிக்க நாயக்கர் நுணுகி ஆராய்ந்து கூறுகின் றார். இதில் 483 நூற்பாக்கள் உள்ளன.

நூன்மரபின் தொடக்கத்தில் எழுத்துக்களின் வகை களைப் பேசுகின்றார். தமிழ் எழுத்துக்கள் முதல் எழுத்துக்க ளென்றும், சார்பெழுத்துக்களென்றும் இருவகைப்படும். அவற்றை,

> எழுத்தெனப் படுப
> அகரமுதல் னகர இறுவாய்
> முப்பஃ தென்ப
> சார்ந்துவரல், மரபின் மூன்றலங் கடையே

என்ற முதல் நூற்பாவால் குறிப்பிடுகின்றார். குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றும் சார்பெழுத்துக்கள் என்கின்றார்.

தமிழ் எழுத்து ஒவ்வொன்றும் ஒலிக்கும் கால அளவை மாத்திரை என்ற சொல்லால் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் மிகு பழங்காலத்திலிருந்து குறிப்பிட்டுவந்திருக்கின்றார்கள். தொல்காப்பியரும் முன்னோரின் மரபுணர்ந்து ஒருமாத்திரையுடைய குற்றுயிர்கள்பற்றியும், இருமாத்திரைகளுடைய நெட்டுயிர்கள்பற்றியும் நூற்பாக்களில் நுவன்றுள்ளார்.

அவற்றுள்
அ இ உ
எ ஒ வென்னும் அப்பால் ஐந்தும்,
ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப

என்றும்,

ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப

என்றும் எளிய நூற்பாக்களில் இலக்கணவுண்மைகளை விளக்கியுள்ளார்.

ஒருமை, பன்மைபற்றியும் எழுத்துக்களின் வடிவம் பற்றியும் வல்லினம். மெல்லினம் இடையினங்கள் பற்றியும் மெய்மயக்கம் பற்றியும் பகர்ந்துள்ளார்.

மொழிமரபில் சார்பெழுத்துக்கள் மொழியில் நிற்கும் இடங்களையும், அளபெடைகளையும், எழுத்துக்களின் இயக்கங்களையும், போலி எழுத்துக்களையும் மொழியின் முதல், இடை, கடையில் வரும் எழுத்துக்களையும் பல நூற்பாக்களில் திறம்பட இயம்பியுள்ளார்.

பிறப்பியலில் எழுத்துக்களின் பிறப்பை உணர்த்துகின்றார். பொதுவாக பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் மிடற்றின்கண் தோன்றும் காற்றால் பிறக்கும் என்கின்றார்.

அவ்வழிப்
பன்னீ ருயிரும் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.

இவற்றுள்ளும் அ, ஆ என்ற இரண்டு எழுத்துக்களும் வாயைத் திறக்கப் பிறக்குமென்பதை,

அவற்றுள்

அ ஆ ஆயிரண் டங்காந் தியலும்

என்ற நூற்பாவால் தெளிவுறுத்துகின்றார். மெய்யெழுத்துக்கள் உருப்பெறும் உண்மையையும், சார்பெழுத்துக்கள் பிறக்கும் நெறியையும் மேலும் பல நூற்பாக்களால் ஓர்வோருள்ளம் உவக்க உணர்த்தியுள்ளார்.

புணரியலில் எழுத்துக்களின் புணர்ச்சியிலக்கணங்களையும், தொகைமரபில் தொகுத்துக்கூறுதற்குரிய புணர்ச்சி இலக்கணங்களையும், உருபியலில் உருபெழுத்துக்களின் புணர்ச்சியிலக்கணங்களையும், உயிர் மயங்கியலில் உயிரீறுகளின் புணர்ச்சியிலக்கணங்களையும், புள்ளி மயங்கியலில் மெய்யீறுகளின் புணர்ச்சியிலக்கணங்களையும், குற்றியலுகரப் புணரியலில் குற்றியலுகர ஈறுகட்குரிய புணர்ச்சி இலக்கணங்களையும் விரிவாக விளக்கியுள்ளார்.

சொல்லதிகாரம்

இரண்டாவது சொற்களைப்பற்றிப் பேசுவது சொல்லதிகாரம். இதுவும் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்று ஒன்பது இயல்களைக் கொண்டது. இப்பகுதியில் 462 நூற்பாக்கள் உள. இதில் தமிழ்ச் சொல்லின் சிறப்பும் திணை,பால் முதலிய உயிர்ப்பகுப்பு, உயிரில் பகுப்பு முறையும், தமிழர் நாகரிகச் சொல் திறமையும், ஒவ்வொரு சொல்லும் காரணத்தோடு அமைக்கப்பட்டது என்பதற்குரிய விதி வழிவகைகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

கிளவியாக்கத்தில் எழுத்துக்கள் பொருள்தரும் முறையில் சொற்களாகும் வகையை உணர்த்துகின்றார். சொற்கள் உயர்திணைச் சொற்களென்றும், அஃறிணைச் சொற்களென்றும் இருபிரிவாகும். தமிழ்ச் சொற்கள் யாவும் இவ் விருதிணைமேற்றே இயங்கும் என்பதை,

உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே

என்ற நூற்பாவால் அறிவிக்கின்றார். உயர்திணைச் சொற்கள் ஆண்பாற் சொற்களென்றும், பெண்பாற் சொற்களென்றும், பலர்பால் சொற்களென்றும் பெயரேற்றிலங்குமென்றும், அஃறிணைச் சொற்கள் ஒன்றன்பால் சொற்களென்றும், பலவின்பால் சொற்களென்றும் பெயரேற்றுப் பிறங்குமென்றும் வகுத்துத் தொகுத்துக் கூறியுள்ளார். தமிழ்ச்சொற்கள் அத்துணையும் மேற்காணும் ஐம்பாற்கண் அடங்குவனவே.

வேற்றுமையியலில் பெயர்கள் உருபேற்றுப் பொருள் வேற்றுமைப்படும் இயல்பை உணர்த்துகின்றார். வேற்றுமை ஏழென்றும், விளிவேற்றுமை அதனோடு சேர அஃது எட்டென்றும் உணர்த்துகின்றார்.

வேற்றுமை தாமே ஏழென மொழிப

என்பதாலும்

விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே

என்பதாலும் மேற்கருத்து தெளிவாகின்றது. வேற்றுமையின் பெயர் முறையைக் குறிப்பிடும்பொழுது,

அவைதாம்
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண் விளி யென்னும் ஈற்ற

என்ற நூற்பாவால் புலப்படுத்துகின்றார். இவ்வியலில் வேற்றுமை விரிபற்றியும், தொகைபற்றியும் அரிய நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

வேற்றுமைமயங்கியலில் வேற்றுமை உருபுகள் தம்முள் மயங்கிப் பொருள் வேறுபாடு கொள்ளும் இயல்பும், விளிமரபில் சொற்கள் விளியேற்கும் இயல்பும் உணர்த்தப் பட்டுள்ளன. பெயரியலில் பெயர்ச்சொல்லின் இலக்கணம் கூறமுனைந்து பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லுமாகிய எல்லாச் சொற்களும் பொருளுணர்த்தும் என்கின்றார். இவ்வுண்மையை,

எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே

என்ற நூற்பாவில் அறிகின்றோம். இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பெயர்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து தோன்றுமென்பதை,

இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்று மென்ப

என்பதால் தெளிவிக்கின்றார். வினையியலில் வினையின்னதென்பதை,

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

என்ற நூற்பாவால் நுவலுகின்றார். காலத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது,

காலந் தாமே மூன்றென மொழிப

என்கின்றார். இடையியலில் இடைச்சொல் பெயரோடும் வினையோடும் சேர்ந்து வருமென்பதையும் தனித்து வராதென்பதையும்,

இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே

என்பதால் உணர்த்துகின்றார். உரியியலில் உரிச்சொல்லின் இலக்கணம் உரைக்கின்றார். உறு, தவ, நனி யென்பன மிகுதியென்னும் குறிப்புப் பொருள் உணர்த்தும் என்பதை,

அவைதாம்
உறுதவ நனியென வரூஉ மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப

என்ற நூற்பாவால் அறிகின்றோம். எச்சவியலில் கிளவியாக்கம் முதல் உரியியல் இறுதியாக உள்ள இயல்களில் கூறப்படாதவற்றை இப்பகுதியில் தொகுத்துணர்த்துகின்றார். தமிழ்மொழியில் செய்யுள் செய்யப் புகுகின்றவர் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கைக் கொண்டு செய்யுளியற்றவேண்டுமென்பதை,

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

என்பதால் வரையறுத்துள்ளார். ஒருசில வடசொற்களைத் தமிழில் புகுத்தும்பொழுது வடமொழிக்கே உரிய எழுத்துக்களை நீக்கி, இருமொழிகளுக்கும் பொதுவாகிய எழுத்துக்களால் அச்சொற்களை அமைத்துக்கொள்ளல் முறையென்பதை,

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

என்ற நூற்பாவால் தெரிவிக்கின்றார்.

பொருளதிகாரம்

மூன்றாவது பிரிவு பொருளதிகாரமாகும். இஃதும் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்று ஒன்பது இயல்களைக் கொண்டது. இப் பகுதியில் 445 நூற்பாக்கள் உள. இதில் மக்களின் வாழ்க்கைக்கூறாகிய அகமும், புறமும் பேசப்படுகின்றன. பல்வகைச் சுவைகளும், உவமங்களும் உரைக்கப்படுகின்றன. பாவின் பண்பு, மரபு, முறை முதலிய யாவும் இடம்பெற்றுள்ளன.

அகத்திணையியல் இன்ப ஒழுக்கத்தின் இயல்புகளைப் பேசுகின்றது. காதலர்கள் வாழ்க்கை துவங்கும் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம் முதலிய நிலப்பாகுபாடுகளையும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் முதலிய அகக்கூறுபாடுகளையும் திறம்பட எடுத்துரைக்கின்றது. அகப்பொருள் ஏழுவகைப்படும் என்பதை,

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப

என்பதால் அறிகின்றோம். முதற்பொருட்கள் நிலமும் காலமுமாகும்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

என்பதால் நிலங்கள் நான்கையும் அவற்றிற்குரிய கண்ணன், முருகவேள், இந்திரன், வருணன் ஆகிய தெய்வங்களையும் நிரல்படக் கூறியுள்ளார். அகவொழுக்கத்துக்குரிய மக்கள் நிலைகளையும், இன்பத்தை மேம்படுத்தும் பிரிவொழுக்க முறைகளையும் பல நூற்பாக்களில் காண்கின்றோம். கற்றற்காகவும், போர்புரிதற்காகவும், தூதுசெல்லற்காகவும், பொருள்தேடுதற்காகவும் தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல் உண்டு.

புறத்திணையியல் வீரர் மேம்பாட்டையும், அரசன் படைகளை நடத்தும் முறைகளையும், அரண் அமைக்கும் வகைகளையும், போர்புரியும் திறன்களையும் எடுத்துரைக்கின்றது. வெட்சித்திணை, வஞ்சித்திணை, உழிஞைத்திணை, தும்பைத்திணை, வாகைத்திணை, காஞ்சித்திணை, பாடாண்திணைகளின் இலக்கணங்களை உணர்த்துகின்றது.

களவியல் காதற் களவொழுக்கத்தின் இயல்பைக் கூறுகின்றது. களவொழுக்கம், இயற்கைப்புணர்ச்சி என்பவற்றை விளக்குகையில் தலைவன் இயல்பை,

பெருமையும் உரனும் ஆடூஉ மேன

என்ற நூற்பாவாலும், தலைவிக்கு உரிய இயல்பை,

அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப

என்ற நூற்பாவாலும் புலப்படுத்துகின்றார். பிற நூற்பாக்களால் களவின்கண் தலைவன் நிலையையும், தலைவி நிலையையும், தோழியின் நிலையையும், செவிலி முதலியோர் நிலையையும், பகற்குறி, இரவுக்குறிகளையும், வரைதலையும் கூறியுள்ளார்.

கற்பியல் கற்பொழுக்கத்தின் இயல்பை உணர்த்து கின்றது களவுவாழ்விற்குப் பிறகு ஒத்த தலைவனும், தலைவியும் திருமணம் புரிந்து வாழும் ஒழுக்கமிக்க வாழ்வே கற்பு வாழ்க்கையாகும். தலைவன், தலைவியைக் கொடுப் பதற்குரியோர் கொடுக்கக் கொள்வது உண்டு. அஃதில்லை யேல், உடன்போக்கால் அவளை அவன் வரைந்துகொள்வதும் உண்டு.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே

என்பதாலும்,

கொடுப்போர் இன்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான

என்பதாலும் மேற்கருத்தைக் கழறுகின்றார். இப்பகுதியில் கற்பொழுக்கத்தில் மணமக்கள் கூற்றையும், பிறர் கூற்றையும், அலரையும், பிரிவையும், தவத்தையும் நன்குணரலாம்.

பொருளியலில் அகப்பொருள், புறப்பொருள்களுக்கு உரியனவும், அவற்றில் கூறப்படாது எஞ்சியனவுமாகியவற்றைக் கூறியிருக்கக் காணலாம். அறத்தொடு நிற்கும் நிலை, வரைவு கடாதல், அகப்பொருள் புலனெறி வழக்குகள், தலைவியைப்பற்றிய சில குறிப்புக்கள், தோழியைப்பற்றிய சில குறிப்புக்கள், உள்ளத்து உணர்ச்சிகள் முதலியன இடம்பெற்றுள்ளன.

மெய்ப்பாட்டியல் பொருள் இலக்கணத்துக்குரிய மெய்ப்பாடுகளின் இயல்பை உணர்த்துகின்றது. மெய்ப்பாடு என்பது மக்களின் உணர்ச்சிநிலையாகும். உணர்ச்சி யென்பது ஒன்றைக் காண்பதாலோ, கேட்பதாலோ, நினைப்பதாலோ உண்டாகும் உவத்தல், அஞ்சுதல், வியத்தல் முதலிய உளப்பண்புகள். இவை உடலில் வெளிப்பட்டுத் தோன்றும்போது மெய்ப்பாடுகள் எனப் பெயர்பெறுகின்றன. வடநூலார் மெய்ப்பாடுகள் ஒன்பதென (நவரசம்) உரைத்துள்ளனர். ஆனால் தொல்காப்பியர்,

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப

என்று மெய்ப்பாடுகள் எட்டே என்று கூறியுள்ளார். வட நூலார் கூறும் சமநிலை என்ற ஒன்பதாவது சுவை மக்களிடத்து நிகழாத ஒன்றுகையால் தொல்காப்பியர் அதைக் கூருது விட்டுவிட்டார். எண்வகை மெய்ப்பாடுகளையும் பல நூற்பாக்களால் விளக்கிய பிறகு, அகத்திணைக்குரிய மெய்ப்பாடுகளைப்பற்றிச் சொல்லுகின்ருர். இப்பகுதியில் தலைவனுக்கும், தலைவிக்கும் இருக்கவேண்டிய பொருத்தங்களைக் குறிக்கையில்,

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே

என்ற நூற்பாவால் பத்து ஒப்புமைகளை எடுத்தியம்புகின்ருர்.

உவமையியல் உவம இலக்கணங்களை உணர்த்துகின்றது. உவமையின்கண் தொழிலும், பயனும், வடிவும், நிறனும் தோன்றுமென்பதை

வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்

என்பதால் உணர்த்துகின்ருர். இப்பகுதியில் உவம உருபும், உவமையை உணரும் முறையும், உள்ளுறை உவமமும் இடம்பெற்றுள்ளன.

செய்யுளியலில் செய்யுளிலக்கணங்களைத் தொகுத்துரைக்கின்ருர். செய்யுளின் உறுப்புக்களாகிய மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா முதலிய பலவற்றையும் விளக்கமுறக் காணலாம். வண்ணம்பற்றியும், வனப்புப்பற்றியும் பல நூற்பாக்கள் உள. செய்யுட்கு உரிய சொல்லினுல் சீரைப் புணர்த்திச் செய்யப்படும் செய்யுள் அழகு என்று பெயர் பெறும் என்பதை,

செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே

என்கின்றார் தொல்காப்பியர். நல்ல ஓசையும், அழுத்தமும் உடைய செஞ்சொல்லால் சிறந்த பொருளைக் கூறினாலும், மிகுந்த சொற்களால் பலவடிகளில் படைத்தாலும் அவ் வகைப்பட்ட செய்யுட்கள் தோல் என்று அழைக்கப்படும் என்பதை,

இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்

என்ற நூற்பாவால் காட்டுகின்றார்.

மரபியல் இருவகை மரபுகளின் இலக்கணத்தை உணர்த்துகின்றது. தொல்காப்பியர் உயிர்ப் பொருட்களின் இயல்புகளை நன்கு ஆராய்ந்து அவைகளின் அறிவு, பண்பு, செயல் முதலியவற்றையும், ஆண் பெண் பகுப்பு முறையை யும், அவற்றை வழங்கும் வரையறையையும், மனவளர்ச் சியால் மனிதன் மற்றவைகளைவிட உயர்ந்து விளங்கு வதையும் விளக்கியுள்ளார். பெண்பாலை உணர்த்தக்கூடிய பெயர்கள் இவையென்பதை,

பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகுங் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே

என்ற நூற்பாவால் குறிப்பிடுகின்றார்.

உயிர்களை ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு உயிர்வரை ஆறு பிரிவாகப் பிரித்துள்ளார். இம்முறை இன்றைய உயிர் நூலார் பகுப்புமுறைக்கு ஒத்துவருகின்றது.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்ருெடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே

என்பதால், புல்லும் மரமும் ஓரறிவு உயிர்ப் பொருட்க ளென்றும், சங்கு, நத்தை போன்றவை ஈரறிவு உயிர்ப் பொருட்களென்றும், கறையான், எறும்புபோன்ற உயிர்ப் பொருட்கள் மூவறிவினவென்றும், நண்டு, வண்டு போன்றவை நான்கறிவினவென்றும், விலங்குகளும், பறவை களும் ஐயறிவுடையனவென்றும், "மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்றும் உணர்த்துகின்ருர். இவ்வியலில் இன்னும் ஆண்பாற்கு உரிய பெயர்களை உணர்த்துவதோடு நூலின் மரபுகளில் முதல்நூல், வழிநூல்பற்றியும், உரைகள் பற்றி யும், நூலின் குற்றங்கள், நூலின் உத்திகள்பற்றியும் விரி வாக எடுத்துரைத்துள்ளார்.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சி ஞர்க்கினியர், கல்லாடர், சேனைவரையர், தெய்வச்சிலையார் போன்ருேர் உரை வகுத்துள்ளனர். இந்நூல் தொன்மை யான உலகமொழிகளில் காணும் நூல்களுள் மிகவும் தொன்மையான இலக்கணநூல்; தமிழெழுத்தின் அருமை யையும், சொல்லின் சிறப்பையும், பொருளின் உயர்வையும் உலகிற்குப் பறைசாற்றும் நூல். உலகமொழிகளில் காணும் இலக்கியங்கள் பேசும் ஒழுகலாற்றை இலக்கணவாயிலாய்ப் பொருளதிகாரத்தில் எடுத்துரைக்கும் நூல். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்ற ஐந்திலக்கணங்களை அழகுற எடுத்தியம்பும் பழந்தமிழ் நூல்.

7. சுவைமிகு எட்டுத்தொகை

தமிழில் உள்ள நூல்களுள் மிகப் பழமையானவை தொகை நூல்களாகும்; அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டும் என்பது,

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்ற பாட்டால் தெரியவருகின்றது. வேறுபட்ட காலங்களில் எழுதப்பட்ட பாடல்களை ஆன்றோர்கள் அவ்வவற்றின் பொருள்பற்றியும், பாடல்வகைபற்றியும் கடைச்சங்க நாட்களில் பல தொகைகளாகத் தொகுத்தனர். அவ்வாறு தொகுக்கப்பட்ட தொகைநூல்தான் எட்டுத்தொகை. இது தொகை என்றும், எண்பெருந்தொகை என்றும் அழைக்கப் படும். இதில் அகத்தைப்பற்றிய பாடல்களும், புறத்தைப் பற்றிய பாடல்களும் உள.

பழங்காலத் தமிழ்மக்களின் பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும், அறத்தையும், மறத்தையும், ஐந்திணைச்செய்திகளையும், அரசர்களையும், அவர்கள் மேற்கொண்ட போர்முறைகளையும் இப்பாடல் களிலிருந்து நாம் நன்கு அறியலாம்.

i. நற்றிணை

பொதுச் செய்திகள்

நற்றிணை 9 அடிமுதல் 12 அடிவரையுள்ள 400 பாடல் களைக் கொண்டது; அகப்பொருள் துறைகளை விளக்குவது. நற்றிணை நானூறு என்ற வேறு பெயரும் இதற்குண்டு. இதன் பாடல்களைப் பாடிய 192 ஆசிரியர்கள் பெயர்களே கிடைத்துள்ளன. மன்னன் பன்னாடு தந்த மாறன்வழுதி என்பான் இதைத் தொகுப்பித்தான்.

சிறப்புச் செய்திகள்

உருவிலும் திருவிலும் ஒத்த தலைவனும் தலைவியும் ஒருவரைப் பிரிந்து ஒருவர் வாழமுடியாத உள்ளப் பாங்கை யெய்தினர்; கள்ளமின்றிக் கலந்துறவாடினர். அவள் அவனுக்கு அகிலம்வாழ் ஆரணங்குகளைவிட அத்துணை நலன்களும் கொண்டிலங்குபவளாகத் தோன்றினாள். அவனும் அவளுக்கு அறிவிலும், ஆற்றலிலும், அழகிலும் நானில நம்பியர்களைவிட பன்மடங்கு மேம்பட்டவனாகவே காணப்பட்டான். இந்நிலையில், ஒருநாள் தோழியானவள் தலைவன் பொருள்தேடற்பொருட்டாகத் தலைவியைப் பிரியக் கருதியிருப்பதாக அவளிடம் எடுத்துரைத்தாள். அதைக் கேட்ட அன்புத் தலைவி தன்னருமைத் தோழி யிடத்து,

"தோழி! அவர் பொய்வழங்கார். பிரியேனென்றுரைத்த அவர் இப்பொழுது நம்மைப் பிரிய ஒருகாலும் நினையார். நெடிதாகத் தோன்றும் இனிமையுடையவர். என் மென் தோள்களை விட்டகலா வேட்கையர். தாமரையின் தண்ணிய தாதினையும், மேலோங்கிய சந்தனமரத் தாதினையும் தேர்ந்தூதி அந்தச் சந்தனமரக் கிளையில் வைத்த இனிய தேன்போன்று தித்திக்கும் தன்மையுடையது அவருடைய மேன்மையான நட்பு. நீரின்றி அமையா நீணிலம்போல் தம்மையின்றி அமையாத நம்பால் முன்பு விருப்பம் மிகக்கொண்டு அருளினர். அப்படிப்பட்ட அவர், பிரிவால் நம் நெற்றி பசலையுறும் என்பதையறிந்தும் பிரிவாரோ? பிரியார்" என்று எடுத்துரைத்தாள். இச் சிறப்புமிக்க கருத்துச் செறிவுள்ள பாடலைக் கபிலர் குறிஞ்சி நிலத்திற்குரியதாகப் பாடியுள்ளார்.

நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்தோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்தா தூதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நம்நயந் தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறி யலரே. (நற்றிணை 1.)

குறிஞ்சி நிலத்திற்குரிய இந்நற்றிணைத் தலைவி தன் தலைவனிடம் எவ்வளவு அன்பும் நம்பிக்கையும் கொண்டிருக்கின்றாள் பாருங்கள். தாமரைத் தாதும், சந்தனத் தாதும் சேர இனிய தேன் தோன்றுதல்போல் அவனுள்ளமும், அவளுள்ளமும் கலக்க இனிக்கும் காதலன்றோ கனிந்திருக்கின்றது! அவன் அவள்மீது கொண்ட அன்பு சந்தனமரத்தில் தேனிறால் தூங்குதல்போலன்றோ ஓங்கித் தோன்றுகின்றது! நீரின்றி நிலமேது? அவனின்றி அவளேது? ஆம், காதல் வாழ்வில் ஒருவரின்றி ஒருவருக்கு உவகையேது? நம்பிக்கையின்றி நம்பிக்கோ, நங்கைக்கோ நலமேது? வளமேது?

அருவிகள் இழிந்தோடும் வளம்மலிந்த மலைநாட்டின் பூம்பொழிலிடத்து அன்னநடையும் மின்னலிடையும் உடையாளும், வீறுநிறைந்த காளைபோன்ற நடையானும் ஒருவரையொருவர் கண்டனர்; கண்ணோடு கண் உறவாட காதல் கொண்டனர். நாளும் தென்றல் ஆளும் அவ்விடத்தில் வேல்விழியாளும் விற்கரத்தானும் கூடிப் பேசினர்; கோடியின்பம் கொண்டனர். களவுவாழ்வையே பெரிதும் நச்சிய அத்தலைவன் அவளை வரைந்துகொள்ளுதற்குரிய செயலைச் செய்யாது இருத்தலைக் கண்ட தோழி, "நீண்டகரிய மலைநாடனே! பொலிவுற்ற முகத்தில் புள்ளிகளை உடைய களிறுனது தன் பிடியொடு கலக்கும் பொழுது உயர்ந்து தோன்றும் அதன் கைபோல் நீண்டு வளைந்த பசிய தினைக்கதிரைப் பவளம்போல் சிவந்த வாயையுடைய பைங்கிளிகள் கொய்து செல்லும் செழிப்புறையும் சிகரமுடைய மலைக்குரியோனே! நீ இத்தலைவியிடத்துக் கொண்டிருக்கும் களவுவொழுக்க நட்பை எம் அன்னை அறிகுவாளாகில், எங்களது மலைச்சாரலில் உள்ள இனிய சுனையிலே நீராடித் தோழியரோடு துள்ளியோடிப் பறித்த அச்சுனைக் குவளை மலரையொத்த தலைவியின் கண்கள் நீர் கலந்து வடியப் பெற்று இனி எந்நிலையுறுமோ!" என்று அவனிடத்து எடுத்துரைத்தாள். இச்சீரிய செய்தியமைந்த பாடலை மதுரைப் பூவண்டநாகன் வேட்டனார் குறிஞ்சித்திணைக்குரியதாகப் பாடியுள்ளார்.

நீடிருஞ் சிலம்பில் பிடியொடு புணர்ந்த
பூம்பொறி ஒருத்தல் ஏந்துகை கடுப்பத்
தோடுதலை வாங்கிய நீடுகுரற் பைந்தினை
பவளச் செவ்வாய்ப் பைங்கிளி கவரும்
உயர்வரை நாடநீ நயந்தோள் கேண்மை
அன்னை அறிகுவள் ஆயின் பனிகலந்
தென்னா குவகொல் தானே எந்தை
ஓங்குவரைச் சாரல் தீஞ்சுனை ஆடி
ஆயமொடு குற்ற குவளை
மாயிதழ் மாமலர் புரைஇய கண்ணே.

(நற்றிணை-317.)

இந்த மலைநாட்டுத் தோழிக்குத்தான் தலைவியின் நல் வாழ்வில் எவ்வளவு அக்கறை பாருங்கள்! களவுவாழ்வு தலைவியின் தாய்க்குத் தெரியவந்தால் தலைவியை அவள் ஒருக்க அதனால், குவளையொத்த அவள் கண் கவலையால் கண்ணீர் உகுக்க, அக்கண்ணீரில் உயிர் கரைந்து போகுமாம்! இங்கு அத்தோழி அவர்களுடைய களவு வாழ்க்கையைக் கடிந்துரைக்கவில்லை. தலைவன் விரைந்து தலைவியை வரைந்துகொள்ளவேண்டும் என்பதற்காக இவ்வாறு சுற்றி வளைத்துப் பேசுகின்றாள். தினைக்கதிர் எவ்வாறு கொய்துகொண்டுபோகும் பைங்கிளிக்கன்றி அது விளைந்த நிலத்திற்குப் பயன்படாதோ அதுபோல் அத்தலைவியும் அவள் அழகை நுகருகின்ற அத்தலைவனுக் கன்றி அத்தலைவியின் வீட்டிற்குப் பயன்படாள் என்பதை தோழி மிக அழகாக எடுத்துக்காட்டி, அவளை அவன் மணந்து மகிழ்வடைதலே சாலப்பொருந்துமென்கின்றாள்.

நற்றிணையில் காணும் பாக்கள் பலவும் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களுக்கும் உரி யவையாக உள்ளன. காதல் ஒழுக்கங்களைக் கருத்தாழத் தோடு, கற்போர் உள்ளங்களை ஈர்க்கும் உவமை நயங் களோடு இயற்கையின் எழிலையெல்லாம் இணைத்து இனிய சொற்களின்வாயிலாய் எடுத்துக் கொடுக்கும் நற்றேன் ஊற்றாகும் இந்நற்றிணை.

ii. குறுந்தொகை

பொதுச் செய்திகள்

குறுந்தொகை 4 முதல் 8 அடிவரையிலுள்ள அகத் திணைப் பாக்களைக் கொண்டது. இதன் பாடல்களைப் பாடியவர்கள் 205 புலவர்கள். இதில் கடவுள் வாழ்த்தோடு 402 பாக்கள் உள. சிலர் இதன் பாக்கள் 400 என்கின்றனர். இறையனார் அகப்பொருளுரை ஆசிரியர் இந்நூலைக் குறுந்தொகை நானூறு என்கின்றார்.

" குறுந்தொகை முடித்தான் பூரிக்கோ " என்பதால் இதைக் தொகுப்பித்த மன்னன் பாண்டியன் பூரிக்கோ என்று தெரிகின்றது. இதில் காணும் பாடல்களுள் இறுதி

இருபது பாடல்கள் ஒழிய ஏனைய பாடல்களுக்குப் பேராசிரியர் உரையெழுதினர் என்றும், அவர் எழுதாது விட்ட இருபது பாடல்களுக்கு நச்சினர்க்கினியர் உரையெழுதிமுடித்தார் என்றுங் கூறுவர்.

சிறப்புச் செய்திகள்

குறிஞ்சி செறிந்த மலைநாட்டின்கண் நெறிபிறழா நம்பியும், நங்கையும் ஊழ்வினை கூட்ட களவு வாழ்வில் உறவு வளர்த்து வாழ்ந்துவந்தனர். சின்னட்களுக்குப் பிறகு தலைவிக்குத் 'தலைவர் பிரிவாரோ!' என்ற ஐயம் அச்சம் விளைவித்தது. அஃதறிந்த அன்புடைத்தலைவன் அவளின் ஐயத்தைப் போக்கி அமைதியளிக்கக் கருதினன்.

"நறுநுதல்நங்காய்! நன்குணர்ந்துபார். நாமிருவரும் இம்மலைநாட்டின்கண் கண்டு காதல்கொள்ளுதற்கு முன்பு என்னுடைய தாயும், உன்னுடைய தாயும் எவ்விதத் தொடர்புடையார்? என் தந்தையும், நின் தந்தையும் எம்முறையில் சுற்றத்தினர்? யானும், நீயும் முன்னர் எவ்விடத்துப் பார்த்துப் பழகினேம்? நம்முடைய நட்பு இப்படிப்பட்ட தொடர்புகளால் ஏற்பட்டதல்லவே. இயற்கையாக நாமிருவரும் நோக்கினேம்; காதலை யாக்கினேம். மழைநீர் செம்மண் நிலத்தில் விழ அந்நீரும் மண்ணும் கலந்து செந்தண்ணீராதலைப்போல நம்மிரு அன்புடை நெஞ்சங்கள் எவருதவியுமின்றித் தாமே கலந்துவிட்டன; காதலும் பிறந்துவிட்டது. ஆகவே, இனிமேல் நம்மிடையே ஏது பிரிவு?" இவ்வாறாக அவன் அவளுக்குக் கூறி அவளகத்தில் நிறைந்த அச்சத்தைத் தவிர்த்தான். அவளகம் குளிர்ந்தது; முகம் மலர்ந்தது; நகை பிறந்தது. இவ்வரிய கருத்துக்கள் செறிந்த பாடலைப் பாடிய புலவர்தான் செம்புலப்பெயல்நீரார். இவரது இயற்பெயர் தெரியாத காரணத்தால் 'செம்புலப் பெயல்நீர் போல' என்று இவரே எடுத்தாண்டுள்ள உவமைநயம் மிக்க சொற்றெடர் இவருக்குப் பெயராக அமைந்துவிட்டது. அவ்வளம் மலிந்த பாடல்,

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே

(குறு-40.)

என்பதாகும்.

இறைவன்தான் தலைவன் தலைவியரை வாழ்க்கையில் இணையச்செய்கின்றான் என்ற உயர்கருத்தை இப்புலவர் இப்பாடல்மூலம் உரைப்பது உணர்ந்து போற்றுதற்குரியது. அவ்வாறு இணைந்தவர் அவர் விருப்பம்போல் பிரியவும் இயலாது என்பதையும் இவ்வுலகிற்கு அறிவுறுத்துகின்றார்.

போர் வந்தநேரத்து வீரம் செறிந்த தலைவன் ஒருவன் போர்க்களம் நோக்கிச் சென்றுவிட்டான். அவனின்றி இல்லில் இருக்கும் தலைவியானவள் அவன் பிரிவை ஆற்றியிருக்கின்றாள். கார்காலம் வருதற்கு முன்பு வந்துவிடுவதாகத் தலைவன் சொல்லிச் சென்றதைச் சிந்தையில் தேக்கிக்கொண்டு நொந்த மனத்தோடு இருக்கும்பொழுது எங்கும் கார்மேகங்கள் தோன்றுகின்றன. இடிமுழக்கம் எழுகின்றது. மழை பொழிகின்றது. மயில் ஆடுகின்றது. பிடவம் புது மணம் பரப்புகின்றது. இவற்றையறிந்த தலைவி கார்காலம் வந்தும் தலைவன் வரவில்லையேயென்று உள்ளங் கன்றுகின்றாள். அவள் நிலையுணர்ந்த தோழி அவளை ஆற்றுதலுன்னி,

" தலைவி! நின் துயர் நீக்குக. சென்ற கார்காலத்தில் நிரப்பிய நீரைப், புதுநீர் கொள்ளுதற்காய் மேகங்கள் இப்பொழுது வடியவிடுகின்றன. இவ்வுண்மையறியாது காலமழை பெய்ததாகக் கருதி மயிலினம் ஆடுகின்றது; பிடவம் புதுப்பூ பூக்கின்றது. இவை அறியாமையை உடையன. இது கார்காலமன்று; கவலையை விட்டொழி " என்று உரைக்கின்றாள். உண்மையாகக் கார்காலந்தான் வந்துவிட்டது. ஆனால், கார்காலம் வந்தும் தலைவன் வராத காரணத்தால் தலைமகள் நிலைகுலைந்துபோவாளே என்று அஞ்சிய தோழி இயற்கை நிகழ்ச்சியையே மாற்றிக் கூறுகின்றாள். இந்தத் தோழிக்குத்தான் தன் தலைவிபால் எவ்வளவு அன்பு; அக்கறை!

இடைக்காடன் என்பார் இச்சிறந்த குறுந்தொகை நறும் விருந்தை நமக்கு நல்கியுள்ளார்.

மடவ வாழி மஞ்ஞை மாயினம்
கால மாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆலின பிடவும் பூத்தன
காரன் றிகுளை தீர்கநின் படரே
கழிந்த மாரிக் கொழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய உகுத்தரும்
நொதுமலர் வானத்து முழங்குகுரல் கேட்டே
(குறு-251.)

தலைவன் சொல் தவறுதவன் என்பதில் தலைவிக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு என்று எண்ணித்தானே தோழி துணிந்து இந்தப் பொய்யைச் சொல்லுகின்றாள்!

குறுந்தொகை பாக்கள் பலவும் எளிய பாக்கள்; ஆனால். இனிய பாக்கள். காதல் வாழ்வின் பல்வேறு நுட்பங்களை இலக்கிய நயத்தோடு எடுத்துக்கொடுக்கும் பாக்கள். அக் காலப் பழக்கவழக்கங்களையும், கலைச் செய்திகளையும் அறிவிக்கும் அருமைப் பாக்கள். சேந்தனுக்கு உறையூர் உரியதென்பதுவும், சேரன் கொல்லிமலைக்கு உரியான் என்பதுவும், எவ்வி பாணர்க்குப் பொற்பூப் பரிசிலாய் அளிப்போன் என்பதுவும், எழினி இனிய செய்கையன் என்பதுவும், எழினிமள்ளர் மாற்றார் முன்னணியைக் கெடுப்பர் என்பதுவும், அழிசிக்கு ஆர்க்காடு உரியதென் பதுவும், ஆய் பொதியிலுக்கு உரியான் என்பதுவும் இப் பாக்கள் நமக்கு வழங்கும் வரலாற்றுச் செய்திகளாகும்.

iii. ஐங்குறுநூறு

பொதுச் செய்திகள்

ஐங்குறுநூறு 3 முதல் 6 அடிகளைக் கொண்ட குறுகிய அளவினையுடைய பாடல்களால் ஆகிய அகத்திணை நூலாகும். ஐந்திணைகளைப்பற்றி ஐந்து புலவர்கள் ஐஞ்ஞூறு பாடல்கள் பாடியுள்ளார்கள். ஓரம்போகியார் மருதத்திணை பற்றியும், அம்மூவனார் நெய்தல்திணைபற்றியும், கபிலர் குறிஞ்சித்திணைபற்றியும், பேயனார் முல்லைத்திணைபற்றியும்,

ஓதலாந்தையார் பாலைத்திணைபற்றியும் பாடியுள்ளனர். இதைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழாராவார்.

இதில் ஒவ்வொரு திணைக்கும் பப்பத்துப் பாட்டுக்கள் கொண்ட பத்துத்துறைகள் உள்ளன. மருதத்திணை வேட்கைப்பத்து, வேழப்பத்து, கள்வன்பத்துப் போன்ற துறைகளையும் குறிஞ்சித்திணை அன்னாய்ப்பத்து, அம்ம வாழிப்பத்து, தொய்யோபத்துப் போன்ற துறைகளையும் கொண்டுள்ளன.

சிறப்புச் செய்திகள்

குறிஞ்சித்திணையில் அன்னாய்வாழிப்பத்தில் வரும் ஒவ்வொரு பாடலும் அன்னாய் வாழி என்ற சொற்றொடரால் தொடங்கும் சிறப்புப்பற்றி இப்பெயர் பெற்றுள்ளது.

தலைமகன் ஒருவன் தான் காதலித்த தலைவியைத் திருமணம் புரிந்து தன்னூர்க்கு அழைத்துச் செல்லுதற்காக பரியூர்ந்து பாவையொத்தாள் வாழும் வளமனை நோக்கி வருதலைக் கண்ட தோழி மழைகண்ட பயிர்போல் மனம் மகிழ்ந்து மதிமுகத்தாளிடம் சென்று, "அன்னாய், நான் நவில்வதை நயந்துகேள். நம்மூர்க்கண் வாழும் பார்ப்பனச் சிறுவர்களைப்போல நம்முள்ளம் கவர்ந்த மலைநாடனாகிய தலைவன் ஊர்ந்து வரும் குதிரையும் குடுமி பொருந்திய தலையையுடையது; நீயே காண்" என்று அவனை அவளுக்குச் சுட்டிக்காட்டிக் கூறினாள். அப்பாடல்,

அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாட னூர்ந்த மாவே (ஐங்குறு. 202.)

என்பதாகும்.

இப்பாடலில் தோழி தலைவியை அன்னாய் என்கின்றாள். குடுமித்தலை என்பது குதிரையின் தலையில் இரு காதுகட்கும் இடையே நெற்றியில் வீழும் உளைமயிர். பார்ப்பனச் சிறு

வர்கள் முன்குடுமியைக் கொண்டிருத்தல் அவர்களுக்கு ஆசார விதியாகையால் இவர்களின் குடுமியைக் குதிரையின் நெற்றிமயிருக்கு உவமித்துக் கூறுகின்றாள் தோழி.

தன்னைக் காதலித்த தலைவன் வரைந்துகொள்ளாது காலங்கடத்தலைக் கண்ட தலைவி உளம்நொந்து உடல் மெலிந்து வருந்தினாள். ஊரார் அலர் கூறினர்; உற்றார் அது கேட்டுச் செயலற்றுச் சிந்தை நைந்தனர். அவ்வேளையில் காளையொத்த அத்தலைவன் தலைமகளைத் தானே வரைந்து கொள்ளுதற்காக வந்தான். வந்தவன் பெண்வீட்டாரிடம் அவளைத் தனக்குத் தரவேண்டுமென வேண்டினான். அவர்களும் அவன் விருப்பத்திற்கு உடன்பட்டனர். அஃதை யறிந்த தோழி புள்ளிமான்போல் துள்ளியோடி ஒள்ளிழை யாளைக் கண்டு, "அழகிய இனிய சொற்களையுடையவளே! குறமகளின் கூந்தலையொத்துப் பொலிவுடன் தோன்றுமாறு மயில் தன் கவின்மிகு சிறகுகளை விரித்து ஆடும் பெரிய கற்கள் நிறைந்த மலையை உடைய தலைமகன், தானே மகட்கொடை வேண்டி வந்தான். நம் பெற்றோர் அது நேர்ந்தனர். ஆகையால் இனி நின் சிறப்பு மேம்படுக" என்றாள். அப்பாடல்,

> கொடிச்சி கூந்தல் போலத் தோகை
> அஞ்சிறை விரிக்கும் பெருங்கல்
> வந்தனன் எதிர்ந்தனர் கொடையே
> அந்தீங் கிளவி பொலிகநின் சிறப்பே

என்பதாகும். (ஐங்குறு 300.)

வாழ்க்கையில் திருமணம் ஒரு பெண்ணுக்கு எவ்வளவு மகிழ்வையும், பாதுகாப்பையும் அளிக்கின்றது என்பது இப்பாடலால் நன்கு புலனாகின்றது.

பாலைத்திணைப் பாடல்களை ஓதல்ஆந்தையார் செலவழுங்குவித்தபத்து, செலவுப்பத்து, இடைச்சுரப்பத்து, தலைவி இரங்குபத்து, இளவேனிற்பத்து, வரவுரைத்தபத்து, முன்னிலைப்பத்து, மகட்போக்கியவழித் தாய் இரங்குபத்து, இடைச்சுரத்துரைத்தபத்து, மறுதரவுப்பத்து என்று பத்துப் பகுதிகளாகப் பகுத்துப் பாடியுள்ளார்.

திருமணம்புரிந்து இல்லில் தலைவனும் தலைவியும் இனிது வாழ்ந்துவருங்கால் அவர்களின் அன்பின் அடையாளமாகச் சிறுவன் ஒருவன் பிறந்து பெற்றோரைப் பெரிதும் மகிழ்வித்துவந்தான். அஞ்ஞான்று, அத்தலைவன் இல்லறம் புரிதற்குதவும் பொருளைத் தேடுதற்காகத் தலைவியைப் பிரிந்து பிறிதோரிடம் செல்ல விரும்பினான். அஃதறிந்த தோழி அத்தலைவனையணுகி, "மலைப்பக்கத்தை உடைய நாடனே, நீ வேனில்காலத்தில் வெவ்விய சுரத்தைக் கடந்து பொருள்தேடக் கருதினாய்போலும்! எங்களைப் பிரிந்து சென்று தேடும் அப்பொருள், நின்னைப் பெரிதும் விரும்பிக் காதலித்து வாழ்பவளுடைய முதற்சூலில் தோன்றிப் பிறந்த சிறுவன் காட்டும் இளம்முறுவல் தரும் இன்பத்தினும் இனிதோ? ஏற்றமுடையதோ? நீயே சொல்" என்று அவன் செலவைத் தவிர்க்கும்வண்ணம் சீருரை பகர்ந்தாள். அப்பாடல்,

வேனில் திங்கள் வெஞ்சுரம் இறந்து
செலவயர்ந் தனையால் நீயே நன்றும்
நின்னயந் துறைவி கடுஞ்சூல் சிறுவன்
முறுவல் காண்டலின் இனிதோ
இறுவரை நாடநீ இறந்துசெய் பொருளே.

என்பதாகும். (ஐங்குறு. 309.)

பொருளினும் தான் பெற்ற பிள்ளையின் புன்முறுவல் பெரிதென்கின்றாள். பிள்ளைப்பேறுபோல் சிறந்தது இஞ்ஞாலத்தில் எப்பொருளும் இல்லையென்றல்லவா இத் தோழி இயம்புகின்றாள்! ஆம், வானத்திற்குப் பகலவன் தேவையென்றால் வளமுறு மனைக்கு ஓர் இளமகவு தேவைதானே?

தலைமகன் இளவேனில் பருவத்து மீள்வதாகக் கூறிப் பிரிந்துள்ளான். தலைவி அக்கால வரவை எதிர்நோக்கி உயிர்தாங்கி வாழ்ந்துவருகின்றாள். குறித்தகாலத்தில் வினை முற்றுப்பெறாத காரணத்தால் தலைவன் இளவேனில் பருவத்தில் வந்தானல்லன். அதனால் தலைமகள், "குயிலின் பெட்டை தன் இனிய குரலை எடுத்துப் பாட, நுண்ணிய மணல் காற்றால் அசைவுற்றுக் குவியும் பெரும்பொழுதாகிய இளவேனில் வந்தும் தலைவன் வரவில்லையே; நான்

எவ்வாறு ஆற்றுவேன்?" என்று கூறி வருந்துகின்ருள். அப்பாடல்,

அவரோ வாரார் தான்வந் தன்றே
குயில்பெடை இன்குரல் அகவ
அயிர்க்கேழ் நுண்ணறல் நுடங்கும் பொழுதே

என்பதாகும். காதலர் இணைந்து வாழ்வதால் இன்பமும், பிரிந்து வாழ்வதால் பெருந்துன்பமும் உண்டென்பதை அல்லவா இப்பாடல் உணர்த்துகின்றது!

ஐங்குறுநூற்றுப் பாக்கள் அத்துணையும் அகவாழ்க்கையின் பல்வேறு நிலைகளை நெறிபிறழாது எடுத்துரைக்கின்றன.

IV. பதிற்றுப்பத்து

பொதுச் செய்திகள்

பதிற்றுப்பத்து சேர அரசர்கள் பதின்மரைப் பத்துப் புலவர்கள் தனித்தனி பாடிய பப்பத்து அகவற்பாக்களின் தொகுப்பாகும். முதற்பத்தின் சில பகுதிகள்தாம் நமக்குக் கிடைத்துள்ளன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை இரண்டாம் பத்தில் குமட்டூர்க்கண்ணனுர் பாடியுள்ளார். மூன்றும் பத்தில் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனுர் பாடியுள்ளார். நான்காம் பத்தில் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனுரும், ஐந்தாம் பத்தில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணரும், ஆறும் பத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைபாடினியாரும், ஏழாம் பத்தில் செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், எட்டாம் பத்தில் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில்கிழாரும், ஒன்பதாம் பத்தில் இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழாரும் பாடியுள்ளார்கள். பத்தாம் பத்து நமக்குக் கிடைக்கவில்லை.

சிறப்புச் செய்திகள்

இரண்டாம்பத்தைப் பாடிய பாடல்சான்ற பைந்தமிழ்ப் புலவர் குமட்டூர்க்கண்ணனுராவார். குமட்டூர் என்பது இவர்

பிறந்து வளர்ந்த ஊராகும். இவர் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனைப் பத்துப் பாக்களால் பல நலன்களும் செறியப் பாடியதால் உம்பற்காடு என்ற பகுதியில் ஐஞ்ஞூறு ஊர் களையும், அரசனது தென்னாட்டு வருவாயுள் ஒரு பகுதி யையும் பெற்றார் என இரண்டாம் பத்தின் பதிகம் பகருகின்றது.

சேரலாதன் சீரிய வெற்றிச் சிறப்பை உடையவன். பகைவர் அரண்களை அழித்து வலிமிகுந்து விளங்கும் மன யெழுச்சி கொண்டவன். பகைவர் பலர் கூடிநின்று காத்த மலர்ந்த பூக்கள் நிறைந்த கடப்ப மரத்தினை வெட்டி வீழ்த்து மாறு வீரரை ஏவியவன். விடாது முழங்கும் வெற்றி முரசை யுடையவன். இமயத்திற்கும் குமரிக்கும் இடைப்பட்ட பெரும் நிலப்பரப்பில் செருக்குற்ற மன்னர்களின் திறலொழிய போருடற்றி வாகை சூடியவன். இவன் இமயம் வரையிலும் இணையறு புகழைப் பரப்பி, வீரத்தால் அடி பணிய மறுத்த ஆரிய அரசர்களை வென்று விளங்கினன் என்ற வரலாற்றுண்மையை,

> ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
> தென்னங் குமரியொ டாயிடை
> மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே
>
> (பதிற். 11: 23—25.)

என்ற பதிற்றுப்பத்தடிகளால் அறிகின்றோம்.

இரண்டாம் பத்தில் இலங்கும் பத்துப் பாக்களும் சேரலாதனின் வீரத்தையும், வெற்றிச் சிறப்பையும் ஈந்துவக்கும் இயல்பையும் எடுத்துக் கூறி அவனுடைய வளமுறு வரலாற்றை இன்றும் வையத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன.

அடுத்து வரும் மூன்றும் பத்தில் இமயவரம்பனின் தம்பியாகிய பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாங்குறப் பாடியிருப்பதைப் பார்க்கின்றோம். இவன் இருபத்தைந்தாண்டு செங்கோலோச்சினன். இவனைப் பாடிப் பெற்ற பெரும்பொருளைக் கொண்டு கௌதமனார் தம் மனைவியுடன் ஒன்பது வேள்விகளைச்

செய்து முடித்துப் பத்தாவது வேள்வி வேட்கையில் தம் தண்ணளியாளோடு விண்ணகம் சென்றெய்தினர்.

குட்டுவன் ஆண்ட நாட்டில் வறுமையில்லை. ஆண்டு தோறும் மழை பெய்து பயன் விளைத்ததால் மக்கள் நோயின்றி வாழ்ந்தனர். அவ்வுண்மையைக் கௌதமனர் தம் பாட்டால் நமக்கு அறிவிக்கின்றார். அவன் பிற உயிர்களுக்குத் தீமையெண்ணுத் திண்ணிய உளத்தன்; பொய் வழங்காப் புகழ் நாவன்; சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், சோதிடம், வேதம், ஆகமம் ஆகிய ஐந்து கலைகளையும் ஒருங்கே கற்றவன். இவ்வுண்மைகளை,

சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்
றைந்துடன் போற்றி யவை துணையாக
எவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கைக்
காலை யன்ன சீர்சால் வாய்மொழி (பதிற். 21: 1-4.)

என்ற அடிகள் அறிவிக்கின்றன. அவன், ஞாயிறு தோன்றத் தவறுததுபோல் உண்மை உரைப்பதில் தவருதவன்.

நான்காம் பத்திற்குரிய களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என்பான் நெடுஞ்சேரலாதனின் மகன் என்னும் உண்மை,

ஆராத் திருவின் சேரலா தற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் தேவி ஈன்ற மகன்

என்ற நான்காம் பத்தின் பதிகத்தால் தெரிகின்றது. இவனைப் பாடிய காப்பியாற்றுக்காப்பியனருக்கு நாற்பது நூருயிரம் பொன் கொடுத்துத் தான் ஆள்வதில் பாகமும் கொடுத்தான்.

நார்முடிச் சேரல் போரார்வம் மிக்கவன். பகைவர் நாடு அழிந்து அழகொழியப் போரிட்டுப் பெற்ற பெருஞ் செல்வத்தைப் பாணருக்கும், பொருநருக்கும் பகுத்தளித்து, எஞ்சியவற்றைத் தன்னருஞ் செல்வத்தோடு சேர்த்துத் தளர்ந்த குடிகளுக்குக் கொடுத்து வாழவைக்கும் வள்ளலாவான். இவன், அதியமான் நெடுமான் அஞ்சியின் குலத்

தவனாகிய நெடுமிடல் என்பவனை வென்று அவன் நாட்டைத் தனதாக்கிக்கொண்டான் என்னும் வரலாற்றுண்மை,

நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட இறுத்துத்
தடந்தாள் நாரை படிந்திரை கவரும்
முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்
பிழையா விளையுள் நாடகப் படுத்து

(பதிற். 32: 10–14.)

என்ற பகுதியால் தெரிகின்றது. யானைப்படையோடு சென்று நெடுமிடலஞ்சியின் விளைபுலங் கெடுத்து, நாரைகள் மீன்களைக் கவர்ந்துண்ணும் வளைந்த நெற்கதிர்களுக்குரிய கழனிகள் பொருந்திய வளநாட்டைத் தன்னுடையதாக்கிக் கொண்டான் நார்முடிச் சேரல்.

ஐந்தாம் பத்தைப் பாடிய பரணருக்குக் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் உம்பற்காட்டு வருவாயையும் தன்மகன் குட்டுவன் சேரலையுங் கொடுத்தான். இவன் நெடுஞ்சேரலாதனுக்குச் சோழன் மணக்கிள்ளி மகள்பால் தோன்றியவன் என்பது,

குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக் கிள்ளி ஈன்றமகன்

என்ற ஐந்தாம் பத்துப் பதிக அடிகளால் புரிகின்றது.

இவன் கொடைச் சிறப்பும், வெற்றிச் சிறப்பும் உடையவன். கடற்போர் செய்து பெரும்புகழ் எய்தியவன் என்பதை,

இனியார் உளரோநின் முன்னும் இல்லை
மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவளி கடவுந் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி இமைப்பின் வேலிடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசி னோரே

(பதிற். 45: 18—22.)

என்ற அடிகளால் பரணர் உணர்த்துகின்றார். முகில் படிந்து முகத்தலால் நீர் குறையாமலும், மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து வந்து புகுவதால் நீர் நிரம்பிக்

க்கரை கடவாமலும் இருக்கும் கடலில் கப்பல்களின் செலவைத் தடுக்கும் காற்ருல் எழுப்பப்படும் அலேகள் ஆர்ப்பரிக்க, அதனிடத்து வீரம் செறிந்த வேற்படையைச் செலுத்தி அக் கடலிடத்து எதிர்த்த பகைவரை அழித்தொழித்தவன்தான் கடற்பிறக்கோட்டிய செங்குட்டுவன். கடற்போருடற்று வதிலே இவனேயொத்தவர் அவன் குடியில் முன்பும் தோன்ற வில்லேயென்றும் பின்பும் பிறத்தல் அரிதென்றும் பரணர் வியக்கின்ருர்.

ஆரும் பத்துக்குரிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் நெடுஞ்சேரலாதனுக்கு வேளாவிக்கோமான் மகள் வயிற்றில் பிறந்தோன் என்பதை,

குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு வேஎள்
ஆவிக் கோமான் தேவி ஈன்றமகன்

என்று ஆரும் பத்தின் பதிகம் அறிவிக்கின்றது. இதனேப் பாடிய காக்கைபாடினியார் நச்செள்ளேயாருக்கு ஆபரணத் திற்காக ஒன்பது துலாம் பொன்னும், நூருயிரம் பொற் காசுகளும் கொடுத்துப் போற்றினன். இப் பெண்பாற் புலவரும் இச் சேரமன்னனின் நிறைந்த கல்வியையும், ஆண் மையையும் சிறக்கவும், பரக்கவும் பாடியுள்ளார்.

ஏழாம் பத்தில் கபிலர், செல்வக் கடுங்கோ வாழியாதனே அவனின் அறமும், மறமும் தோன்றப் போற்றியுள்ளார். இவன்,

மல்லல் உள்ளமொடு மாசற விளங்கிய
செல்வக் கடுங்கோ வாழி யாதன்

என்று ஏழாம் பத்துப் பதிகத்தால் போற்றப்படுகின்ருன். கபிலருக்கு இவன் நூருயிரம் பொற்காசுகளும், நன்ரு என்னும் குன்றின்மேல் ஏறி நின்று தன் கண்ணில் கண்ட நாடுகளேயும் நல்கினன்.

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை எட்டாம் பத்தில் ஆசிரியர் அரிசில் கிழார் பாடி ஒன்பது நூருயிரம் பொற்காசுகளும், அமைச்சர் பதவியும் பெற்ருர். இவ்வாசிரியர், இவனின் ஆண்மையையும், கைவண்மை யையும், வேட்ட பல யாகங்களேயும், பேரொழுக்கத்தையும், பேரறிவினேயும் பத்துப் பாக்களால் எடுத்துரைக்கின்ருர்.

ஒன்பதாம் பத்தில் குடக்கோ இளஞ்சேரல் இரும் பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடி முப்பத்திராயிரம் பொற்காசுகள் பெற்ருர். புலவருக்குத் தெரியாமலே அவர் வியக்கும் வண்ணம் இளஞ்சேரல் ஊரும், மனையும் வளமுற அமைத்துக்கொடுத்தான்.

மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்
இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறை

என்று இவன் நாடு புரக்கும் திறத்தை ஒன்பதாம் பத்தின் பதிகம் பாராட்டுகின்றது.

முகிற்கூட்டத்தின் முன்னே சிறகடித்துப் பறந்து செல்லும் கொக்குகளின் வரிசையைப்போல் போர் யானைகளுடன் கலந்து செல்லும் கிடுகுப் படையோடு தேரில் கட்டிய கொடி இடைவிடாது அசைய இளஞ்சேரல் படை திரட்டிச் செல்லுங் காட்சி காண்போர்க்கு இனிமை பயக்கக் கூடியது. அவ்வாறு படை திரட்டிச் சென்று பகைவர் நாடு சிதைந்தழியுமாறு போருடற்றி, அங்கே கிடைக்கும் நல்ல கலன்களைக் கொண்டு வரும் அவனது சினத்தைக் கண்ட மாற்ருர்க்கு அவன் செலவு துன்பந் தருவதாகும். அவன் போர்க்களம் நோக்கிப் போகும் காட்சி அவனைச் சேர்ந் தார்க்கு இன்பமும், சேராதார்க்குத் துன்பமும் தரும்.

பதிற்றுப்பத்துப் பாடல்கள் சேரநாட்டின் சீரிய பழக்க வழக்கங்களையும், அரசியல் முறைகளையும், படையியல் திறங் களையும், அரசர்கள் செய்த யாகங்களையும், அவர்கள் செய்த போர்களையும், பொருநரையும் பாணரையும் புரந்த முறை களையும், வரலாற்று வரிசையோடு நம்மவர்க்கு வழங்கு கின்றன. தமிழ்ப் புலவர்கள் வரலாற்றறிவுடையோர் என்பதற்கு இந்நூல் ஓர் அரிய சான்று.

V. பரிபாடல்

பொதுச் செய்திகள்

பரிபாடல், 'பரிபாடல்' என்னும் பாவகையால் தொகுக் கப்பட்ட நூல். இதன் பாடல்கள் இசைப்பாக்களாய் இருத்தலால் இதன்கண் இசை வகுக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 70 பாடல்கள் உள்ளன. 25 அடி முதல் 140 அடி வரையுள்ள பாக்கள் காணப்படுகின்றன. திருமாலைப் பற்றிய பாடல்களும், முருகக் கடவுளைப்பற்றிய பாடல்களும் சிறந்தவை.

"பரிபாடல் என்பது பரிந்து வருவது; அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவானும் வந்து பலவடியும் வருமாறு நிற்கும்" என்று நச்சினார்க்கினியர் பரிபாடலைக் குறித்து எழுதியிருக்கின்றார். தொல்காப்பியர் செய்யுளியலில்,

> பரிபா டல்லே தொகைநிலை விரியின்
> இதுபா வென்னும் இயனெறி இன்றிப்
> பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப

என்று இதனியல்பைக் குறிப்பிடுகின்றார்.

பரிபாடலில் அகப்பொருள்பற்றிய பாடல்களும், புறப் பொருள்பற்றிய பாடல்களும் காணப்படுகின்றன. தமிழகப் பண்பு, மக்களின் அன்பு, காதல், வீரம், அறம், காவிய ஓவியத் திறங்கள் முதலியன பல்லிடங்களில் பேசப்படு கின்றன. இவ்வரிய தொகைநூலை நன்முறையில் முதன் முதலாகப் பதிப்பித்துதவியவர் டாக்டர், உ. வே. சாமிநாதையராவார். இதற்குப் பரிமேலழகர் செய்த பழைய உரையொன்று உண்டு. அவ்வுரை இடையிடையே சிதைந் துள்ளது. அண்மையில் பெருமழைப் புலவர் திரு. பொ. வே. சோமசுந்தரனாரால் சீரிய உரையொன்று இந் நூலுக்கு வகுக்கப்பட்டுள்ளது.

பரிபாடலைப் பாடிய புலவர்கள் நல்லந்துவனார், இளம் பெருவழுதியார், கடுவன்இளவெயினனார், கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், குன்றம்பூதனார், கேசவனார், நப்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லழிசியார் எனப்படும் நல்லெழினியார், நல்வழுதியார், மையோடக்கோவனார் ஆகியோராவர்.

சிறப்புச் செய்திகள்

திருமாலுக்குரிய முதற்பாடலில் அவரின் சிறப்புக்கள் பாடப்பட்டிருக்கின்றன. அவர் கண்கள் தாமரை மலரை

யொத்தவை; மேனி காயாம்பூவை நிகர்த்தது; மார்பு திருமகள் விரும்பி உறையப்பெறுவது; அதில் அழகுற விளங்குவது கௌத்துவமணி. அவருடைய ஆடை பொன்னுடை. அவரின் அருமை பெருமைகளைப் பேசுவது அந்தணரின் வேதம். இவ்வரிய செய்திகளை,

எரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையும் மேனியை மேனித்
திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை மார்பில்
தெரிமணி பிறக்கும் பூணினை மால்வரை
எரிதிரிந் தன்ன பொன்புனை உடுக்கையை
சேவலங் கொடியோய்நின் வலவயின் நிறுத்தும்
மேவலுள் பணித்தமை கூறும்
நாவல் அந்தணர் அருமறைப் பொருளே.
(பரிபாடல் 1: 6—13.)

என்னும் இவ்வடிகள் வழங்குகின்றன.

முருகன் திருப்பரங்குன்றில் பெருமையுடன் வீற்றிருக்கின்றான். அவனைக் காணுதற்காக அவ்விடத்திற்குத் திருமாலும், சிவபெருமானும், பிரமனும், ஆதித்தர் பன்னிருவரும், அசுவனி மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், உருத்திரர் பதினொருவரும், திக்குப் பாலகர் எண்மரும், ஏனைத் தேவர்களும், அசுரர்களும், முனிவர்களும் வந்துறைகின்றார்கள். ஆகவே, அக்குன்றம் இமயக் குன்றை ஒத்துத்தோன்றுகின்றது என்று செவ்வேளுக்குரிய எட்டாம் பாடற் பகுதி பகருகின்றது.

வையையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து விரைந்தோடிற்று. அதன் முழக்கத்தைக் கேட்டு மதுரையில் உள்ளோர் துயில் நீக்கி அவ்வாற்றில் நீராடும்பொருட்டு நெஞ்சுவந்து சென்றனர். அவ்வாறு சென்றவர்கள் ஒருவரையொருவர் முந்திச் செல்லவேண்டும் என்று எண்ணியதால் பலவகையான குழப்பத்திற்கு ஆளானார்கள். மகளிர்க்குரிய கோதைகளை மைந்தர் புனைந்தனர். மைந்தர்க்குரிய தார்களை மகளிர் அணிந்தனர். இவ்வாறு முறைமை மறந்து அணிந்துகொண்டவர்களெல்லாம் வையையைச்

சென்றெய்தினர். அணிந்துகொள்ளாத சிலர் அகன்ற தெருக்களில் போந்து நின்று வருந்தினர். இப்படியாக வையை மதுரை மாந்தரால் பெரிதும் விரும்பும் தன்மை யுடையதாயிற்று. இச்செய்திகளே,

மகளிர் கோதை மைந்தர் புனையவும்
மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்
முந்துறல் விருப்போடு முறைமறந் தணிந்தவர்
ஆடுவார் பொய்தல் அணிவண் டிமிர்மணல்
கோடேறெ றெருத்தத் திரும்புன லில்குறுகி
மாட மறுகின் மருவி மறுகுறக்
கூடல் விழையுந் தகைத்துத் தகைவையை

(பரிபாடல் 20: 20–26.)

என்னும் வையைக்குரிய பாடலின் அடிகள் எடுத்திசைக் கின்றன.

பரிபாடல் சொற்சுவை, பொருட்சுவைகளில் சிறந்து விளங்குகின்றது; பொருள்களின் இயற்கை எழில்களை எடுத்தோதுகின்றது; மதுரை, வையையாறு, திருமருதத் துறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை முதலிய வற்றின் பழங்கால நிலைமைகளையும், அக்கால நாகரிக முறை களையும், தெய்வ வழிபாட்டுத் திறங்களையும், தமிழக வரலாற்று வாய்மைகளையும் நம்மவர்க்கு வழங்குகின்றது.

VI. கலித்தொகை

பொதுச் செய்திகள்

கலித்தொகை கலிப்பாவினால் ஐந்து திணைகளைப்பற்றி இயற்றப்பட்ட செய்யுட்களின் தொகுப்பு. பெருங்கடுங்கோ பாலைக் கலியையும், கபிலர் குறிஞ்சிக் கலியையும், மருதன் இளநாகன் மருதக் கலியையும், சோழன் நல்லுருத்திரன் முல்லைக் கலியையும், ஆசிரியர் நல்லந்துவனார் நெய்தற் கலியையும் பாடியுள்ளார்கள். பாலை பாடக் கடுங்கோ வென் பதையும், குறிஞ்சி பாடக் கபிலன் என்பதையும் இவர்கள் இயற்றியுள்ள பாடல்களால் நன்கு அறியலாம்.

சிறப்புச் செய்திகள்

கலித்தொகையின் முதற்பகுதியாகிய பாலைக் கலியில் காணும் 35 பாடல்களையும் பல்சுவையமையப் பாடியுள்ளார் பெருங்கடுங்கோ. பாலையைச் சிறப்பித்துப் பாடியிருக்குங் காரணத்தால் இவர் 'பாலைபாடிய பெருங்கடுங்கோ' என்று அழைக்கப்படுகின்றார். இவர் அறநூல், மரநூல், விலங்குநூல் முதலிய நூல்துறைகளிலும், இசை நுணுக்கம், ஓவியம் முதலிய நுண்கலைத் துறைகளிலும் ஆன்ற புலமை பெற்றிலங்கியவர் என்பது இவரின் பாக்களால் புலனாகின்றது.

ஒரு தலைவனும் தலைவியும் களவு வாழ்வில் ஈடுபட்டிருந்தனர். பன்னாட்குப் பிறகு கற்பறம்பூண விரும்பினர். ஆனால், தலைவியின் வீட்டார் அவர்கள் திருமணத்திற்கு உடன்படாத காரணத்தால், அத்தலைவி தலைவனோடு உடன் போய்விட்டாள். அஃதறிந்த செவிலித்தாய் உடன்போய மகளைத் தேடி பாலைவன வழியில் சென்றபொழுது முக்கோல் அந்தணர் எதிர்ப்பட்டனர். அவர்களிடம்,

> என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
> தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
> அன்னார் இருவரைக் காணிரோ பெரும

என்று கேட்டாள். அதற்கு அவர்கள், "கண்டனம்" என்றனர். மேலும், "அஃது அறமென்றெண்ணிப் போந்தனம்" என நவின்றனர்.

அத்தலைவி அத்தலைவனுக்கே உரியள் என்பதைப் பல காட்டுக்களால் அச்செவிலிக்கு எடுத்துக் காட்டினர். மணங்கமழ் சந்தனம் மலையிலே தோன்றினும் அதை மெய்யில் பூசிக்கொள்வார்க்கல்லது அம்மலைக்கு அஃது எப்பயனையும் நல்காததுபோல், அத்தலைவியும் பயன்படும் பருவத்து அவளுக்கேற்ற தலைவனுக்கே பயன்படுவாளே யன்றி அவள் தோன்றிய இல்லிற்கன்று எனும் கருத்தை,

> பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
> மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
> நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

தலைமைத்தன்மையும், வெள்ளிய நிறமும் உடைய முத்துக்கள் அணிவார்க்குப் பயன்படுவதல்லது அது கடலிடத்துப் பிறந்தாலும் அக்கடலுக்கு எப்பயனையும் கொடுக்காததைப்போல் தலைவியும் பருவமடைந்தபொழுது அவள் தோன்றிய வீட்டிற்கு அப்பருவத்தால் பயன்படாள். இவ்வரிய செய்தியை,

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

என்ற அடிகள் அறிவிக்கின்றன.

ஏழு நரம்புகள் தரும் இனிய ஓசைகள் பாடுகின்றவர்க்கே பயன் நல்குமேயன்றி யாழிடத்தே அவ்வோசைகள் பிறந்தாலும் யாழுக்கு எப்பயனையும் தாரா. அதுபோல் ஆராயுங் காலத்து பருவமங்கையாம் அத்தலைவியும் அச்செவிலிக்கோ அவள்பிறந்த வீட்டிலிருக்கும் மற்றவர்க்கோ பயன்படாள். இவ்வுண்மையை,

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

என்ற பகுதி இயம்புகின்றது.

இறுதியாக அவ்வந்தணர்கள் அச்செவிலியிடத்து, " தாய்தந்தையர்களைவிடச் சிறந்த கணவனை வழிபட்டு அவன்பின்னே போயினள் நும்மகள். இம்மையில் இவ்வாறு கற்புப் பூண்டு நிகழ்த்தும் இவ்வில்லறமே அறங்களில் தலையான அறம். இவ்விருவரும் நீங்காமல் முத்தியடைதற்குரிய வழியும் இதுவே " என்றனர்.

சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே.

(பாலைக்கலி 9.)

" வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் " கபிலர் இரண்டாம் பகுதியாகிய குறிஞ்சிக்கலியிலுள்ள 29 பாடல்களைப் பாடியுள்ளார். இவருடைய பாக்களில் சொற்

சுவையும் பொருட்சுவையும் செறிந்திலங்கக் காணலாம். இவர் 'நல்லிசைக் கபிலர், என்றும், 'முத்தமிழ்க் கபிலர்' என்றும் அழைக்கப்படுகின்ருர்.

இயற்கையழகு பொருந்திய குறிஞ்சி நிலத்தின்கண் பருவமங்கையொருத்தி தினைப்புனத்தைக் காத்துவந்தாள். அவ்வாறு அவள் நாள்தோறும் காவல்காத்துவரும் இடத்திற்கு யானையைத் தேடிவருவான்போன்று காளையொருவன் கரத்தில் வில்லுடையவனுய் வந்து, பரண்மீது நிற்கும் அப்பாவையைப் பாசக்குறிப்போடு பார்த்து எம்மொழியும் பகராது சென்று பன்னுள் இவ்வாறெழுகி வந்தான். அவனது செயல் அத்தலைவியை அல்லல் படுத்திற்று. அல்லும் பகலும் அவன் நினைவானுள். இரவிலே உறங்காது ஏங்கினுள். ஆண்மகனுக இருந்தும் அவனே கொண்ட காதலை எடுத்தியம்பாது, அவளையணுகி ஏற்றுக்கொள்ளாது வருவதும் போவதுமாக அவளை வாட்டி வதைத்தான். அவள் முனைந்து தான் கொண்ட காதலை அவனுக்கு அறிவிக்கலாம் என்ருலோ அச்செயல் பெண்மைக்குப் பொருந்தியதன்று. என்செய்வாள் அவள்? எண்ணி ஏங்கினுள்; அதனுல் உடல் இளைத்தாள்; வேறு வழியின்றி இறுதியாகத் தன் நாணத்தையும் கருதாது, துணிந்து ஒரு செயல் செய்தாள்.

அவள் காவல் புரியும் தினைப்புனத்திற்கும் அருகில் ஓங்கி வளர்ந்திருந்த மரத்தில் கட்டியிருந்த ஊஞ்சலில் ஏறி ஆடிக்கொண்டிருந்தாள். அன்றும் வழக்கம்போல் அத்தலைவன் அவ்விடம் வந்து அவளையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான். அவளும் ஆவலோடு அவனை நோக்கினுள். ஆயினும் அவன் வாய்திறந்து ஒருவார்த்தை வார்த்தானில்லை. அப்பொழுது அவள் அவனை அன்போடு பார்த்து, "ஐயனே! சிறிது நேரம் என்னை ஊசலாட்டுவாயாக" என்ருள். அவனும் அதற்குடன்பட்டு அருகில் சென்று, "தையால்! நீ கூறியது நன்று" என்று ஊசலாட்டினுன். அப்பொழுது அவள், கயிற்றைப் பற்றியிருந்த கரத்தை நெகிழ்த்து அவனது அகன்ற மார்பில் மயக்கம் கொண்டவளைப்போல் விழ்ந்தாள். அவனும்

அதை உண்மையென்றெண்ணி விரைவாக அவளை இரு கரத்தால் எடுத்து அணைத்துக்கொண்டான். அவளோ, மயக்கம் தெளிந்தவளைப்போல் எழுந்துவிட்டால், "ஒண் குழாய்! நீ போ" என்று கூறி போக்கிடுவான் என்றெண்ணி எழுந்திராது நீண்டநேரம் அவன் அரவணைப்பிலேயே இருந்தாள்! இவ்வினிய செய்தியை,

நாணின்மை செய்தேன் நறுநுதால் ஏனல்
இனக்கிளி யாம்கடிந் தோம்பும் புனத்தயல்
ஊசலூர்ந் தாட ஒருஞான்று வந்தானை
ஐய சிறிதென்னை ஊக்கி எனக்கூறத்
தையால் நன்றென் றவனூக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன்மார்பில் வாயாச்செத்
தொய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல்
மெய்யறியா தேன்போல் கிடந்தேன்மன் ஆயிடை
மெய்யறிந் தேற்றெழுவே னாயின்மற் றொய்யென
ஒண்குழாய் செல்கெனக் கூறி விடும்பண்பின்
அங்கண் உடையன் அவன் (குறிஞ்சிக்கலி 1:12–22.)

என்ற கலிப்பாவால் கபிலர் தருகின்றார்.

மருதனிள நாகனார் மருதக்கலியில் உள்ள 35 பாடல்களில் அகத்திணைக் கருத்துக்களை அழகுறப் புனைந்து பாடியுள்ளார். தலைவனொருவன் தலைவியைப் பிரிந்து பரத்தையிடம் சென்று திரிந்து மீண்டும் தலைவியை நாடி வந்தான். அப்பொழுது அத்தலைவி அவனோடு ஊடினாள். அவனோ அவளின் ஊடலைத் தீர்த்தற்காக அவளின் அருகிற் சென்று நறுமணக் கூந்தலைப் பற்றினான். அவளோ சினமுற்று, "என் கூந்தலைத் தொடுதற்கு நீ யார்? என்னைப் பாதுகாப்பதைப் போல் நடித்துக் கொடுமைசெய்வதைச் சிந்தித்துப் பார். இனிமேல் நீ என் மனையிடத்தே வராதே. வந்த வழியே மீண்டும் போய்விடு" என்றாள். இச்செய்தியை,

யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர்
ஊராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை
வாரல்நீ வந்தாங்கே மாறு (மருதக்கலி 24: 1—3.)

என்ற அடிகள் நமக்குத் தருகின்றன.

அவள் கூற்றைக் கேட்ட தலைவன் அவளை நோக்கி, " உடலும் உயிரும் ஒன்ருய்த் தலை இரண்டாகிய பறவை யினுடைய அவ்விரண்டு தலையில் ஒரு தலை மற்றத் தலையோடு போர்செய்தலைப்போல் நீ இக்கொடுமைகளைக் கூறி ஊடி என்னேடு மாறுபடுவதால் பயனென்? அதனைக் கைவிட்டு என் அரிய உயிர் நிற்கும் வழி யாது என்று கூறுவாய் " எனப் பரிந்து கேட்டான். இதை,

என்னிவை ஒருயிர்ப் புள்ளின் இருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்ருப் புலவல்நீ கூறினென்
ஆருயிர் நிற்குமா றியாது (மருதக்கலி 24: 4—6)

என்னும் அடிகளால் அறிகின்ருேம்.

அவன் அவ்வாறு கூற, " ஏடா! கொற்றவையிடத்துப் பேய் மாறுபடக் கூறுவதைப்போல் நீ நின் பொய்களை எனக்குச் சொல்லி வருந்தாதே. எனக்கு, முன்பே உன் வஞ்சனை தெரியும் " என்று அவனுக்கு அவள் விடை யளித்தாள்.

அதுகேட்ட அவன், " என்னைப் பேயென்று காயாதே! இனிய நகையுடையாய், நீ என்மீது ஏற்றிக் கூறுங் குற்றங்களைச் செய்தறியேன். தவறில்லாதவன்மீது அரசன் கோபிப்பானென்ருல் அதற்கொரு பரிகாரம் இல்லை " என்ருன்.

அது கேட்ட தலைவி தன் நெஞ்சை நோக்கி, " நெஞ்சே! மேலும் இவனை வருத்தினல், தப்பினேனென்று நம்மடியை வணங்கிப் பரிகாரம் தேடினுலும் தேடுவான் " என்று கூறி இரங்கி, கொண்ட ஊடலைப் போக்கினள். அதுகண்டு அவன் அவளைப் போற்றினன்.

மருதக்கலிப் பாடல்கள் பலவும் நாடகம்போல் அமைந் திருக்கும் திறம் போற்றற்குரியது.

நான்காம் பகுதியாகிய முல்லைக்கலியிலுள்ள 17 பாடல் களை உருத்திரனர் பண்டைய பழக்கவழக்கங்கள் அமையப் பாடியுள்ளார். சங்ககாலத்தில் ஏறுதழுவுகின்ற பழக்கம்

முல்லை நில மக்களிடத்தே பெருமளவுக்கிருந்தது என்பதைக் குறிப்பிடுகின்றார்.

ஐந்தாம் பகுதியாகிய நெய்தற்கலியில் காணும் 33 பாடல்களையும் நல்லந்துவனார், நெய்தல்நிலப் பழக்க வழக்கங்கள் பல அமையவும், வைதிக ஒழுக்கங்கள் சில செறியவும் அழகுற ஆக்கியுள்ளார். உலக மக்களுக்கு நன்னெறி காட்டும் அறிவுரைகளும், அறவுரைகளும் இவர் பாடியுள்ள கலியுள் மலிந்து காணப்படுகின்றன.

சொற்சுவை, பொருட்சுவை, இசைச்சுவை, ஏனை இலக்கியச்சுவை எல்லாம் ஒருங்கு வாய்த்துத் திகழ்வதுதான் கலித்தொகை. எனவேதான் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' யென்றும், 'கல்வி வலார் கண்ட கலி' யென்றும் இத் தொகைநூல் போற்றப்படுகின்றது. இதன் சிறப்புக் கருதித்தான் ஆசிரியர் நல்லந்துவனார் இச்சுவைமலிந்த நூலைத் தொகுத்து ஞாலத்திற்கு வழங்கியுள்ளார்.

VII அகநானூறு

பொதுச் செய்திகள்

அகநானூறு அகத்துறைபற்றிய 400 பாடல்களைக் கொண்டது. 13 அடிகளுக்குக் குறையாமல் 31 அடிவரையுள்ள பாடல்கள் காணப்படுகின்றன. பாடிய புலவர்கள் 145 பேர். சிலருடைய பெயர்கள் காணப்படவில்லை. முதல் 120 பாடல்கள் 'களிற்றியானை நிரை' எனப்படும். 121 முதல் 300 வரையுள்ள பாடல்கள் 'மணிமிடை பவளம்' எனப்படும். 301 முதல் 400 வரையுள்ள பாடல்கள் 'நித்திலக் கோவை' எனப்படும். தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகன் உருத்திரசன்மன். தொகுப்பித்த பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. வரலாற்றுக் குறிப்புகளும், உவமை நயங்களும், பண்டைய பழக்க வழக்கங்களும், இயற்கை வருணனைகளும், எண்சுவைகளும் இடம்பெற்றுள்ளன.

இதன் பாடல்கள் அதிக அடிகளைக் கொண்டிலங்கும் ஏதுவால் இந்நூலுக்கு நெடுந்தொகை என்ற பெயரும்

உண்டு. இதை முதன்முதலாக ஆழ்ந்தாய்ந்து அழகுறப் பதிப்பித்தவர் கம்பர் விலாசம் இராசகோபால ஐயங்காரா வார். அவருக்குப் பிறகு இந்நூலுக்குச் சிறந்த உரையைச் செய்து தந்த பெரியார் கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம் பிள்ளையாவார்.

வரலாற்றுச் செய்திகள்

இந்நூல் வரலாற்றுச் செய்திகள் பலவற்றை நமக்கு வண்ணமுற வழங்குகின்றது. அதியமான் அஞ்சியை மாமூலனுர் 115 ஆம் பாட்டில்,

சினம்மிகு முன்பின் வாமான் அஞ்சி

எனக் குறிப்பிடுகின்ருர். அவன் சினமிக்க வலிமையையும், தாவியோடும் குதிரைகளையும் உடையவன் என்றவுண்மை இதனுல் உணர்த்தப்படுகின்றது. இப்புலவரே சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை 65 ஆம் பாட்டில், அவன் நாட்டினை வெற்றியினுல் விரிவாக்கியவனென்றும், பரிசிலர்க்கு வரிசை செய்வோனென்றும் போற்றிப் பாடியுள்ளார். அப்பகுதி,

நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவ இனி ... ...

என்பதாகும்.

பறம்புமலையை ஆண்ட பாரிவள்ளலை நக்கீரனுர் 78 ஆம் பாடலில்,

... ... வேண்டுவயிற் பிழையாது
ஆள்இடூஉக் கடந்து வாளமர் உழக்கி
ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி

என்று போற்றியுரைக்கின்ருர். பாரி நெறியினின்றும் திரியாதவனென்றும், தெவ்வர் படையிடைப் புகுந்து திறல்மிகு வாட்போர் செய்தவனென்றும், நேர்கொம்புடைய போர்யானைகள் மலிந்த மூவேந்தர் படையை முறியடித்து

விரட்டியவனென்றும், விரைந்து செல்லும் குதிரைகளைக் கொண்டவனென்றும், வள்ளல்தன்மையுடைய நல்லுளத்த னென்றும் நற்றமிழ் நக்கீரர் நவிலுகின்றார்.

உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வனான கரிகால் வளவனை மாமூலனார் 55ஆம் பாட்டில் குறிப்பிடு கின்றார். அவனோடு வெண்ணிப் போர்க்களத்தில் பொருதிப் புறப்புண்பட்ட சேரலாதனைப்பற்றியும் தெரிவிக் கின்றார். அவன், தன் புறத்தே புண்ணேற்பட்டதற்காக நாணமுற்று வெண்ணிப் போர்க்களத்தின் ஒருபுறத்தே வடக்கிருந்து உயிர்நீத்தான். அச் செய்தியைக் கேட்ட சான்றோர் பலர் பெறுதற்கரிய துறக்கத்திற்கு அவனோடு தாமும் செல்ல விரும்பித் தங்கள் இனிய உயிர்களையும் நீத்தனர். இவ்வரலாற்றுண்மை,

... ... ஒண்படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனோடு செலீஇயர்

என்ற அடிகளால் அறியப்படுகின்றது.

இன்னும் அத்திபற்றியும், ஆதிமந்தியார்பற்றியும், இருங்கோ வேண்மான்பற்றியும், எவ்விபற்றியும், எழினி பற்றியும், திதியன்பற்றியும், தித்தன்பற்றியும், நன்னன் பற்றியும், பண்ணன்பற்றியும், ஓரிபற்றியும், காரிபற்றியும், மத்திபற்றியும், மருதிபற்றியும் விழுமிய செய்திகள் பல வற்றை இலக்கிய நயமுற அகநானூற்றுப் பாக்கள் பல எடுத்தியம்புகின்றன.

அகம்பிணிக்கும் அகச் செய்திகள்

தலைவனொருவன் தலைவியை வேட்டுப் பகற்குறியிடத்தே வந்தானாக, அவனைக் கண்ட தோழி, தலைவி இற்செறிக்கப் பட்ட செய்தியைத் தெரிவித்து விரைந்து அவளை வரைந்து கொள்ளுமாறு அறிவுறுத்துவதாகக் கபிலரால் ஆக்கப்பட்டி ருக்கும் அணிதிகழ் பாட்டு கேட்டு இன்புறத்தக்கது.

அத் தலைவனுடைய மலைநாடு குன்ருவிளைவு உடையது. அதன்கண் கவலையின்றி வாழ்ந்துவரும் விலங்கினங்கள் விரும்பும் பொருள்பெற்று அரும்பும் மகிழ்வோடு குறும்புச் செயல்களில் ஈடுபடுவதுமுண்டு. அளவுக்கு மீறி உண்டு, உண்ட களைப்பால் ஒன்றும் செய்யமுடியாது படுத்து உறங்குவதுமுண்டு. ஆங்கு வாழ்ந்துவந்த ஓர் ஆண் குரங்கானது, பெருங்குலைகளில் தாமாகவே முதிர்ந்து பழுத்த நறும் வாழைக்கனிகளை அளவின்றித் தின்றது. அதன்பிறகு பழுத்துத் தொங்கிய பலாவின் இனிய கனிகளின் சுளைகளை நிலைமறந்து உண்டது. அப்பாற் சென்று பாறையின்கண் அமைந்திருந்த நெடிய சுனையின் நீரை நிறைய அருந்திற்று; நன்கு விளைந்த நறுந் தேனையும் விரும்பி மாந்திற்று; இறுதியாக அருகில் மிளகுக் கொடிகள் படர்ந்து வளர்ந்திருந்த பொலிவுறு சந்தன மரத்தில் ஏறுவதற்கும் முடியாதாகி பூக்களாகிய படுக்கையிலே பூரிப்புடன் கிடந்து உறங்கிற்று. அவ்வினிய செய்தியை,

> கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை
> ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த
> சாரல் பலவின் சுளையொடு ஊழ்படு
> பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
> அறியாது உண்ட கடுவன் அயலது
> கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
> நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்
>
> (அகம். 2: 1—7.)

என்ற அடிகள் அறிவிக்கின்றன.

தோழியானவள் மேலே காணும் செய்திகளை அத் தலைவனுக்கு எடுத்துக் கூறி அவன் மலைநாட்டு விலங்கினங்கள் இவ்வளவு இன்பம் அடைகின்றபொழுது அவன் எதிர்பார்த்து வரும் இன்பத்தையும் எய்தி இறும்பூதெய்துவது திண்ணமென்கின்ருள்.

" மலைநாடனே! மூங்கிலையொத்த பணைத்த தோள்களை உடைய தலைவியும் நிறுத்தவும் நில்லாது நின்னையே தொடர்கின்ற நெஞ்சத்தை உடையவள். நின்னிடத்து

இவ்வளவு செவ்விய அன்புடைய தலைவியை இவளின் தந்தை காவல் புரிந்துவரும் காரணத்தால், இனி இரவிலே இரவுக்குறி நாடி வருதலே நினக்குத் தகும்'' என்றாள். இரவிலும் காவல் உண்டென்பதால் இரவுக்குறியிட்டு வருதலும் நன்றன்றென்பது உய்த்துணரப்படும் பொருள். ஆகவே, அவன் பகற்குறியிட்டு வருதலையோ, இரவுக் குறியிட்டு வருதலையோ விட்டுவிட்டு அவளை மணம் புரிந்து கொள்வதே செய்தற்குரியது என்று தோழி வற்புறுத்து கின்றாள். இப்பாட்டில், குரங்கு பலவற்றைத் தின்றும், அருந்தியும், மாந்தியும் மரத்தில் ஏறமுடியாது பூப்படுக் கையில் மயங்கி உறங்குவதைப்போல், இத்தலைவனும் தலைவியினுடைய பல நலன்களை நுகர்ந்து அக்களவு வாழ்க்கையிலேயே மூழ்கிக்கிடக்கின்றான் என்பதை அவனுக்கு உணர்த்தும் திறம் ஓர்ந்து பாராட்டுதற்குரியது.

அம்மூவனார், ஆலூர்மூலங்கிழார், இடைக்காடனார், ஈழத்துப்பூதன்தேவனார், உலோச்சனார், ஊட்டியார், எருமைவெளியனார், ஐயூர்முடவனார், ஒக்கூர்மாசாத்தனார், ஓரம்போகியார், ஔவையார், கபிலர், பரணர், நக்கீரர் போன்ற முதுபெரும் புலவர்கள் அகநானூற்றுப் பாக்களின் மூலமாக அகவாழ்வின் பல்வேறு நிலைகளைக் கலையழகோடும், கருத்தாழத்தோடும் எடுத்துரைத்திருப்பதோடு சிறந்த அறங்களையும், சமுதாய பழக்கவழக்கங்களையும் இலக்கிய நயங்கள் பல செறிந்திலங்க வழங்கியுள்ளனர். மேலும், பெருநில, குறுநில மன்னர்களின் வரலாறுகளையும், வள்ளல்களின், வீரர்களின் அருஞ்செயல்களையும் இயம்பி யுள்ளனர்.

VIII. புறநானூறு

பொதுச் செய்திகள்

புறநானூறு புறத்தின் பகுதியாகிய வெட்சி முதலிய திணைகளுக்குரிய துறைப்பொருள் அமைந்த 400 பாக்களைக் கொண்டதால் இப்பெயர் பெற்றுள்ளது. இது புறம் எனவும், புறப்பாட்டு எனவும் வழங்கப்பெறும். இதில் வரும்

பாடல்கள் சிலவற்றைப் பெண்பாற் புலவர்களும் பாடியுள்ளார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஔவையார். பண்டைக்காலத்துத் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களைப் பற்றிய வரலாறுகளும், கடையேழு வள்ளல்கள், கடைச் சங்கப் புலவர் முதலியோர் வரலாறுகளும் இதன்மூலம் தெரியவருகின்றன.

இப்புறப்பொருள் இலக்கியத்தைத் தொகுத்தோரும், தொகுப்பித்தோரும் இன்னாரென்று தெரியவில்லை. இதற்குப் பழைய சிறந்த உரையொன்று உள்ளது. இதனை முதன் முதலாக அச்சிட்டு வெளிக்கொணர்ந்த பேரறிஞர் டாக்டர் உ. வே. சாமிநாதையராவார். அண்மையில் இவ்வரிய நூலுக்கு விரிவுரை செய்தவர் பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையாவார்.

வரலாற்றுச் செய்திகள்

குன்றாப் புகழ்கொண்ட அன்றையத் தமிழகத்தின் வளமுறு வரலாற்றுச் சிறப்புக்களை வழங்குவதிலே ஒப்பற்று விளங்கும் இலக்கியம் புறநானூறாகும். இது சங்ககால அரசியல் அமைப்பையும், அரசியல் வாழ்வையும், சமுதாய நிலையையும், பல்வேறு தொழில் வளங்களையும், கலை, கல்வி, பண்பாடு பழக்கவழக்கம் முதலியவற்றையும் நன்குரைக்கின்றது.

முடியுடை மூவேந்தர் சிறப்பினை இப்பாடல்களில் நாம் பார்க்கலாம். குறுநில மன்னர்களையும், வீரர்களையும், வீரத் தாய்மார்களையும், வாரி வழங்கிய கடையேழு வள்ளல்களையும், பைந்தமிழ்ப் பாவலர்களையும், பாணர்களையும், பொருநர்களையும், கூத்தர்களையும், விறலிகளையும் கண்டு களிக்கலாம்.

தமிழகத்தின் மரஞ்செடி கொடிகளையும், ஐந்து நிலன்களின் பயன்களையும், பறவை இனங்களையும், விலங்கு வகைகளையும் இயற்கை அழகையும் பல பாக்கள் பாடிக் காட்டுவதைப் பார்த்து மகிழலாம்.

கோவூர்கிழார் என்னும் பெரும் புலவர் பாடிய 15 பாக்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. இவர் காலத்தில் உறையூரை ஆண்ட காவலன் சோழன் நெடுங்கிள்ளி என்பான். இவன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி என்றும் அழைக்கப்பட்டான். அவ்வமயத்து, புகாரை ஆண்ட அரசன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுவான். இவன் நெடுமுடிக்கிள்ளி, மாவண் கிள்ளி, கிள்ளிவளவன் போன்ற வேறு பெயர்களையும் கொண்டு விளங்கினுன். இவனுடைய தம்பிதான் நலங்கிள்ளி என்பவன்.

அக்காலத்து உறையூர்ச் சோழர்களுக்கும், புகார்ச் சோழர்களுக்கும் இடையே அடிக்கடி போர் நிகழ்ந்து வந்தது. ஒருசமயம் சோழன் நலங்கிள்ளி நால்வகைப் படையோடு சென்று நெடுங்கிள்ளிக்கு உரிய உறையூரை முற்றுகை செய்து கடும்போர் தொடங்கினுன். அஃதை அறிந்த கோவூர்கிழார் அண்ணனும் தம்பியும் அன்பின்றிப் போர்புரியத் துணிந்தது அறமன்று என்று எண்ணி, அவ்விருவரையும் அணுகி அறிவுகொளுத்தினுர்.

"போர்க்குத் துணிந்தெழுந்த சீர்மிகு உம்மிருவரில் ஒருவனும் பெரிய வெண்மையான இதழ்களை உடைய பனம்பூ மாலையை அணிந்த சேரன் அல்லன்; கவின்மிகு கரிய சினைகளை உடைய வேப்பம்பூ மாலையை அணிந்த பாண்டியனும் அல்லன். உன்னுடைய பரந்த மார்பில் கிடந்து புரளும் மாலையும் ஆத்தியால் தொடுக்கப்பட்டது தான். உன்னேடு உளம் மாறுபட்டுப் பொருவோன் மார்பில் கிடந்தசைவதும் ஆத்தியால் ஆனதுதான். (நீங்கள் இருவரும் சோழர்களே.) ஆகவே, எவர் தோற்பினும் நும் குடியே தோற்றதாகும். இருவரும் வெற்றியடைதல் என்பது இயற்கையன்று; உங்கள் செய்கை சோழர் குடியின் புகழுக்குப் பொருந்தியதன்று. மேலும், இப்போரால் தெவ்வர் தெம்பு பெறுவர்; சிந்தை மகிழ்வர். ஆகையால், விட்டொழியுங்கள் இவ்விகலை. விரைந்து நீங்கள் செய்யத்தக்கது இதுவே" என்னும் பொருள்பட,

இரும்பனை வெண்டோடு மிலைந்தோன் அல்லன்;
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன் ;
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே ; நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே ;
ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே ;
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே ; அதனால்,
குடிப்பொருள் அன்றுநும் செய்தி ; கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யுமிவ் விகலே (புறம். 45.)

என்று பாடிப் பகையை மாற்றினர். அவர்களும் புலவரின் பொருளுரை கேட்டுப் போரொழிந்தனர்.

சங்ககாலத்தில் நங்கைமார்களும் புலத்துறை முற்றிய புலவர்களாக, அறிவுரை கொளுத்தும் ஆன்றோர்களாகத் திகழ்ந்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாக்கள்வாயிலாய் அறிகின்றோம். அவர்களில் தலைமைத்தன்மை பூண்டொழுகிய பெண்பாற் புலவர் ஔவையார் ஆவார். இவர் பாடியவையாக முப்பத்துமூன்று பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. அதியமான் நெடுமானஞ்சியையும், அவன் மகன் பொருட்டெழினியையும், நாஞ்சில் வள்ளுவனையும், பெருநற்கிள்ளியையும், சேரமான் மாவெண்கோவையும், கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியையும் பாடியுள்ளார்.

அருந்தமிழ் மூதாட்டியாம் ஔவையாருக்கு அதியமான் நெடுமானஞ்சியென்பான் நெல்லிக்கனி கொடுத்து, தன் நெஞ்சத்தில் இடங்கொடுத்துப் போற்றிப் புரந்துவந்தான். ஒருசமயம் மலையமான் திருமுடிக்காரியும், சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையும் அதியமானுக்குரிய தகடூரை முற்றுகை இட்டனர். அவ்வமயம் அஞ்சி வெளிப்போந்து வந்தாரோடு போர் தொடுக்காது கோட்டையினுள்ளே வாளாவிருந்தான். அஃதறிந்த ஔவையார் அவனுழைச் சென்று, “அஞ்சா நெஞ்சுடைய அஞ்சியே! அணிதிகழ் வெண்காந்தள் பூவுடன் மலை மல்லிகை மணங்கமழும் மலைச் சாரலில் உள்ள மறப்புலி மாறுபட்டுச் சீறுமிடத்து அதற்கு எதிர் நிற்கவல்ல மான் கணமும் உளவோ? சூரிய மண்டலம்

கொதித்தெழுந்தால் விண்ணிலும், மண்ணிலும் இருளும் உளதோ? நிலத்தின்கண் பாரத்தின் மிகுதியால் அழுந்திய வண்டியை வலிதாய் இழுத்துக் கல் பிளக்கவும், மணல் பரக்கவும் நடக்கும் மனச் செருக்குடைய காளைக்குப் போதற்கரிய வழியும் உளதோ? இல்லையன்றோ? அவை போல, வீரம் செறிந்த நீ போர்க்களம் புகுந்தால் இஞ்ஞாலத்தில் உன் வளமிகு நாட்டைக் கவர்ந்து ஆர்ப்பரிக்கும் வீரரும் உளரோ?" என்று கூறினர்.

அவ்வுரை கேட்டான் அஞ்சி; அடுகளம் புகுந்தான் உடனே. கண்ணிமைக்காது கடுங்கூற்றுவனைப்போல் மாற்றார் அஞ்ச மறப்போர் புரிந்தான். அதுபோழ்து வேற்றார் வீசிய படைக்கலன்கள் காற்றினும் கடுகிவந்து அதியமானின் அகன்ற மார்பிலும், கழுத்திலும், முகத்திலும் பட்டுப் புண்படுத்தின. அவ்வமயம் ஔவையார் அவனை யணுகி அவன் வாட்போரால் பலர் உயிரிழந்ததைக் கூறி மேலும் ஊக்குவித்தார். புத்தெழுச்சியுற்று மீண்டும் போர்க்களம் புகுந்து போருடற்றினன். அவ்வேளை, பெருஞ்சேரல் விடுத்த கொடிய வேலொன்று விரைந்து வந்து அதியமான் அஞ்சியின் நெஞ்சில் பாய்ந்து ஊடுருவிச் சென்றது. அந்தோ! அம்மாவீரன் செயலற்றுச் சோர்ந்து தேரில் சாய்ந்தான்; சின்னேரத்தில் செவ்வுயிரும் ஈந்தான். அவ்வமயம் அருகில் இருந்த அருந்தமிழ்ப்புலவர் ஔவையார் எய்திய கௌவைக்கு அளவேது! தம்மைப் போற்றியதையும், புரந்ததையும் நினைந்து நினைந்துப் புலம்பினர்; கண்ணீர்விட்டுக் கசிந்துருகிக் கலங்கினர்.

"அவன் மார்பில் தைத்த கூர்மிகுவேல் அவன் இறந்துபடமட்டும் காரணமாய் அமையவில்லையே. பாணரின் மண்டைப் பாத்திரத்தைப் பழுதடையச் செய்து, இரப்போர் கையினுள்ளும் தைத்து, சுற்றத்தாரின் கண்ணின் கருமணிப் பாவையின் ஒளியைக் குன்றச்செய்து செந்தமிழ்ச் சொல்லாராய்ச்சியுடைய புலவரின் நாவினையும் பழுதடையச் செய்துவிட்டதே! எனக்கு ஆதாரமாய் இருந்த என் தந்தை எங்கிருக்கின்றானே! இனி இப்பாரில் பாடுவாருமில்லை; பரிந்து பாடுவார்க்கு ஒன்று ஈவாருமில்லை. தண்ணிய

நீர்த்துறையின் கண்ணே பொலிவுடன் பூக்கும் பகன்றைப்பூ பிறரால் பறித்துச் சூடப்படாமல் வீணே வீழ்தலைப்போல், பிறருக்கு எப்பொருளும் ஈயாது மாயும் உயிர்கள் பல. அத்தன்மையன் அல்லன் எம்மரசன்" என்னும் பொருள்பட,

அருந்தலை இரும்பாணர் அகல்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே!
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ!
இனிப் பாடுநரும் இல்லைப் பாடுநர்க்கொன்று ஈகுநருமில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயும் உயிர்தவப் பலவே (புறம் 235 : 10-20)

என ஊனுருக, உயிருருகப் பாடினர். இப்பெரும்புலவர் அதியமான்பால் கொண்டிருந்த அன்பிற்குத்தான் அளவு முண்டோ! அந்த அளவுக்கு அக்காவலன் பாவலரை மதிக்கும் மதியுடையோனுக, பைந்தமிழ்ப் பற்றுடையோனுக, மறமுடையவனுக, அறமுடையவனுகப் பிறங்கினன்.

பறம்புமலைக்குரிய பாரியைக் கபிலர் பல பாக்களால் பாடி, அவன் உளவளத்தையும், நிலவளத்தையும் நாமறிந்து நயக்க நவின்றுள்ளார். இன்னும் ஆய்அண்டிரன், இருங்கோவேள், இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ, குமணன், கரிகால்வளவன், கோப்பெருஞ்சோழன், சேரமான் கணைக்காலிரும்பொறை, சேரமான் பெருஞ் சேரலாதன், பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன், பாண்டியன் அறிவுடைநம்பி போன்ற குறுநில, பெருநில மன்னர்களின் வரலாறுகளைப் புறநானூற்றுப் பாக்களால் நாமறியலாம்.

அறச் செய்திகள்

தன்னலங் கருதாத் தகைமை சான்ற புறநானூற்றுப் புலவர்கள் மக்கள் வாழ்வு சீர்படுதற்கான அறக்கருத்

துக்களைத் தங்கள் பாக்களில் வலியுறுத்தியுள்ளார்கள். அவ்வறக் கருத்துக்கள் என்றும் மனித இனம் மேற்கொள்ளத்தக்கவையாகக் காணப்படுகின்றன.

புறநானூற்றுப் புலவர்களிலே நரிவெரூஉத்தலையார் என்பவர் ஒருவர். அவர் இரு பாக்கள் பாடியுள்ளார். புறம் 5ஆவது பாட்டில் தம்மை ஆதரித்த சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறைக்கு அருளையும், அன்பையும் மேற்கொள்ளாதவர் அளவில்லாத் துயர வெள்ளத்தில் அழுந்துவர் என்றும், அத்தகையாரோடு சேர்ந்தொழுகுதல் வழுவுடைத்தென்றும், பெற்ற குழந்தையைத் தாய் பேணி பாதுகாப்பதைப்போல் அரசன் நாட்டைப் பாதுகாக்கவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி. (புறம். 5: 5-7.)

உலகமக்கள் உயதற்குரிய அறத்தை இப்பெரும் புலவர் 195ஆம் பாட்டில் உரைத்துள்ளார். மனிதன் இம்மண்ணகத்தில் வாழும் நாளெல்லாம் பழிபாவத்தைச் செய்து இறக்குந்தருவாயில் தான் செய்த தீச்செயல்களை எண்ணி ஏங்குகின்றான். அவ்வாறு ஏங்காதிருக்கவேண்டுமென்றால், அவன் நல்வினை செய்யாவிட்டாலும் தீவினை செய்யாது வாழவேண்டுமென்கின்றார். அதுதான் ஒருவனை நல்வழியில் நடத்தி யாவரும் விரும்பும் புகழைப் பெறச்செய்யும் என்றுரைக்கின்றார்.

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லோரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே.
(புறம். 195: 6—9.)

பொன்முடியார் என்னும் புறநானூற்றுப் புலவர் பெண்பாற்புலவராவார். அவர் உலகவாழ்வில் பலரின் கடமைகளைப்பற்றி அறஞ்சான்ற பாடலொன்று பாடியுள்ளார். தாய் பிள்ளையைப் பெற்றுத் தக்கமுறையில் வளர்த்து

வெளியே அனுப்புதல் வேண்டும்; தந்தை அவனைச் சான்றோனாக்கவேண்டும்; கொல்லன் அவனுக்குக் கூரிய வேல் வடித்துக் கொடுக்கவேண்டும்; அரசன் அவனுக்கு நல்லமுறையில் போர்ப்பயிற்சி முதலியவற்றை அளிக்க வேண்டும்; வளர்ந்து காளையான அவனே ஒளிர்கின்ற வாளைப் போர்க்களத்தில் சுழற்றி அஞ்சாது நின்று பகை வேந்தர்களின் போர்யானைகளைக் கொன்று வெற்றி பெற்றுப் பெயரவேண்டும். இவ்வரிய கருத்துக்கள் அடங்கிய பாடல்,

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

என்பதாகும். (புறம். 312.)

புறநானூற்றுப் புலவர்கள் பலரும் ஈதலாகிய அறத்தை வற்புறுத்தியுள்ளார்கள். உலகில் ஒருவன் மிகுபொருள் பெறுவது இல்லாதோர்க்கு ஈந்துவப்பதற்கே என்றெண்ணினர். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே
(புறம். 189: 7–8.)

என்பதால் ஈதலாகிய அறத்தைச் சிறந்ததெனப் போற்றியுள்ளார். உலகில் எல்லோருமே பொருளீட்டும் முயற்சியில் ஈடுபடுகின்றார்கள்; பொருளை ஈட்டுகின்றார்கள். ஆனால், மனிதர்களின் தேவையோ உண்பதற்கு நாழியும், உடுப்பதற்கு இரு துணியுமாகும். மனிதனுக்கு வேண்டுவன சிறிதும், அவன் ஈட்டுவன பெரிதுமாக இருக்கின்றன. ஆகவே, தேவைக்குமேல் மிக்கு நிற்கும் செல்வத்தால் செய்யவேண்டியது ஈதலாகிய அறமே என்றுரைத்துள்ளார். மிகுந்த செல்வத்தையும் தானே வைத்துத் துய்க்கக்

கருதினால் பல பிழைகள் அவனுக்கு வந்து பெருகும். அதனால் செல்வத்தின் பயனை இழந்தவனாவான்.

புறநானூறு பழந்தமிழகத்தின் அரசர்களையும், ஆண்மைமிகு வீரர்களையும், புன்மையறுத்த புலவர்களையும் நமக்குக் காட்டுவதால் இஃது ஒரு வரலாற்று நூலாகவும், வாழ்க்கைக்கான நல்லறங்கள் பலவற்றையும் வலியுறுத்து வதால் ஓர் அறநூலாகவும் விளங்குகின்றது.

8. பநம்மிகு பத்துப்பாட்டு

பொதுச் செய்திகள்

சங்ககாலத்தில் தோன்றிய இலக்கியங்கள் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கில் சிலவுமாகும். இவை மேற்கணக்கு, கீழ்க்கணக்கென இருவகைப்படும். எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் மேற்கணக்கு நூற் களுக்குச் சான்றுகளாகும்.

ஐம்பது முதலா ஐந்நூ றீறு
வைவகைப் பாவும் பொருணெறி மரபில்
தொகுக்கப் படுவது மேற்கணக் காகும்

என்பது பன்னிருபாட்டு நூற்பாவாகும். ஆகவே, மிகுந்த அடிகளால் ஆகிவரும் பாக்கள் மேற்கணக்கின்பாற்படும்.

பத்துப்பாட்டு அதிக அடிகளை உடைய சிறந்த பத்துச் செய்யுள் நூல்களின் தொகுப்பாகும்.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து

என்னும் பழஞ் செய்யுள் பத்துப்பாட்டுக்களைத் தொகுத்துச் சொல்லுகின்றது. இப்பாக்கள் சங்ககாலப் புலவர்களால் பாடப்பட்டுப் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டவையாகும்.

"பத்துப்பாட்டு என்ற பெயரும் தொகுக்கப்பட்ட பின்னரே வழங்கத் தொடங்கியிருத்தல் வேண்டும்" என்று இலக்கிய தீபத்தில் வையாபுரிப்பிள்ளையும் குறிப்பிடுகின்றார். இதனுள் மிகச்சிறியது முல்லைப்பாட்டு; இதன்கண் 103 அடிகள் உள்ளன. மிகப்பெரியது மதுரைக்காஞ்சி; இதன்கண் 782 அடிகள் உள்ளன.

i. திருமுருகாற்றுப்படை

ஆற்றுப்படை விளக்கம்

திருமுருகாற்றுப்படை நக்கீரரால் ஆக்கப்பட்டது. இது புலவராற்றுப்படை யெனவும் பெயர்பெறும். "வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது" என்று இவ்வாற்றுப் படைக்குச் செவ்விய விளக்கமளிக்கின்றார் நச்சினார்க்கினியர்.

சங்ககாலப் புலவர்கள் ஆற்றுப்படை என்பதைத் தாங்கள் பாடுதற்குரிய பாவகைகளில் ஒன்றாகக் கொண்டார்கள். "ஒருவற்குச் செல்லவேண்டும் வழிதுறைகளைச் சொல்லித் தெரிவித்து அவற்றைப் பின்பற்றிச் செல்க எனச் சொல்லுவது" ஆற்றுபடையாகும் என்கின்றார் பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

> கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
> சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்
>
> (தொல். புறத்: 36.)

என்று ஆற்றுப்படையின் இயல்பைப் பொதுப்படக் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

திருமுருகாற்றுப்படை முருகப் பெருமானுக்குரிய ஆறு படைவீடுகளையும், அவற்றில் அவர் வீற்றிருக்கும் திருக் கோலத்தையும் சிறப்புறக் கூறுகின்றது. மேலும், முருகக்

கடவுளுக்குரிய காந்தள், வெண்கடம்பு, வெட்சியென்னும் மலர்களையும் தகர், மயில், யானையென்னும் ஊர்திகளையும் தெரிவிக்கின்றது. அவரைக் கார்த்திகை மாதர் அறுவர் வளர்த்த செய்தியையும், அவர் நிகழ்த்திய திருவிளையாடல் களாகிய குன்றமெறிந்ததையும், சூர்முதல் தடிந்ததையும் குறிப்பிடுகின்றது. இப்பா 317 அடிகளால் ஆகிய ஆசிரியப் பாவாகும்.

சிறப்புச் செய்திகள்

முதலில் முருகப்பெருமானுடைய திருவுருவச் சிறப்புப் பேசப்படுகின்றது. இவர், காலை இளங்கதிரவன் அலை கடற்கண் தோன்றுங்கால் கொண்டிலங்கும் ஒளியைக் கொண்டவர்.

தம்மை அண்டியோர்க்குத் தண்ணளி செய்யும் அழகு பொருந்திய திருவடியுடையவர். வெறுத்தாரை ஒறுக்கும் திறல்மிகு திருக்கையர். சூரனை அடியோடு தொலைத்த சுடர்நெடுவேலர். இச்செய்திகளை,

> உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
> கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
> உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
> செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை

என்ற அடிகள் தெரிவிக்கின்றன. (திருமுரு. 1–5.)

திருப்பரங்குன்றம்

பல சிறப்புக்கள் உடைய முருகனைத் திருப்பரங் குன்றத்தில் கண்டு தொழுது அருள் பெறலாம் என்பதை அடுத்துக் காண்கின்றோம். இப்பகுதியில் முதற்கண் மூதூராகிய மதுரை மாநகரின் அருமை கூறப்படுகின்றது. இந்நகரின் பெரும் வாயிலில் போர்க்கொடிகள் நிறுவப் பட்டு நுடங்கிக்கொண்டிருக்கின்றன. அவ்வாயில் எப் பொழுதும் திறந்தே கிடக்கின்றது. மாற்றார் அதன் பக்கம் அணுகிறரல்லர். வாயிலைக் கடந்து உள்ளே

சென்ருல், திருமகள் துன்பமின்றி வீற்றிருக்கும் தீமையில்லாக் கடைத்தெருவினைக் காணலாம் என்பதை,

> திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
> மாடமலி மறுகில் கூடல்......

(திருமுரு. 70-71.)

என்ற பகுதி உணர்த்துகின்றது.

மூதூராகிய மதுரையின் மேற்றிசையில் ஏற்றுமுற்று விளங்குவது திருப்பரங்குன்றம். அதைச் சுற்றிலும் சேறு பரந்த நெல்வயல்கள் செறிந்திலங்குகின்றன. அகன்ற அவ்வயல்களில் செவ்விய தாமரை மலர்கள் கவினுற மலர்ந்துள்ளன. பகற்போதில் அம்மலர்களில் நிறைந்துள்ள தேனை விரும்பிச் சென்று சுரும்பினங்கள் உண்டு மயக்கங் கொண்டு இதழ்களினிடையே கிடக்கும். மாலைக்காலம் வர மணங்கமழ் மரைமலர்கள் குவியும். இரவு முழுதும் இதழ்க் கோட்டையினுள்ளே அவ்வண்டுக் கூட்டங்கள் எவ்வித ஊறுமின்றி உறங்கும். அடுத்த நாள் காலையில் அம்மலர்களை விடுத்து அடுத்து மலர்ந்திருக்கும் புதுப் பூக்களின் தாதுக்களில் படிந்து தேனருந்தித் திளைக்கும். பிறகு பறந்து சென்று பரங்குன்றடைந்து ஆங்குள்ள சுனையில் மலர்ந்திருக்கும் நீலமலர்களின் இனிய தேனையுண்டு வீணைபோல் பண்ணிசைக்கும். இத்துணை இயற்கை எழிலுறை திருப்பரங்குன்றில் முருகன் விரும்பியுறைகின்ருன் என்பதை,

> கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
> அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
> குன்றமர்ந் துறைதலும் உரியன்.........

(திருமுரு. 75-77.)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

அவன் வீற்றிருக்கும் வேறிடங்கள்

அடுத்து இவ்விறைவன் திருச்சீரலைவாயில் யானையின் மீது ஆறுமுகங்களோடும், பன்னிரண்டு கரங்களோடும் திகழும் திருக்கோலக் காட்சியை நக்கீரர் நவிலுகின்ருர். ஆங்கு அடியார்களுக்கு முருகன் அருள்புரிதற்கே

வேழத்தின்மீது வீற்றிருந்து விளங்குகின்றான். திருவாவினன் குடியில் இவன் தெய்வானையோடு இருந்து காட்சி தருவதாகக் கூறப்படுகின்றது. அறிவு ஒழுக்கம் மிக்க முனிவர்களும், யாழ் மிழற்றும் கந்தருவத் தம்பதிகளும், கருடக்கொடியுடைய திருமாலும், முக்கண்ணுடைய சிவபெருமானும், ஆயிரங்கண்ணுடைய இந்திரனும் முருகனைக் காணுதற்கு இங்கு ஊர்வலமாக வருகின்றார்கள். திருவேரகத்தில் இருபிறப்பாளர் ஈரஆடை அரையில் உடுத்து இருகரங்களையும் சிரமேல் குவித்து முருகனைப் போற்றிப் புதுமலர்களை அவன் திருவடியில் தூவித் தொழுகின்றனர். முருகன் குறிஞ்சிநிலக் கடவுளாகையால் ஓங்கி நிற்கும் குன்றுகளெல்லாம் அவன் உவந்து விளையாடி வீற்றிருக்கும் இடங்களாகும். ஆகவே குன்றுதொறாடல் பகுதியில் முருகனைக் குன்றக்குறவர்கள் வழிபடும் திறம் பேசப்படுகின்றது. குன்றுப் பகுதிகளில் குரவையாடும் குறமகளிரோடு சேர்ந்து முருகனும் ஆடிப்பாடி அகம் மகிழ்கின்றான்.

பழமுதிர்சோலை

முருகன் பழமுதிர்சோலைக்கும் உரிய தலைவன். இச்சோலைமலை இயற்கையழகு பொருந்தியது. இம்மலையிலிருந்து அருவிகள் அகிற்கட்டைகளையும், சந்தன மரங்களையும் தள்ளிக்கொண்டு வரும். வழியில் சிறு மூங்கில்கள் வேரற்று விழும். தேனடைகள் தேன் சிந்தும். குரங்குகளும், யானைக்கூட்டங்களும் குளிரைப் பொறுக்கமுடியாது வேறிடங்களை நாடி ஓடும். காட்டுப் பன்றிகளும், கரடிகளும் அஞ்சிக் கற்குகைகளில் ஒடுங்கும். பலாப்பழங்கள் வீழ்ந்து பிளக்கும்; சுளைகள் எங்கும் சிதறும். அவ்வருவி வாழைகளை முறிக்கும்; தெங்கின் இளநீர்க் குலைகள் உதிரும்படி மோதும். இவ்வளவு சிறப்புமிகு அருவிகளைக் கொண்ட சோலைமலையில் விரும்பி உறைகின்ற முருகப்பெருமானை,

பழமுதிர் சோலை மலைகிழ வோனே

என்று நக்கீரர் நற்றமிழ்ச் சொல்லால் போற்றுகின்றார்.

அன்பு வழியாலும், அறிவு வழியாலும் முருகப் பெருமானின் திருவருளைப் பெறமுடியும் என்பதைத் திருமுருகாற்றுப்

படை தெளிவாக்குகின்றது. மக்களை இறைவழிபாட்டில் ஊக்குவிக்கும் பல காட்சிகளை இவ்விலக்கியம் காட்டுகின்றது. சங்ககாலத் தமிழர்கள் இறையுணர்வு கொண்டவர்களாய் வாழ்ந்தார்கள் என்பதற்கு இப்பாட்டு ஒரு நற்சான்றாகும்.

ii. பொருநராற்றுப்படை

பொதுச் செய்திகள்

பொருநர் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பலர் உளர். இவர்கள் விழாக் காலங்களில் ஓரிடத்தில் கூடித் தங்கள் இசைத் திறனைக் காட்டி அவ்விழா முடிந்தபின் வேற்றூரை நோக்கிச் செல்லும் இயல்பினர். 'பொருநர்' என்பதற்கு மற்றொருவர்போல் வேடங்கொள்வோர் என்ற பொருளும் உண்டு.

இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருநன் தடாரிப் பறை கொட்டுபவன் என்பதை.

> கைக்கச டிருந்தவென் கண்ணகல் தடாரி
> இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
> வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்
> ஒன்றியான் . . . .
>
> (பொரு: 70—73.)

என்ற பகுதி உணர்த்துகின்றது.

இப்பாட்டில் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பரக்கப் பாடியுள்ளார். மேலும் பொருநர்களின் இசைத்திறனும், பாலையாழின் பல வருணனையும், விறலியின் கேசாதிபாத கவினுரையும், அறுசுவை உணவின் வேறுபாடுகளும், நீரூட்டுங் காவிரியின் நிலைத்த பெருமையும் அழகுறப் பாடப்பட்டுள்ளன. இஃது 248 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவாகும்.

சிறப்புச் செய்திகள்

இளஞ்சேட் சென்னியின் மைந்தனாகிய கரிகாற் பெருவளத்தானைப் பாடிப் பரிசில் பெற்று வரும் பொருநன் ஒருவன், பரிசில் பெறக் கருதிப் பாலை வழியில் மயங்கி நிற்கும் மற்றொரு பொருநனை அப்புரவலன்பால் ஆற்றுப் படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

பாலையாழ்

அப்பொருநனுக்கு உரியாளாகிய பாடினியின் தொடிக் கரத்தில் இருக்கும் யாழ் பாலையாழாகும். அது மடமானின் குளம்பு அழுந்திய இடம்போல இருபக்கமும் தாழ்ந்து நடுவிடம் உயர்ந்த பத்தல் என்னும் உறுப்பினையுடையது; வயிற்றின் மயிரொழுங்குபோல் இருபுறமும் இழுத்துக் கட்டப்பெற்ற தோல் போர்வையினை உடையது. மணமான பெண்ணை ஒப்பனை செய்தாற்போன்ற கவினுடையது. தெய்வம் தங்கி வாழ்தற்குரிய இலக்கணம் பொருந்தியது. தன் இன்னிசையால் ஆறலைகள்வர் தம் கொடுஞ் செயலையும் மறக்கச் செய்யும் இயல்புடையது என்பதை,

> ஆறலை கள்வர் படைவிட அருளின்
> மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை
>
> (பொரு: 21—22.)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

பாடினியின் கவின்

அழகுமிகு பாலையாழை ஏந்தியிருக்கும் பாடினி நல்ல தோற்றப் பொலியுடையவள். ஆற்றின் கருமணலை யொத்த கூந்தலினையும், பிறைமதி யொத்த புருவங்களையும், செழுமையும் குளிர்ச்சியும் பொருந்திய கண்களையும், இலவம் பூவின் இதழ்போன்ற செவ்விய வாயினையும் உதடுகளையும் உடையவள். முத்துப்போன்ற பல் வரிசையையும், மூங்கில் போல் திரண்ட தோள்களையும், காந்தள்மலர் போன்ற அழகிய விரல்களையும் கொண்டவள். அவள் அடிகள் ஓடி வருந்திய நாயின் நாக்குப் போன்றவை என்பதை,

வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி

(பொரு : 42.)

என்ற அடி உணர்த்துகின்றது.

பொருநன் கவின்மிகு தன் பாடினியோடு பாலையில் இலைகள் உதிர்ந்த மரத்தின் அடியில் வந்து தங்குகின்றான். அவ்விடத்தில் பரிசில் பெற்றுத் திரும்பி வரும் பொருநன் இவனைக் கண்டு கரிகாலனின் வள்ளல் தன்மையை எடுத்துக் கூறி அவன்பால் ஆற்றுப்படுத்து கின்றான்.

பரிசில் பெற்றான் கூற்று

"ஏழிசைக்குரிய பொருநனே ! கேட்பாயாக. 'பழுமரம் உள்ளிய பறவையின்' யானும் பரிசில் தந்து புரப்போரை நாடிச் சென்றேன். கரிகாலன் அரண்மனை வாயிலை அடைந் தேன். வாயிலினுள் நுழைந்தபோது 'வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்'. என் தடாரிப்பறையைத் தட்டிப் பாடி னேன். அதுகேட்டுக் கரிகாற்வளவன் வந்து நாள்பல பழகிய நண்பனைப்போல உறவாடி அழைத்துச் சென்று தன்னரு கில் என்னை இருத்திக்கொண்டான். இனிதாகப் பார்த்து என் இன்னலை நீக்கினான். புத்தாடை கொடுத்தான் ; பூரிப் பைத் தந்தான். அதன்பின் அரசனை மகிழ்விக்கும் மகளிர் பொற்கிண்ணத்தில் கள்ளை வார்த்துக் குடிக்கக் கொடுத் தனர். அன்றிரவு நன்றாக உறங்கினேன். அடுத்த நாள், செம்மறிக் கடாவின் வேகவைத்த துடையின் தசையையும், நெருப்பில் வாட்டிய இறைச்சியையும் உண்டேன். பலவகை யான பண்ணியாரங்களையும் சுவைத்து உவகை கொண் டேன். பன்னாள் இவ்வாறு அவனோடு மகிழ்ந்திருந்து களிறுகளையும், பிடிகளையும், ஆடைகளையும், அணிகளையும் அவனளிக்க நான் பெற்று வருகின்றேன். இனி வறுமை எக்காலமும் இல்லை" என்றான்.

கரிகாலன் சிறப்பு

கரிகாலன் பரிசிலரைப் பேணும் பண்பாளன். கன்றை யீன்ற பசுவைப்போல் கலைஞர்களைக் கனிவுடன் நோக்கும்

கருணையாளன். ஆடை நல்கி அறுசுவை உணவை உண்பிப்போன்.

பகைவரிடத்து முருகனது சீற்றம்போலும் சீற்றங் காட்டுபவன். நல்ல முகூர்த்தத்தில் பிறந்து அரச வுரிமை அடைந்தவன். இவ்வுண்மை,

உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்
முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்
தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி
(பொரு: 130—132.)

என்ற பகுதியால் தெரிகின்றது. இவன் 'வெண்ணி' என்னும் இடத்தில் போரிட்டு, சேர பாண்டியரை வீழ்த்தியவன்.

சோழநாடும் காவிரியும்

கரிகால்வளவனால் ஆளப்படும் சோழநாடு நிறைந்த வளமுடையது. கடற்கரை ஊர்களில் ஓங்கி வளர்ந்த தென்னைகளும், குலைகளைக் கொண்ட வாழைகளும் செறிந்திலங்கும். குறிஞ்சிநில மக்கள் தேனையும், கிழங்கு வகைகளையும் கொடுத்து மீனையும், கள்ளையும் பெறுவர். மருத நிலத்துக் கோழிகள் தினையைத் தின்னும்படியாகவும், குறிஞ்சி நிலத்து மந்திகள் உப்பங்கழியில் மூழ்கி விளையாடும் படியாகவும் நிலங்கள் அங்கு மயங்கி இருக்கும்.

சோழநாட்டில் பாயும் காவிரி வறண்ட காலத்தும் பெருக்கெடுத்து வருகின்றது; மிகுதியாக நெல்லை விளைவிக்கின்றது. ஆகவே கரிகாலனை,

காவிரி புரக்கும் நாடுகிழ வோனே
(பொரு: 248.)

என்று முடத்தாமக்கண்ணியார் குறிப்பிடுகின்றார்.

பொருநராற்றுப்படை கரிகாற் வளத்தானின் கொடையையும், செங்கோற் திறத்தையும், நாட்டு வளத்தையும் அறிவிக்கும் வரலாற்று நூலாகவும் விளங்குகின்றது.

iii. சிறுபாணாற்றுப்படை

பொதுச் செய்திகள்

பாணர் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் என மூவகைப்படுவர். இப்பாட்டிற்குரிய பாணன் யாழ்ப்பாணனாவான். யாழ்ப்பாணர் சிறுபாணர், பெரும் பாணர் என்று இருபிரிவாக உள்ளனர். சிறிய யாழை வைத்திருக்கும் பாணர் சிறுபாணராவர். சிறுபாணாற்றுப் படையில் இடம்பெறும் பாணன் சிறுபாணன் என்பதை

இன்குரற் சீறியாழ் இடவயிற் றழீஇ
(சிறுபா. 35.)

என்ற அடி உணர்த்துகின்றது. யாழை மிழற்றுவதில் வல்லன்மை பெற்றவர்களே பாணரென்று பழந்தமிழ் மக்களால் அழைக்கப்பட்டனர்.

இப்பாட்டில் நத்தத்தனார், நல்லியக்கோடனின் நல்லியல்புகளை 269 அடிகளில் நலமுறப் பாடியுள்ளார். விறலியின் தோற்றப்பொலிவும், வஞ்சி, கொற்கை, மதுரை இவைகளின் வளமும், கடையேழு வள்ளல்களைப்பற்றிய செய்திகளும், இயற்கை வருணனைகளும் இடம்பெற்றுள்ளன.

சிறப்புச் செய்திகள்

அழிபசியால் களிப்பிழந்த பாணனொருவன் தன்னைப் புரக்கும் புரவலனைத் தேடி துணைவியோடு காட்டுவழியே நடந்து செல்லுகின்றான். அவன் துணைவி அழகிற்கு உறைவிடமானவள். நெய்கனிந்த கரிய கூந்தலினையும், மயிற் கூட்டமும் மனமழியும்படியான சிறந்த சாயலினையும், முல்லை சான்ற கற்பினையும், மெல்லிய இயல்பினையும் உடையவள். மானோக்கினையும், மதியொளி நுதலினையும் கொண்டு விறல் பட ஆடும் வேல்விழியாள். அவனும், அவளும் காட்டில் நிற்கும் கடப்பமரத்தின் நிழலில் வழிநடந்த களைப்பு நீங்குதற்குத் தங்கள் சுற்றத்தினருடன் தங்கியிருக்கும்பொழுது நல்லியக்கோடனிடமிருந்து பரிசில் பெற்றுத் திரும்பிவரும் பாணனொருவன் அவர்களைச் சந்திக்கின்றான். அப்புதியவன்

குறுநில மன்னனாகிய நல்லியக்கோடனின் கொடுக்குந் திறத்தையும், நாட்டின் வளத்தையும் நவின்று தான் பெற்ற பெருவளம்போல் அவர்களும் பெறுதற்காக அம்மன்ன னிடம்,

இவணயந் திருந்த விரும்பே ரொக்கல்
செம்ம லுள்ளமொடு செல்குவிர்...

(சிறுபா. 144-145.)

என்று ஆற்றுப்படுத்துகின்றான்.

மூவேந்தர்களினும் மேம்பட்டவன்

சேர நாடு கழனிகளையும், செங்கழுநீர் மலர்களையும், மஞ்சள் செடிகளையும் கொண்டது. பாண்டிய நாடு கொற்கைத் துறையையும், முத்துக்களையும், உப்பளங்களையும், நற் றமிழையும் பெற்றது. சோழநாடு மருதநிலத்தையும், கடம்பமரத்தையும், நீர்நிலைகளையும், தாமரைமலர்களையும் உடையது. இவ்வாறு மூவேந்தர் நாடுகள் நல்வளம் உடையவை என்றாலும் நல்லியக்கோடன் நல்கும் பரிசில் பொருட்களை நோக்குகையில் அவைகள் வறுமையுடை யனவேயாகும். ஆகவே, நல்லியக்கோடன் கொடை கொடுப் பதில் மூவேந்தர்களிலும் மேம்பட்டவனே!

கடையேழு வள்ளல்களுக்கு ஒப்பானவன்

மயிலுக்குப் போர்வை தந்த பேகன், முல்லைக்குத் தேர் நல்கிய பாரி, ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த காரி, ஆலமர் செல்வனுக்குக் கலிங்கம் கொடுத்த ஆய், ஔவைக்கு இனிய நெல்லிக்கனி வழங்கிய அதிகன், இல்லறம் நடக்க நற் பொருள் உதவிய நள்ளி, நல்ல நாட்டைக் கூத்தர்க்களித்த ஓரி ஆகிய வள்ளல்கள் எழுவர்களுக்கு இணையானவன் நல்லியக்கோடன். அவ்வெழுவரும் தாங்கிய உலகை அவன் ஒருவனாகத் தாங்கிவந்தான் என்பதை,

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய வுரனுடை நோன்றாள்

(சிறுபா: 113-115).

என்ற பகுதி வலியுறுத்துகின்றது.

வறுமை போக்கியவன்

பலநாள் அடுதொழில் மறந்திருந்த பாணனது அட்டிலில் காளான்கள் பூத்துக் காணப்பட்டன. அவனுக்குரிய பாடினி குப்பையில் முளைத்திருந்த வேளையைப் பறித்து அவ்வட்டிலில் உப்பில்லாமல் வேகவைத்து மடவோர் காட்சிக்கு நாணிக் கடையடைத்துத் தன் சுற்றத்தோடு உண்ணும் அழிபசி வருத்தமுடையாள். கடும்பசியால் உழந்த இவர்கள் உவக்க நல்லியக்கோடன் யானைகளையும், தேர்களையும், பல்வகைச் செல்வங்களையும் வழங்கிப் பாணர் கூட்டத்தின் வறுமையைக் களைந்தான்.

அவனுக்குரிய நாட்டுவளமும் நகர்வளமும்

நல்லியக்கோடனின் நாடு பல்வளமுடையது. அவனுக்குரிய நெய்தல் நிலத்தில் அலைநீர்த்தாழை அன்னம்போன்ற மலர்களைத் தோற்றுவிக்கும். நெடுங்கால் புன்னை தண்ணிய முத்துப்போன்ற மலர்களைக் கொத்துக்கொத்தாய்ப் பூக்கும். அந்நெய்தற் பகுதியில் பரதவர்வாழ் எயிற்பட்டினம் உண்டு. ஆங்குறை மக்கள் மதுவினையும், உலர்ந்த குழல்மீன் சூட்டினையும் பாணர்களுக்குத் தந்து புரக்கும் பண்பாளர்.

முல்லை நிலத்தில் அவரை பவளம் போன்றும், காயாமலர் மயிலின் கழுத்தைப்போன்றும், காந்தள் கைவிரல்களைப் போன்றும் பொலிவுடன் பூத்திருக்கும். அங்குள்ள சிறந்த ஊர் வேலூராகும். மருதநிலத்தில் காஞ்சிமரங்கள் நிறைந்துள்ளன. அவைகளில் மணிச்சிரல் செறிந்துவாழும். அப்பகுதியில் ஆமூர் உள்ளது. அதற்கும் அண்மையில் இக்குறுநில மன்னர்க்குரிய மூதூர் உண்டு. அவ்வூர் விழவறு வீதிகளையும், அடையா வாயிலையும் கொண்டது.

நல்லியக்கோடனின் நல்லியல்புகள்

நல்லியக்கோடன் செய்ந்நன்றி மறவாதவன்; சிற்றினம் சேராதவன்; இன்முகமும், இனிமையும் உடையவன்; வீரமும், ஈரமும் பொருந்தியவன். பரிசிலர் வாழ்த்த,

பன்மீன் நடுவண் பான்மதி போல

நன்மக்கள் புடைசூழ இருப்பவன்.

" இவ்வரிய பரிவாளனைப் பாடிச்சென்றால் ஆடைநல்கி, அறுசுவை உணவு அளித்து, பொன்னையும் வாரிக் கொடுத்துப் போற்றுவான்" என்று கூறி அப்பாணர் குழுவைப் பொருள் பெற்று மீண்ட பாணன் ஆற்றுப்படுத்துகின்றான்.

iv பெரும்பாணாற்றுப்படை

பொதுச் செய்திகள்

பெரும்பாணாற்றுப்படையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார், தொண்டைமான் இளந்திரையனைப் போற்றுகின்றார். இவ்வரசன் காஞ்சியிலிருந்து ஆண்ட சோழ மரபினன். இவனின் வீரம், புகழ் முதலியனவும், பாணர் பரிசில் பெறுதலும், ஐந்திணை வருணனைகளும், அந்நிலமக்கள் வாழ்க்கை முறைகளும் 500 அடிகளால் அழகுறப் பாடப்பட்டுள்ளன.

இப்பாட்டில் வரும் பாணன் பேரியாழ் பெற்ற பெரும்பாணனாவான். இவ்வுண்மை,

> இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி
>
> (பெரும்: 462.)

என்ற அடியால் புலனாகின்றது. இளந்திரையனிடம் சென்று பரிசு பெற்று வருவானொருவன் வறுமையுற்ற பெரும்பாணனைக் கண்டு அவ்வள்ளலிடம் அவனை ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்திருக்கின்றது. இப்பாட்டு பாணாறு எனவும் வழங்கப்பெறும்.

சிறப்புச் செய்திகள்

முதுவேனிற் காலத்துப் பகற்பொழுதில் மிடியால் வடிவிழந்த பேரியாழ்ப் பாணனொருவன் தன்னை ஏற்றுப் போற்றுவாரை,

> **பழுமரம் தேரும் பறவை போலக்**
> **கல்லென் சுற்றமொடு...........**
>
> (பெரும்: 20–21.)

தேடிச் சென்று வருந்துகின்றான். அப்பொழுது, இளந் திரையனிடம் வளம் பெற்று வரும் பாணன் வறியபாணனைச் சந்திக்கின்றான். பெரும்பாணன் தன் நிலைக்காய் வருந்தி வாழ்வை வெறுத்துக் கூற பரிசில் பெற்ற பாணன் அவனை நலஞ்சால் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்து கின்றான்.

வள்ளல் இளந்திரையன்

"இரவல! இளந்திரையனின் தலைநகராகிய காஞ்சிக்கு நான் சென்றேன். அவன் அளவில் செல்வத்தையும், பரிகளையும், கரிகளையும் பரிசாகக் கொடுத்தான். அம் மன்னன் மூவேந்தரினும் சிறந்தவன்; அறம் நிறைந்த செங்கோலாட்சி உடையவன். அவ்வள்ளலை நினைத்தாலும் நின் நீடிய வறுமை நின்னைவிட்டு நீங்கும். அவனை அடைதற்குரிய வழியை நான் சொல்லுகின்றேன்; செவிமடுப் பாயாக" என்கின்றான்.

காடும் பாலையும்

"நீவிர் செல்லும் காட்டுவழி பல கிளைகளை உடையது; அங்குக் கொள்ளையிடுவோர் இல்லை; கொடிய விலங்குகள் இல்லை. அவ்வழியில் உப்புவணிகரும், முத்து மாணிக்கம் விற்கும் பிறநாட்டு வணிகரும் கூட்டமாகச் செல்லுவர். அக்காட்டிடத்து எயினர்கள் வாழ்ந்துவருவர். நீங்கள் உண்பதற்குப் புல்லரிசிச் சோற்றையும், உப்புக்கண்டத்தினை யும் அவர்கள் உவந்தளிப்பர்.

"அருகில் உள்ள பாலைநிலத்தில் கானவர் வாழ்ந்து வருவர். அவர்கள் வீடுகளில் வில், வேல், வாள், கேடயம், அம்புக் கூடுகள், பாலைப்பறை முதலியவை வைக்கப்பட் டிருக்கும். அவர்களிடம் சென்றால் உண்பதற்கு ஈந்தின் விதைபோன்ற சோற்றையும், உடும்புப் பொரியலையும் கொடுப்பர்.

குறிஞ்சியும் முல்லையும்

"குறிஞ்சி நிலத்தில் மறக்குடி மக்கள் வாழ்வர். இவர்கள் வாட்போர் புரிந்து கொள்ளை கொள்ளுந் திறத்தர். இவர்

களின் பெண்கள் யானை, பாம்பு முதலியவற்றிற்கு அஞ்சாத வர்கள். கள்ளைக் குடித்து, கிடாயை அறுத்துத் தின்று களிப்பில் மூழ்கும் இயல்பினர்.

"குறிஞ்சி நிலத்தைக் கடந்து சென்றால் ஆயர்கள் வாழும் முல்லை நிலத்தை அடைவீர்கள். ஆங்கு ஆய்ச்சியர் பொழுது புலரும் காலையில் நிலை மத்தினால் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பர். மோரைக் கொண்டு சென்று குறிஞ்சி நில மக்களுக்கு விற்று நெல் பெற்று மீளுவர். ஆயர்கள் பசுக் கூட்டத்தைக் காட்டிற்கு ஓட்டிச் சென்று புல்லாங்குழலில் பாலைப் பண்ணை இனிமையாக இசைப்பர்; அதையடுத்துக் குறிஞ்சிப் பண்ணையும் வாசித்து மகிழ்வர்.

மருதமும் நெய்தலும்

"அப்பால் உழவர் வாழும் மருதநிலம் இருக்கும். வயல் களில் பயிர்களை அறுக்கும்பொழுது அவற்றிடை வாழ்ந்து வரும் காடைகள் உழவர்களின் பேராரவாரத்திற்கு அஞ்சி அருகில் இருக்கும் முல்லைநிலத்திற் சென்றடையும். அவர்கள் அவ்வாறு அறுத்துச் சேர்த்த நெல்லைக் குற்றி அரிசி யெடுத்துச் சோறாக்கிப் பெட்டைக்கோழிப் பொரியலோடு அங்குப் போவோர்க்கு உண்ணக் கொடுப்பர்.

"மருதநிலத்தைத் தாண்டிச்சென்றால் கடற்கரைப் பகுதியை அடையலாம். ஆங்குப் பரதவர் வாழும் பட்டின மும் உண்டு. அவண் உள்ள மாளிகைகளில் வணிக மகளிர் மயில்கள்போல உலவுவர்; காற்சிலம்பு ஒலிக்கப் பந்தும் கைவளை அசையக் கழங்கும் ஆடுவர்.

மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டினம்........... (பெரும்: 330–336.)

காஞ்சிக் காவலன்

"கடற்கரைப் பட்டினத்தைக் கடந்து சென்றால் பரந்தாமன் பள்ளிகொண்டிருக்கும் திருவெஃகா என்ற ஊரை அடையலாம். ஆங்கு நும் யாழை மீட்டித் திருமாலை வழிபட்டுச் செல்லுங்கள்.

"அடுத்தாற்போல் இளந்திரையன் இருக்கும் காஞ்சி நகரை அடைவீர்கள். அந்நகர் மிகவும் பழமையானது. தேரோடும் பெரும் வீதிகளையும், பரிசிலர்க்கு அடையாத வாயிலையும் கொண்டது. இத்தகைய காஞ்சியில் பாண்டவர் நூற்றுவரை வென்றதுபோல் இளந்திரையன் பகைவரை வென்று பாணரைப் புரக்கும் பண்பண்ணலாகத் திகழ்கின்றான். அவன் திரியாத அறிவுடையவன். செவ்விய அமைச்சர்கள் புடைசூழ வருவோர்க்கு வழங்கி வான்புகழெய்தி வாழ்ந்து வருபவன்.

"இரவல! இளந்திரையனை அணுகி,

> 'மள்ளர் மள்ள மறவர் மறவ
> செல்வர் செல்வ செருமேம் படுந'

என்று வாழ்துவீராக. அவன், (பெரும் :455—56.)

> 'நில்லா உலகத்து நிலைமை தூக்கி'

(பெரும் : 466.)

உங்களை வரவேற்றுப் பாலாவியை ஒத்த பட்டாடைகளைக் உடுக்கக் கொடுப்பான். இறைச்சியையும், சோற்றையும் இன்முகத்துடன் அளிப்பான். விறலி சூட பொன்மாலையையும், பொற்றாமரைப் பூவையும் வழங்குவான். ஆகவே, விரைந்து அக்காஞ்சிக் காவலனிடம் செல்க" என்றான் பொருள் பெற்று மகிழ்ந்த பாணன்.

இப்பாடலில் இன்னும் யாழின் வருணனையும், அந்தணர் ஒழுக்க முறையும், கலங்கரை விளக்கத்தின் மாண்பும், பேய்மகள் வனதுர்க்கைக்குத் தன் பசிப்பிணியைத் தெரிவிக்கும் மரபும் சிறப்புறக் கூறப்பட்டுள்ளன.

v. முல்லைப்பாட்டு

பொதுச் செய்திகள்

முல்லைப்பாட்டு 103 அடிகளால் ஆன ஆசிரியப்பா வாகும். காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் இதனைப் பாடியுள்ளார். முல்லைசான்ற கற்பொழுக்கம் இதில் பொருந்தியிருப்பதால் இப்பாட்டு முல்லைப்பாட்டென்று பெயர் பெற்றுள்ளது. தலைவனுடைய பிரிவும், அதை ஆற்றியிருக்கும் தலைவியினுடைய நிலையும் இலக்கியக்கலையழகுடன் பாடப்பட்டுள்ளன. நப்பூதனார் அகத்தையும், புறத்தையும் இணைத்து இப்பாட்டைச் செய்துள்ளார். தன்னேரில்லாத் தலைவனைத் தலைவி பிரிந்திருக்கும் பிரிவு அகத்தின்பாற்பட்டது; 'வினையே ஆடவர்க்குயிரே' என்பதற்கேற்ப வினைமேற் சென்ற வேந்தன் அடுகளத்துப் பாசறையமைத்து இருப்பது புறத்தின்பாற்பட்டது. அகமும், புறமும் சேர்ந்ததே மனித வாழ்க்கை என்பதை ஆசிரியர் முல்லைப்பாட்டினால் உணர்த்துகின்றார்.

சிறப்புச் செய்திகள்

பாண்டியன் நெடுஞ்செழியன் கார்காலத் தொடக்கத்தில் வீடு திரும்புவதாக அரசமாதேவியிடம் கூறிச் சென்றுள்ளான். அவன் அறிவித்துச் சென்ற காலம்வரை அவள் பிரிவுத்துயரை ஆற்றியிருக்கின்றாள். கார்காலமோ தொடங்கிவிட்டது. கடலில் சென்று நீரை மொண்டு வரைமுகடுகளைத் தழுவியிருந்த மேகங்கள் மழையைப் பொழிந்துள்ள மாலைக்காலம் வருகின்றது. அரசமாதேவியோ கார்கால மாலையில் தன் காதலனை உள்ளிக் கரைகின்றாள்.

ஆறுதலும் அழுகையும்

அவன் இன்னும் வராத காரணத்தால் தென்னவனுக்கு உரியவள் கண்ணீர் விடுவதை அறிந்த முதுபெண்ணொருத்தி அவளுக்கு ஆறுதலளிக்க முயலுகின்றாள். "தலைவி! தலைவன் வருகை குறித்து நற்சொற் கேட்பதற்காக முதுபெண்டிர் சென்று நெல்லையும், முல்லைப்

பூவையும் இறைவனுக்குத் தூவித் தொழுது நின்றார்கள். அப்பொழுது ஆயர்குலச் சிறுமி ஒருத்தி பசுக்களை நினைந்து கதறிய கன்றுகளை நோக்கி,

கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர்...... (முல்லை: 15–16.)

என்று கூறிய நன்மொழி கேட்டனர். ஆகவே, நின் கணவர் வெற்றி பெற்று வாகை சூடி இப்பொழுதே வருவர்; நின் வருத்தம் நீக்குவாயாக" என்றாள். அது கேட்டும் அவ்வாயிழை அமைதியடையாது பூப்போன்ற மையுண்ட கண்கள் முத்துப் போன்ற கண்ணீரை உதிர்க்கக் கவலுகின்றாள். இதை,

காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்ப
(முல்லை: 22–23.)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

பாடிவீட்டில் பாண்டியன்

போர்க்களம் போன பாண்டியன், காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய கானத்திடத்து பசிய தூறுகளை வெட்டி, வேட்டுவர் அரண்களை அழித்து, முட்களை மதிலாக வளைத்துக் கடற்போல் பரந்த பாடிவீடொன்று அமைத்துள்ளான். அங்குத் தாழையால் வேய்ந்த கூரைகளும், ஒழுங்குபட்ட தெருக்களும் திகழ்கின்றன. நாற்சந்தியில் காவலாக நின்ற யானைகள் கரும்புகளோடு நெற்கதிர்களையும், அதிமதுரத்தழைகளையும் உண்ணுமல் நின்றுகொண்டிருக்கின்றன. ஆகையால், யானைப் பாகர்கள் 'ஆது அப்பூது' போன்ற சொற்களைச் சொல்லி அவைகளுக்குக் கவளம் ஊட்டுகின்றனர்.

பல கூடாரங்கள் உள்ள நடுவிடத்தில் அரசனுக்குத் தனிக் கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது. குறுந்தொடியுடைய முன்கையினையும், கூந்தலசையும் சிறு முதுகினையுமுடைய ஆயிழையர் ஆங்கு இரவில் விளக்கேற்றிக்கொண்டு திரிகின்றனர். மெய்க்காப்பாளர்கள் காவலாகச் சூழ்ந்தசை

கின்றார்கள். ஊமையரான மிலேச்சர்கள் புறவறையின் உட்புறத்தில் காவல் காத்து அங்குமிங்கும் அலைந்து கொண்டு இருக்கின்றார்கள்.

உறக்கம் வரப்பெருனய் அரசன், முன்னாள் போரில் புண்பட்ட வேழங்களை உள்ளியும், மாற்றாரின் யானைகளை வெட்டி வீழ்த்திச் செஞ்சோற்றுக்கடன் கழித்த வீரர்களை நினைத்தும், அம்பு பாய்ந்த வலியால் புல்லுண்ணாது நிற்கும் புரவிகளை எண்ணியும் புண்பட்ட நெஞ்சினனாய்,

ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
(முல்லை: 75-76.)

பள்ளியில் உள்ளான்.

தலைவியும் தலைவனும்

பாடிவீட்டில் இருந்த பாண்டியனை நீள நினைந்து பாண்டிமா தேவி வளைகழல மயங்குகிருள்: அம்புதைத்த மயில்போல் அழுது துடிக்கின்ருள். அவள் அறையில் அகல்விளக்கு எரிந்துகொண்டு இருக்கின்றது. மழையால் நீர்த்தாரைகள் வழிந்துகொண்டிருக்கின்றன.

தலைவியின் மனம் மகிழ அத்தலைவன் பகைவரை வென்று வெற்றி முழக்கத்தோடு முல்லை நில வழியில் வந்து கொண்டிருக்கின்ருன். வருகின்ற தேரொலி கேட்டு அமளி யினின்றும் துள்ளி எழுகின்ருள் அத்தலைவி!

vi. மதுரைக்காஞ்சி

பொதுச் செய்திகள்

மதுரைக்காஞ்சியில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடிமருதனுர் 782 அடி களில் பாடியுள்ளார். இது மதுரை அரசனுக்குக் கூறிய காஞ்சி என விரியும். காஞ்சியென்பது, வீடுபேறு நிமித்த மாகப் பல்வேறு நிலையாமையைப் பெரியோர் எடுத் துரைப்பது என்கின்ருர் நச்சினர்க்கினியர். இப்பாட்டில்

மாங்குடிமருதனர் நெடுஞ்செழியனுக்கு இவ்வுலகின் பல வகை நிலையாமையை இலக்கிய நயத்துடன் எடுத்துணர்த்து கின்ருர். இதன்கண் நெடுஞ்செழியனின் நிலைத்த பெருமை யும், மதுரைமாநகரின் மாண்பும், வீடுபேறு அடைய மேற்கொள்ளத் தக்க வழியும் தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளன.

சிறப்புச் செய்திகள்

படையும் கொடையும்

நெடுஞ்செழியன் தோன்றிய பீடுமிகு பாண்டியர் குலத்தின் பெற்றியைப் போற்றிய பிறகு இவனுடைய படைத்திறத்தினையும், கொடைத்திறத்தினையும் புலவர் பாராட்டுகின்ருர். சேர சோழரை வென்று வாகை சூடிய வடிம்பு அலம்ப நின்ற பாண்டியன்போல் இவன் திகழு கின்ருன் என்றும், பகைவரின் பாதுகாப்பு மிக்க அரண்களைப் பொருட்படுத்தாது சென்று போருடற்றி வீரனய் விளங்குகின்ருன் என்றும் மருதனர் விளம்புகின்ருர். இவ்வேந்தன் தண்ணளி செய்யும் தகைமையாளன்; செங்கோல் செலுத்தும் செந்நெறியாளன். இவனுட்சியில் மக்கள் உறுபசியும், ஓவாப்பிணியும் இன்றி வாழுகின்றனர்.

ஆலங்கானம் வென்றேன்

குறுநில மன்னர் ஐவரும், பெருநில மன்னர் இருவரும் ஒன்றுசேர்ந்து ஒருசமயம் தலையாலங்கானம் என்னுமிடத் தில் இப்பாண்டியனை முறியடித்தற்குச் சமர் துடங்கினர். அஞ்ஞான்று இவன் கூற்றுவனைப் போன்று சீற்றங் கொண்டு அவ்வெழுவரையும் அழித்தொழித்து அவர்களின் முரசுகளைக் கைக்கொண்டு களவேள்வி வேட்டான். இதை,

காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட வெரிபரப்பி
யாலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட வமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
வடுதிறலுயர் புகழ்வேந்தே

(மதுரை. 125—130.)

என்ற பகுதியால் அறிகின்றோம். இவனோடு பொருது வீழ்ந்தவர் சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமை யூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்போராவர்.

நாட்டின் வளம்

வையையும், பொருநையும் பாய்தலால் இவன் நாடு வளமுடையதாய் விளங்குகின்றது. இவனுக்குரிய குறிஞ்சி நிலத்தில் ஐவன நெல்லும், தோரை நெல்லும் வளர்ந்திருக் கின்றன. ஆங்குள்ள தினைப்புனத்தில் கிளியை ஓட்டு வோரின் ஆரவாரமும், அவரையினது தளிரைத் தின்னும் காட்டுப் பசுவை ஓட்டுவோரின் ஓசையும், வேங்கை மலரைப் பறிக்கும் மகளிர் 'புலி புலி' என்று கூறும் பூசலும் கலந்து சிலம்பிடத்து எதிரொலி செய்கின்றன. பாலை நிலத்தில் ஆறலைகள்வரால் வழிச்செல்வோர்க்கு ஊறு நேராவண் ணம் காவல் புரிதற்கு அரசனால் ஏவப்பட்ட காவலர்கள் வில்லையுடைய கையராய் குழையாலே வேய்ந்த குடிலின்கண் தங்கியுள்ளார்கள். இவர்கள் கடிய சொல்லை உடைய இளை யோராவர். இச்செய்தி,

இலைவேய் குரம்பை யுழையதட் பள்ளி
யுவலைக் கண்ணி வன்சொ லிளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப

(மதுரை. 310—312.)

என்ற அடிகளால் புலனாகின்றது. இவ்விளைஞர் வில்லையும், அம்பையும் கொண்டு பாலை நிலத்து வழிகளில் காவல் புரிந்து திரிவர்.

முல்லை நிலத்தில் வரகும், எள்ளும் விளைகின்றன ஒருபால் தினையும் அறுவடையாகின்றது. மருத நிலத் தில் குளங்களும் ஏரிகளும் உள; அவைகளில் நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. அது வயலில் பாய்வதால் யானை யைக்கூட மறைக்கும் அளவுக்கு நெற்பயிற் ஓங்கி வளரு கிறது. நெய்தல் நிலத்தில் மக்கள் மீன் பிடித்தும், முத் தெடுத்தும் வாழ்கின்றனர்.

மாண்புறு மதுரை

ஐவகை நிலங்களும் அமையப்பெற்ற பாண்டிய நாட்டின் நடுவண், வைகலும் பாய்ந்து வளப்படுத்தும் வையையாற்றின் கரையில் செழியனுக்குரிய மதுரையானது பொலிவுடன் தோன்றுகிறது. இந்நகரத்தைச் சூழ்ந்து கிடக்கும் அகழி மிக்க ஆழமுடையது. சுற்றி நிற்கும் கோட்டைமதில் பகைவர் தாக்கமுடியாத திறனுடையது. அது வலி நிலை பெற்ற வாயிலினையும், நெடிய நிலையினையும், திண்ணிய கதவினையும், மலைபோல் ஓங்கிய மாடத்தினையும் கொண்டது. கோட்டைக்குள் அகன்ற தெருக்கள் ஆற்றை ஒத்துத் திகழ்கின்றன. ஆங்கு நாளங்காடி, அல்லங்காடி என்ற பகற்கடைகளும், இரவுக் கடைகளும் உள்ளன. அக்கடைத் தெருக்களின் வழியாகச் செழியனின் யானைப்படையும், தேர்ப்படையும், குதிரைப்படையும், காலாட்படையும் செல்லும்போழ்து பண்டம் விற்கும் பெண்டிரும், பிறரும் அஞ்சி ஒதுங்குகின்றனர். அவை சென்ற பிறகு அவர்கள் தெருக்களில் திரிந்து பண்டங்களை விலைகூறுகின்றனர்.

மாலைக்காலத்தில் பொருளுடையோர் பூத்தொழிலுடைய பட்டாடைகளை உடுத்தி குதிரைகள் பூட்டப்பட்ட தேர்களில் அமர்ந்து தெருக்களில் செல்வர். பொன்னணிகளை அணிந்த மகளிர் மாடங்களிலிருந்து விழாக் காண்பர். மாலைக்காலத்திற்குப் பிறகு வெறியாட்டங்களும், குரவைக் கூத்துக்களும், ஆடல் பாடல்களும் ஆங்கு மலிந்திருக்கும்.

நள்ளிரவில் கள்வர்கள் பிறர் பொருளை வவ்வுதற்காகச் பதுங்கித் திரிவர். அவர்கள் கரிய யானையின் தோல் போன்ற மெய்ப்பை அணிந்திருப்பர்; கூர்மையான தொங்கு வாளைக் கொண்டிருப்பர்; நூலேணியை அரையில் சுற்றியிருப்பர். அக்கள்வர்களைக் கண்டுபிடித்தற்காக நகரக் காவலர்கள் நடு யாமத்திலும் கண்ணுறங்காமல் சுற்றுவர். அவர்கள் புலியை ஒத்த வீரமுடையவர்கள் ; கள்வர்களின் தந்திரங்களை நன்கு அறிந்தவர்கள்.

காலை மலர்ந்தது

மாண்புறு மதுரையை மூடியிருந்த இருள் நீங்க, கட்டுகள் விட்டு மொட்டுகள் விரிகின்றன. அவற்றின் இனிய தேனை நச்சிய வண்டுகள் காலைப் பண்களைப் பாடி உண்ணுகின்றன. அந்தணர் வேதத்தை இசைக்கின்றனர். இன்னும் பல பண்டங்களையும் விற்போர் இடும் ஓசையும் அங்கு எழுகின்றது.

அரசனை வாழ்த்துவோர் வாழ்த்துகின்றனர். அவனும் வைகறையில் எழுகின்றான். பணிமகளிர் பொற்கலங்களில் மதுவை வார்த்துக் கொடுக்க அவன் உண்டு களிக்கின்றான். பிறகு காலைக் கடன்களை முடித்து மார்பில் மாலை தரிக்கின்றான். ஆடைகளை அணிந்து நாளோலக்க மண்டபத்தில் சென்று வீற்றிருக்கின்றான். படைத் தலைவர்கள் வேந்தனின் வெற்றிச் சிறப்புக்களைக் கூறி வாழ்த்துகின்றனர். அவனோ அஞ்சா நெஞ்சங் கொண்ட வீரர்களுக்குப் பரிசிலை அள்ளிக் கொடுத்து அகம் மகிழ்கின்றான்.

புவியரசனும் கவியரசனும்

பலபடியாக பாண்டியனையும், அவன் நகரத்தையும் பாடிய புலவர் இறுதியாக அவனுக்கு அறிவுரை கூறி வாழ்த்துகின்றார்.

"அரசே! கொடையிலும், படையிலும் மேம்பட்ட பல வேந்தர்கள் அறத்தை மறந்து இறந்துபோயினர். ஆனால், நீயும் அவ்வாறு மறைதல் ஆகாது. ஆகவே, பொறி இன்பத்தைப் போற்றாது பேரின்பங் கருதி இறை வழிபாட்டில் உன்னை ஈடுபடுத்துவாயாக. இஞ்ஞாலப் பற்று உன்னை விட்டு நீங்குவதாக!" என்று அவனுள்ளம் ஏற்க உரைக்கின்றார். இச்செய்தி,

பலர்வாய்ப் புகரறு சிறப்பில் தோன்றி
அரியதந்து குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீன் நடுவண் திங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கி
(மதுரை: 765—770.)

என்ற பகுதியால் தெரிகின்றது.

மதுரைக்காஞ்சி மாங்குடி மருதனரின் புலமைத் திறத்தைப் புவிக்குப் பறைசாற்றும் பொன்னேடு; பண்டைப் பாண்டிய நாட்டின் பழக்க வழக்கத்தையும், நாகரிகத்தையும் நமக்குணர்த்தும் நற்றமிழ் இலக்கியம்.

vii. நெடுநல்வாடை

பொதுச் செய்திகள்

நெடுநல்வாடை 188 அடிகளைக் கொண்டது. மதுரைக் காஞ்சியில் போற்றப்பட்ட தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனே இப்பாட்டிற்கும் உரியவனாக நக்கீரரால் பாடப்பட்டிருக்கின்ருன். இது நெடிதாகிய நல் வாடை என விரியும். வாடை என்பது வடக்கிலிருந்து வீசும் குளிர் காற்ருகும். தலைவனைப் பிரிந்து வருந்தும் பாண்டிமாதேவிக்கு இவ்வாடை துன்பந் தரும் நெடு வாடையாகவும், போர்க்களத்தில் மாற்ருரைத் தோற்கடித்துத் துரத்துதற்கு இவ்வாடை உதவுவதால் தலைவனுக்கு நல்வாடையாகவும் இருப்பதாக நயம்படப் பாடப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியதே.

கூதிர்க் காலத்தின் நள்ளிரவில் தலைவியானவள் தலைவனை உள்ளியவண்ணம் இல்லில் இருக்கின்ருள். தலைவனே பாசறையின் பள்ளியில் இருக்கின்ருன். ஒள்ளிழையாள் கொள்ளும் தொல்லை நீங்க, தலைவன் மேற்கொண்ட போர்த்தொழில் இனிது முடிவதாக என்று அவளுடைய தோழியர் கொற்றவையைப் பரவுவதாக இப்பாடல் கூறப்பட்டிருக்கின்றது. கூதிர்கால வருணனை, தலைவியின் தனிமைத்துயர், அந்தப்புர அமைப்பு, அரசியின் கட்டில் வனப்பு, போர்முனையில் அரசன் செயல் முதலியன இதில் காணும் சீரிய செய்திகளாகும்.

சிறப்புச் செய்திகள்

மழையும் உயிர்கள் நிலையும்

கார்காலத்து முகிலானது மழையைப் பொழிந்து தன் கடமையை முடித்தது. அதனல் பெருக்கெடுத்த வெள்ளம் எங்கும் பரவ, அதை வெறுத்த கோவலர்கள்

தங்கள் எருதுகளையும், பசுக்களையும், ஆடுகளையும் மேட்டு நிலமாகிய முல்லை நிலத்திற்கு ஓட்டிச் செல்லுகின்றனர். அங்கும் குளிரால் அவர்கள் நடுங்குகின்றனர். அவர்களின் பற்களெல்லாம் பறையடிக்கின்றன! விலங்குகள் மேய்தலை மறந்து நிற்க, மரங்களில் தங்கும் பறவைகள் காற்று மிகுதியால் நிலத்தில் வீழ்கின்றன.

வயலில் நெற்கதிர்கள் முற்றியிருக்கின்றன. காக்களில் உள்ள மரங்களின் கிளைகள் நீர்த்துளிகளைச் சொட்டுகின்றன. இப்படிப்பட்ட கூதிர்க்காலத்தில் பாண்டியனுடைய மூதூராகிய மதுரையில் ஆறு கிடந்தாற்போன்ற அகன்ற தெருக்கள் திகழ்கின்றன. ஆங்குள்ள வீடுகளில் பணிப்பெண்கள் குளிர்காலத்தில் பூசுதற்குரிய கத்தூரி முதலியவற்றை அரைக்கின்றனர். தென்றற் காற்று நுழைந்துவரும் சாளரங்களெல்லாம் அடைக்கப்பட்டிருக்கின்றன. இப்படியாக மழைக்காலம் கூதிர்க்காலமாகி உயிர்களை வருத்துகின்றது.

அந்தப்புரத்தில் தந்தக் கட்டில்

அரசனது அரண்மனையானது நல்ல நாளில் சிற்பநூல் வல்லவர்களால் கட்டப்பட்டுக் கவினுறத் திகழ்கின்றது. விண்ணளாவும் திண்ணிய மதிலும், அகன்றுயர்ந்த வாயிலும் அக்கோயிலுக்கு அழகு செய்கின்றன.

அம்மாளிகையின் அந்தப்புரத்தில் வேந்தனுக்குரியாள் பெரிதும் விரும்புகின்ற தந்தக் கட்டில் உள்ளது. அக்கட்டில் மூட்டுவாய் தெரியாமல் கைவல்ல கம்மியரால் பொருத்தப்பட்டிருக்கின்றது. சிங்கம் முதலியவற்றை வேட்டையாடுகின்ற தொழில்களைப் பொறித்த தகடுகளை ஆங்காங்கு வைத்தடித்திருக்கின்றார்கள். முத்து மாலைகளும் அலங்காரமாகத் தொங்கிக்கொண்டு இருக்கின்றன. அதன் மீது அன்னத்தூவி பரப்பப்பட்டுள்ளது. அதற்குமேல் வெள்ளைத்துகில் விரிக்கப்பட்டுள்ளது. அத்துகிலின்மீது மலரிதழ்கள் பரப்பப்பட்டுள்ளன.

அக்கட்டிலில் அரசமாதேவி படுத்திருக்கின்றாள். அவளுடைய மார்பிடத்து தாலி நாண்மட்டுமே கிடக்கின்றது.

காதிலே மகரக்குழை இல்லை. பட்டாடை நீத்துப் பருத்தி நூலாடை உடுத்தியிருக்கின்றாள். அவளின் கடுந்துயர் கண்ட மாந்தளிர் போன்ற நிறமுடைய தோழியர் அரசியின் மெல்லிய அடியைத் தடவுகின்றனர். செவிலியரோ, 'இப்பொழுதே நின் இன்துணைவர் வருவார்' என்று பல ஆறுதல் மொழிகளைக் கூறுகின்றனர். ஆயினும், அவள் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது உள்ளம் நொந்து கண்கலங்குகின்றாள். இச்செய்தியை,

…………………வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியன் மகளிர் நல்லடி வருட
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி
யின்னே வருகுவ ரின்றுணை யோரென
வுகத்தவை மொழியவு மொல்லாள் மிகக்கலுழ்ந்து
(நெடு. 150–156.)

என்ற அடிகள் அறிவிக்கின்றன.

செழியனின் ஒழியாப் பாடு

இவள் நிலை இவ்வாறாக, நெடுஞ்செழியன் பாசறையில் இருள் சூழ்ந்த இரவில் வன்போரில் புண்பட்ட வீரர்களை எண்ணி வருந்தித் திரிகின்றான். அதுபோழ்து அவனுடன் வரும் வீரன் கையில் உள்ள விளக்கானது வீசுகின்ற வாடைக்காற்றிற்கு ஏற்பத் தெற்கு நோக்கிச் சாய்ந்து எரிகின்றது. விழுப்புண் பெற்ற வீரர்களுக்கு அந்நள்ளிரவில் கொல்லேற்றுக் காவலன் கருணைப் பார்வையால் ஆறுதல் தந்து உறக்கமின்றி இருக்கின்றான்.

இவ்வாறு இந்நெடுநல்வாடை தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் உளப்பாங்கையும், தலைவனின் வினையார்வத்தையும் இலக்கிய நயம் விளங்க, இயற்கை வருணனை துலங்க எடுத்துணர்த்துகின்றது.

viii. குறிஞ்சிப்பாட்டு

பொதுச் செய்திகள்

குறிஞ்சிப்பாட்டைக் கபிலர், ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச்சுவை அறிவுறுத்தற்பொருட்டு 261 அடிகளில் அழகுசொட்டப் பாடியுள்ளார். "இயற்கைப் புணர்ச்சியும், பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறுதலின் இதற்குக் குறிஞ்சியென்று பெயர் கூறினர்" என்கின்றார் நச்சினார்க்கினியர். இதற்குப் பெருங்குறிஞ்சி என்றும் பிறிதொரு பெயருண்டு. குறிஞ்சி என்பது புணர்ச்சி என்று பொருள்படும். தினைப்புனத்தைக் காவல் காக்கச் சென்ற தலைவியொருத்தியைத் தலைவனொருவன் வினைப்பயன் கூட்டுவிக்கக் கூடினன். சின்னாட்களுக்குப் பிறகு தலைவனைப் பிரிந்து தலைவி மெலிந்து வருந்த, அவள் தாய், 'மகள் ஏதோ பேய்க்கோட்பட்டாள்' என்று ஐயுற்று நிமித்தம் பார்த்துப் பலியிட்டாள். அதன்பின்றையும் தலைவி வாட்டம் தவிர்ந்திலளாக தோழி நிகழ்ந்த நிகழ்ச்சியைத் செவிலித் தாய்க்கு எடுத்தியம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

சிறப்புச் செய்திகள்

அவளும் அவனும்

தலைவியின் ஒளிரும் தளிர்மேனி மெலிவுற்றதைக் கண்டு வருந்திய செவிலித்தாயை நோக்கித் தோழி உண்மையாக நிகழ்ந்திருப்பவற்றை அறத்தொடு நிற்கும் முறையில் எடுத்துரைக்கின்றாள்.

"தாயே, வாழ்வாயாக! ஒள்ளிய நுதலினையும், மெல்லிய மயிரினையும் உடைய நம் தலைவி ஆற்றுதற்கரிய நினைவொன்றை மறைத்து வைத்திருக்கின்றாள். அதுதான் அவள் அணிந்த ஆபரணங்களை நெகிழப்பண்ணின. அஃதறியாது நீ குறிசொல்லுவோரைக் கேட்டுத் தெய்வங்களை வழிபட்டனை.

"அவளும் மறைக்காது, 'தோழி! அணிகலன் தொலையினும் அது பிறகு கிடைக்கப்பெறும். ஆனால், ஒழுக்கங் கெடின் அறவோரும் அதை மீண்டும் பெற்றுப் புகழை நிலை

நிறுத்துதல் எளிதன்று என்று பெரியோர் புகல்வர். ஆகவே நானும் அவனும் கருத்தொருமித்துக் காதல்மணம் புரிந்து கொண்டோம் என்பதை அன்னைக்கு அறிவித்தால் பழி யொன்றும் நேராது. நம் தமர் இதற்கு மாறாக நடப்பார் களென்றால் மறுமையிலாகிலும் அவனுறவு எனக்குக் கிட்டட்டும்' என்று கூறினள்'' என்றாள் தோழி. இச் செய்தியை,

முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை
யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
யிருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுறுலிற் பழியு முண்டோ (குறிஞ்சி: 13-22.)

என்ற பகுதி உணர்த்துகின்றது.

வந்தான்—காப்புத் தந்தான்

அவளுக்கும், அவனுக்கும் கூட்டுறவு ஏற்பட்ட முறையைத் தோழி செவிலிக்குக் கூறுகின்றாள்.

"தாயே! நின் சொற்படி நாங்கள் தினைப்புனம் சென்று பரண்மீது நின்று காவல்புரிந்தோம். அப்பொழுது மலையெங்கும் மழை பொழிய வெள்ளம் பெருக்கெடுத்துப் பள்ளம் நோக்கி ஓடிற்று. அஞ்ஞான்று வெள்ளிய நீரில் நாங்கள் துள்ளிக் குதித்து விளையாடினேம். அதன்பிறகு கவின்மிகு மலைச்சாரலுக்குச் சென்று அழகுறப் பூத்திருந்த காந்தட்பூ, ஆம்பற்பூ, குறிஞ்சிப்பூ போன்றவற்றை ஆவலோடு பறித்து மைநிறக் கூந்தலில் மகிழ்வோடு சூடிக் கொண்டு அசோகமர நிழலிற் சென்று தங்கியிருந்தோம்.

"அப்பொழுது, கரத்தில் வில்லும் அம்பும் கொண்ட ஓர் ஆணழகன் அங்குத் தோன்றினன். அவனோடு வேட்டை நாய்கள் பலவும் கூட்டமாய் வந்தன. அவைகளுக்கு அஞ்சி

நாங்கள் வேற்றிடம் சென்று தங்கினோம். அவனே எங்களைத் தொடர்ந்து வந்து, 'மெல்லியலீர்! யானையொன்று இவ்வழி வந்ததைக் கண்டீரோ?' என்று கேட்க நாங்கள் நாணத்தால் பதிலுரைக்காது நின்றோம். அவ்வமயம் மதங்கொண்ட யானையொன்று முழக்கமிட்டவண்ணம் ஓடிவர நாங்கள் உடல் நடுங்கினோம்; அவனை நோக்கி ஓடினோம். அவனோ புன்முறுவல் பூத்து எங்களைப் பார்த்து, 'அஞ்சற்க' என்று அவ்வியானையின்மீது அம்பு எய்தான். அஃது அஞ்சி அவ்விடம்விட்டு ஓடிற்று. அவனுக்கு நோக்கால் நன்றி போக்கி ஆற்றுக்குச் சென்றோம். அதில் கிளர்ச்சி கொண்டு குளித்து மகிழ்ந்தோம்; எங்களை மறந்து கைகோர்த்து விளையாடினோம். அப்பொழுது இழிந்தோடும் வெள்ளம் எங்களை இழுத்துச் செல்ல அச்சத்தால் கூச்சலிட்டோம். அத்தலைவன் விரைந்தோடிவந்து நீரில் குதித்து எங்கள் இருவரையும் பற்றிக் கரைசேர்த்துக் காத்தான். தலைவியைப் பார்த்து, 'உன்னை மணக்க எண்ணுகின்றேன்; நீ பிணங்க எஞ்ஞான்றும் கைவிடமாட்டேன்' என்று அவளது நெற்றியின் நீரைத் துடைத்தான். 'நின் அருள் தேவை' என்று கேட்பான்போல் என்னையும் நோக்கி நகைத்தான்'' என்றாள் தோழி. இதை,

> அஞ்சி லோதி யசையல் யாவது
> மஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென
> மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
> தென்முக நோக்கி நக்கனன்.........
>
> (குறிஞ்சி: 180-183.)

என்ற பகுதியால் கபிலர் அறிவிக்கின்றார்.

'வரைவேன் விரைவில்'

இறுதியாகத் தோழி, தலைவனுடைய நாட்டுச் சிறப்பையும், அவன் தலைவிக்கு உறுதியளித்துப் பிரிந்ததையும் உரைக்கின்றாள்.

''அம்மா! தலைவனுடைய மலைநாட்டுப் பாறைகளில் பலாப்பழங்களின் நறுஞ்சாறு தேங்கிக் கிடக்கும். அதனை நீரெனக் கருதி ஆடும் மயில்கள் குடித்து மயங்கி நிற்கும்.

"அவன் அவளைச் சந்தித்த முதல்நாள், 'தலைவி! உன்னை என்றும் பிரியேன்; நீ என் வாழ்க்கைத் துணை' என்று கூறி தூய அருவி நீரைக் குடித்துச் சூளுறவு செய்தான். அவன் அன்று முழுதும் எங்களோடு இருந்து மாலைவேளை வந்ததும் தலைவியை நோக்கி, 'கலங்காதே கண்ணே! உன்னை என் எண்ணமாக்கிக் கொண்டேன். விரைந்து பலரறிய வரைந்துகொள்வேன்' என்று உறுதி யளித்து எங்களைத் தொடர்ந்துவந்து நமது ஊரருகில் விட்டுப் பிரிந்தான். ஆகவே, அவனை மணக்கவே தலைவி உயிர்தாங்கி இருக்கின்றாள். அத்தலைவனைக் காணாது கலங்குவதால்தான் உருமாறித் தோன்றுகின்றாள்' என்று கூறி அறத்தொடு நின்றாள் தோழி.

'குறிஞ்சி பாடக் கபிலர்' என்பது இப்பாட்டால் நன்கு புலனாகின்றது. கபிலருக்கு குறிஞ்சிநிலம்பற்றிய நல்லறிவு மிக்கிருந்தது என்பது இப்பாட்டில் அவர் காட்டும் தொண்ணூற்றொன்பது வகைப் பூக்களிலிருந்து தெளிவாகின்றது. அகப்பாடலாகிய குறிஞ்சிப்பாட்டு அகத்தைப் பிணிக்கும் பாட்டு என்று இதனோடு ஈடுபாடுகொள்வோர் எளிதாய்க் கண்டுணரலாம்.

ix. பட்டினப்பாலை

பொதுச் செய்திகள்

பட்டினப்பாலையில் சோழன் கரிகாற் பெருவளத்தானை கடியலூர் உருத்திரங்கண்ணனார் 301 அடிகளில் பாடியுள்ளார். இஃது ஆசிரிய அடிகள் கலந்துவந்த ஏந்திசைத் தூங்கள் குறளடி வஞ்சிப்பாவாகலின் வஞ்சிநெடும் பாட்டு என்றும் பெயர்பெறும். பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத் திணையாதலால் இதற்குப் பட்டினப்பாலை என்னும் பெயர் வாய்த்தது. இதில் வேற்றிடம் செல்ல நினைந்த தலைவன் தன் உள்ளத்தை நோக்கி,

> முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
> வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
> வாரேன் வாழிய நெஞ்சே...........
>
> (பட்டின: 218-220.)

என்று கூறித் தன் செலவைத் தவிர்த்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு இப்பாடல் பாடப்பட்டுள்ளது. இதைப் பாடியதற்காகப் புலவர்க்குச் சோழன் பதினறுநூருயிரம் பொன் பரிசாகக் கொடுத்தான் என்று கலிங்கத்துப்பரணியும், சங்கரசோழனுலாவும் பகருகின்றன. இதில் சோழநாட்டின் பெருமையும், காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும், கரிகாற் பெருவளத்தானின் வீரச்செயல்களும், உறையூரை அவன் வளப்படுத்தின வரலாறும் பரக்கப் பாடப்பட்டுள்ளன.

சிறப்புச் செய்திகள்

நாடும் நகரமும்

'சோழநாடு சோறுடைத்து'; காரணம் அங்கு வற்ரு நீர்ப்பெருக்குடைய காவிரியாறு பாய்வதே. இது 'வான் பொய்ப்பினுந் தான்பொய்யா'தது; எங்கும் நீரைப் பரப்பிச் சீரைச் செய்வது. ஆகவே, விளைவரு விரிந்த கழனிகள் எங்கும் செழித்துள்ளன. அம்மருத நிலத்தில் விளைந்த நெற்கதிர்களை எருமைக் கன்றுகள் விரும்பியுண்டு நெற் களஞ்சியங்களின் நிழலில் படுத்துறங்கும். குலை வாழையும், காயை உடைய கமுகும், மணங்கமழ் மஞ்சளும், பலவகை மாமரங்களும், பருத்த குலைகளைக் கொண்ட பனையும், அடிபரந்த சேம்பும், முளையினையுடைய இஞ்சியும் விஞ்சி நிற்கும் நஞ்சை நிலங்களைக் கொண்ட நாடு சோழநாடு. மேலும் அந்நாட்டின் நெய்தல் நிலத்தில் ஊர்களும்,தோப்புக் களும், பூஞ்சோலைகளும், பொய்கைகளும் நிறைந்திலங்கும். இவ்வகை நிலவளம் மிக்க சோழநாட்டின் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினமாகும். ஆங்கு அறச்சாலைகள் பல உள. அவற்றில் ஆக்கப்படும் உணவின் வடிகஞ்சி ஆற்று வெள்ளம்போல் தெருக்களில் பெருகியோடும். எருதுகள் அத்தெருக்களில் பொருத சேறுண்டாகும். பிறகு தேர்கள் அவ்வழி ஓட காய்ந்து புழுதியாக மேலெழுந்து பல்வகை

ஓவியங்கள் வரையப்பட்ட வெண்சுவர் மாளிகைகள் மீது படிந்து மாசுபடுத்தும். இச்செய்தியை,

அறநிலைஇய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேருகித்
தேரோடத் துகள்கெழுமி
நீருடிய களிறுபோல
வேறு பட்ட வினையோ வத்து
வெண்கோயில் மாசூட்டும் (பட்டின: 43-50.)

என்ற பகுதி உணர்த்துகின்றது.

நகரத்தில் வாழும் பரதவர்கள்

அந்நகரத்தின் ஒரு பகுதியாகிய பட்டினப்பாக்கத்தில் வாழும் பரதவர்கள் முழுமதி நாளில் கடலில் செல்லாது தங்கள் மகளிரோடு கூடிச் சுருமீனின் கொம்பை நட்டுக் கடல் தெய்வத்தை அதில் ஏற்றித் தாழைமலரும், பதனீரும் படைத்து வழிபடுவார்கள். அதன்பிறகு அவர்கள் காவிரி கடலோடு கலக்குமிடத்தில் நீராடுவர். கடலில் குதித்ததால் உடம்பில் ஒட்டிய உப்பு நீங்க ஆற்று நீரில் படிந்தெழுவர். இதை,

தீதுநீங்கக் கடலாடியு
மாசுபோகப் புனல்படிந்து (பட்டின. 99-100.)

என்றுரைக்கின்றூர் புலவர்.

மாளிகைகளில் மகளிர்

காவிரிப்பூம்பட்டினத்தில் உயர்ந்த மாடங்கள் உள. அங்கு உறையும் மகளிர் செவ்விய அடியையும், செறிந்த குறங்கையும் உடையவர். துகிலுடை அணிந்தவர்; துகிர் மேனி படைத்தவர்; மயிலை ஒத்தவர்; மானேக்கு கொண்டவர்; கிளிமொழி பேசும் அவர்கள், தென்றற் காற்று வந்து புகும் சாளரங்களின் எதிரே நின்று வளமலிந்த கடைத் தெருவை நோக்குவர். அப்பொழுது அகன்ற தெருவில்

சிலர் ஆடுவர்; மற்றும் சிலர் பாடுவர். பல்வகை இசைக் கருவிகளும் ஆர்ப்பரிக்கும். இந்நிலையில் முருகக்கடவுள் போன்ற தெய்வங்களுக்கு விழாக்கள் கொண்டாடப்படும். அந்நேரத்து மாடங்களில் உலவும் மடந்தையர் தொடி செறிந்த தம் முன்கைகளைக் கூப்பி வணங்குவர்.

பண்டங்களும் பல்தொழிலாரும்

காவிரிபூம்பட்டினம் வெளிநாட்டு வாணிபங்களுக்குப் பெயர்பெற்று விளங்கிற்று. மேற்கு மலை மிளகும், பொதிய மலைச் சந்தனமும், அகிலும், தென்கடல் முத்தும், கீழ்க்கடல் பவளமும், கங்கை-காவிரியாற்றுப் பொருள்களும், காழகத்து நெல்லும், ஈழத்துப் பண்டங்களும், சீனத்துப் பனிநீரும் புகார்நகரக் கடைத்தெருவில் குவிந்துகிடந்தன.

அந்நகரத்து வேளாளர்கள் ஒழுக்கத்தில் வழுவாதவர்; அருள் நிறைந்தவர். அங்குறையும் வணிகர்கள் அறம் பிறழாத நன்னெஞ்சினர். 'கொள்வதில் மிகை கொள்ளாது கொடுப்பதில் குறை கொடாது' பல பண்டங்களை வாங்கி விற்கும் பான்மையாளர்கள்.

வீரம் செறிந்த கரிகாலன்

இத்தனை சிறப்புமிக்க காவிரிநாட்டை விரிவுபடுத்திப் பரிவுடன் ஆண்டான் கரிகாலன். இவன் இளமையில் சிறையினின்றும் வெளிப்போந்து பகைவரை வென்றடக்கித் தானொருவனாகத் தனியாட்சி புரிந்தான். தன் புலத்தை வளப் படுத்தக் கருதி காடுகளை அழித்தான்; அவற்றில் நாடுகளைக் கண்டான். குளங்களை வெட்டினான்; கோயில்களைக் கட்டினான். இவ்வாறு நாட்டில் பல சீர்திருத்தங்களைச் செய்து குடிகளின் வாழ்வை வளப்படுத்தினான். இச்செய்திகளை,

காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ

(பட்டின. 283-286.)

என்ற அடிகள் அறிவிக்கின்றன.

குளிர்ச்சி மிக்க தோள்

"நெஞ்சமே! இவ்வளவு வாழ்வும், வளமும் ஒருங் கமைந்த காவிரிப்பூம்பட்டினத்தையே பரிசிலாகத் திருமா வளவனாகிய கரிகாலன் தருவதாக இருந்தாலும் என் அன்புக் குரியாளின் குளிர்ச்சி மிக்க தோள்களைப் பிரிந்து கொடிய பாலையின் வழியே போதற்கு இசையேன்" என்று கூறிப் புலவர் இப்பாட்டை முடிக்கின்றார்.

பரதவர்கள் இரவு நேரங்களில் தங்கள் வீடுகளின் மேலிடத்து கலங்கரை விளக்குகள் கொண்டிருந்த செய்தி யும், ஏற்றுமதி இறக்குமதியாகும் பொருள்களில் சோழ னுடைய இலச்சினையாகிய புலிப்பொறி பொறித்த செய்தி யும், பன்மொழி பேசும் பல தேயத்தவர் காவிரிப்பூம் பட்டினத்தில் வந்து இருந்த செய்தியும் இப்பாட்டில் காணும் பிற சீரிய செய்திகளாகும்.

X. மலைபடுகடாம்

பொதுச் செய்திகள்

மலைபடுகடாம் பெருங்கௌசிகனாரால் 583 அடிகளில் பல்குன்றக்கோட்டத்து நன்னனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டதாகும். நன்னனிடம் சென்று பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன் பரிசில் பெற நிற்கும் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்துவதாக இஃது அமைந்திருப்பதால் இதற்குக் கூத்தராற்றுப்படை என்ற வேறு பெயரும் உண்டு. இப் பாடலில் மலைகளை மதயானைகளாகக் கூறி, அவற்றிலிருந்து எழுந்த ஓசைகளை மதநீராக (கடாம்) உருவகம் செய்திருப் பதால் இதற்கு மலைபடுகடாம் என்று பெயர் அமைந்தது.

இதன்கண் மலைச்சாரலின் வளமும், குறிஞ்சி முல்லை மருதநில மக்கள் இயல்யும், அவர்கள் விருந்தினர் போற்றுந் திறமும், பலவகை இசைக்கருவிகளின் பெயர்களும், மலைப் பக்கத்தில் நிகழும் வெவ்வேறு ஓசைகளைப்பற்றிய செய்தி களும், நன்னனது ஊரின் பெருமையும், அவன் பரிசில் நல்கும் வண்மையும் சிறப்புறக் கூறப்பட்டிருக்கின்றன.

சிறப்புச் செய்திகள்

பெற்றனும் பெருதானும்

நன்னனை நாடிச் சென்ற பாணன் அவனைப் பாடிப் பெரும்பொருள் பெற்று, பல்பொருள்களையும் கவர்ந்து மலைமுகடுகளிலிருந்து இழிந்தோடும் ஆறுபோல் நவிர மலையிலிருந்து தன் பேரொக்கலோடு வந்துகொண்டிருக் கின்றான். வரும்வழியில் குளிர்ந்த நிழல் பரவிய ஓரிடத்தில் மற்றொரு பாணன் தன் சுற்றத்தோடு அமர்ந்திருக்கக் காண் கின்றான். இருவரும் ஒருவரையொருவர் நோக்கி மகிழ்ந்து அளவளாவுகின்றனர்.

பரிசில் பெருதானும், அவனைச் சார்ந்தவரும் இடிபோல் முழங்குகின்ற மத்தளத்தை வைத்திருக்கின்றார்கள். இன்னும் தாளம், கொம்பு, நெடுவங்கியம், தூம்பு, குழல், கரடிகை, எல்லரி, கிணை, சிறுபறை முதலிய இசைக்கருவிகளையும் பெற்றிருக்கின்றார்கள். இவைகளேயன்றிப் பேரியாழையும் கொண்டிருக்கின்றார்கள்.

அப்பாணனோடு வந்துள்ள விறலியர்கள் மான்கண்ணை யொத்தக் கண்ணுடையவர்கள்; கையில் ஒளியுமிழ் வளை யல்கள் அணிந்தவர்கள்; குழந்தை பெற்று நாட்பல கழிந்து உடலுரம் பெற்றவர்கள். அவர்கள் மயிற்குழாம்போல் கூந்தலை அவிழ்த்துக் காற்றில் அலையவிட்டுப் பாணர்களின் தலைவனைச் சூழ்ந்து இருக்கின்றார்கள்.

நன்னனும் அவன் முன்னோரும்

பரிசில்பெற்ற பாணன் பெருதவர்களிடத்து நன்னனின் புகழையும், அவன் முன்னோரின் சிறப்பையும் எடுத் துரைத்து அவனிடத்து அவர்களை ஆற்றுப்படுத்து கின்றான்.

நன்னன் வரையாது பரிசில் வழங்கும் வள்ளல். இவ னவையில் பைந்தமிழ்ப் புலவர்கள் எப்பொழுதும் பேருவகை யுடன் குழுமியிருப்பர். இவனே பாவலர்களின் மானத்தைக் காக்கும் மாண்புறு உளத்தன்; அறிவை வியந்து பரிவு காட்டிப் பேருதவி புரியும் பெற்றியன். இவனுடைய முன்

னோர்கள் மாற்ருருக்கஞ்சா மறமுடையோர். களிற்றின்மேல் சென்று பகைவரைக் கடந்து அவர்தம் அடல் கெடுத்துப் பாடுபுகழ் பெற்ற பீடுடையோர். அவ்வரிய முன்னோர்க் குரிய குடியில் தோன்றியவன்தான் நன்னன்.

கண்ணுக்கினிய காட்சிகள்

பாணன் நன்னனைக் காணுதற்குமுன் கண்ணுக்கினிய காட்சிகள் நிறைந்த பல இடங்களைக் கடக்கவேண்டியிருக் கின்றது. காடாக உள்ள முல்லை நிலத்தில் ஒள்ளிய மின்னலோடு கூடிய மேகம் மழையைப் பொழியும்; அதனல் அந்நிலம் அழகுடன் விளங்கும். விரிந்த வானவெளியில் கவின்மிகு கார்த்திகை மீன்கள் மின்னுவதுபோல் ஆங்குப் பின்னிப் படர்ந்திருக்கின்ற முசுண்டைக் கொடிகள் வெண்மையாகப் பூத்துப் பொலிவுறும். தினை விளைந் திருக்கும்; அவரை காய்த்திருக்கும். எருமை படுத்திருப் பதைப்போல் காட்டு வழியில் பெருங் கருங்கற்கள் கிடக்கும். அம்முல்லை நிலத்தைக் கடந்து சென்ருல் பல்வளம் மலிந்த நன்னனின் மலைநாட்டைக் காணலாம். அங்குள்ளவர்கள் உடும்பின் இறைச்சியையும், மானின் கொழுவிய தசையை யும் கலந்து உண்பர்; கள்ளையும் அருந்திக் களிப்பர். அவ் விடத்தைக் கடந்து அடுத்திருக்கும் நவிரமலையை அணுகி ஞல் அங்குக் கானமயில்கள் தோகை விரித்து ஆடி இளைத்து நிற்கும்; மலைச்சரிவுகளில் தேனிருல் தென்படும். அவ்வழி யில் போய்க்கொண்டிருக்கின்றபொழுது கானவர் கண்டு களிப்புற்று உண்ணற்கினிய பழங்களையும், சூடற்கினிய பூக்களையும் தருவர்.

சாரலில் ஆரவாரம்

அம்மலைச்சாரலில் யானையைப் பிடிப்போர் எழுப்பும் முழக்கமும், முள்ளம்பன்றியால் தாக்குண்டோர் அழும் அழுகையும், வரிப்புலி பாய்ந்ததால் கொழுநர் மார்பில் புண் ஏற்பட அதை ஆற்றுதற்காக கருங்கூந்தல் மகளிர் பாடுகின்ற பாட்டும், புலியைக் கண்டு அஞ்சி அலறும் பிடியின் ஓசையும் ஒன்ருகச் சேர்ந்து பேராரவாரமாக இருக்கும். இன்னும் கரும்பின் கோலைச் சாறுகொள்ளும்

ஆலையின் ஓசையும், தினை குற்று மகளிருடைய வள்ளைப் பாட்டும், பன்றியைத் துரத்துதற்காகக் கொட்டப்படும் பறையொலியும் கூடி எங்கும் எதிரொலிக்கும். இந்நிலையில் அம்மலைச்சாரலே பெரிய ஆரவாரம் செய்வதைப்போல இருக்கும். ஆகவேதான் புலவர் மலையை யானையாகவும், அதனாரவாரத்தை யானையின் மதநீராகவும் உருவகித்துக் கூறுகின்றார். இச்செய்தி,

தினைகுறு மகளி ரிசைபடு வள்ளையுஞ்
சேம்பு மஞ்சளு மோம்பினர் காப்போர்
பன்றிப் பறையுங் குன்றகச் சிலம்பு
மென்றிவ் வனைத்து மியைந்தொருங் கீண்டி
யவலவு மிசையவுந் துவன்றிப் பலவுட
னலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப
(மலைபடு. 342–348.)

என்ற அடிகளால் உணர்த்தப்படுகின்றது.

வரையாது வழங்கும் வள்ளல்

இவ்வாரவாரம் மிக்க மலையைக் கடந்து சென்றால் நன்னனின் மருதநிலம் அடுத்துத் திகழும். வழிப் போவோருக்கு அந்நில மக்கள் கள்ளையும், இறைச்சி கலந்த சோற்றையும் கொடுத்து விருந்து போற்றுவர். அவ் வளமுடை நிலத்தைக் கடந்து சென்றால் நன்னனின் மூதூர் தென்படும். அங்கு வண்டொலிக்கும் பொழில்களும், வலி மிக்க மதிலும் உண்டு. பெரிய மாடங்களைக் கொண்ட தெருக்களும், மறவர் காவல் புரியும் கோபுரவாயிலும் வியக்கும்வண்ணம் தோன்றும். அவ்வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் பல்லோர் புகழ நன்னன் விளங்குவான். அவன் பரிசிலர்களுக்கு ஆடைகளைக் கொடுத்து உடுக்கச் செய்வான். சோற்றையும், இறைச்சியையும் உண்ணக் கொடுப்பான். இத்துணைச் செய்திகளையும் பரிசில்பெற நிற்கும் பாணனுக்குக் கூறி இறுதியாக, "கூத்தர் தலைவனாகிய நீயும் உன் விறலியும் அணியத்தக்க பொற்றாமரை மலரையும், பொன்னாபரணங்களையும் வரையாது கொடுத்து உங்களை வழியனுப்புவான்" என்று நவில்வதாகப் புலவர் இப்பாடலை முடிக்கின்றார்.

இப்பாட்டில் ஆங்காங்குப் பல உவமைகளை ஆசிரியர் எடுத்துக்காட்டிச் செல்லுந் திறம் போற்றுதற்குரியது. மேலும், எல்லாச் செய்திகளையும் முதலில் தொகுத்துச் சுட்டி, பிறகு ஒவ்வொன்ருக விரிக்கும் முறையையும் இவ் வாசிரியர் இதன்கண் மேற்கொண்டிருக்கின்ருர்.

9. முத்தொள்ளாயிரம்

சேர, சோழ, பாண்டியர்களைப்பற்றிய சீரிய செய்திகளைத் திரட்டித்தரும் தொன்மைமிக்க பாடல்களின் தொகுதி தான் முத்தொள்ளாயிரம். இதில் காணும் ஒவ்வொரு பாடலும் இன்பமயமாய், இலக்கிய ஓவியமாய்த் திகழ்வதை இதனேடு ஈடுபாடு கொள்பவர் எளிதாயறிவர்.

நெஞ்சையள்ளும் நிகழ்ச்சிகள்

பாண்டியன் குருதிவேல்மாறனைப் பற்றி ஒரு பாடல். கொற்கைக்குரியான் அவன்; கூடாதோரைக் குத்திக்கொன்ற தால் குருதிக் கறைபட்ட வேலை, வீரத்தின் அறிகுறியாக ஏந்தி விளங்குபவன். ஒளிமிக்க மார்பில் குளிர்சாந்தங் கொண்டவன். வேல்விழிமாதர் விரும்பும் ஆண்மையும், அறிவும், அழகும் ஒருங்கே அமையப்பெற்றவன். அவனைக் கண்டாள் ஒருத்தி; காதல்கொண்டாள். எண்ணவானிலே அவனுருவம் மின்னெளியாகத் தோன்றி மறைகின்றது. இரவும், பகலும் அவனை எண்ணிக் கண்ணீர் விடுகின்ருள். தோழியர் கண்டனர் அவள் நிலையை; அது குறித்து ஒருத்தி மற்றெருருத்தியிடம், "பைந்தமிழ் வளர்த்த பாண்டியன் கொற்கைத் துறையில்தான் முத்து விளையுமென விளம்புவர். ஆனல், அவனைக் காதலித்துக் கசிந்துருகும் இக்காரிகை யின் கண்ணுகிய கடலிலும் அது விளைகின்றதே!" என் றுரைத்து வியக்கின்ருள்.

இப்பியீன் றிட்ட எறிகதிர் நித்திலம்
கொற்கையே அல்ல படுவது—கொற்கைக்
குருதிவேல் மாறன் குளிர்சாந் தகலங்
கருதியார் கண்ணும் படும். (முத்தொள். 46.)

அவனது அகன்ற மார்பைக் கண்டு காதல்கொண்ட மங்கை

யின் தடங்கண்ணும் முத்தீனுமாம்! இப்பாடலிலல்லவா இலக்கிய இன்பம் குளவெள்ளம்போல் நிரம்பி வழிகின்றது.

அடுத்து சோழனுடைய யானையின் கொலைத்தொழிலை எடுத்துக் கூறும் ஒரு பாடல். கிள்ளிவளவனின் வன்களிறு பிளிறியவண்ணம் போர்க்களம் நோக்கிப் போகின்றது. அஞ்ஞான்று கழுகுகளும், பருந்துகளும், நரிகளும் அவ்வி யானைகளைப் பின்தொடர்ந்து செல்லுகின்றன. களம் புகுந்த கரிகள் எதிர்த்து வந்த வீரர்களை வீழ்த்திக் கொல்லுகின்றன. அப்பொழுது பறவைக் கூட்டமும், விலங்குக் கூட்டமும் களத்தில் கிடைத்த வளமிகு ஊனைத் தின்று ஆரவாரிக்கின்றன. ஆங்கு வந்துற்ற பேய்மகளிர் கொழுவிய நிணனுண்ட பேரின்பத்தால் குடல்மாலையை அணிந்து கொண்டு துள்ளிக் குதிக்கின்றனர். இவ்வரிய போர்க்கள நிகழ்ச்சியைக் கீழ்க்காணும் பாடல் உணர்த்துகின்றது.

பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படர
நாற்றிசையு மோடி நரிகதிப்ப—ஆற்ற
அலங்கலம் பேய்மகளி ராட வருமே
இலங்கிலைவேற் கிள்ளி களிறு. (முத்தொள். 74.)

கோதை யென்னும் சேரமன்னன் வீதியில் உலா வருகின்றான். அவனின் அகன்ற மார்பில் மணிகள் அழுந்திய அணி கிடந்து புரளுகின்றது; பனம்பூ மாலையும் மணத்தைப் பரப்புகின்றது. அப்பொழுது அவனைக் காணும் பொருட்டு மடந்தையர் மாடங்களில் பலபகுதிகளிலும் நிற்கின்றனர். அங்கொரு தோழி தன் தலைவியை நோக்கி, "நீ சேரனைப் பார்த்தாயா?" என்று கேட்கின்றாள். அதற்குத் தலைவி, "தோழி! அவனைக் கண்டு களித்தற்காக நம் வீட்டின் கதவண்டை போனேன். ஆனால், நாணம் வர விரைந்து கதவடைத்தேன். செல்வரிடம் பொருள் கேட்கச் செல்லும் நாணமுள்ள வறிஞர் எவ்வாறு போவதும் வருவதுமாக அலைவார்களோ அதுபோல் என் நெஞ்சும் கதவைத் திறந்து பார்த்துவிடவேண்டும் என்று கதவினருகில் போவதும், நாணித் திரும்பி வருவதுமாக அலைந்துகொண்டிருக்கின்றது" என்கின்றாள். இந்நிகழ்ச்சியை,

ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன்—நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு (முத்தொள். 123.)

என்ற பாட்டால் அறிகின்றோம்.

பொதுச் செய்திகள்

சேர, சோழ, பாண்டியர் ஒவ்வொருவர்மீதும் 900 செய்யுட்கள் வீதம் மொத்தம் 2700 செய்யுட்களைக் கொண்ட நூலென்று இதைக் கூறுவர். இச் செய்யுட்களின் சிறப்பியல்புகளை யுணர்ந்து முதன்முதலில் 1905இல் செந்தமிழ்ப் பத்திரிகை வாயிலாக இவற்றை வெளியிட்ட திரு. இரா. இராகவையங்காரவர்களும் தமது முகவுரையில் மேலே காணும் உண்மையையே கூறியுள்ளார்கள். 1938இல் முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் அடங்கிய புறத்திரட்டு என்னுந் தொகைநூலைப் பதிப்பித்து வெளியிட்ட திரு. வையாபுரிப் பிள்ளையவர்களும் முன்னுரையில் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளார்கள்.

பழைய உரையாசிரியர்கள் பலரும் ஆங்காங்கு மேற்கோள்களாக முத்தொள்ளாயிரப் பாடல்களை எடுத்தாண்டுள்ளார்கள். ஆனால், ஒருவரும் எவ்விடத்தும் அஃது 2700 பாடல்களைக் கொண்ட ஒரு பெரிய நூலென்று குறிப்பிடவில்லை. இன்று நமக்குக் கிடைத்திருப்பவை 130 செய்யுட்கள் மட்டுந்தான்.

புறத்திரட்டு முன்னுரையில் முத்தொள்ளாயிரம் 2700 பாடல்கள் கொண்டது என்ற முடிவுக்கு வந்த வையாபுரிப் பிள்ளையவர்கள், நன்கு ஆய்ந்து தெளிந்த பிறகு முத்தொள்ளாயிரத்தில் 900 பாடல்களே உள்ளனவென்றும், சேர-சோழ-பாண்டியர் ஒவ்வொருவர்மீதும் 300 பாடல்களே இயற்றப்பட்டனவென்றுங் கூறுகின்றார்.

திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் தாம் பதிப்பித்த முத்தொள்ளாயிர உரைநூலில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிறந்த ஒரு புலவர் எழுதிய பாடல்கள் முத்தொள்ளாயிரம் எனக் குறித்துள்ளார். பலரும் இந்நூலைச்

சங்ககாலத்தில் தோன்றியதாகவே கருதுகின்றனர். பேராசிரியர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையும் இக்கருத்தையே தமது இலக்கிய வரலாற்றில் வலியுறுத்தியுள்ளார். ஆனால், வையாபுரிப் பிள்ளையவர்கள் பிற்காலத்தில் வழக்கில் காணப்படும் சொற்கள் அப்பாடல்களில் வந்துள்ளதைக் கொண்டும், பிற்கால நூல்கருத்து அவைகளில் இடம் பெற்றிருப்பதைக் கொண்டும் முத்தொள்ளாயிரம் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் தோன்றியதெனக் கூறுகின்றார்.

முத்தொள்ளாயிரத்தின் பல பாடல்களும் நமக்குக் கிடைக்கப்பெறாது மறைந்துபோய்விட்டன. கிடைத்திருப்பவைகளிலிருந்து பைந்தமிழ்நாட்டு மூவேந்தரின் படைச் சிறப்பையும், கொடைச் சிறப்பையும், நகர்க்களிப்பையும், நாட்டுச் செழிப்பையும், போரையும், புகழையும் அறிகின்றோம். இதனுடைய பாடல்கள் பல்சுவையழகும், இலக்கிய நலமும் கொண்டிலங்குவதோடு சிறப்புமிக்க அறக்கருத்துக்களும் செறியப்பெற்றுள்ளவை.

10. பதினெண்பாக்கள்

பொதுச் செய்திகள்

அதிக அடிகளைக் கொண்டு அகவல் முதலியவற்றால் ஆகிவரும் பாக்களின் தொகுதியை மேற்கணக்கென்றும், நான்கு முதலிய அளவு குறைந்த அடிகளால் வரும் செய்யுட்களின் தொகுதியைக் கீழ்க்கணக்கென்றும் இரு பெரும் பிரிவாகப் பிரித்தார்கள் பெரும்புலவர்கள்.

அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொருள் இன்ப மடுக்கி அவ்வகை
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்.

வெண்பாவில் வருவது கீழ்க்கணக்கெனவுங் கூறுவர். கீழ்க்கணக்கில் பதினெண்பாக்கள் உள. அவை,

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு

என்னும் பழைய வெண்பாவால் தெரியவருகின்றன. இவை ஏனைய சங்க நூல்களைப்போல் சொற்பொருட் சிறப்புக்கள் வாய்ந்து மக்கள் நல்வாழ்வுக்குப் பேருதவி புரியும் பெருமை வாய்ந்தவை.

1. திருக்குறள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் முப்பால் என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவர் செய்த திருக்குறளாகும். இது பிற கீழ்க்கணக்கு நூல்களைவிடக் காலத்தால் தொன்மை யானது; கருத்தால் அருமையானது.

அமைப்பும் சிறப்பும்

இதன் அறத்துப்பால் கடவுள் வாழ்த்து முதல் ஊழ் முடிய 38 அதிகாரங்களையும், பொருட்பால் இறைமாட்சி முதல் கயமை முடிய 70 அதிகாரங்களையும், காமத்துப்பால் தகையணங்குறுத்தல் முதல் ஊடலுவகை முடிய 25 அதி காரங்களையுங் கொண்டு குவலயம் போற்ற விளங்கு கின்றன. இந்நூல் 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்துப்பாடல் வீதம் 1330 அரும்பாடல்களையுங் கொண்டது. வெண்பாவின் இலக்கணங்களைப் பெற்று இரண்டடியில் இலங்குவதால் இது குறள்வெண்பா நூலாகும்.

திருக்குறளின் பாடல்களும், அடிகளும், கருத்துக் களும் சங்கநூல்களில் வரும் பல பாக்களில் எடுத் தாளப்பட்டுள்ளன. சங்ககாலத்திற்குப் பிறகு தோன்றிய நூல்களிலும் இதனாட்சியைக் காணலாம். நம் நாட்டு நல்மொழிகளிலும், அயல் நாட்டு ஆங்கிலம், செர்மன், பிரெஞ்சு, இலத்தீன், கிரீக்கு மொழிகளிலும் குறள் மொழி பெயர்த்துப் போற்றப்பட்டுள்ளது. மேலைநாட்டுப் பேரறி ஞர்கள் இதனருமை பெருமையைப் பாராட்டியுள்ளார்கள். டாக்டர் போப்பும், வீரமாமுனிவரும் திருக்குறளிடத்து அளத்தற்கரிய ஈடுபாடு கொண்டிருந்தனர்.

திருவள்ளுவமாலையானது திருவள்ளுவரைப்பற்றியும், திருக்குறளைப்பற்றியும் சிறப்புறப் பேசுகின்றது. சீத்தலைச் சாத்தனார்,

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்

என்று திருவள்ளுவமாலையில் போற்றுகின்றார். "வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழியை" எல்லோரும் ஏற்றுக்கொள்வர் என்று கல்லாடரும் சொல்லுகின்றார்.

திருக்குறள் உலகமக்களுக்கெல்லாம் உரிய ஒரு பொது நூல்; குலவேறுபாடும், சமயவேறுபாடும் கருதாதது. மநுநீதி போன்ற நூல்களோ மக்களில் பாகுபாடு கருதி அறம் பேசக்கூடியவை. இதை நன்குணர்ந்த மனோன்மணீய ஆசிரியர்,

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி யொருகுலத்துக் கொருநீதி ?

என்று மநுநீதி குலவேறுபாடு கருதி நீதி பேசுவதையும், அவ்வியல்பு திருக்குறளுக்கு இல்லாச் சிறப்பையும் செப்புகின்றார்.

பொதுச் செய்திகள்

அறத்துப்பாலில் தனிவாழ்விற்கும், பொது வாழ்விற்கும் வேண்டற்பாலது அறமென்கின்றார். அதுவும், "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்பதால் மனத் தூய்மையே அறவாழ்க்கையின் அடிப்படையென்பதை அழகுறச் சொல்லுகின்றார். இல்லறம் சிறக்க ஒருவனுக்கு வாய்ப்பவள் நல்லவளாக இருக்கவேண்டுமென்பதையும், பிள்ளைகளைப் பெற்றெடுப்பது அதன் பேறு என்பதையும், அன்புடையவர்களாக வாழ்வதே வாழ்வின் குறிக்கோள் என்பதையும், துறவறத்தின் பண்பு நலன்கள் இன்னவென்பதையும் எடுத்துரைக்கின்றார். பொருட்பாலில் அரசியல், பொருளியல் வாழ்விற்குரிய அருங்கருத்துக்களை உள்ளங்கொள்ள உரைக்கின்றார். நாடெனப்படுவது உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும் இல்லாததாக, வளமும், வாழ்வும் பெற்று விளங்கவேண்டுமென்பது வள்ளுவர் எண்ணம். காமத்துப்பாலில் களவு ஒழுக்கத்

தையும், கற்பு ஒழுக்கத்தையும் இலக்கியச் சுவையோடு இயம்புகின்றார். வாழ்க்கை அறத்தின் அடிப்படையில் அமையவேண்டும் என்பதுவும், அதன்வழி பொருளைப் பெற்று இன்பத்தைத் துய்க்கவேண்டும் என்பதுவும் திருக்குறள் தரும் சீரிய கருத்துக்களாகும்.

குறள் உருவத்தில் இலக்கியமாகவும், அதன் உயிர்த் துடிப்பில் அறிவுக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இருபகுதியையும் பயன்இலக்கியப் (Applied Literature) பகுதியாகவும், காமத்துப்பாலை இன்பஇலக்கியப் (Pure Literature) பகுதி யாகவுங் கொள்ளலாம்.

i. திருக்குறள் ஒரு பயனிலக்கியம்

ஓர் இலக்கியம் அதனோடு ஈடுபாடுகொள்வோர்க்குப் பயனை நல்குமேல் அதற்குப் பயனிலக்கியமென்று பெயர். பயனென்பது அறம், பொருள், இன்பம், வீடாகும். இவற்றையே உறுதிப்பொருள் என்பர் உயர்ந்தோர். நம்மவர் நூல் செய்தக்கால் இப்பயன் கருதியே அதைச் செய்தனர்.

இலக்கியமென்பது ஒரு கலை. அக்கலை வாழ்க்கை யினுடையது; வாழ்க்கையால் அமைவது; வாழ்க்கைக்காக உருவாகுவது. எனவே, இலக்கியக்கலை வாழ்க்கைக்குப் பயன்படவில்லை என்றால் அதைக் கற்பதும், கேட்பதும் வீணாகும். இவற்றை எல்லாம் நன்குணர்ந்துதான் வள்ளுவப் பெருந்தகை வெல்லுஞ் சொற்களால் தம் இலக்கியத்தைப் பயனுடைய இலக்கியமாக ஆக்கி அருளி யிருக்கின்றார்.

குறள் கூறும் அறம்

வள்ளுவர் வாழ்க்கைக்கு அறங் கூறுகின்றார். வாழ்க்கை என்பது அகமென்றும், புறமென்றும் இரு பிரிவாகும். ஆகவே, அகவாழ்விற்கு உரிய அறத்தையும், புறவாழ்விற் குரிய அறத்தையும் திருக்குறளிலே நாம் காணலாம்.

இல்லறமென்பது ஓரறமட்டுமன்று; ஈரறமாகும். இவ்விரறமும் சிறந்தால்தான் இல்வாழ்வு சிறக்கும். இதற்கு அடிப்படை மனமே. மனத்தூய்மையே அறம். களவு வாழ்விலோ, கற்பு வாழ்விலோ ஈடுபடுகின்ற ஒருவனுக்கோ, ஒருத்திக்கோ மாசற்ற மனம் இல்லையேல் அகவாழ்வு எந் நிலையுறும்? புறவாழ்வில் ஈடுபடுகின்றவனுக்கோ, ஈடுபடு கின்றவளுக்கோ மனத்துக்கண் மாசு இருக்குமேல் கையாடல் செய்வதும், கையூட்டுப் பெறுவதும் என்று குறையும்? பொருமையும், பூசலும் என்று போகும்? அழிபசியும், அமைதியின்மையும் என்று மாயும்?

மனத்தூய்மையாகிய அறமே ஒருயிர்க்கு ஆக்கமாகும். அஃதே ஒருவன் முயன்று பெறவேண்டிய சிறப்பையும், ஈதல் புரிதற்கு வேண்டிய செல்வத்தையும் நல்கும். இவ்வுண்மையை,

> சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
> ஆக்கம் எவனோ உயிர்க்கு. (குறள்–31.)

என்னும் குறட்பா உணர்த்துகின்றது.

ஒருவன் செய்யத் தக்கது அறமே என்றும், செய்யத் தகாதது பழியே என்றும், அறஞ்செய்து வாழ்வோன் இன்பத்தையும், மறுமைப் பேரின்பத்தையும் பெறுவான் என்றும் திருவள்ளுவர் கூறுகின்றார்.

> வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும். (குறள்–50.)

இல்லறம் புரிவானுக்கு வாய்க்கும் பெரும் பேருக, அவனுக்கு வாழ்க்கைத் துணையாகின்றவள் கற்பினின்றும் வழுவாதவளாகவும், சோர்வில்லாதவளாகவும் இருக்க வேண்டும் என்பதை,

> தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள்-56.)

என்ற குறட்பாவால் குறளாசிரியர் உணர்த்துகின்றார்.

இல்லறத்தான் மக்களைப் பெற்றுப் போற்றுவது அறமாகும். அன்புகொண்டு வரும் விருந்தினரை வைகலும்

ஓம்புதலும், இனியவை கூறுதலும், நடுவுநிலைமை தவறாமையும், அடக்கமுடைமையும், ஒழுக்கமுடைமையும் இல்லறம் புரிவோர் மேற்கொள்ளத்தக்கவையாகும்.

பொருட்பாலிலும் புறவாழ்விற்குரிய அரிய அறங்களை வள்ளுவனார் வகுத்துக் கூறுகின்றார். நாட்டை ஆளுகின்ற அரசன் அறநூல்சொல்லுகின்ற நெறி பிறழாது ஆண்டால், அவன் மக்களால் இறையென்று போற்றப்படுவான் என்பதை,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (குறள்–388.)

என்ற குறட்பா அறிவிக்கின்றது.

செய்கின்ற வினைகள் அறம் வழுவாதவையாக இருக்க வேண்டும். பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாய் பசியால் துடித்தாலும், பெரியோர் பழிக்கும்படியான செயலைச் செய்து தாயின் பசியைப் போக்க முனைதல் கூடாது என்பது வள்ளுவர் அறுதியிட்டுக் கூறும் அறம்.

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (குறள்·656.)

பொருள் தேடற்காகத் தலைவன் தலைவியைப் பிரிய நினைத்திருக்கின்றான். அஃதை அவளிடம் எடுத்துக் கூறி, விரைந்து திரும்புவதாகவும் உரைக்கின்றான். அதைக்கேட்ட தலைவி மிகவும் வருந்தி,

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை (குறள்–1151.)

என்கின்றாள். தலைவன் பிரிந்து செல்லுகின்றபொழுது தலைவி அதுகுறித்து வருந்துவது அறமாகும்.

திருக்குறள் வாழ்வதற்கு உரிய அறங்களை வகுத்துக் கூறும் நூல்; தமிழில் காணும் அறநூல்களிலெல்லாம் தலையாயது.

திருக்குறள் ஓர் அறிவுக் களஞ்சியம்

வள்ளுவர் பல்துறைகளிலும் பேரறிவு வாய்க்கப் பெற்றவர். சமுதாயம் சீர்படுதற்கான பல அறிவுரைகளையும் தம் நூலில் தருகின்றார். மனிதன் அன்பிற்கும், அருளிற்கும் உள்ளத்தில் இடங்கொடுப்பானேயாகில் சமுதாயத்தில் பிணக்குகள் மறையும்; ஏற்றத்தாழ்வுகள் குறையும்; மனிதப் பண்பு வளரும். பிறப்பினால் மனிதன் உயர்வு தாழ்வு பேசுகின்ற மூடப்பழக்கம் மறையும்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'

என்னும் வள்ளுவரின் ஒப்பற்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்த மன்பதை தழைத்தோங்கும்.

வள்ளுவர் சிறந்த பொருளியல் வல்லுநர். மனிதன் இவ்வுலகில் வாழ்வதற்குப் பொருள் மிக இன்றியமையாதது என்பதை நன்குணர்ந்தவர். ஆகவேதான்,

அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு (குறள்–247.)

என்ற குறட்பாவில் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றார்.

சமுதாயத்தில் தனி வாழ்வும் பொது வாழ்வும் சிறக்க பொருள் தேவை. ஆயினும், அதைப் பாதுகாக்க நல்ல அரசு இன்றியமையாதது என்பதை வள்ளுவர் நன்குணர்ந்திருந்தார். நாட்டை ஆளுகின்றவர்கள் நாட்டு வருவாயைப் பெருக்கும் வழிகளை நாளும் உண்டுபண்ண வேண்டும். வருகின்ற வருவாயைத் தக்க முறையில் தொகுக்க வேண்டும். அதை யாரும் கையாடல் செய்யாமல் காக்க வேண்டும். அவ்வாறு காத்த அப்பொருளை திட்டங்கள் தீட்டிச் செலவிடவேண்டும். இவ்வரிய கருத்துக்களை,

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு (குறள்–385.)

என்ற குறட்பாவால் கூறுகின்றார். வள்ளுவரின் சமூக இயல், பொருளியல், அரசியல் கருத்துக்கள் இன்றைய

உலகப் பேரறிஞர்களும் கண்டு வியக்கும் கருத்துக்கள். இஞ்ஞாலம் அச்சத்தைத் தவிர்த்து அமைதியில் திளைக்க வேண்டுமென்றால் திருவள்ளுவரின் அறிவுரைகளைப் பொன்னேபோற் போற்றுதல் வேண்டும்.

ii. திருக்குறள் ஓர் இன்ப இலக்கியம்

திருக்குறளை நாம் அற நூலாகவும், அறிவு நூலாக மட்டும் கருதிவிடக்கூடாது; இலக்கிய இன்பத்தைப் பயக்கும் நூலாகவும் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு குறளை யும் இலக்கிய நயம் அமையவே ஆசிரியர் செய்திருக்கின்றார். உவமைகளும், உருவகங்களும் குறட்களில் இடம் பெற்றி ருப்பதன் காரணம் படிப்பார்க்கும், கேட்பார்க்கும் அவை இன்பம் பயப்பதற்கே. காமத்துப்பால் திருக்குறளில் இலக்கியச் செறிவு மிகுந்த பகுதியாகும்.

தலைவன் ஒருவன் தலைவியின் அழகு நலன்களைப் புனைந்துரைக்கின்றான். அவளுடைய பாதங்கள் அனிச்ச மலரை விட, அன்னத்தின் தூவியைவிட மிக மெல்லியவை யாம். இதை,

> அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
> அடிக்கு நெருஞ்சிப் பழம் (குறள்-1120.)

என்ற குறட்பா தெரிவிக்கின்றது.

வள்ளுவர் குறட்பாக்களில் நாடகச் சுவையையும் புகுத்தி யிருக்கின்றார். ஒரு தலைவனும், தலைவியும் பேசிக்கொண் டிருக்கும்பொழுது தலைவன் தும்மினான். அப்பொழுது தலைவி விரைந்து தலைவனுக்கு ஊறு வரக்கூடாதென்று வாழ்த்தினாள். மறுகணமே கண்களைக் கசக்கிக்கொண்டு, 'என்னைத் தவிர வேறு எவள் உங்களை நினைத்தாள்?' என்று கேட்டு அழுதாள். இவ்விலக்கியக் காட்சியை,

> வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
> யாருள்ளித் தும்மினீர் என்று (குறள்-1317.)

என்ற திருக்குறள் வரைந்து காட்டுகின்றது.

இலக்கிய இன்பம் பெற விழைவோர் களவியல், கற்பிய லாகிய காமத்துப் பாலைப் படித்தல் வேண்டும். வள்ளுவரின் கற்பனைத் திறனைக் காட்டிநிற்கும் ஊட்டமுள்ள பாக்கள் அப்பகுதியில்தான் உள.

திருக்குறள் சொல்லழகும், பொருளழகும் மிக்கது; தெளிவும், விளக்கமும், சிந்தை மகிழும் செய்திகளும் கொண்டொளிர்வது.

மனிதன் ஒழுக்கத்தோடு வாழ்வதற்கும், வளமாக வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுவற்கும் உரிய வழிகாட்டி யாக இந்நூல் இருப்பதோடு, உலகில் தோன்றிய அறிஞர் களுள் பல்துறையிலும் நுண்ணறிவு பெற்றவர் வள்ளுவர் ஒருவர்தான் என்பதையும் உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டிருப்பது. இவ்வுண்மையையறிந்த பாரதியார்,

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை

என்று பாடிப் பரவுகின்றார்.

2. நாலடியார்

பெயர்க் காரணம்

'நாலடி' என்பது நான்காகிய வெண்பாக்களின் அடிகளையுடைய நானூறு பாக்களின் தொகுதியாகும். இச்செய்யுள் தொகுப்பு நானிலத்தோர்க்கு நலம் பயக்கும் சிறப்பால் 'ஆர்' விகுதி பெற்று நாலடியார் என்று விளங்கு கின்றது. இதற்கு நாலடி நானூறு என்றும் பெயருண்டு.

நூல் தோன்றிய வரலாறு

பாண்டிய நாடு அடைந்த எண்ணாயிரஞ் சமண முனிவர் களை உக்கிரப்பெருவழுதி என்பான் உண்டி, உறையுள் கொடுத்துக் காத்தான். பன்னாளாயின பின் அம்முனிவர்கள் அவரவர்களுக்குரிய நாடேகப் பாண்டியனிடம் பரிந்து கேட்டனர். அவர்களைப் பிரிந்து வாழ விரும்பாத வழுதி

விடை கொடாதிருந்தான். அஃது அறிந்த முனிவர் பெருமக்கள் ஆளுக்கொரு பாடலாய் எண்ணாயிரம் பாடி அவரவரது இருக்கையின் கீழிட்டுவிட்டு இரவில் எவருக்கும் தெரியாது மதுரையை நீங்கிச் சென்றனர். மறுநாள் காலை அந்நிகழ்ச்சியை அரசன் அறிந்து அப்பாடல்களெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாததைக் கண்டு மன வருத்தங் கொண்டு அவைகளை வையையாற்றில் எறியுமாறு ஏவினான். எறியுண்ட ஏடுகளில் நானூறு எதிரேறிக் கரை சேர்ந்தன. அஃதறிந்த அரசன் வியந்து அப்பாடல் நானூற்றையும் தொகுத்து நாலடியார் எனப் பெயரிட்டழைத்தான். இவ்வுண்மையை,

மன்னன் வழுதியர்கோன் வையைப்பே ராற்றின்
எண்ணி யிருநான்கோ டாயிரவர்—உன்னி
எழுதியிடும் ஏட்டில் எதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார்

என்னும் வெண்பாவால் அறிகின்றோம்.

நூலின் சிறப்பு

நாலடியின் சிறப்பைப் பலரும் பலபடியாகப் பாராட்டியுள்ளனர். 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலுமிரண்டுஞ் சொல்லுக்குறுதி' என்பதாலும், 'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்பதாலும், 'சொல்லாய்ந்த நாலடிநானூறு நன்கினிதா என்மனத்தே, சீலமுடன் நிற்கதெளிந்து' என்ற வெண்பாவின் அடிகளாலும் இதனருமையைத் தெரிகின்றோம். இந்நூலின் காலம் கடைச்சங்ககாலம்.

நூலின் அமைப்பு

நாலடியார் அறத்துப்பாலென்றும், பொருட்பாலென்றும், காமத்துப்பாலென்றும் முப்பகுப்பையுடையது. அறத்துப்பாலில் துறவறவியல், இல்லறவியல் என்று இரண்டு இயல்களும், பொருட்பாலில் அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகையியல், பன்னெறியியல் என ஏழு இயல்களும், காமத்துப்பாலில் இன்ப துன்பவ்யல் என இரண்டு இயல்களும் உள்ளன.

இதில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் பல தேயத்தவரும், பல சமயத்தவரும் கொண்டொழுகும்படி பொதுவாய் உள்ளன. இதன் காரணத்தால் பிற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது திருக்குறளில் காணும் பல கருத்துக்களைத் தழுவி நிற்கின்றது. இந்நூலை இயல், அதிகாரங்களாகப் பாகுபாடு செய்தவர் பதுமனார் என்னும் சமணர். அவர் இதற்கு உரையும் வகுத்தார். இதன்கண் சமணசமயத்திற்கு இன்றியமையாதனவாக யாக்கை நிலையாமை, பிறர்மனை நயவாமை முதலியவை வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன.

சிறப்புச் செய்திகள்

கல்வியின் அருமையைப் பொருட்பாலில் வந்துள்ள ஒரு செய்யுள் கூறுகின்றது.

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

மேலும், 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்றும், 'கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகின், நல்லறிவு நாளுந் தலைப்படுவர்' என்றும் கல்வியைப்பற்றிப் பல கருத்துக்கள் வருகின்றன.

நமக்கு வாய்க்கும் செல்வம் நிலைத்து நிற்காதது. ஆகவே, வாய்த்தபோழ்தே அதைக் கொண்டு அறச்செயல் செய்ய முனைதலே முறை. அதை நாம்மட்டும் அநுபவிக்காது மற்றவரோடும் சேர்ந்து அநுபவிக்க வேண்டும். இவ்வரிய கருத்தை,

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்

என்ற பாட்டு அறிவிக்கின்றது.

பெற்று வளர்த்த தாய் தந்தையரைப் பிள்ளைகள் போற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கறையானால் அரிக்கப்பட்ட ஆலமரத்தை அதன் விழுதுகள் விழாதவாறு பாதுகாத்தலைப்போல் தந்தை தளர்வுற்றிருக்குங்கால் தனயன் குடும்பத்தைத் தாங்கவேண்டும். இவ்வுயர் கருத்தை,

சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைக்கட் டோன்றின்தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்

என்ற பாடல் உணர்த்துகின்றது.

மனிதன் அறம் இன்னதெனத் தெரிந்து அதன் வழி நின்று உய்வதற்குரிய அறக்களஞ்சியமாக நாலடியார் விளங்குகின்றது. நலம் பயக்கும் நற்கருத்துச் சோலையாய், இன்பம் பயக்கும் இலக்கியக் கருவூலமாய் இஃது இருப்பதால் தான் திருக்குறளோடு இணைத்துப் பேசப்படுவது இயல்பு.

3. பழமொழி

பழமொழியை யாத்தவர் குறுநில மன்னராகிய மூன்றுறையர் என்பவர். இதன்கண் நானூறு பாக்கள் உள. இந்நூலில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பழமொழியை அமைத்து அதற்கு விளக்கங் கூறும் முறையில் ஆசிரியர் ஆக்கியிருப்பதால் பழமொழி என்னும் சிறப்புப் பெயர் இந்நூலுக்குப் பொருந்துவதாயிற்று. ‘குலவித்தை கல்லாமற் பாகம்படும்’ என்னும் பழமொழியை,

உரைமுடிவு காணான் இளமையோ னென்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்

என்ற பாட்டில் அமைத்து விளக்கியுள்ளார். கரிகாற் சோழன் இளையோனாக இருக்கும்போழ்தே இரு முதியவரின் வழக்கைக் கேட்டு முறை வழங்கிய செய்தி இப்பாட்டில் குறிக்கப்பட்டுள்ளது. முறை வழங்கும் திறமை அவன் குலத் தொழில் ஆகையால் கல்லாமலே அவ்வாற்றல் அவனுக்கு வாய்த்தது.

இந்நூல் ஓர் அறிவுக் களஞ்சியம்; மணியும், முத்தும், பவளமும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் பேழைபோல் அறிவுரைகளும், அறவுரைகளும் தொகுத்து வைக்கப்பட்டிருக்கும் சொற்செல்வப் பேழையாகும்.

4. நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகையின் ஆசிரியர் விளம்பி நாகனார். கடிகை என்பது துண்டம் என்று பொருள்படும். ஆகவே, நான்மணிக்கடிகை என்னும் தொடருக்கு நான்கு மாணிக்கத் துண்டங்கள் என்பது பொருளாகும். இந்நூலின் ஒவ்வொரு பாட்டிலும் மாணிக்கக் கட்டிகளை ஒத்த நான்கு உறுதிப் பொருள்களை அழகுற இணைத்து ஆசிரியர் பாடியுள்ளார்.

நிலத்துக்கு அழகு பயப்பது நெல்லும், கரும்பும்; குளத்துக்கு அணி தருவது தாமரைமலர்; பெண்மைக்குப் பெற்றியளிப்பது நாணம்; தனக்குச் சிறப்புத் தருவது அறம். இவ்வரிய செய்திகளை,

நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்
குளத்துக்கு அணியென்ப தாமரை பெண்மை
நலத்துக்கு அணியென்ப நாணம் தனக்கணி
தான்செல் உலகத்து அறம்

என்னும் பாடல் வழங்குகின்றது.

இந்நூலில் 101 பாக்கள் உள. வாழ்விற்குத் தேவையான நற்கருத்துக்களைக் கூறும் நன்னூலாகும் இது.

5. திரிகடுகம்

திரிகடுகத்தை நல்லாதனார் செய்துள்ளார். கடவுள் வாழ்த்துடன் 101 வெண்பாக்களைக் கொண்டது இந்நூல். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று பொருள்களால் ஆன மருந்து உடல்நோயைப் போக்கவல்லதைப்போல இந்நூலில் காணும் கருத்துக்கள் உயிர்க்கு உறுதியளிப்பனவாகும்.

ஆணவங் கொண்டு அலேவதும், வீண் கோபம் கொள்ளுவதும், எல்லாப் பொருள்களையும் தானே அடைய ஆசைப்படுவதும் இழிந்த பண்புகளாகும். இவை ஒருவனது செல்வத்தைச் சிதைத்துவிடும். இவ்வுண்மையை,

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை

என்ற பாட்டு உரைக்கின்றது.

இந்நூலில் நல்ல சொல்லாட்சிகளும், கருத்துக் கோர்வையும் உள்ளன.

6. சிறுபஞ்சமூலம்

இந்நூலை இயற்றியவர் காரியாசான் என்பவர். சிறுபஞ்சமூலம் என்னும் தொடர் சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், கண்டங்கத்திரி வேர் ஆகிய ஐந்து சிறிய வேர்களைக் குறிக்கின்றது. இவ்வைந்து வேர்களால் ஆகிய மருந்து உடல்நலத்தைப் பேணுவது போல் சிறுபஞ்சமூலப் பாடல் ஒவ்வொன்றிலும் காணும் கருத்துக்கள் உயிர் நலத்தைப் பேணுவன.

ஒருவன் செய்த பிழையைப் பொறுத்தல் பெருமை என்றும், அவன் இழைத்த தீமையை எண்ணி இருத்தல் சிறுமை என்றும் இந்நூல் கூறுகின்றது. அருளுடையயான்கண் அறமிருக்கும் என்பதுவும், அவன் பழியைச் செய்யான் என்பதுவும் சிறுபஞ்சமூலத்தின் அருங் கருத்துக்கள்.

இந்நூல் கடவுள் வாழ்த்துடன் 97 வெண்பாக்களை உடையது. காரியாசான் வடமொழிப் பயற்சியுடையவராகையால் இதன்கண் வடமொழிக் கருத்துக்கள் மலிந்துள்ளன.

7. ஆசாரக்கோவை

இந்நூலைச் செய்தவர் பெருவாயின்முள்ளியார். இதன் பால் பல ஆசாரங்கள் கூறப்பட்டுள்ளன. ஆசாரக்கோவை என்பதற்கு ஒழுக்கங்களின் தொகுதி என்பது பொருள்.

பெரியாரிடமும், ஆசிரியரிடமும் ஒருவர் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பதைக் கீழ்க்காணும் ஆசாரக்கோவைப் பாடல் தெரிவிக்கின்றது.

நகையொடு கொட்டாவி காறிப்புத் தும்மல்
இவையும் பெரியார்முன் செய்யாரே செய்யின்
அசையாது நிற்கும் பழி.

தூய்மை, மரியாதை, ஒழுக்கம் முதலியவைபற்றித் தெளிவாய்த் தெரிந்துகொள்ளுதற்கு இந்நூல் உறுதுணை புரியும்.

8. ஏலாதி

ஏலாதியை ஆக்கிய ஆசிரியர் கணிமேதாவியார் ஆவார். இதன் ஒவ்வொரு பாடலும் உயிருக்கு உறுதுணையாகிய ஆறு உருதிப்பொருள்களைக் கூறுகின்றது. இதில் கடவுள் வாழ்த்தோடு எண்பத்தொரு பாடல்கள் உள்ளன. பொய்யாமை சிறந்ததென்பதை,

பொய்யுரையான் வையான் புறங்கூருன் யாவரையும்
மெய்யுரையான் உள்ளனவும் விட்டுரையான்—எய்யுரையான்
கூந்தல்மயி லன்னுய் குழீஇயவான் விண்ணேர்க்கு
வேந்தனும் இவ்வுலகம் விட்டு

என்னும் பாடல் போற்றியுரைக்கின்றது.

9. இன்ன நாற்பது

இதனை இயற்றியவர் கபிலர். இதில் கடவுள் வாழ்த் தோடு 41 பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு செய்யுளிலும்

துன்பம் தருவனவாய நான்கு பொருள்கள் கூறப்படு கின்றன.

> கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா
> நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா
> கடுமொழி யாளர் தொடர்பின்னா இன்னா
> தடுமாறி வாழ்தல் உயிர்க்கு.

10. இனியவை நாற்பது

இந்நூலை இயற்றிய ஆசிரியர் பூதஞ்சேந்தனார். கடவுள் வாழ்த்தோடு 41 வெண்பாக்கள் உள்ளன. ஒவ்வொரு பாட்டிலும் இனிய அறிவுரைகள் கூறப்பட்டுள்ளன.

> கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே
> உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே
> எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
> ஒளிபட வாழ்தல் இனிது.

11. முதுமொழிக் காஞ்சி

இதைச் செய்தவர் மதுரைக் கூடலூர்கிழார். இந்நூலுள் நூறு குறள்வெண்செந்துறைகள் வந்துள்ளன. உண்மை வழி நிற்றற்கு உரிய அறவுரைகள் இதன்கண் கூறப்பட் பட்டுள்ளன. சிறந்தவை இன்னவை என்பதை,

> "ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
> ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"

> "மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை"

என்ற பாடல்கள் காட்டுகின்றன.

12. திணைமாலை நூற்றைம்பது

இந்நூலை யாத்தவர் ஏலாதியைச் செய்த கணிமேதாவியார். குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் ஆகிய ஐந்து நிலங்களுக்கும் உரிய 153 பாக்கள் இதன்கண் உள. பல நிலங்களின் இயற்கை அழகுகள் இதில் வருணிக்கப்பட்டுள்ளன; மக்களின் பழக்க வழக் கங்கள் சிலவும் கூறப்பட்டுள்ளன.

13. ஐந்திணை எழுபது

இதன் ஆசிரியர் மூவாதியார். அகப்பொருளைக் கொண்ட 70 பாக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அக்காலப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியன இதன் பாக்களால் புலனாகின்றன. சான்றவர் கேண்மை என்றும் நன்றே பயக்கும் என்பதை,

> சான்றவர் கேண்மை சிதைவு இன்றாய் ஊன்றி
> வலிஆகி பின்னும் பயக்கும்

என்ற பகுதி உணர்த்துகின்றது.

14. ஐந்திணை ஐம்பது

இதை இயற்றியவர் மாறன் பொறையனார். இதில் ஐந்து நிலங்களுக்குரிய அகப்பொருள் பாக்கள் 50 உள்ளன. ஆயர் குழலூதி பசுக்களை மேய்த்தல், மகள் நோய்க்குத் தாய் வேலனை நேர்ந்து மறியறுத்து செந்நீரைத் தெளித்து வெறியாட்டயர்தல் போன்ற செய்திகள் இந்நூலில் வந்துள்ளன.

15. திணைமொழி ஐம்பது

இது கண்ணன் சேந்தனாரால் செய்யப்பட்டது; அகப்பொருள்களைக் கூறும் 50 பாடல்களைக் கொண்டது தலைமகனைத் தோழி இரவுக்குறி நயப்பித்தது, பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது, தலைமகள் வாயில் மறுத்தது போன்ற அகத்துறைகள் பலவும் இதன்கண் வந்துள்ளன.

16. கைந்நிலை

இதனாசிரியர் புல்லங்காடனார். இந்நூலும் ஐந்திணை ஒழுக்கம்பற்றியே கூறுகின்றது. இதன்கண் 60 பாடல்கள் உள்ளன. பாசம், ஆசை, இரசம், கேசம், இடபம், உத்தரம் போன்ற வடசொற்கள் இதன் பாக்களில் வந்துள்ளன. பிரிவிடை ஆற்றாத தலைவி தோழிக்குச் சொல்லியது, பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது போன்ற அகத்துறைகள் பல கைந்நிலையில் காணப்படுகின்றன.

17. கார்நாற்பது

கார்நாற்பதை மதுரைக் கண்ணன் கூத்தனூர் இயற்றியுள்ளார். இதில் 40 வெண்பாக்கள் உள்ளன. கார்காலத்தில் வருவதாகச் சொல்லிச் சென்ற தலைவன் வராததால் தலைவி வருந்துவதும், தோழி அவளுக்கு ஆறுதல் கூறுவதும், தலைவன் தலைவியை நினைந்து கூறலுமாகிய அகப்பொருள் துறைகள் நிறைந்து காணப்படும் நூல்.

18. களவழிநாற்பது

இதைப் பாடியவர் பொய்கையார். தம் மன்னன் கணைக்கால் இரும்பொறையைச் சோழன் கோச்செங்கணனது சிறையினின்றும் மீட்கப் பாடியது. இதன்கண் சோழனின் போர்க்கள வெற்றி வியந்து பாடப்பட்டுள்ளது. மேலும், நால்வகைச் சேனைகளின் போர்த்திறமும், போரின் கொடுமையும் பேசப்படுகின்றன. சோழன் பெரும் போர் உடற்றி தெவ்வரை வென்ற போர்க்களத்தில் அறுந்து வீழ்ந்த வீரர்களின் குடல்களைக் கௌவிக்கொண்டு இழுக்கும் குறுநரிகள் கட்டுத்தறியில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கும் நாய்களை ஒத்து இருக்கும் என்ற செய்தி படிப்போரின் நெஞ்சத்தில் அச்சத்தை விளைவிக்கும் செய்தியாகும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் மனிதன் நலமுற வாழ்வதற்குரிய அறக் கருத்துக்களைக் கூறுவதால் அற(நீதி)நூல்களாகக் கொள்ளத்தக்கவை. நம் முன்னோர் அறநெஞ்சங் கொண்டோரென்பதையும், அறவாழ்வு வாழ்ந்தோர் என்பதையும், அறத்தை உரைத்தவர் என்பதையும் சிறப்புற இந்நூல்கள் தெரிவிக்கின்றன. எனவே, இப்பல்லறப்பனுவல்கள் நாம் நல்லறமுடையவர்களாக வாழ்வதற்குப் பயன்படும் நல்லிலக்கியங்களாகும்.

11. சிலப்பதிகாரம்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் கடைச்சங்கத்து இறுதியில் தோன்றிய முத்தமிழ்க் காப்பியம். இளங்கோவடிகளால் எழிலுருப் பெற்று இலக்கியப் பூங்காவாய் விளங்கிக்

கொண்டிருப்பது. இதன்கண் மூவேந்தர் பெருமை, முத்தமிழ்நாட்டருமை பேசப்படுகின்றன. முக்கருத்துக் களின் முழு விளக்கமாய் இந்நூல் அமைந்திருப்பதும் நாம் சிந்திப்பதற்குரியது.

கருத்தும் கதையும்

சிலம்பின் பதிகத்தில்,

அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் ருவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்

(பதிகம் : 55-60.)

என்று வருகின்ற வரிகள் சிலம்பு விளம்பும் சிறந்த செய்தி களாக விளங்குகின்றன. நீதியினின்றும் தவறுகின்ற அரசியல் வினைஞரை அறக்கடவுள் அழிக்கும் என்பதை நெடுஞ்செழியன் வாழ்க்கையிலிருந்து நாம் அறிகின்றோம். நல்லவனும் கோவலனைப் பொற்கொல்லன் கள்வனென்று கூற அதைக் கேட்டு, 'கள்வனைக் கொன்றச் சிலம்பு கொணர்க' என்றான் செழியன். அரசன் ஆராயாததால் — அறத்தைப் பாராததால் கண்ணகி அணிமணிச் சிலம்பு உடைத்து அரசனது அறமற்ற செயலை அறிவிக்க,

மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகவென் ஆயுள்

(வழக் : 76-77.)

என்று அரியணையிலிருந்து வீழ்ந்திறந்தான் பாண்டியன்.

கற்பைக் காத்துக் கணவனுக்காக வாழ்ந்தவள் கண்ணகி. கோவலன் மாதவி நல்லாளிடம் சென்று மயங்கி இருந்தநேரத்தும் கண்ணகி தன் கணவனைக் கடிந்துரைத் தாளல்லள் ; கண்கண்ட தெய்வமாகவே கருதினாள். கடற் கரையில் மாதவியைப் பிரிந்து வந்த நேரத்தும் மனமுவந்து ஏற்று மதுரையை நோக்கிக் கணவனோடு சென்றாள். ஆங்குப் பாண்டிய மன்னன் கோவலனைக் கள்வனென்று

கொன்ருன். செய்தி கேட்டுத் தீயினும் சினங்கொண்டு, ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தியவளாய் ஓடினுள், அரண் மனை நோக்கி. கள்வனல்லன் தன் கணவனென்பதைக் காட்டி, மதுரையைத் தீயுண்ணச் செய்து. சேரநாட்டுச் செங்குன்று நோக்கிச் சென்று முத்தியடைந்தாள். செய்தி கேட்ட சேரன் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்து, கங்கையில் நீராட்டி, சிலையாக வடித்து, வஞ்சியில் கோயி லெடுத்து அவளை அங்கு வைத்து வழிபடத் தலைப்பட்டான். பிற அரசர்களும் அவ்வாறே செய்தனர். எனவே கற்புடைய பெண்களைப் பெரியோர் போற்றுவர் என்பது தெளிவா கின்றது.

முன்பிறவியில் ஒரு தீமை செய்தாலும் மறு பிறவியில் அத்தீமை அவ்வுயிரைத் தொடர்ந்து வந்து வருத்துமென் பதைக் கோவலன் வாழ்க்கையில் காண்கின்ருேம். அவன் போன பிறவியில் சங்கமன்என்னும் வணிகனை மாற்றரசனின் ஒற்றனெனக் கூறிக் கொல்வித்தான். அவன் மனைவி நீலி வருந்தி இறந்தாள். அதேபோல் மறுபிறவியில் கோவலன் பொற்கொல்லனுல் கள்வனெனக் கூறப்பட்டுக் கொல்லப்படு கின்ருன். அவன் மனைவி கண்ணகியோ கதறுகின்ருள்.

மேலே கூறப்பட்ட மூன்று கருத்துக்களும் புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டமென்ற மூன்று காண்டங்களாலும், முப்பது காதைகளாலும் விளக்கம் பெற்றுள்ளன. சிலம்பு ஐம்பெருங் காப்பியங்களில் தலையாயதாக விளங்குகின்றது. மணிமேகலை சிலம்பு தோன்றிய காலத்தில் தோன்றியது. மற்றைய வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி ஆகிய பெருங் காப்பியங் கள் பிற்காலத்தில் தோன்றியவை.

நயமிகு பகுதிகள்

புகார்க்காண்டத்தில் நயமிகு பகுதிகளில் ஒன்று கோவலனுக்கும் கண்ணகிக்கும் நடக்கும் திருமண நிகழ்ச்சி யாகும். மங்கலவாழ்த்துப் பாடல் இதை மாண்புறச் சொல்லு கின்றது.

மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை.

(மங்கல : 48-53.)

அடுத்தாற்போல், செவ்வேளையொத்த கோவலனும் அருந்ததியன்ன கண்ணகியும் இல்லறம் நடத்துவதை மனையறம் படுத்த காதை நயம்படக் கூறுகின்றது. அவன் அவள் அழகில் ஈடுபட்டு,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையா னின்னை......

(மனையறம் : 73-80.)

என்று போதைகொண்டு பலவாறு போற்றுகின்றான். அரங்கேற்று காதை மாதவியின் ஆடற்கலைத் திறத்தையும், அவளின் மாலையைக் கோவலன் விலைகொடுத்து வாங்கி அவளிடம் சென்று சேர்வதையும் சிறப்பித்துக் கூறுகின்றது. இக் காண்டத்திற்குரிய பிற அந்திமாலைச் சிறப்புச்செய் காதை, இந்திரவிழவூர்எடுத்த காதை, கடலாடு காதை, கானல்வரி, வேனிற் காதை, கனாத்திறமுரைத்த காதை, நாடுகாண் காதை ஆகியவை கண்ணகியின் துயரத்தையும், புகார் நகரச் சிறப்பையும், கோவலன் மாதவியைப் பிரிவதையும், கண்ணகியோடு மதுரை செல்லுவதையும் உள்ளங் கொள்ளச் சொல்லுகின்றன.

மதுரைக்காண்டத்தில் காடுகாண் காதை, வேட்டுவவரி, புறஞ்சேரியிறுத்த காதை, ஊர்காண் காதை, அடைக்கலக் காதை, கொலைக்களக் காதை, ஆய்ச்சியர் குரவை, துன்ப மாலை, ஊர்சூழ்வரி, வழக்குரை காதை, வஞ்சினமாலை,

அழற்படு காதை, கட்டுரை காதை எனப் பதின்மூன்று காதைகள் வந்துள்ளன. மதுரை நோக்கிச் சென்ற கோவலனும், கண்ணகியும் ஆயர்பாடியில் தங்கியதும், கோவலன் கொலையுண்டதும், மதுரை எரிந்ததுமாகிய அரிய செய்திகள் இக்காண்டத்திலிருந்து தெரியவருகின்றன.

கண்ணகி வழக்குரைத்துப் பாண்டியனை வென்ற பகுதி சிலப்பதிகாரத்திற்கே உயிரூட்டக்கூடிய பகுதி. அவளின் அறிவாற்றலையும், அஞ்சா நெஞ்சையும் அகிலத்திற்கு உணர்த்தும் பகுதி. தன் கணவனைக் கள்வனென்று கொன்றுவிட்டார்கள் என்று கேட்டதும் ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தி அழுது அரற்றி ஓடுகின்றாள் பாண்டியன் அரண்மனை நோக்கி; ஆங்கிருந்த வாயிற்காவலனைக் கண்டு,

அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!

(வழக் : 25–26.)

என்று அவனஞ்சக் கூறி, அதன்பிறகு நெடுஞ்செழியன் முன் சென்று நின்று,

சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி

(வழக் : 60–62.)

என்றறைந்து, அவன் கோவலனிடமிருந்து கவர்ந்த சிலம்பை உடைத்துத் தன் கணவன் கள்வன் அல்லன் என்று காட்டுந்திறம் எண்ணி வியத்தற்குரியது.

வஞ்சிக்காண்டத்தில் குன்றக்குரவை, காட்சிக் காதை, கால்கோட் காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை வாழ்த்துக் காதை, வருந்தரு காதை என்று ஏழு காதைகள் உள்ளன. கண்ணகி கோவலனோடு விண்ணகம் சென்றதுவும், சேரன்செங்குட்டுவன் வடநாடு சென்று கனகவிசயரை வென்று இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வடவரசர்கள் தலையில் சுமத்தி வஞ்சியில் கண்ணகிக்குப் படிவம் சமைத்து அவளை வழிபட்டதுவும் ஆகிய செய்திகள் இக்காண்டத்தில் காணப்படுகின்றன. வரந்தரு காதையின் இறுதியில் இளங்கோவடிகள்,

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
(வரந்: 185-187.)

என்று பல அறக்கருத்துக்களை நூற்பயனாக நல்கி இவ்விலக்கியத்தை இனிது முடிக்கின்றார்.

பல்துறைச் செய்திகள்

இசையும், நாட்டியமும் சிறந்த கலைகளாக சிலம்பில் போற்றப்படுகின்றன. அரங்கேற்று காதையில் இசை நுணுக்கங்கள் பல இடம்பெற்றுள்ளன. மாதவி ஆடற்கலை அரசியாகச் சோழமன்னனால் புகழப்படுகின்றாள்.

ஐநில மக்களின் வாழ்க்கை முறைகளும், அன்றைய சமுதாய அமைப்புக்களும், மக்கள் மேற்கொண்டொழுகிய பழக்க வழக்கங்களும், செய்துவந்த பல்வகைத் தொழில்களும் சிலப்பதிகாரத்தில் போற்றியுரைக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் அகச்செய்தியும், புறச்செய்தியும் ஒருங்கே அமைந்துள்ளன. அரசியல் பொருளியல் வாழ்க்கைகளும், போர்நிகழ்ச்சிகளும் பேசப்படுகின்றன. கயவாகு, கனகன், விசயன் முதலியவரைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

சிலம்பு இலக்கியச் சுவைமிக்க காப்பியம். சிறந்த தலைவன் தலைவியரையும், நாட்டு நகர் வருணனைகளையும், இயற்கை எழிலையும், நான்கு உறுதிப் பொருள்களையும் பேசும் பெருங்காப்பியம். உவமையழகும், கற்பனைச் செறிவும், கதைத் தொடர்பும், பல்வகைச் சுவையமைதியும், சொல்லழகும், பொருளழகும் கொண்டு தமிழ் இலக்கியப் பெருமையைக் கூறுவது. இச்சிறப்புக்களைக் கண்ட டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், 'சிலப்பதிகாரத்தைச் சிறப்பதிகாரமென்று சொன்னால் தகும்' என்கின்றார். பாரதியாரும் தமிழ்நாட்டின் பெருமையைப் பேசும்போது, "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று பாடுகின்றார்.

12. மணிமேகலை

மாண்புறு செய்திகள்

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் பெருங் காப்பியம் மணிமேகலை. சீத்தலைச் சாத்தனாரின் செந்தமிழ்த்திறன், பௌத்த மதத்தின் பால் அவர் கொண்டிருந்த பற்று, "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" என்ற அவரது உயரிய கொள்கை, காவிரிப்பூம்பட்டினம் — காஞ்சிமாநகரம் — வஞ்சிமாநகரம் என்னும் பெரும் நகரங்களைப்பற்றிய செய்திகள் முதலிய வற்றை இந்நூலின்வாயிலாய் நாமறிகின்றோம்.

சிலப்பதிகாரம்போல் மணிமேகலையும் முப்பது காதைகளைக் கொண்டது. இந்நூல் இளங்கோ கேட்ப அரங் கேறிற்று என்ற செய்தி,

> இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
> வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
> மாவண் தமிழ்த்திறம் மணிமே கலைதுறவு
> ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்
>
> (பதிகம்: 95-98.)

என்ற மணிமேகலைப் பதிகத்தினால் நாம் அறிகின்றோம். மேலும், 'மணிமேகலை துறவு' என்ற பெயரும் இக்காப்பி யத்திற்கு உண்டு. கதையாலும், காலத்தாலும், ஆசிரியர் களாலும் சிலம்பும், மேகலையும் தொடர்புகொண்டவை. எனவே, இவ்விரண்டும் கடைச்சங்க காலத்திய வரலாற்றை அறிய, அரிய வரலாற்றிலக்கியக் கருவூலங்களாய் விளங்கு கின்றன.

கதைப்போக்கு

கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டாள் மாதவி; அருந்துயர் வந்துருத்த ஆடல்பாடல்களை மறந்து தன் மகள் மணிமேகலையோடு பௌத்தமதம் சார்ந்தாள். உவ வனத்தில் மலர் பறிக்கச் சென்ற மணிமேகலையை உதய குமரன் கண்டான். அவனுக்கஞ்சி அவ்வஞ்சி பளிங்கு

அறையினுள் புகுந்து அவனைப் பார்த்தாள். அவனது அழகுத் தோற்றம் அவ்வாரணங்கின் அறிவை மயக்கிற்று.

இந்திரவிழாக் கண்டு திரும்பிய மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவத் தீவிற்குத் தூக்கிச் சென்றது; அங்கு அவள் பழம்பிறப்பை உணர்ந்தாள். தீவதிலகையின் உதவியால் அத்தீவில் இருந்த அமுதசுரபியைப் பெற்றுக் காவிரிப்பூம்பட்டினமடைந்து அறவணவடிகளிடம் அறங் கேட்டாள். ஆதிரையிடம் முதன்முதலாக உணவு பெற்றுப் பசித்தோர்க்கு உணவளித்தாள். சிறைச்சாலைக்குச் சென்று மன்னன் மனத்தை மாற்றி அதை அறச்சாலையாக்கினாள்.

உதயகுமரன் விடாது தன்னைப் பின்தொடரக் கண்ட மணிமேகலை அவனுக்கு அறிவுரை பல பகர்ந்தாள். அவள் காயசண்டிகை வேடத்தில் இருந்ததால் தன் மனைவியோடு உதயகுமரன் தவறான முறையில் நடந்துகொள்ள முனைகின்றான் எனக் கருதிய காயசண்டிகையின் கணவன் அவனை வெட்டி வீழ்த்தினான். மகன் இறந்ததைக் கேட்ட மன்னன் மணிமேகலையைச் சிறைப்படுத்தினான்.

இராசமாதேவி, மகனை இழந்த மாதுயரத்தால் மணிமேகலையைத் துன்புறுத்தினாள். மணிமேகலை அவற்றிற்கெல்லாம் வருந்தாதது கண்டு, தேவி அவளிடம் மன்னிப்பு கேட்டாள். "எவ்வுயிரிடத்தும் அன்பாய் இரு" என்று சொல்லி, வஞ்சிமாநகர் அடைந்து அறவணவடிகளின் அறிவுரை கேட்டுப் பிறவித்துன்பமற தவமேற்கொண்டு வாழ்ந்தாள்.

நூல் கூறும் அறம்

மணிமேகலையின் கதையைக் காணுங்கால் ஓர் உயரிய குறிக்கோளை உலகிற்கு உணர்த்துவான்வேண்டி இந்நூல் தோன்றியதாகத் தெரிகின்றது. அதுதான் '**உயிர்களை அன்பால் ஆள்**' என்பது. மகனை இழந்த இராசமாதேவிக்கு மணிமேகலை, "**அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்**" என்று கூறுவதால்

அறங்களில் சிறந்தது அன்பறமென்பது தெளிவாகின்றது. பிறவிப்பிணியை அறுத்து அழிக்கும் மருந்தும் அதுவே. ஆகவேதான் சீத்தலைச்சாத்தனர், மணிமேகலையின் கரத்தில் ஆபுத்திரன் கொண்டிருந்த அமுதசுரபியைக் கொடுத்து, வாடிவருந்தும் உயிர்களுக்கு அன்புபாராட்டி உணவூட்டச் செய்திருக்கின்ருர்.

அமுதசுரபியின் அருமை பெருமையைப் பாத்திரம் பெற்ற காதை பாங்குறக் கூறுகின்றது. அமுதசுரபி அள்ள அள்ளக் குறையாத உணவு ஊற்ருகும். மனிதனுக்கு எதில் குறைவிருந்தாலும் உண்ணுகின்ற உணவில்மட்டும் குறைவிருக்கக்கூடாது. அவ்வாறு குறைவிருந்தால் பசிப்பிணி மக்களைப் பற்றி வருத்தும்; அவர்களின் பண்புநலன்களைக் கெடுத்துவிடும். பசியின் கொடுமையைப்பற்றி தீவதிலகை மணிமேகலைக்கு,

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி...........
(பாத்திரம்: 75-79.)

என்று எடுத்துக் கூறுகின்ருள். இப்பசிப்பிணிக்கு மருந்து உணவேயாகும். இவ்வுணவைத் தேவையானவர்களுக்குக் கொடுப்போர் உயிரையே கொடுத்தவராவர் என்பதை,

ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்ரு மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
(பாத்திரம்: 91-95.)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சிலப்பதிகாரத்தில் இரு சிலம்புகளைப் பார்க்கின்ருேம். அவற்றைக் கொண்டு சிலம்புச் செல்வன் சிலப்பதிகாரத்தை யாத்துள்ளான். இம்மணிமேகலையில் நாம் ஓர் அமுத

சுரபியைப் பார்க்கின்றோம். இதைக் கொண்டு சீத்தலைச் சாத்தனார் உணவீதலாகிய பேரறத்தை அடிப்படையாக்கி மணிமேகலையை உருவாக்கியுள்ளார்.

அறம் செய்தலே பிறவிப்பயன் என்பதை இந்நூலில் ஆசிரியர் பல இடங்களில் வலியுறுத்துகின்றார். மணிமேகலைபால் தீராக்காதல் கொண்ட உதயகுமரன் உலக அறவிக்குச் சென்று அவள் தவம் மேற்கொண்டதற்குரிய காரணத்தைத் தெரிந்துகொள்வதற்காக அவளிடமே,

> நல்லாய் என்கொல் நற்றவம் புரிந்தது
> சொல்லாய்...........
>
> (உதயகுமரன்அம்பலம்: 125-126.)

என்று கேட்கின்றான். அதற்கு அவள்,

> பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
> இறத்தலு முடைய திடும்பைக் கொள்கலம்
> மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
> மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்
>
> (உதய. அம்பலம்: 135-138.)

என்று விடை ஈர்க்கின்றாள். எனவே, தன்னலங் கருதி வாழ்வது வாழ்க்கையாகாது; பிறர் நலம் கருதி வாழ்வதே வாழ்க்கையாகும் என்பதுதானே இதன்மூலம் நாம் அறிகின்ற உண்மை!

மக்கட்கு வேண்டுவன உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றும். அவற்றை எவ்வகையானும் அமைத்துக் கொடுப்பது நல்லரசின் கடமை. அதைத்தான் சீத்தலைச் சாத்தனாரும் மணிமேகலையில் வலியுறுத்துகின்றார்.

> அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
> மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
> உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
> கண்டதில்..............................
>
> (ஆபுத். மணி: 227-229.)

என்பது மக்கட்கும், அரசுக்கும் சாத்தனார் வகுத்துக்காட்டும் வழியாகும்.

மணிமேகலை தமிழில் முதன்முதலாகத் தோன்றிய சமயப் பெருங் காப்பியமாகும். இதன்கண் புத்த பெருமானுடைய பெருமைமிக்க கொள்கைகள் பேசப்படுகின்றன. இந்நூல் சமயக் கருத்தைப் பரப்புவதற்காகமட்டும் தோன்றவில்லை. பிறமதக் கருத்துக்களை நல்ல தமிழில் சொல்ல முடியுமென்று பிறர்க்கு உணர்த்துவதற்காகவும், நற்கருத்துக்கள் எங்குத் தோன்றினும் தமிழ் மக்கள் அவைகளை ஏற்பர் என்பதை எடுத்துரைப்பதற்காகவும் இந்நூல் எழுந்தது என்று சொல்லலாம். இவ்வளவு மாசுபோக்கும் மாண்புறு செய்திகள் கொண்ட மணிமேகலையைத் தமிழ் மக்கள் போற்றத் தவறுதல் நன்றோ?

13. சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலமே தலைசிறந்த காலமென்று இலக்கியப் பேரறிஞர்கள் இயம்புகின்றார்கள்; சங்ககாலமே தமிகத்தின் பொற்காலமென்றும் போற்றுகின்றார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் முச்சங்கங்கள் நிலவிய காலங்களில் தமிழின் வாழ்வு உச்சநிலையில் இருந்ததுதான். அன்று ஆண்ட அரசர்கள் அருந்தமிழ்ப் பற்றுமிக்கவர்களாக, பைந்தமிழ்ப் பாவலர்களைப் போற்றக்கூடியவர்களாக இருந்தார்கள். பொன்னையும், பொருளையும் வாரி வாரி வழங்கி வண்ணத் தமிழ் வளர்ப்பவர்களைக் கண்ணெனக் கருதினர்கள். ஆகவே அகத்தியர், தொல்காப்பியர் கபிலர், பரணர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனர் போன்ற ஆண்பாற் புலவர்களும் ஔவையார், ஆதிமந்தியார், வெள்ளிவீதியார், காக்கைபாடினியார், பொன்முடியார் போன்ற பெண்பாற் புலவர்களும் தமிழாய்ந்தார்கள்; அமிழ்தினும் இனிய இலக்கிய இலக்கணங்களை ஆக்கி அருளினர்கள். அதன் காரணத்தால் தீந்தமிழ் மொழி செம்மையுற்றது; செழிப்புப் பெற்றது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, முத்தொள்ளாயிரம், பதினெண் கீழ்க்கணக்கில் சில, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற சிறப்பிலக்கியங்கள் மலர்ந்தன; மணம் பரப்பின.

இலக்கிய விளக்கம்

சங்க இலக்கியங்களின் மாண்பியல்புகளை நாம் ஆய்ந்தறிவதற்கு முன்பு, 'இலக்கியமென்றால் என்ன?' என்பதைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். இப்பொருள் பற்றி மேல்நாட்டு ஆசிரியர்களும், நம்நாட்டு நல்லறிஞர்களும் விளக்கங்கள் தந்துள்ளார்கள்.

இலக்கியம் வாழ்க்கையில் இருந்து மலரும் உணர்வு மலராகும். கொடியில் பூக்கும் மலர் வாடி வதங்கிவிடும். ஆனால், வாழ்க்கையாகிய மரத்தில் மலரும் இலக்கிய மலர் காலந்தோறும் வாழ்ந்து இலக்கிய ஆசிரியனின் எண்ண மணத்தை அகிலமெங்கும் பரப்புவதாகும். இலக்கியம் பயிலப் பயில நயம் பயப்பதாக இருக்கவேண்டும். வள்ளுவர் இலக்கியத்தை, 'நவில்தொறும் நூல்நயம்' (குறள். 783.) என்று சுருங்கச் சொல்லி விளங்கவைத்துள்ளார். 'ஒரு மொழியின் வாயிலாக மக்களின் வாழ்க்கை நிலைகளை விளக்கிக் கூறுவதே இலக்கியம்' என்று [12]ஹட்ஸன் என்னும் மேனாட்டு ஆசிரியர் கூறுகின்றார். 'உயர்ந்த எண்ணங்கள் பதிவுசெய்யப்பட்டதே இலக்கியம்' என்று [13]எமர்சன் இயம்பியுள்ளார். இக் கூற்றுக்களையெல்லாம் கொண்டு இலக்கியத்தை நோக்குகின்றபொழுது மக்களின் வாழ்க்கையையும், அதோடு தொடர்புடைய சீரிய எண்ணங்களையும் நயம்படத் தருகின்ற ஒன்றே இலக்கியமென்று விளங்குகின்றது.

இலக்கிய வகைகள்

இலக்கியங்கள் உரைநடையாலும், கவிதையாலும் அமைந்துள்ளன. இவ்வாறு உருவாகியுள்ள இலக்கியங்களை டிக்வின்சி என்பார் அறிவிலக்கியம் (Literature of Knowledge) என்றும், ஆற்றல் இலக்கியம் (Literature of

---

[12] "Literature is thus fundamentally an expression of life through the medium of language".

—An Introduction to the Study of Literature by Hudson P. 11.

[13] "Literature is a record of best thoughts."

—Emerson.

Power) என்றும் இரு பிரிவாகப் பிரிக்கின்றார். ஆனால், ஹட்ஸன் என்பார் இலக்கியங்களை இன்ப இலக்கியம் (Pure Literature) என்றும், பயனிலக்கியம் (Applied Literature) என்றும் பிரிக்கின்றார். நம் தமிழ்ப் பேரறிஞர்கள் தமிழ் இலக்கியங்களை அகமென்றும், புறமென்றும் பிரித்துள்ளார்கள்.

பொதுவாக இலக்கியங்கள் உள்ளத்தை இயக்கும் ஆற்றல் பெற்றுள்ளன; அழகுணர்ச்சி கொண்டு விளங்குகின்றன; ஈடற்ற இன்பம் விளைவிக்கின்றன.

சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள்

சங்ககாலத்தில் கவிதை இலக்கியங்களே ஏராளமாய் உருவாயின. இவ்விலக்கியங்கள் எல்லாம் அறம், பொருள், இன்பம், வீடு பயப்பனவாக அமைந்துள்ளன. நூல் செய்ய முனைந்த புலவர்கள் தாங்கள் படைக்கும் இலக்கியப் படைப்பு படிப்போர்க்கும் கேட்போர்க்கும் இன்பம் விளைவிக்கக்கூடியதாகவும், காலத்தைக் காட்டும் கண்ணாடியாகவும், வாழ்க்கை வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும் என்று எண்ணிச் செய்தனர்.

i. இன்பம் பயப்பவை

இலக்கியம் தரும் இன்பத்தை 'முருகியல் இன்பம்' (Aesthetic satisfaction) என்று கூறுவர். இவ்வின்பம் சங்க இலக்கியங்களில் ஓங்கி நிற்கக் காண்கிறோம். புலவர்கள் வறுமையைப்பற்றிக் கூறுகின்றபொழுது, போர்க்களக் காட்சிகளை வருணிக்கின்றபொழுது, இயற்கை எழிலை எடுத்துரைக்கின்றபொழுது, காதலர்களின் சந்திப்பைக் கவினுறக் கூறுகின்ற பொழுது இவ்வின்பம் நிறைந்து வழிவதைக் காணலாம். அதில், ஒருவகை இன்பம் இருக்கின்ற காரணத்தால்தான் புறநானூற்றை விரும்பிப் படிக்கின்றோம். தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனின் வஞ்சின மொழிகளைக் கேட்டு வியக்கின்றோம். புறநானூற்றுத் தாய்மாரின் வீரத்தைக் கண்டு நாமும் வீர உணர்ச்சி பெறுகின்றோம். சிலப்பதிகாரத்தில் கோவலன் கொலையுண்டான்

என்று கேட்டதும் கண்ணகியை எண்ணி நாம் வருந்து கின்றோம். அவள் மதுரை நகர வீதியில் இறந்துகிடக்கும் தன் கணவனை அணுகி,

தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ (ஊர் சூழ். 44.)

என்று அழுது அரற்றுகின்ற நேரத்து நாமும் அவள் நிலை குறித்து மனம் கலங்குகின்றோம். இவ்வாறு சங்க இலக்கியங் கள் இன்பத்தைப் பயக்கின்ற காரணத்தால்தான் அவற்றோடு நாம் இடையறு ஈடுபாடு கொள்ளுகின்றோம். இலக்கியச் சுவை ஒவ்வொன்றும் இன்பத்தைப் பயக்கக் கூடியது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

ii. காலக் கண்ணாடி

சங்க இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தோன்றிய காலத் தைக் காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றன. பத்துப் பாட்டை எடுத்துக் கொண்டால் அன்றைய மக்களின் தெய்வ நம்பிக்கை, பாணர்களின் வாழ்க்கை முறை, அரசர் களின் ஈந்துவக்கும் பெற்றி, புலவர்கள் புரவலர்களுக்கு அறிவுரை கூறும் பாங்கு, தலைவர்கள் தலைவியரைப் பிரிந்து போர்மேற் செல்லும் திறம் முதலிய சிறப்புக்களை நன்கு காட்டக் காண்கின்றோம். ஒவ்வோர் இலக்கியமும் தோன் றிய காலத்தின் வரலாற்றை நயமுற எடுத்துக் கூறுஞ் சிறப்பால் அவை 'காலக் கண்ணாடி' யாகத் திகழ்கின்றன.

iii. வாழ்க்கை வழிகாட்டி

சங்க இலக்கியங்கள் நாம் வாழ்வதற்குரிய அறங்களை வகுத்துக் கூறுந் திறத்தால் வாழ்க்கை வழிகாட்டிகளாக விளங்குகின்றன. திருக்குறள் இச் சிறப்பைப் பெரிதுங் கொண்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் காணும் முக்கருத்துக் களும், மணிமேகலை கூறுகின்ற பல்வகை அறங்களும் நம் வாழ்விற்குரிய வழிகாட்டிகளாகத்தானே அமைந்துள்ளன!

iv. கவிதைச் சிறப்புக்கள்

சங்க இலக்கியக் கவிதைகளில் " மொழிவளமும், பொருள் களின் இயற்கையை உள்ளபடி எடுத்து விளக்கும் ஆற்றலும்,

உவமை யழகும், ஊன்றிப் படிப்பார்க்கு உணர்ச்சியின்பம் ததும்பச் செய்யும் இயல்பும் ஒருங்கமைந்து விளங்குகின்றன'' என்று பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள் கூறுகின்றார்கள். சங்கப் பாக்களில் ஆழமுடைமை, இனிமை, எளிமை என்னும் பண்புநலன்களை நாம் காணலாம. பிற் காலத்துச் செய்யுட்களில் காணுவதைப்போல் வெற்று எதுகை மோனைகளையும், பொருளில்லா அடைமொழிகளை யும் அப்பாக்களில் நாம் காணுதல் அரிது. சிறு சொற்க ளாகவும், பொருள் பொதிந்த சொற்களாகவும் இருக்கும். குணங்களை வருணிக்கும் சிறப்பும், உள்ளுறை உவமங்க ளால் உண்மைகளை உய்த்துணர வைக்கும் பாங்கும் போற்றற்கு உரியன. அளவோடு கூடிய கற்பனையும், அணிநலன்களும் சங்கச் செய்யுட்களின் சிறப்புக்களுக்கு மூக்கிய காரணங்களாகும்.

V. சங்க இலக்கியங்களில் அகப் புறப் பாகுபாடு

தமிழ்மக்கள் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை இரு பெருங் கூருகப் பிரித்து அக வாழ்க்கையென்றும் புற வாழ்க்கையென்றும் அழைத்தனர். அவ்விரு பகுப்பின் அடிப்படையில் அக இலக்கியங்களையும், புற இலக்கியங் களையும் ஆக்கினர். தொல்காப்பியரின் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல் இவைகளின் இயல்பு களையும், ஏற்றங்களையும் இலக்கணத்தின் வாயிலாய் அறியலாம்.

அகம்

அகப்பொருள் இலக்கியம், ஒருவனும் ஒருத்தியும் தனியே எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு களவு வாழ்க்கை நடத்துவதையும், அதன் பிறகு பல்லோரறியத் திருமணம் செய்துகொண்டு கற்பு வாழ்க்கை வாழ்வதையும் பல்வகைச் சுவையோடு எடுத்தியம்பும். அகவாழ்விற்குரிய ஒழுக்கம் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என ஏழுவகைப்படும். ஐந்திணை, அன்பால் இணைந்து கருத்தொருமித்த தலைவன், தலைவியரது களங்கமற்ற காதலையும், கைக்கிளை ஒருதலைக் காமத்தையும், பெருந்திணை பொருந்தாக் காமத்தையும் குறிக்கும்.

அகப்பாடல்கள் திணையும், துறையும் பெற்று, குறிஞ்சி-பாலை-முல்லை-மருதம்-நெய்தல் என்ற ஐவகை நிலங்களில் ஏதாவது ஒன்றிற்குரியதாக, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் உடைத்தாய் வரும்.

பத்துப்பாட்டுள் முல்லைப்பாட்டும், குறிஞ்சிப் பாட்டும் அகப்பாட்டுகள்; பட்டினப்பாலையும், நெடுநல்வாடையும் அகப்பொருள் தழுவி நிற்பவை. எட்டுத்தொகையுள் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய ஐந்தும் அகப்பாடல்கள். திருக்குறளின் இன்பத்துப் பாலும் அகவொழுக்கங்களைத்தான் பேசுகின்றது.

தமிழில் காணும் அகப்பாடல்கள் ஒவ்வொன்றும் ஓர் ஓரங்க நாடகம்போல் கற்போர் உள்ளத்திற்குக் களிப்பூட்டும். மேகம் தவழும் சிகரங்களுடைய குறிஞ்சி நிலத்தில் இயற்கை அழகைக் காணவரும் தலைவியும், மான் வேட்டையாட வரும் தலைவனும் கண்ணோடு கண் இணைய காதல் கொள்கின்றூர்கள்! சலசலவென்றோடும் நீரோடையின் அருகில் நித்தமும் சந்திக்கின்றனர். இவர்களது களவு வாழ்க்கைக்கு உறுதுணையாகத் தோழியும், தோழனும் அமைகின்றூர்கள். இறுதியில் இருவருக்கும் திருமணம் நடக்கின்றது; கற்பறத்தை மேற்கொண்டு வாழத் தலைப்படுகின்றூர்கள்.

பாலைநிலத்தில் வாழும் தலைவனானவன் பொருள் தேடுதற்பொருட்டும், போர் செய்தற் பொருட்டும் தலைவியை விட்டுப் பிரிய நேரிடுகின்றது. அதுபோழ்து தலைவியானவள் பிரிவுத் துயரைத் தாங்கமுடியாது வருந்துகின்றுள். அருகில் இருக்கும் தோழியானவள் அவளுக்கு ஆறுதல் தருகின்றுள. தலைவன் கடந்து சென்ற பாலைவனம்போல் தலைவியினுடைய நிலை மாறுகின்றது.

முல்லை நிலத்துத் தலைவன் ஒருவன் கார்காலம் வருவதற்குள் விடுவந்து சேர்வதாகக் கூறி, பொருள் தேடுவதற்காக வேற்றுப் புலம் சென்றிருக்கின்றுன். தலைவியோ இல்லில் இருந்து பிரிவுத்துயரைப் பொறுத்துக் கொண்

டிருக்கிருள். தலைவன் சொல்லிச் சென்ற கார்காலம் வந்து விட்டது; ஆனல் அவன் வரவில்லை; அதனல் அவள் ஏங்கு கிருள்.

மருத நிலத்துத் தலைவன் ஒருவன் பரத்தையை விரும்பி இரவு முழுதும் சென்று திரிந்துவிட்டுக் காலையில் தலைவியை நாடி வருகின்ருன். அவனுடைய தலைவியோ அவனேடு ஊடல்கொண்டு கதவை அடைத்து உள்ளே இருக்கின்ருள். அவனே கால்கடுக்க வெளியில் நின்றுகொண்டிருக்கின்ருன்.

நெய்தல் நிலத்தில் வாழும் தலைவன் மீன் பிடித்தற்காக அலை நிறைந்த ஆழ்கடலில் கலமேறிச் சென்றிருக்கின்ருன். காற்ருே கடுமையாக வீசுகின்றது. அந்நேரத்தில் அவ னுடைய தலைவியானவள் இல்லில் அவனை எண்ணி இரங்கிக் கொண்டிருக்கின்ருள்.

இவ்வளவு இனிய செய்திகளையும் கொண்டிலங்கும் நம் முடைய அக இலக்கியங்கள் அக்காலத்து மக்களது காதல் வாழ்க்கையின் படப்பிடிப்புகளாக விளங்கி, நம்மையெல் லாம் அக்காலத்திய காதல் வாழ்வின் எழிலைப்பற்றிய— ஏற்றத்தைப்பற்றிய எண்ணத்தில் மூழ்கவைக்கின்றன.

புறம்

சங்ககாலத்துத் தமிழர்களுடைய அறம்பற்றிய செய்தி களும், பொருள்பற்றிய விளக்கங்களும், வீடுபற்றிய குறிப்பு களும் 'புறவாழ்வு' என்னும் பகுதியில் அடங்கும், அக்கருத் துக்களைக் கொண்டெழுந்த பாடல்கள் புறப்பாடல்கள் எனப்படும். பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணுற்றுப்படை, பெரும்பா ணுற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் ஆகிய ஆறும் புறப்பாடல்கள். எட்டுத்தொகையுள் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டும் புறப்பொருட் செய்திகளை நன்கு புலப்படுத்துவன. பரிபாடல் அகம், புறம் இரண் டையும் இனிது எடுத்துரைப்பது. திருக்குறளில் காணும் அறத்துப்பாலும், பொருட்பாலும் புறப்பகுதியைச் சார்ந் தவை.

தமிழ்மக்கள் ஈரத்தையும், வீரத்தையும் வாழ்க்கையாற் றின் இருகரைகளாகக் கொண்டு வாழ்ந்த செய்தி புறப்

பாக்களால் தெரியவருகின்றது. தமிழகத்தின் அரசியல், பொருளியல் வாழ்க்கை வரலாற்றை வரைதற்குப் புறப் பாட்டுகள் பெரிதும் துணைபுரிகின்றன. புலத்துறை முற்றிய புலவர்கள் வாழ்க்கையும், புன்மையறுத்த புரவலர் வாழ்க்கை யும் பொலிவான பாக்களில் நாம் பார்க்கலாம். போர் முரசு முழங்கும்; அதையடுத்து புயல்போல் படை போர்க்களம் புகும். பரியும் கரியும் பதறி மாளும். வேலும் வாளும் வடி விழந்து வீழும். உறுப்பறுபட்ட வீரர் உயிர்விட, ஓங்காரக் கூச்சலிடுவர் வெற்றிபெற்றோர். விளை நிலங்களை வீணாக்கு வர்; வீடுகளுக்குத் தீயிடுவர்.

வீரர்கள் விழுப்புண் தாங்குவதை வெஞ்சமரின் பய னெனக் கருதினர். புறமுதுகு காட்டுவதைத் திறனிழந்த நேரத்தும் செய்தல் கூடாதென்ற திண்மை கொண்டனர்.

உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும் சேராது அரசன் நாட்டைச் செம்மையாகக் காத்தான். ஈன்றாள் பசி போக்கக் கூட சான்றோர் பழிக்கும் அறமற்ற காரியத்தைச் செய்யாது அரசனும், அவன் குடிகளும் வாழ்ந்தனர்.

உழவுத்தொழிலை விரும்பிச் செய்தனர். உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்தைப் போற்றிப் பெருக்கினர். பொருள் பெற்றோர் இல்லாதோர்க்கு ஈந்துவந்தனர். புற வாழ்க்கை சிறந்திருந்ததால் மக்கள் அகவாழ்க்கையில் அமைதியாக இன்பம் துய்த்தனர். அதனால் அரிய கலைகள் பலவற்றையும் வளர்த்து வாழவைத்தனர்.

தமிழ்மக்களுடைய உழைப்பாலும், ஓயாத முயற்சி யாலும், ஒற்றுமையாலும் புறவாழ்க்கை சிறந்தது; அதன் காரணத்தால் புற இலக்கியங்கள் பல தோன்றின. அறம் பொருந்திய அரசியலால் அமைதியை அடைந்ததாலும், அயரா வுழைப்பால் வேண்டியதைப் பெற்றதாலும் அவர்க ளுடைய அகவாழ்க்கை சிறந்தது; ஆகவே அக இலக்கியங் கள் பல தோன்றின.

'வாழ்க்கை வாழ்தற்கே' என்ற தமிழர்களுடைய உயரிய கொள்கை அகப்பாக்களாலும், அவ்வாழ்க்கை அடிமை யில்லாத உரிமை வாழ்க்கையாக இருக்கவேண்டுமென்பது புறப்பாக்களாலும் நன்கு புலனாகின்றன.

இரண்டாம் பாகம்

II. இடைக்காலத் தமிழிலக்கியங்கள்

14. இறையுணர்வூட்டும் இசைப்பாக்கள்

சங்ககாலத்தில் சமயப் புரட்சி ஏற்படவில்லை. ஆகவே, போட்டி முறையில் சமய இலக்கியங்கள் தோன்றவில்லை. ஆனால், பல்லவர்கள் காலம் தொடங்கி (கி. பி. 6ஆம் நூற்றுண்டு முதல்) பல சமயங்களும் தமிழகத்தில் ஒன்றையொன்று மேம்பட்டு வளரத் தலைப்பட்டதனால் அவ்வச் சமயத் தொடர்பான பாக்களும், பக்திச் சுவை மிக்க தொடர்நிலைச் செய்யுட்களும் தோன்றின.

கி. மு. 6ஆம் நூற்றுண்டளவில் வடநாட்டில் பிறந்து வளர்ந்த சமணமும், பௌத்தமும் தமிழக மண்ணில் வந்து தவழ்ந்த காலத்து. இத்திருவிடத்தினர் கொண்டொழுகிய சைவமும், வைணவமும் வாழ்விழந்து போகுமோவென்று அஞ்சும்படியான ஒரு சூழ்நிலை உருவாயிற்று. பழந்தமிழர் பலர் பௌத்தத்தையும், சமணத்தையும் பரவித் தழுவினர். ஆண்ட மன்னர் சிலர் அப்புதிய மதங்களுக்கு ஆதரவளித்து அரவணைத்தனர். அதுகண்ட சைவ, வைணவப் பெரியார்கள் அந்நிலையை மாற்றியமைக்க முயன்றனர். மக்கள் உள்ளத்தில் இறையுணர்வு ஊட்ட அவர்களைச் சிவபெருமானிடத்தும், திருமாலிடத்தும் நிறைந்த பற்றுக் கொள்ளச் செய்ய நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஊர் ஊராகச் சென்று பத்திப் பாடல்களைப் பாடிப் பணி புரிந்தனர். அதனால் பைந்தமிழ் நாட்டில் 'பக்தி மார்க்கம்' பரவிற்று; பழைய சமயம் பல்வளத்தோடு நல்முறையில் தழைத்தோங்கிற்று.

i. நாயன்மார்கள்

சைவ சமயத்திற்குப் பணிபுரிந்த பெரியார்கள் நாயன்மார்களென்று அழைக்கப்படுகின்றுர்கள். அவர்களில் அறுபத்துமூன்றுபேர் அருந்தொண்டாற்றியவர்கள். இவ்

வறுபத்து மூவரின் அருமை பெருமைகளைப் பேசுவது தான் சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுராணம்.

பன்னிரு திருமுறைகள்

நாயன்மார்கள் பாடிய சைவ சமய நூல்கள் பன்னிரண்டு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சோழன் அபயகுலச் சேகரன் என்பான் நம்பியாண்டார் நம்பியினுடைய துணைகொண்டு தில்லையில் அழிவுற்றுக் கிடந்த தேவாரச் சுவடிகளைத் தேடிப் பெற்று அவைகளைத் திருமுறைகளாகத் தொகுத்தான். நம்பியவர்களும் திருஞான சம்பந்தர் பாடிய பதினாறாயிரம் பாடல்களைத் 'திருக்கடைக் காப்பு' என்ற பெயரில் முதல் மூன்று திருமுறைகளாக்கினர். திருநாவுக்கரசர் பாடிய நாற்பத்தொன்பதாயிரம் பாடல்கள் 'தேவாரம்' என்ற பெயரில் நான்கு, ஐந்து, ஆறுவது திருமுறைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பதிகங்கள் 'திருப்பாட்டு' என்ற பெயரில் ஏழாவது திருமுறையாக இலங்குகின்றது. மாணிக்க வாசகர் பாடிய எழில் தமிழ் இன்னிசைப்பாக்கள் 'திருவாசகம்' என்ற பெயரோடு எட்டாவது திருமுறையாக விளங்குகின்றன. திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், சேந்தனார், பூந்துருத்தி நம்பிகாடவ நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பது சைவப் பெரியார் இயற்றியருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் பதிகங்கள் ஒன்பதாம் திருமுறையாக அமைந்துள்ளன. திருமூலர் செய்த 'திருமந்திரம்' பத்தாம் திருமுறையாகும். காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் நாயனார், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி போன்ற பன்னிரு அருட்புலவர்கள் பாடிய பக்திப் பாடல்கள் பதினோராந் திருமுறையாகப் பாவிக்கப்பட்டு வருகின்றன. சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகப் பிற்காலத்தில் அமைத்தனர்.

மாணிக்கவாசகர்

அறுபத்துமூன்று தனியடியார்களில் அகிலம் போற்றும் புகழ் பெற்றவர்கள் நால்வர். அவர்களில் தனிச்சிறப்

புக்கு உரியவர் மாணிக்கவாசகர். இவருடைய காலத்தை ஒருசிலர் கி. பி. 3ஆம் நூற்றுண்டென்றும், மற்றும் சிலர் கி. பி. 9ஆம் நூற்றுண்டென்றும் உரைக்கின்றனர்.

திருவாசகம்

இவர் இயற்றியருளிய செந்தமிழ்ச் செல்வமாம் திருவாசகம் நம் தமிழ்மொழிக்கு நல்லாரம்; பாசமறுக்கும் பாவாரம். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்று இதனுயர்வைப் போற்றுவர் கற்றவர். இதனுடைய சொல்லழகையும், பொருளழகையும், பக்திச் சுவையழகையும் படித்துணர்ந்த மேலைநாட்டு அறிஞர் ஜி. யு. போப் அவர்கள் அழகுற ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அகிலத்திற்களித்துள்ளார்.

உள்ளமுருக்கும் தெள்ளு தமிழ்த் திருவாசகத்தை வெல்லமென விரும்பிக் கற்ற திருவருட்பா ஆசிரியர் இராமலிங்க அடிகள்,

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

என்று நிலைமறந்து பாடுகின்றார். "பாடுங்கால்" என்ற சொல் திருவாசகம் முழுதும் பண்ணமைந்த இசைப்பாக்கள் என்பதைப் பளிங்குபோல் காட்டுகின்றது.

இறையுணர்வூட்டி இடுக்கண் களையுந் திருவாசகத்தின் சிறப்பை,

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை—ஓதிப்
பிறவிப் பிணிநீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து

என்ற வெண்பாவும் விளம்புகின்றது. திருவாதவூரர் என்ற பெயரும் மாணிக்கவாசகருக்கு உண்டென்பதை இதன்மூலம் அறிகின்றோம்.

திருவாசகப் பதிகங்கள் பண்டைத் தமிழரது பாட்டிலக்கிய மரபைத் தழுவியுள்ளவை என்பதைக் கா. சு. பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார்கள். பெரும்பாலும் அகவற்பாக்களால் ஆக்கப்பட்ட அறுநூறு பாடல்களைக் கொண்டு இந் நூல் விளங்குகின்றது.

'ஆனந்த பரவசம்' என்னும் தலைப்பின்கீழ் பத்துக் கலிநிறைத்துறைகள் பாடியுள்ளார். இவற்றில் இறைவனுடைய அருட்பெருக்கை எண்ணி அகம் மகிழ்ந்து,

யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
ஆனால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே னுனைவ஼் துறுமாறே

என்றெல்லாம் உயிருக்கு இறைவன் இரங்கும் தன்மையைத் தண்டமிழில் சாற்றுகின்றார்.

'பிடித்த பத்து' என்னும் தலைப்பின் கீழ் எழுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பத்துப் பாக்கள் பாங்குறப் பாடியுள்ளார். இப்பகுதியில் இறைவனை அன்பினால் பிடித்து உளவீட்டில் அடைத்துத் தனக்கு அருளினாற்றான், பிற உயிர்களுக்கு அருளுதற்கு அவரை வெளியில் விட முடியும் என்கின்றார்.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினால் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருக்கோவையார்

மாணிக்கவாசகர் செய்த மற்றொரு மாண்புறு நூல் திருக்கோவையார் என்பதாகும். சிவபெருமானைத் தலைவனாகவும், உயிரைத் தலைவியாகவும் கொண்டு காதற்சுவை

ததும்பி வழிய அமைத்துள்ள அகத்துறைப் பனுவலாகும். இப்பொழுதுள்ள கோவை நூல்களிலெல்லாம் தொன்மையும், தலைமைத்தன்மையும் உடையது. சிற்றின்பக் கருத்தும், பேரின்பக் கருத்தும் ஒருங்கு செறியப் பெற்றது. இந்நூலுக்கு உரை வகுத்த பேராசிரியர், திருவாசகம் 'சிவாநுபவம்' உடையோர்க்கே விளங்குமென்றும் திருக்கோவையார் அனைவர்க்கும் நன்குபுரியுமென்றும் கூறியுள்ளார். தலைவன் தலைவியர்களுக்குரிய களவு, கற்பென்னும் அன்பின் பாற்பட்ட ஐந்திணை யொழுக்கத்தை இருபத்தைந்து பகுதிகளாகப் பகுத்து, நானூறு துறைகளால் புனைந்துரைக்கப்பட்டுள்ளது. கட்டளைக் கலித்துறையால் அமைந்திருப்பது.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் மருணீக்கியாரென்றும், வாகீசரென்றும், அப்பரென்றும் அழைக்கப்படுகின்றார். இவர் பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மன் (கி. பி. 600–630) காலத்தவர். இளமையில் சைவராக இருந்து, இடையில் சமணத்தைத் தழுவிப் பிறகு சிவபெருமானருளால் சைவத்தையே தழுவியவர். மகேந்திரனையும் சைவ மதத்தில் தளராத பற்றுக்கொள்ளச் செய்தவர். இவர் பாடிய தேவாரப் பாடல்கள் நாற்பத்தொன்பதாயிரமென்பர். ஆனால், நமக்குக் கிடைத்திருப்பவை மூவாயிரத்து நூற்றுப்பத்துப் பாடல்களே. இவர் பாடிய பதிகங்கள் பெரிதும் விருத்தப் பாக்களால் ஆனவை. இவரின் பாக்களில் இசையின்பம் பெருமழை வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இறைவனைத் தலைவனாகவும், உயிரைத் தலைவியாகவும் கொண்டு பாடப்பட்ட அகத்துறைப் பாடல்களும் பல உள.

திருநாவுக்கரசர் அஞ்சா நெஞ்சினர். தஞ்சம் தருதற்கு இறைவனொருவனே தகுதியுடையவன் என்பதை

தன்குணர்ந்து அவனுக்கே தன்னை அடிமைப்படுத்தி வாழவேண்டும் என்ற உயரிய நோக்குடையவர். இவ்வுண்மையை,

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறுகி னோமே

என்ற பதிக்கத்தால் உணர்த்துகின்றார்.

இப்பெரியாரைப் பல்லவன் நீற்றறையில் இட்டக்கால் எவ்வித வாட்டமும் இன்றி,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்று பாடி கூடினோர் கண்டு வியக்கத் தோன்றினார்.

இவருடைய பதிகங்கள் சிவபெருமானின் ஏற்றங்களை இனிக்கும் தமிழில் இசைவளத்தோடு வழங்குபவையாகும்.

திருஞானசம்பந்தர்

இவர் ஆளுடையபிள்ளையார் என்றும், சிவஞான சம்பந்தர் என்றும் வேறு பெயர்களாலும் அழைக்கப் படுவார். இவர் திருநாவுக்கரசர் காலத்தில் வாழ்ந்தவர். மதுரையில் சமணர்களைச் சமய வாதத்தில் வென்று கூன் பாண்டியனைத் சைவத்தைத் தழுவச்செய்து தேவாரப் பதிகங்கள் பாடி சைவத்தைச் செழித்தோங்கச் செய்தவர். இவர் பதினாயிரம் பதிகங்கள் பாடினாரென்றும், இப்பொழுது நமக்கு மூவாயிரத்து எண்ணூற்று நாற்பது பாடல்களே கிடைத்துள்ளனவென்றும் தெரியவருகின்றது.

இவர் தம் பதிகங்களுள் யமகம், திரிபு, ஏகபாதம் முதலிய சொல்லணிகள் நிரம்பியுள்ளன. அகத்துறைப் பாடல்களும் பல வந்துள்ளன. சேர சோழ பாண்டிய, பல்ல வர்களைப்பற்றிய குறிப்புகளும் சிற்சில இடங்களில் காணப் படுகின்றன. இயற்கை வருணனை மிக்கனவாயும், செந் தமிழ்ப் பெருமித நடையில் இணையற்றனவாயும் இலங்கு கின்றன.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னும நமச்சி வாயவே

என்று சம்பந்தரது பதிகம் சிவநாமத்தில் அவருக்கிருந்த அழுத்தமான பற்றை அளந்து கூறுகின்றது.

சுந்தரர்

சுந்தரர் மற்றைய மூன்று சைவப் பெரியார்களுக்கும் காலத்தால் பிற்பட்டவர். சிலர் இவரைக் கி. பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவரென்று கருதுகின்றனர். நம்பி யாரூரர் என்றும், திருநாவலூரர் என்றும் ஆளுடை நம்பி யென்றும், தம்பிரான் தோழரென்றும் இவருக்கு வேறு பெயர்களும் உண்டு. இவர் பல தலங்களுக்குஞ் சென்று மூவாயிரத்து எண்ணூறு பதிகங்கள் பாடினரென்றும், அவைகளில் நமக்கு இப்பொழுது கிடைத்திருப்பவை ஆயிரம் பாடல்கள்மட்டும் என்றும் தெரியவருகின்றது. அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய சேரமான் பெருமாள் நாயனர் என்பவர் இவருடைய ஆருயிர்த் தோழ ராக விளங்கினர். அதன் காரணத்தால் சுந்தரர் சேர மான் தோழர் என்று அழைக்கப்படுகின்ருர். இவர் சிவ பெருமானல் தடுத்தாட்கொள்ளப்பட்டார். பரவையார், சங்கிலியார் ஆகிய இரு மகளிரை மணந்து, இறைவனை ஏவல்கொண்டு வாழ்ந்தார். இவர் இயற்றிய திருத்தொண் டத் தொகையை அடிப்படையாகக் கொண்டுதான் சேக் கிழார் திருத்தொண்டர் புராணத்தைப் (பெரியபுராணம்) பாடியருளினர்.

சுந்தரரின் தேவாரப் பதிகங்களிலிருந்து பல சைவத் தலங்களின் வரலாறுகளும், சமயத் தொண்டர்களின் வரலாறுகளும் நமக்கு வாய்க்கின்றன. இவருடைய பாசுரங்களில் புறச் சமயக் கண்டனம் இல்லாதிருப்பது இவர்தம் பாக்களுக்குத் தனிப் பெருமையைத் தேடித் தருகின்றது.

இவர் சிவபெருமானை எப்படிப் பாடுவதென்று தெரியாது திகைத்து நிற்க, 'நீ முன்பு என்னைப் பித்தன் என்றாய்; ஆகவே, பித்தனென்று பாடு' என்றார் இறைவன். சுந்தரரும்,

> பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
> எத்தால்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
> வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
> நல்லூர்அருட் டுறையுள்
> அத்தாஉனக் காளாய்இனி யல்லேன்என லாமே

எனப் பக்திச் சுவை நனிசொட்டப் பாடினார்.

பல்லவர் காலத்தில் தமிழகத்தில் சமயப் பூசல்கள் தலைதூக்கிய காரணத்தால் சைவ சமயத்தைத் தலைசிறந்ததாக்க நாயன்மார்கள் தோன்றி நற்பணி புரிந்தனர். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும், அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடிய தேவாரப் பாடல்களும், பிறநாயன்மார்கள் பாடிய திருவிசைப்பாவும், இசைத் தமிழ் இலக்கியங்களாக, இறையுணர்வூட்டும் இசைப்பாக்களாக, தமிழ் இலக்கிய வரலாற்றுச் சோலையில் பூத்து விளங்கும் பொலிவுறு மலர்களாக, இன்றும் ஈடுபாடு கொள்வோரது உள்ளத்தைப் பிணிக்கும் உணர்வுக் களஞ்சியங்களாக ஒளியுடன் மிளிர்கின்றன.

ii. ஆழ்வார்கள்

திருமாலைக் கடவுளாகக் கொண்ட வைணவ மதத்திற்குத் தொண்டுசெய்த பெரியார்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்படுகின்றார்கள். அவர்கள் பன்னிருவர் ஆவர். கி. பி. 6ஆம் நூற்றாண்டு தொடங்கி ஏறத்தாழ கி. பி. 12ஆம் நூற்றாண்டு வரைக்கும் இவ்வாழ்வார்கள் வைணவ பக்தி மார்க்கத்தைத் தமிழ்மக்களிடையே பரப்பினார்கள். திருமால்

வழிபாடு மிகவும் தொன்மையான காலத்திலிருந்து நம் மக்களால் மேற்கொள்ளப்பட்டதென்பதைத் தொல்காப்பியம், கலித்தொகை, சிலப்பதிகாரம், திரிகடுகம் முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன. பரிபாடலும், திருமாலையும் அவரின் சிறப்பியல்புகளையுங் குறிக்கின்றது (பரி: 15.). மணிமேகலையில் சமயக்கணக்கர்தந் திறங்கேட்ட காதையுள் வைணவ வாதம் கூறப்படுகின்றது. எனவே, திருமால் வணக்கம் தென்னகத்தில் மிகப் பழங்காலத்திலிருந்தே உள்ளதென்றும், சமண பௌத்த சமய எழுச்சியால் வைணவ வழிபாடு மக்களிடையே குன்றியதால் ஆழ்வார்கள் தலயாத்திரைகளாலும், இறையுணர்வூட்டும் பாக்களாலும் பரந்தாமன் வழிபாட்டைப் பரப்பினரென்றும் தெரிகின்றது.

முதலாழ்வார்கள்

பொய்கையார், பூதத்தார், பேயார் என்ற மூவர்களும் முதலாழ்வார்கள் எனப்படுவர். இம்மூவரும் முறையே நாலாயிர பிரபந்தத்துள் முதல் திருவந்தாதி பாடியவர்கள். இம்மூவருக்கும் திருமால் திருக்கோவலூரில் அருள்புரிந்தார் என்பர். இவர்களின் பாடல்கள் வெண்பா யாப்பினுல் ஆனவை. இவர்கள் செய்துள்ள பாசுரங்களில் திருக்குறள் கருத்துக்கள் காணப்படுகின்றன.

திருமழிசை ஆழ்வார்

இவர் திருமழிசையில் பிறந்தவர். காஞ்சியில் பல்லவன் தம்மை இகழ்ந்ததற்காக திருமாலையும் தம்முடன் அழைத்துக் கொண்டு போனதாக ஒரு வரலாறு உண்டு. இவர் நாலாயிரப் பிரபந்தத்துள் திருச்சந்தவிருத்தம், நான்முகன் திருவந்தாதி என்பவற்றைப் பாடியவர்.

பெரியாழ்வார்

இவர் *சீவில்லிபுத்தூரில்* பிறந்தவர். இவருடைய மகள் தான் சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற ஆண்டாள் என்பவர். பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு என்ற இருநூல்களையும் செய்துள்ளார்.

ஆண்டாள்

இவர் நாச்சியார் திருமொழி, திருப்பாவை என்னும் இருநூல்களை இன்பச் சுவை ததும்பப் பாடியுள்ளார். திருமால்மீது பெருங்காதல் கொண்டு அதன் அறிகுறியாக இவர் அணிவித்த மாலையை இறைவன் ஏற்றுக்கொண்டதால் ‘சூடிக்கொடுத்த நாச்சியார்’ என்ற சிறப்புப் பெயர் இவருக்கு வாய்த்தது.

நம்மாழ்வார்

இவர் ஆழ்வார்திருநகரியில் பிறந்தவர். குழந்தைப் பருவத்திலேயே புளியமரத்தடியில் தவமிருந்து திருமாலின் திருவருளைப் பெற்றவர். திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்பன இவரியற்றிய நூல்கள்.

குலசேகராழ்வார்

இவர் சேரநாட்டு அரசர். திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர். இவர் செய்த நூல் பெருமாள் திருமொழி என்பதாகும்.

தொண்டரடிப்பொடியாழ்வார்

இவர் சோழநாட்டில் மாங்குடி என்ற ஊரில் பிறந்தார். இவர் இயற்றியது திருப்பள்ளியெழுச்சியாகும். அதில் திருமாலைப் பலபடியாகப் போற்றித் துயில் நீக்கி அருள் புரியுமாறு வேண்டுகின்றார்.

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
  போயிற்று கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கணைகட லரவம்
  களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண்டு அடியிணை பணிவான்
  அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
  எம்பெருமான் பள்ளி யெழுந்தரு ளாயே.

திருப்பாணாழ்வார்

இவர் உறையூரில் தோன்றியவர். இவர் அருளியது அமலனாதிபிரான் என்னும் பதிகம். இவர் பாக்கள் நல்லிசை அமைந்த பாக்கள்.

திருமங்கையாழ்வார்

இவர் திருக்குறையலூரில் தோன்றியவர். இவர் இயற்றிய நூல்கள் சிறிய திருமடல், பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, பெரிய திருமொழி என்பன. பெரிய திருமொழிப் பாடல்கள் திருமாலின் திருவிளையாடல்கள் பலவற்றையும் இனிது எடுத்துரைக்கின்றன.

உண்டா யுறிமேல் நறுநெய் யமுதாக
கொண்டாய் குறளாய் நிலமீ ரடியாலே
விண்டோய் சிகரத் திருவேங்கடம் மேய
அண்டா அடியேனுக் கருள்புரி யாயே.

மதுரகவியாழ்வார்

இவர் பாண்டிய நாட்டில் திருக்கோளூர் என்னுமிடத்தில் தோன்றியவர். கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் பதிகம் பாடினார். குருகூர் நம்பியைப் பாடித்திரிவதே தமக்குப் பணியென்பதை,

நாவினால் நவின்று இன்ப மெய்தினேன்
மேவினேன் அவன்பொன் னடிமெய்ம் மையே
தேவுமற் றறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே

என்ற பாட்டால் உணர்த்துகின்றார்.

இப்பன்னிரு ஆழ்வார்களும் பல தலங்களுக்குஞ் சென்று பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரந்தாமனைப் பாடிப் பரவினர்; பண்ணிசைத்து மகிழ்ந்தனர். அவர்கள் பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்புக்குத்தான் நாலாயிர திவ்யபிரபந்தம் என்று பெயர். இது வைணவ சமய இலக்கியம். இதைத் தொகுத்து ஏற்றத்தை எடுத்துரைத்த

பெருமை நாதமுனிகள் என்பாருக்கு உரியது. இவரே திவ்விய பிரபந்தம் வைணவக் கோயில்களில் மார்கழி மாதந் தொடங்கி பாடுதல் சாலும் என சில வரையறைகளைச் செய்தவர்.

நாலாயிர திவ்வியபிரபந்தம்

'நாலாயிர பிரபந்தம்' நான்கு ஆயிரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. முதலாயிரத்தில் திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனுதிபிரான், கண்ணுநுண் சிறுத்தாம்பு என்னும் பத்துப் பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இரண்டாவது ஆயிரத்தில் பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்னும் மூன்று பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. மூன்ருவது ஆயிரத்தில் முதல் திருவந்தாதி, மூன்ருந்திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவெழுக்கூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல் என்னும் பத்துப் பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. நான்காவது ஆயிரத்தில் திருவாய்மொழி என்னும் பிரபந்தம் இடம்பெற்றுள்ளது.

பெரியவாச்சான்பிள்ளை இந்நூல் முழுமைக்கும் விளக்கம் எழுதியுள்ளார். இதுதவிர திருப்பாவை, கண்ணிநுண் சிறுத்தாம்பு முதலிய பிரபந்தங்கட்கு நஞ்சீயர், அழகிய மணவாளச்சீயர், அழகிய மணவாளப் பெருமாள் நயினுர் முதலியோர் செய்துள்ள விளக்கங்களும் உள. இவைகளில் நாலாயிர பிரபந்தம் பல்வளம் பெற்று மக்கள் மத்தியில் இன்று சீரும் சிறப்புடனும் விளங்குகின்றது.

ஆழ்வார்கள் இறையருள் பெற்றவர்கள். இவ்வுலகில் மண்டிய அறியாமை இருள் அகல, ஆண்டவனருள் பெருகத் தொண்டாற்றியவர்கள். வேதங்களில் கூறியுள்ளதும் பழைய தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ளதுமான உண்மைக் கருத்துக்களை எடுத்துத் திரட்டிச் செந்தமிழ்ப் பாசுரங்களாய், தெய்வமணங்கமழும் மெய்யுரைக் கருவூலங்களாய்ச் செய்திருக்கின்றனர். ஆழ்வார்களின் தமிழாற்

றலும், தமிழ்ப்பற்றும், இசையறிவும் அவர்கள் செய்து அருளிய திவ்விய பிரபந்தத்தின்வாயிலாய்த் தெரிய வருகின்றன.

நாயன்மார்களது பன்னிரு திருமுறையும், ஆழ்வார்களது நாலாயிர திவ்வியபிரபந்தமும் நம்மவர்கள் இறைவனிடத்துக் கொண்ட ஈடுபாட்டையும், எழில்தமிழ்பால் அவர்களுக்கிருந்த இணையற்ற காதலையும் அனைவர்க்கும் உணர்த்துகின்றன. இவர்கள் இசைத்தமிழ் வளர்த்த இசைக்கலைஞராவார்கள்; இவர்களை என்றும் நாம் போற்றக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

15. பல்சமயத் தமிழிலக்கியப் பணி

தமிழகத்தில் வாழ்வுபெற்ற சமயங்கள் பலவும் தமிழின் துணையால்தான் தழைத்தோங்க முடியுமென்றெண்ணித் தமிழ் இலக்கிய இலக்கணப் பணிகளில் ஈடுபட்டன. எழில்மிகு இலக்கியங்களைப் படைத்து அவைகளின் வழியாகத் தமிழ்மக்களின் உள்ளங்களில் சமயக் கருத்துக்களை வேரூன்றச் செய்தன. சமணம் தந்த பெருங்கதையும், சீவகசிந்தாமணியும் சிறந்த காப்பியங்கள்; யாப்பருங்கலமும், நன்னூலும் சீரிய இலக்கணங்கள். பௌத்தம் தந்த மணிமேகலையும், குண்டலகேசியும் மாண்புறு காப்பியங்கள். வீரசோழியம் அது வழங்கிய இலக்கண நூல். இன்னும் சைவம் தோற்றுவித்த பெரியபுராணமும், வைணவம் ஈந்த கம்பராமாயணமும் இப்பகுதியில் நாம் அறிதற்குரியன.

i. சமணர் செய்த தமிழ்ப்பணி

சமண மதம் தமிழகத்தில் கி. மு. 3ஆம் நூற்றாண்டிலேயே பரவத் தொடங்கிற்று. கி. பி. 8ஆம் நூற்றாண்டு வரைக்கும் நம்மவர்கள் போற்றியதால் நலத்துடன், வளத்துடன் வாழ்ந்தது. இடைப்பட்ட இந்த நூற்றாண்டுகளில் சமணசமயப் பெரியார்கள் தமிழ்மொழிக்கு பேராக்கமளித்தனர். நல்ல பல இலக்கிய இலக்கணங்களையும், காவியங்களையும், நிகண்டுகளையும் ஆக்கித் தந்தனர். நன்னூல்,

நேமிநாதம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை முதலியவை சமணர்கள் தமிழ்மொழியில் செய்த இலக்கண நூல்கள். சேந்தன் திவாகரம், சூடாமணி முதலியவை அவர்கள் செய்த நிகண்டு நூல்கள். சீவகசிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை, வளையாபதி, நீலகேசி முதலியவை அவர்கள் செய்த காப்பியங்கள். மேருமந்தர புராணம், திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி, பழமொழி நானூறு, நாலடியார், நான்மணிக்கடிகை முதலியவை அவர்கள் உருவாக்கிய இலக்கியங்கள். மேலும், அவர்கள் செய்த சமண சமய நூல்கள் சில காலவெள்ளத்தில் சிக்கி மறைந்து விட்டன.

பெருங்கதை

பெருங்கதை சங்ககாலத்திற்குப் பின்னர் உண்டான பழைய காப்பியங்களுள் ஒன்று. நடையமைப்பினுலும், பொருட் சிறப்பினுலும் காப்பியங்களுள் தலைமைத் தன்மையுடையதாகக் கருதத்தக்கது. சிலப்பதிகாரத்திற்கும், மணிமேகலைக்கும் பிற்பட்டது. இஃது ஒன்பான் சுவையும் ஒருங்கே அமைய கொங்குவேளிர் என்ற புலவரால் ஆக்கப்பட்டது. குணாட்டி என்பவரால் வடமொழியில் இயற்றப்பட்ட இதைக் கொங்குவேளிர் தமிழில் மொழிபெயர்த்தார் என்று உரைப்பர். இந்நூலில் பல சமண வழக்குகளை ஆங்காங்குக் காணலாம்.

இந்நூல் உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என்று ஐந்து பகுதிகளையுடையது. உதயணன் பிறப்பும் அவன் தாய்ப்பாட்டனுல் வளர்க்கப்பட்டுப் பல கலைகளைக் கற்றதும், வாசவதத்தையை மணந்ததும், இராசகிரியில் பதுமாவதியை மணந்ததும் இன்னும் பிற பெண்களை மணந்து இறுதியில் பதுமாவதியின் மகனுகிய கோமுகனுக்குத் தனதரசாட்சியை அளித்துத் துறவுபூண்டதுமாகிய செய்திகளை இந்நூல் விரிவாகக் கூறுகின்றது. வாழ்க்கையைப் பற்றிய பலதுறைக் கருத்துக்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அரசியல் முறைகளும், சமூகப் பழக்க வழக்கங்களும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. உள்ளத்தைக்

கொள்ளைகொள்ளும் உவமைகளும், படிப்போரைக் கவரும் பல வருணனைகளும், சொல்லணிகளும், பொருளணிகளும் இந்நூலில் நிறைந்துள்ளன.

சீவகசிந்தாமணி

சீவகசிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. சமண முனிவராகிய திருத்தக்கதேவரால் இயற்றப்பட்டது. இதன் காலம் கி. பி. 10 ஆம் நூற்றுண்டென்பர். இதில் காணும் கதை மணிப்பிரவாள நடையில் அமைந்த சீரா புராணத்துள் கூறப்பட்டுள்ளது. நாமகள் இலம்பகம் முதலாக முத்தி இலம்பகம் முடிய பதின்மூன்று பிரிவுகளை யும், 3145 செய்யுட்களையும் தன்னகத்துக் கொண்டது. இஃது உறுதிப் பொருள்கள் நான்கையும் திறம்படக் கூறுவ தால் அடியார்க்குநல்லார் இதனை முடிபொருள் தொடர் நிலைச் செய்யுளென்கின்றுர். இதற்கு மிகச் சிறந்த உரை யொன்று நச்சிஞர்க்கினியரால் எழுதப்பட்டுள்ளது. இதை முதன்முதலில் பதிப்பித்தவர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் ஆவார்கள்.

கதையமைப்பு

சச்சந்தன் ஏமாங்கதநாட்டு மன்னன்; சிற்றின்பப் பிரியன் அமைச்சன் கட்டியங்காரனின் சூழ்ச்சியால் கொல் லப்படுகின்றுன். மனைவி விசையை மயிற்பொறி ஏறித் தப்பிச் சென்று இடுகாட்டில் சீவகனை ஈன்றெடுக்கின்றுள். கந்துக் கடன் என்பவனுல் வளர்க்கப்பட்டு, வாலிபப் பருவம் அடைந்து, பல்லாற்றல் பெற்றுப் பெரும் வீரனுக சீவகன் விளங்குகின்றுன். காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்ற வண்ண மகளிர் எண்மரை மணக்கின்றுன். இறுதியில் ஏமாங்கதநாட்டின்மேல் படைதிரட்டிச் சென்று, கட்டியங் காரனைப் போரில் புறமுதுகிடச் செய்து, நாட்டைக் கைப் பற்றி ஆண்டு அநுபவித்து முடிவில் துறவறத்தை மேற் கொள்ளுகின்றுன். பல மணச்செய்திகள் இடம்பெற்றிருப் பதால் இந்நூலை மணநூலென்றும் அழைப்பர்.

சிறப்புச் செய்திகள்

திருத்தக்கதேவர் சமணசமயப் பற்றுடையவராகையால் இந்து சமயக் கடவுளர்களாகிய பிரமன், சிவபெருமான், திருமால் என்ற மூவர்களையும், புத்த தேவனையும் இகழ்ந்து சில்லிடங்களில் பாடியுள்ளார். எனினும், பல அறங்களையும் சிறந்த உவமைவாயிலாக எடுத்துரைத்துள்ளார். உலக நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை என்பவைபற்றி இனிய தமிழில் எழில்பட எடுத்துரைத்துள்ளார். துன்பத்தை இன்பமாகக் கொள்ள வேண்டுமென்றும், செல்வத்தைப் பிறர்க்கீந்து வாழ வேண்டுமென்றும், பசிப்பிணி போக்குதல் சிறந்த அறமென்றும் கூறியுள்ளார். துறவறத்தைப் பெரிதும் போற்றியுள்ளார்.

இவரது நூலில் பழைய தமிழ் இலக்கியங்களின் கருத்துக்கள் இடையிடையே விரவி வந்துள்ளன. பெரும்பாலும் திருக்குறளின் கருத்துக்கள் மலிந்துள்ளன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகைக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

சீவகசிந்தாமணியின் சிறப்புக் கருதி கம்பர் இதை நன்கு ஊன்றிப் படித்து இதில் கண்ட பல முறைகளைத் தம் நூலிலுங் கொண்டார். காப்பிய இலக்கணங்கள் எல்லாம் ஒருங்கே அமைந்து தமிழில் விருத்தப்பாவால் ஆகிய முதல் நூலாக இந்நூல் விளங்கியதால் இதைத் தழுவியே கம்பர் விருத்தப்பாக்களால் இராமாயணத்தைச் செய்தார்.

சீவகசிந்தாமணி செஞ்சொற் காப்பியம்; நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்திற்கு நேரானது. கருத்தழகும், கற்பனையழகும் கற்போர் உள்ளத்தைக் கவருகின்றன.

செய்யுள் வளம்

சீவகன் தன் அருமை மனைவியர்க்கு அறவுரை கூறுதல் போல் ஆசிரியர் உலக மக்கட்கு உயரிய அறத்தை உரைக்கின்றார்.

திருந்திய நல்லறச் செம்பொற் கற்பகம்
பொருந்திய பொருளொடு போகம் பூத்தலால்
வருந்தினும் அறந்திறம் மறத்தல் ஓம்புமின்
கரும்பெனத் திரண்டதோள் காலவேல் கணீர்.

நல்லறம் பேரின்பத்தை நல்கலால் வருந்தினும் அறம் மறத்தல் கூடாதென்கின்றார் தேவர்.

திருத்தக்கதேவர் இயற்கையில் நிறைந்த ஈடுபாடுடையவர். இயற்கைக் காட்சிகளை நல்ல சொல்லாட்சியால் சந்த இனிமையோடு பாடும் திறம் படைத்தவர். கனகமாலையார் இலம்பகத்தில் ஒரு சோலையின் அழகை அதன் சிறப்புக் கருதி இமையவர் உலகிற்கு ஒப்பாகப் பேசுகின்றார். அப்பாடல்,

வண்டுதுயில் கொண்டுகுயில் ஆலிமயில் அகவி
விண்டுமது விட்டுவரி போதுபல பொதுளிக்
கொண்டுதளிர் வேய்ந்துசினை தாழ்ந்துநனை ஆர்ந்தொன்
றுண்டுபொழில் இமையவர்கள் உலகமுறு வதுவே.

அச்சோலையில் வரிவண்டுகளும், பொறிவண்டுகளும் மதுவுண்டு மலர்களில் உறங்கிக்கொண்டிருக்கின்றன. குயில்கள் கூவுகின்றன; மயில்கள் அகவி ஆடுகின்றன. மொட்டுகள் விரிந்து தேன் துளிகளைச் சொட்டுகின்றன. சோலையெங்கும் தளிர்கள் திகழ்கின்றன. தாழ்ந்த கிளைகளில் அரும்புகள் பொருந்தி அழகுறத் தோன்றுகின்றன.

தேவர் அவலச் சுவையை அருமையாகப் பாக்களில் பயன்படுத்தியுள்ளார். சீவகனைப் பெற்றெடுத்த விசையை அவனுடைய துயரம் நிறைந்தவரலாற்றைக் கேட்டுப் புலம்புவதைக் கனகமாலையார் இலம்பகத்தில் பல பாக்களில் பாடியுள்ளார். அவைகளில் ஒன்று :

முன்னொருகால் என்மகனைக் கண்டேனென் கண்குளிரப்
பின்னொருகால் காணப் பிழைத்ததென் தேவிர்காள்
என்னனைப்பார் பெண்மகளிர் இவ்வுலகில் தோன்றற்கென்
றன்னப் பெடைநடையாள் ஆய்மயில்போல் வீழ்ந்தனளே.

இப்பாடலில் சொல் எளிமையைக் காண்கின்றோம்; அவலச் சுவை இன்பத்தைப் பெறுகின்றோம். இன்னும் உவமை அழகையும் உன்னி மகிழ்கின்றோம். விசையை அன்னப்பெடைபோல் நடக்கக்கூடியவளாம். அவள் துயர் தாங்க ஒண்ணாது தரையில் வீழ்கின்றாள். அவ்வாறு, வீழ்வதுவும் அழகு மயில் வருந்தி வீழ்வதைப்போல் இருக்கின்றதாம். சீவகசிந்தாமணி சமணசமயக் காப்பியமாயினும் தமிழ் இலக்கிய வானில் தோன்றிய விடிவெள்ளி. அதற்குப் பிறகு தோன்றிய இலக்கியங்கள் பலவும் அதனுடைய ஒளி பெற்று மலர்ந்ததை நற்றமிழ்ப் பாவலர் நன்கறிவர்.

வளையாபதி

வளையாபதி ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று; சமணச் சார்புடையது. இந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. இதனுடைய செய்யுட்கள் பல புறத்திரட்டில் வந்துள்ளன. வைசியபுராணம் 35ஆம் சருக்கத்தில் வளையாபதியின் கதை வந்துள்ளது. வைரவாணிகன் வணிக குலத்தைச் சாராத ஒருத்தியைக் காதலித்ததும், அவளைப் பிரிந்து அவன் வேற்று நாடு சென்று பொருளீட்டி வந்து காவிரிப்பூம் பட்டினத்தில் தன் குல மங்கையொருத்தியோடு சிறக்க வாழ்ந்ததும், இவன் முன்பு தொடர்பு கொண்டிருந்தவளுக்கு ஆண்மகவு ஒன்று பிறந்து வளர்ந்து வந்ததும் காளியின் துணையால் வணிகர் அவை அம்மகவு வைரவாணிகனுக்கு உரியதென்று முறை வழங்கியதும், இறுதியில் அவன் அம்மகவையும், பெற்ற தாயையும் ஏற்றுப் போற்றியதுமான செய்திகளே வளையாபதியின் வரலாறாகும்.

சூளாமணி

சூளாமணி தமிழில் வழங்கும் சிறு காப்பியங்களுள் தலையாயது. இதனை இயற்றியவர் சமணசமய முனிவராகிய **தோலாமொழித்தேவர்.** இஃது எல்லா சமயத்தவரும் ஒப்பப் போற்றும் தகுதியுடையதாக இருக்கின்றது. பல சமயங்களுக்கும் பொருந்திய கருத்துக்களையே இந்நூல் எடுத்துரைப்பதால் இன்றுவரை இக்காப்பியம் தமிழ் மக்களால் போற்றப்பட்டு வருகின்றது. இதன்கண் திவிட்டன்,

விசயன் என்ற இரண்டு அரசகுமாரர்கள் வரலாறு கூறப் படுகின்றது. இந்து சமய நூல்களின் கதைகளை ஒத்து இந்நூற் கதை இருப்பதே இதன் சிறப்பிற்குக் காரணம்.

நீலகேசி

நீலகேசியும் சமணர்கள் செய்த சிறு காப்பியங்களுள் ஒன்று. இக்காப்பியத்தின் தலைவியாகிய நீலி என்பவள் பழையனூரில் வாழ்ந்த பேய்களில் ஒருத்தி. இவள் தன் வாழ்நாளின் பிற்பகுதியில் சமணமுனிவர் ஒருவரால் தூய்மையாக்கப்பட்டுப் பேய்த்தன்மை நீங்கிச் சமணத் துறவியாய்ச் சமயத்தைப் பரப்பினள் என்று நீலகேசி நூலில் கூறப்படுகின்றது.

நிகண்டுகள்

சமண முனிவர்கள் தமிழ் இலக்கணத்திற்கும் பெருந் தொண்டு ஆற்றியுள்ளார்கள். திவாகரர் என்னும் சமண முனிவர் சேந்தன் என்னும் சிற்றரசனின் விருப்பத்திற் கேற்ப திவாகரநிகண்டைச் செய்தார். இந்நிகண்டு இன்றைக்கு 1800 ஆண்டுகட்கு முற்பட்டது. பிங்கல நிகண்டைச் செய்தவர் சமணராகிய பிங்கல முனிவர். இஃது இன்றைக்கு 800 ஆண்டுகட்கு முற்பட்டது. சூடாமணி நிகண்டைச் செய்தவர் வீரைமண்டலப்புருடர் என்னும் சமணமுனிவர். இது கி. பி. 16ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது.

இலக்கண நூல்கள்

அகப்பொருள் விளக்கமென்னும் நம்பியகப்பொருள் நாற்கவிராசநம்பி என்ற சமணரால் இயற்றப்பட்டது. தொல்காப்பியத்திலும் வேறு இலக்கணங்களிலும் விரிந்து பரந்து கிடந்த அகப்பொருள் இலக்கணங்களை இந்நூல் தொகுத்துக் கூறுகின்றது. இதில் அகத்திணை, புறத்திணை களவு, வரைவு, ஒழிபு என்ற ஐந்து பிரிவுகளைக் காணலாம். யாப்பருங்கலவிருத்தி யாப்பிலக்கணங்களை விரித்துக் கூறு வது. இதில் காணும் இலக்கணங்களைச் சுருக்கிக் கூறுவது யாப்பருங்கலக்காரிகை என்னும் மற்றொரு யாப்பு நூல்.

இவ்விரண்டு நூல்களையும் செய்தவர் அமிதசாகரர் என்ற சமணர். நேமிநாதம் என்னும் இலக்கண நூலை இயற்றியவர் குணவீர பண்டிதர். இது சின்னூல் எனவும் வழங்கும். இஃது எழுத்திலக்கணத்தையும், சொல்லிலக்கணத்தையும் 96 சூத்திரங்களில் அடக்கிக் கூறும். நன்னூலைச் செய்தவர் பவணந்தி முனிவர். தொல்காப்பியத்திற்கு அடுத்தாற்போல் சிறந்த இலக்கண நூல் இதுவே. எழுத்தும், சொல்லுந் தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்நூலுக்கு முதன் முதல் உரை வகுத்தவர் மயிலைநாதர் என்னும் சமண முனிவர். இதனையடுத்துச் சிறந்து வழங்கும் உரை சங்கர நமச்சிவாயருரை.

பிற நூல்கள்

தமிழகத்தில் சமயத்தைப் பரப்ப முனைந்த சமணர்கள் தமிழுக்குத் தொண்டுசெய்யத்தொடங்கிப் பெருங் காப்பியங்களும், சிறு காப்பியங்களும் செய்தார்கள். நிகண்டுகளையும், இலக்கண நூல்களையும் இயற்றினுர்கள். இலக்கியப் போக்கிலும், இலக்கண நிலையிலும் பல புதிய முறைகளைப் புகுத்தினுர்கள். இவ்வாறு தமிழை வளர்த்தவர்களை, தமிழ்ப் பணி புரிந்த சமணர்களை நாளும் நினைந்து நன்றி செலுத்தக் கடன்பட்டுள்ளோம்.

ii. பௌத்தர் வளர்த்த பைந்தமிழ்

அசோகர் காலத்தில் (கி. மு. 275-232.) தென்னகத்தில் பௌத்தமதம் பரவிற்று. தொல்காப்பியத்தில் பௌத்த மதத்தைப்பற்றிய குறிப்பு இல்லை. ஆனுல், கடைச்சங்க காலத்தில் தோன்றிய மதுரைக் காஞ்சியில், நற்றிணையில், சிலப்பதிகாரத்தில், மணிமேகலையில் பல குறிப்புக்களைக் காணலாம். பௌத்தமதத் துறவிகள் சமண முனிவர்களைப் போல் தமிழ்மொழியில் பல இலக்கியங்களையும், இலக்கணங்களையும் படைத்துப் பைந்தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளார்கள்.

மணிமேகலை

முதன்முதலில் தமிழ்மொழியில் தோன்றிய பௌத்த காப்பியம் மணிமேகலை. இதன் ஆசிரியராகிய சாத்தனுரும்

ஒரு பௌத்தரே. இவர் பாடியவையாக நற்றிணை, குறுந் தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற சங்கத்தொகை நூல்களில் பல பாடல்கள் உள. மணிமேகலையின் சொல் வளமும், பொருள் வளமும் இவ்வாசிரியரின் சிறப்பைத் தெரிவிக்கின்றன. மேலும், இந்நூல் தமிழ்நாட்டு வரலாற்றுக் கருவூலமாகவும், சமயக் களஞ்சியமாகவும், சுவை நிறைந்த இன்ப இலக்கியமாகவும் விளங்குகின்றது. (இந்நூலின் அருமையை, மணிமேகலை தரும் மாண்புறு செய்தியில் காண்க.)

குண்டலகேசி

குண்டலகேசி என்ற பௌத்த நூல் ஐம்பெருங்காப்பி யங்களில் ஒன்று; இதனாசிரியர் நாதகுத்தனார் என்பவர். குண்டலகேசி என்பதற்குச் சுருண்ட கூந்தலை உடையவள் என்பது பொருள்.

இராசக்கிருகம் என்பது ஒரு நாடு. அந்நாட்டு அரச னுக்கமைந்த நல்லமைச்சனின் மகள் பெயர் பத்திரை. அழகுச் சிலையாக விளங்கிய பருவத்து, கள்வனொருவனைக் காத லித்துக் கணவனாக ஏற்றுக்கொண்டாள். அவனோடு வாழ்ந்துவருங்கால் ஒருநாள் ஊடலுற்ற காரணத்தால் அவனைக் கள்வனென்று கூறவும், அவன் கடுஞ்சினங் கொண்டான். எனினும், அன்புடையவன்போல் அவளை மலை யுச்சிக்கழைத்துச் சென்று வீழ்த்திக் கொல்ல முனைந்தக்கால், அவள் அவனை வணங்குபவள்போல் நடித்து அடுத்திருந்த மடுவில் அவனை வீழ்த்திக் கொன்றாள். அதன்பிறகு சமண சமயத்தைச் சார்ந்து துறவுபூண்டாள். ஒருசமயம் புத்த துறவியாகிய சாரிபுத்தரிடம் சமயவாதத்தில் தோல்வியுற்ற தால் பௌத்த சமயத்தைச் சார்ந்தாள். இவளைப்பற்றிய இக்காப்பியம் எழில்தமிழ் இலக்கியமென்பதில் ஐயமில்லை.

விம்பசார கதை

விம்பசார கதையும் பௌத்த காப்பியமாகக் கருதப்படு கின்றது. விம்பசாரன் என்பவன் மகததேசத்து மன்னன். புத்தருடைய நல்லுரை கேட்டுப் பௌத்தனானவன். நீலகேசி உரைப்பகுதி இந்நூலைப் பௌத்த காப்பியமென்று வலி யுறுத்துகின்றது.

வீரசோழியம்

வீரசோழியம் ஓர் இலக்கண நூல். இதன் ஆசிரியர் புத்தமித்திரனார் என்பவர். இவ்வாசிரியரின் மாணவராகிய பெருந்தேவனார் என்பவர் இதற்கு உரையெழுதியுள்ளார். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருள்படலம், யாப்புப் படலம், அலங்காரப்படலம் என்று ஐந்து பெரும் பிரிவு களைக் கொண்டு விளங்குகின்றது.

பிற நூல்கள்

பௌத்தமதக் கொள்கைகளைத் தொகுத்துக் கூறும் சித்தாந்தத்தொகை என்ற நூல் இன்று கிடைக்கவில்லை. திருப்பதிகம் என்பது புத்தர்மீது இயற்றப்பட்ட தோத்திர நூல்.

தமிழறிந்த பௌத்தமதப் பெரியார்கள்

தமிழ்நாட்டில் பல பௌத்தமதப் பெரியார்கள் சங்க காலம் தொடங்கி வாழ்ந்துவந்திருக்கின்றார்கள். கடைச் சங்க காலத்தில் இளம்போதியார் என்பவர் வாழ்ந்தார். அவர் நற்றிணையில் 72 ஆவது பாடலை நெய்தல் திணைக்கு உரியதாகச் செய்துள்ளார். சீத்தலைச்சாத்தனார் காலத்தில் அறவணவடிகள் என்பார் ஒருவர் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்துவந்தார் என்று மணிமேகலை கூறுகின்றது. பெருந்தேவனார் என்பவரும் பௌத்தரே. இவர் வீரசோழி யத்திற்கு உரையெழுதியுள்ளார். ஆசாரிய தர்ம பால மகா தேரர், ஆசாரிய புத்ததத்த மகா தேரர் போன்றவர் களும் தமிழில் நூல்கள் செய்தார்கள்; ஆனால், அவைகள் இன்று நமக்குக் கிடைக்கவில்லை.

பௌத்தமதத்தைப் பரப்ப வந்த பெரியவர்களும், பௌத்தமதத்தைச் சார்ந்தொழுகிய தமிழ்நாட்டு நல்லவர் களும் பரந்த மனப்பான்மையோடு பைந்தமிழ் மொழியைக் கற்று அதில் நல்ல புலமை பெற்று அம்மொழியிலேயே தம் சமயக்கருத்துக்களை எடுத்துச் சொல்ல முனைந்து இலக்கியம் பலபடைத்துத் தமிழ்த் தாய்க்குத் தொண்டுசெய்திருக்குஞ் சிறந்த செயல் போற்றுதற்குரியது.

iii. சைவ இலக்கியங்கள்

தமிழ்மொழிக்கும் சைவ சமயத்திற்கும் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கின்றது என்பதைப் பல்வேறு காலங்களில் தோன்றிய இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. நாயன்மார்களுடைய தமிழ்த்தொண்டு பன்னிரு திருமுறையின் வாயிலாகத் தெரிகின்றது. கி. பி. 11ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சைவப் பெரியார்கள் பல சிற்றிலக்கியங்களையும், பேரிலக்கியங்களையும், சிறந்த புராணங்களையும் செந்தமிழில் செய்து தந்திருக்கின்றார்கள்.

பெரியபுராணம்

பெரியபுராணம் பிற புராணங்களைவிட செஞ்சொல் அழகிலும், தெய்வீகச் சுவையிலும் சிறந்தது. வடமொழிச் சொற்கள் குறைந்தும், வண்ணத் தமிழ்ச் சொற்கள் செறிந்தும் திகழ்ந்து தித்திக்கும் தீந்தமிழ் இலக்கியம். இது தோன்றிய காலம் 11ஆம் நூற்றாண்டின் இறுதியாகும்.

நூல் தோன்றிய வரலாறு

இதனாசிரியர் தொண்டை நாட்டில் குன்றத்தூரில் பிறந்த சேக்கிழார் பெருமான். சோழன் அநபாயனுக்கு அமைச்சராக இருந்து அரசியல் பணியும், அறிவுப் பணியும் புரிந்தவர். அநபாயனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, சேக்கிழார் சிதம்பரம் சென்று தில்லைக் கூத்தனது அருள் பெற்று இவ்வரிய புராணத்தைப் பாடி முடித்தார். இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணமென்பது. பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாற்றை உணர்த்துவதாகும். சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பிகள் செய்த திருத்தொண்டர் திருவந்தாதியும், தேவாரம், காரைக்காலம்மையார் பிரபந்தங்கள், திருமூலர் திருமந்திரம், கழறிற்றறிவார் பொன்வண்ணத்தந்தாதி, தெய்வ உலா முதலிய நூல்களும் இந்நூலைப் பாடுதற்கு ஆதாரமாக இருந்தன.

நூல் விளக்கம்

இந்நூல் இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருமலைச் சருக்கம் முதல் வெள்ளையானைச் சருக்கம் இறுதியாகப் பதின்மூன்று சருக்கங்களை உடையது. மொத்தம் 4286 பாடல்களைக் கொண்டது.

காவியச் சிறப்புகளெல்லாம் தன்பாற் கொண்டு விருத்தப் பாக்களால் அமைந்து விளங்குவது. அறிவினையும், அன்பினையும் வளர்ந்தோங்கச் செய்வது; பக்திச் சுவையின் முகிலாய்த் திகழ்ந்து பக்தி மழையைப் பாரெங்கும் பொழிவது.

பல்வகை அறங்களையும் விளக்கும் இலக்கியமென்றுரைக்கலாம் இதனை. சினங்காக்க வேண்டுமென்பதைத் திருநாவலூரர் வரலாறு தெளிவாகக் காட்டுகின்றது. பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் காணவேண்டுமென்பதைத் திருமூலநாயனர் வாழ்வு காட்டுகின்றது. விருந்து புரக்க வேண்டுமென்பதை இளையான்குடிமாற நாயனர் வாழ்வு நலமுற நவில்கின்றது. இவ்வாறே பல நாயனர்களுடைய வாழ்க்கைகளும் வளமான அறங்களைப் புலப்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

பெரியபுராணம் சமய இலக்கியமட்டுமன்று; மக்கள் இலக்கியம். பல்வேறு நிலையில் இருந்து பல குடியிலும் குலத்திலும் பிறந்தவர்கள் உண்மையை மேற்கொண்டு ஒழுகியதால் இறையருள் பெற்றுயர்ந்தார்கள்என்ற நற்கருத்தை எடுத்தோதுகின்றது. ஆகவே, எல்லா மக்களும் இதில் காணும் அறக்கருத்துக்களை ஏற்றல் நன்று.

கவிதைச் சிறப்பு

சேக்கிழார் பக்திச் சுவை மலியப் பாடுவதில் நற்புலமை பெற்றவர். கண்ணப்ப நாயனர் புராணத்தில் இச்சுவை செறிந்த கவிதைகளை நாம் கண்டு களிக்கலாம். வேட்டைக்குச் சென்ற திண்ணனர் திருக்காளத்தி மலையை அணுகி ஆங்குத் திங்கள்சேர் சடையார் எழுந்தருளியிருக்கக் கண்

டார்; ஆர்த்தெழும் அன்பின் பெருக்கால் விரைந்தோடி அவ்வரைநாயகரைத் தழுவிக்கொண்டார். இந்நிகழ்ச்சியை,

மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டார் எழுந்தபே ருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடு
மோகமா யோடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார்

என்ற பாட்டால் காட்டுகின்றார்.

இச்சிவனடியார் இறைவன் உண்ணுதற்குரிய பொருள்களைத் தேடிக்கொண்டு வரும்பொழுது திருக்காளத்தியப்பர் கண்ணினின்றும் செந்நீர் வடியக் கண்டு மயங்கினார்; உணர்வு சோர்ந்து நிலத்தில் வீழ்ந்தார். இதை,

வந்தவர் குருதி கண்டார் மயங்கினார் வாயி னன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்து
வீழ்ந்தார்

என்கின்றார். பிறகு தம் கண்களைத் தோண்டி எடுத்துக் காளத்தியார் கண்ணில் அப்ப முனைந்தார். ஒரு கண்ணைத் தோண்டி அப்பிவிட்டு இரண்டாவது கண்ணையும் தோண்டி எடுக்கத் துணிந்தக்கால், "கண்ணப்ப நிற்க" என்று இறைவன் தடுத்து அவருக்குப் பேரருள் புரிந்தார். இவ்வாறு திண்ணனார் சிவபிரான்மீது கொண்ட அளப்பரும் அன்பால் கண்ணப்பரானதைச் சேக்கிழார் இனிய, எளிய பாக்களால் பாடியுள்ள திறம் போற்றற்குரியதே.

பெரியபுராணம் கற்பனைக் கடல்; கருத்துக் கருவூலம்; உவமை என்னும் அழகு மலர்கள் பூத்திருக்கும் பூஞ்சோலை. ஐந்திணை வளங்களை அழகுறக் காட்டும் சொல்லோவியம்.

இத்துணைச் சீரும் சிறப்பும் பெற்ற பெரியபுராணத்தைச் சேக்கிழார் தில்லையில் அரங்கேற்றியகாலத்து படித்

துப் பொருள் விரிக்க ஓராண்டானதாம். அரங்கேற்றம் முடிந்ததும் சோழன் சேக்கிழாரை யானைமீது ஏற்றி, "தொண்டர்சீர்பரவுவார்" என்னும் சிறப்புப் பெயரை வழங்கிச் சிறப்பித்தானும்.

கந்தபுராணம்

இது சிந்தாமணியினுடைய நடையைக் கொண்டு விளங்குகின்றது. இதனுடைய காலம் கி. பி. 12ஆம் நூற்றுண்டின் தொடக்கம். இந்நூலை இயற்றிய ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியார் என்பவர். இதன்கண் ஆறு காண்டங்களும், பத்தாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுட்களும் உள்ளன.

இந்நூல் ஆறுமுகக்கடவுள் வரலாற்றைக் கூறும் தமிழ்ப் பெருங்காப்பியம். ஆறுமுகக்கடவுள் சிவபெருமானுடைய திருநெற்றியிலிருந்து எழுந்த ஆறு பொறிகளின் சேர்க்கையால் சரவணப்பொய்கையில் உதித்து கார்த்திகை மாதரால் வளர்க்கப்பட்டுப் பல திருவிளையாடல்கள் புரிந்த வரலாறு இதனுல் தெரிகின்றது. மேலும், சூரபன்மன் காசிபருக்கும் மாயைக்கும் தோன்றி வீரவேள்வி செய்து சிவபெருமானிடமிருந்து பெருவரம் பெற்றுத் திருமால் முதலிய தேவர்களைச் சிறைசெய்த செய்திகள் பேசப்படுகின்றன. ஆறுமுகக் கடவுள் தெய்வயானையையும், வள்ளிநாயகியையும் மணந்த செய்தியும், இந்திரன் மகனுகிய சயந்தனுக்கு வியாழபகவான் தேவர், அசுரர் சிறைப்பட்ட காரணங்களைக் கூறிய செய்தியும் விரிவாக இந்நூலில் தெரிகின்றன.

இதன்கண் காவியப் பன்னயங்களும் காணப்படுகின்றன. சைவசித்தாந்தக் கருத்துக்கள் எளிதாகவும், தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. முருகப்பெருமான் பகையில்லாப் பரமனென்று விளக்கும் முதல் காப்பியம் இதுவே.

திருவிளையாடற்புராணம்

இதன் ஆசிரியர் பரஞ்சோதிமுனிவர் ஆவர். இவர் 16ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் சோழமண்டலத்தில்

திருமறைக்காட்டில் தோன்றியவர். இவர் வேதாரணியப் புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இந்நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், ஆலவாயிற் காண்டம் என்னும் பிரிவுகளை உடையது. இதன்கண் சிவபெருமான் புரிந்த அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் பேசப்படுகின்றன. இதில் வந்துள்ள கதைகள் சிலப்பதிகாரத்திலும், கல்லாடத்திலும், தேவாரத்திலும், திருவாசகத்திலும் காணப்படுகின்றன.

இப்புராணத்திற்கு முதல்நூல் வடமொழியில் உள்ள ஆலாசிய மான்மியம் என்றும், இது பதினெண் புராணங்களில் ஒன்ருகிய கந்தபுராணத்தின் ஒரு பகுதியாகுமென்றும் கூறப்படுகின்றது. ஆனல், ஆலாசிய மான்மியம் இதற்கு முதல்நூலென்று கொள்வது பொருத்தமன்று.

இதில் ஒன்பான் சுவையும் விஞ்சியுள்ளது. சொல் நடையிலும், அன்பு விளைவிக்கும் தன்மையிலும் மேம்பாடுடையது. பெருங்காப்பிய நயங்களும் இதன்கண் சிறந்துள்ளன. இதனருமை கருதி பெரியபுராணத்திற்கும் அடுத்தபடியாக சைவர்கள் இதைப் போற்றி வருகின்ருர்கள்.

கவிதை நயம்

பரஞ்சோதி முனிவர் நல்ல சந்தம் அமைந்த பாக்கள் பாடும் ஆற்றல் பெற்றவர். மண்சுமந்த படலத்தில் வையைநதி பெருக்கெடுத்துக் கரையுடைத்து வருவதை விரைவுக் குறிப்புத் தோன்றப் பாடியுள்ளார். அப்பாடல்,

கருங்க டற்றிரை யிடைக்கி டந்துசுழல்
கலமெ னக்ககன முகடளாய்
வரும்பு னற்பரவை யுட்கி டந்துநகர்
மறுகி யுட்கமற வேலினுன்
ஒருங்க மைச்சரை விளித்து நீர்கரை
சுமந்தொ துக்கிவரு மோதநீர்ப்
பொருங்க தத்தினை யடக்கு வீரென
அமைச்ச ருங்தொழுது போயினர்

என்பதாகும். இப்பாட்டில் அருமையான உவமையொன்றும் இடம்பெற்றுள்ளது. வெள்ளம் பெருக்கெடுத்து வந்து மதுரைமா நகரை வளைத்துக்கொண்டது. அவ்வெள்ளத்தின் நடுவண் இருந்து துன்புற்ற கூடல்மா நகர், திரைகடல் இடையே கிடந்து தொல்லையுறும் கலம்போல் தோன்றிற்று என்கின்றார் ஆசிரியர்.

சிவபெருமான் வந்தியின் கூலியாளாய் வந்து மண் சுமந்து கரையடைக்க முனைந்தார். அஞ்ஞான்று அவர் திருவிளையாட்டுப் புரிந்தார். அதை,

வெட்டுவார் மண்ணைமுடி மேல்வைப்பார் பாரமெனக்
கொட்டுவார் குறைத்தெடுத்துக் கொடுபோவார் சுமடுவிழத்
தட்டுவார் சுமையிறக்கி யெடுத்ததனைத் தலைப்படியக்
கட்டுவா ருடன்சுமந்து கொடுபோவார் கரைசொரிவார்

என்று நயமுறக் கூறுகின்றார்.

சைவ சமயத்தின் பெருமைகளைக் கூறுகின்ற புராணங்களெல்லாம் உயர்ந்த தமிழ் இலக்கியச் செல்வங்கள்; அறிவூறும் ஊற்றுக்கள்; நம் முன்னோரின் ஆழ்ந்த கருத்துக்களை, வாழ்ந்து கண்ட நல்ல வழிகளை நமக்கு வழங்கும் பொற்பேழைகள்.

iv. வைணவ இலக்கியங்கள்

கம்பராமாயணம்

வைணவ ஆழ்வார்கள் தமிழுக்குச் செய்திருக்கும் சிறந்த சேவையை நாலாயிர திவ்யபிரபந்தத்தில் நன்கறிகின்றோம். அவர்களுக்குப் பிறகு கி. பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த கம்பர் கன்னித்தமிழில் இராமகாதையை எண்ணியுரைத்திருப்பது உன்னிப் போற்றுதற்குரியது.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் இராமானுசரின் பெருந்தொண்டால் அரசனும், மக்களும் வைணவத்தை ஆதரிக்கத் தலைப்பட்டனர். அதன் காரணத்தால் இராம

காதைக்கு நல்ல மதிப்பு ஏற்படவே அஃதறிந்த கம்பர் தாம் தழுவியிருந்த வைணவ சமயக் கடவுளாகிய திருமாலின் திருஅவதாரமாகிய இராமனின் சரிதையைத் தமிழில் பாடலானார்.

பொதுச் செய்திகள்

கம்பராமாயணம் தமிழ்மொழிக்கே சிறந்த ஓரணியாகும். இதன்கண் முத்தமிழ்ச் சுவைகளும் பொருந்தியுள்ளன. மக்களின் நுண்ணிய மன இயல்புகளெல்லாம் எழிற் சொற்களால் எடுத்தியம்பப்பட்டுள்ளன. கற்பனையின் கவினும், கவிதையின் கனிவும், பல்சுவைகளின் பாங்கும் படிப்போர் உள்ளங்களைப் பிணிக்கும் முறையில் அமைந்துள்ளன.

இதில் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம் என ஏழு காண்டங்கள் உள்ளன. உத்தர காண்டத்தைக் கம்பர் பாடவில்லையென்றும், அவர் காலத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் பாடினரென்றும் பலர் கருதுகின்றனர். 10569 பாக்களைக் கொண்டது கம்பராமாயணம். இது ஹோமர் எழுதிய இல்லியட்டைவிட அளவில் மூன்று பங்கு பெரியது. வால்மீகி இராமாயணம் பெரும்பகுதியும் இரண்டு வரிகளால் ஆகிய 21018 சுலோகங்களைக் கொண்டது. கம்பராமாயணம் நான்கு வரிகளைக் கொணட விருத்தப் பாக்களாலானது.

வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தின் கதையைமட்டும் கம்பர் தம் காப்பியத்திற்குரியதாக எடுத்துக் கொண்டார். இதில் காணும் கற்பனையும், கருத்தும் கம்பருடையவையே. கம்பராமாயணம் வால்மீகிராமாயணத்தின் மொழிபெயர்ப்பல்ல. சேக்ஸ்பியர் கிரேக்க இலக்கியங்களையும், இத்தாலிய இலக்கியங்களையும் வழிகாட்டிகளாகக் கொண்டதைப்போல் கம்பரும் வடமொழி இலக்கியத்தை வழிகாட்டியாகமட்டுந்தான் கொண்டார். தமிழ்க் காப்பிய இலக்கணங்கள் அமைய, தனித் தமிழ் நடையும், தமிழ்ப் பண்பும், தமிழறமும், தமிழ்ப் போர்முறையும் செறிந்திலங்கும் இககாப்பியம் வால்மீகியின் காப்பியத்தைவிடச் சிறந்து விளங்குகின்றது.

சிறப்புச் செய்திகள்

"பிறர்மனை நோக்காத பேராண்மை" வேண்டும் என்ற வள்ளுவருடைய குறளுக்கமைந்த விளக்கந்தான் கம்பராமாயணம். கோதாவரி தீரத்தில் இயற்கையோடு இணைந்து திரிந்த இராமனுக்குரிய சீதையைக் கவர்ந்து சென்ற காரணத்தினால்தான் அத்துணைப் பேறுகளும் பெற்றிருந்த இராவணன் இறுதியில் வீழ்ந்தழிகின்றான் வெஞ்சமரில். "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்ற இளங்கோவின் சீரிய கருத்திற்குப் பொருத்தமான வாழ்க்கை வாழ்ந்தவள் சீதை என்பதைத்தான் கம்பர் காட்டுகின்றார். எனவேதான், நம் தமிழகம் கண்ணகியைப் போற்றுவதைப் போலவே சீதையையும் போற்றுகின்றது.

சிலப்பதிகாரத்தில் ஒரு பொற்கொல்லனைப் பார்க்கின்றோம். அவனுடைய சூழ்ச்சியால் தென்னவன் பிழை செய்வதையும், கோவலன் கொலையுண்டிறப்பதையும், மதுரைமாநகர் தீயால் தீய்ந்துபோவதையுங் காண்கின்றோம். இவ்வாறே இராமாயணத்தில் மந்தரையின் சூழ்ச்சியால் கைகேயியின் மனம் மாறுகிறது; இரு வரங் கேட்கின்றாள். தயரதன் அவ்வரங்களை ஈந்து உயிர்விடுகின்றான். இராமன் சீதையோடும், இலக்குவனோடும் காடேகுகின்றான். அயோத்திமாநகரம் அல்லலில் ஆழ்கின்றது.

இன்னும் மக்கள் தயரதனிடத்தும் இராமனிடத்தும் கொண்டிருந்த பற்றும், பரதன் தன் மூத்தோனிடத்துக் காட்டிய பரிவும், அன்பும் தமிழர்களுக்குரிய இயல்புகளே என்பதை எவரே அறியார்?

கம்பராமாயணத்தின் கவிதைச் சிறப்பு கம்பருக்குக் "கவிச்சக்கரவர்த்தி" எனற பெயரைத் தேடித் தந்திருக்கின்றது. "கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க் கிதயம் களியாதே" என்ற புகழுரையும் கம்பரது புலமைத் திறத்தினைப் புலப்படுத்துகின்றது. பாரதியாரும், "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று கம்பரது உயர்வைக் காட்டுகின்றார். இவ்வாறு கம்பரையும், அவரது

காப்பியத்தையும் போற்றுவதற்குக் காரணம் பாலகாண்டத்தில் ஆற்றுப்படலத்திலும், நாட்டுப்படலத்திலும் எழிற் சொற்களால் இயற்கையை எடுத்துச் சொல்லுகின்ற முறையும், மிதிலைக் காட்சிப்படலத்தில் இராமன், சீதை இவர்களின் மனநிலைகளை எடுத்துச் சொல்லுகின்ற அருமையும், பூக்கொய்ப்படலத்தில் காணும் கற்பனைக் கவினும், அயோத்தியா காண்டத்தில் பல படலங்களில் எதிரொலிக்கும் அவலச் சுவையும் பிறகாண்டங்களில் அமைந்துள்ள பிற சிறப்புக்களுமாகும்.

கம்பனின் கவித்திறம்

வேறுபட்ட பாத்திரங்களைப் படைப்பதிலும், உணர்ச்சிகளைச் சித்திரிப்பதிலும் கம்பர் கைதேர்ந்தவர். பொருத்தமான உவமைகளையும், அணிகளையும், வருணனைகளையும் நூலெங்கும் பயன்படுத்தியிருப்பதும் இவரது காப்பிய வெற்றிக்கு மற்றொரு காரணம்.

பாலகாண்டத்தில் இராமன் பிறந்த கோசலநாட்டை நயமிக்க பாக்களால் பாராட்டுகின்றார். ஆங்கிருக்கும் சோலைகளை ஆடலரங்குகளாகவும், மயில்களை ஆடும் அணங்குகளாகவும் வளம்மிக்க மருதநிலத்தை அவ்வாடலைக் காணும் அரசனாகவும் அழகுற வர்ணிக்கின்றார். அப்பாடல்,

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கு மாதோ

என்பதாகும். என்ன உவமைப் பொருத்தம்! என்ன கற்பனை நயம்!

அவலச்சுவையைப் பாட்டிலே வைத்துக் காட்டுகின்ற திறம் கம்பருக்குக் கைவரப்பெற்ற ஒன்று. விசுவாமித்திரர் தயரதனிடத்து வந்து, "நின் சிறுவர் நால்வரினுங் கரிய செம்மல் ஒருவனைத் தந் தீதி" என்கின்றார். அதைக் கேட்டு உள்ளம் நொந்து உயிர் சோர்ந்த மாமன்னனின் நிலையை,

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தா
லெனச்செவியில் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தாலென வுழந்தான்
கடுந்துயரங் கால வேலான்

என்ற பாட்டால் சொல்லோவியமாக வரைந்து காட்டுகின்றார்.

வெகுளிச்சுவை நிறைந்த பாக்களும் கம்பராமாயணத்தில் பல்லிடங்களில் வந்துள்ளன. பரதன் இராமனைத் தேடிக் கங்கைக் கரையை அடைந்தபொழுது, அவன் படை திரட்டிப் போரிட வருகின்றானென்று தவறாகக் கருதிய குகன் கோபங்கொண்டு,

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு
சொல்லன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ

என்று கூறுகின்றான். இப்பாட்டில் எவ்வளவு வேகத்தை வைத்துக் காட்டுகின்றார் பாருங்கள்!

இவருடைய கவித்திறமையைக் கண்ட சொக்கநாதப் புலவர் இவரை, "விருத்த மென்னும் ஒண்பாவிற் குயர்கம்பன்" என்று பாராட்டியுள்ளார். இவரின் கவிதைகளில் எளிமையும், தெளிவும் உள்ளன; நல்ல கதைப்போக்கும், நாடக இயல்புகளும் ஒருங்கே அமைந்துள்ளன.

இவ்வளவு சிறப்புக்களைக் கொண்ட கம்பராமாயணம் ஒன்றே வைணவர்களின் தமிழ்த் தொண்டைத் தரணிக்கு எடுத்துரைக்கப் போதுமானது. இன்னும் ஏரெழுபது, சடகோபரந்தாதி, சரசுவதி அந்தாதி முதலிய நூல்களையும் பாடி கம்பர் தமிழன்னையை மகிழ்வித்திருக்கின்றார்.

16. இடைக்காலச் சிற்றிலக்கியங்கள்

சோழப் பேரரசர்கள் சங்ககாலப் பாண்டியர்கள்போல் இடைக்காலத்தில் தமிழ் மொழியை ஏற்றமுறச் செய்ய விரும்பினார்கள். பல புலவர்களையும் ஆதரித்து வளம்மிக்க இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டார்கள். ஆகவேதான் பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற பெருமை சான்ற பேரிலக்கியங்கள் தோன்றின. கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி, பிள்ளைத்தமிழ்மாலை, விக்கிரமசோழன் உலா, நளவெண்பா, அசதிக்கோவை, தஞ்சைவாணன் கோவை முதலிய சீரிய சிற்றிலக்கியங்களும் தோன்றித் திகழ்ந்தன.

i. கலிங்கத்துப்பரணி

கலிங்கத்துப்பரணியைப் பாடிய சயங்கொண்டார் 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பெரும் புலவர்; முதற் குலோத்துங்கன் காலத்தவர். "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்ற அடியானது பரணிப்பாட்டு பாடுவதிலே இவரை விஞ்சக்கூடியவர் வேறு எவரும் இலர் என்பதைப் பறைசாற்றுகின்றது.

கலிங்கத்துப்பரணி தமிழில் உள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. வெஞ்சமரில் வேற்றூர்க் குரிய ஆயிரம் யானைகளை வெட்டி வீழ்த்தி வாகை சூடிய வீரனைப் புகழ்ந்து பாடுவதைப் பரணி என வழங்குவர். இதைக் கலித்தாழிசையால் பாடுவது வழக்கம். கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு, காளிகோயில், போர்க்களம் முதலிய பல சிறப்புக்களும் பொருந்த அமைக்கப்பெறுவது பரணி. முதலாம் குலோத்துங்கன் தனது அடிபணியாத வடகலிங்க வேந்தன் அனந்தவன்மன் என்பவனைப் போரில் புறமுதுகிட்டு ஓடச்செய்வதற்காகத் தன் படைத்தலைவனாகிய கருணாகரத் தொண்டைமானைக் கலிங்கம் நோக்கி அனுப்பினான். அவனும் சோழர் படையுடன் சென்று வாழத்

தெரியாத கலிங்கத்துக் காவலனை வென்று, குலோத்துங்கனது காலடியைப் பணியச் செய்தான். இச்செய்திகளையெல்லாம்திரட்டித் தருவதுதான் செந்தமிழ்ச் சிற்றிலக்கியமாகிய கலிங்கத்துப் பரணி.

நூல் நுவலும் வரலாறு

இந்நூல் ஒரு சிறந்த வரலாற்று இலக்கியம். இராச பாரம்பரியத்தில் சோழகுல அரசர்களைப்பற்றிய செய்திகள் தெரியவருகின்றன. முதலாம் குலோத்துங்கனின் தோற்றம், இளமை, கல்வி, ஆட்சி முதலிய வரலாற்றுக் குறிப்புகள் நிறையக் கிடைக்கின்றன. முதுபேய் குலோத்துங்கன் வரலாற்றைக் கூறுகின்றது. காளிக்குக் கூளி கூறியதில் கலிங்கப்போர் பேசப்படுகின்றது. இந்நூலில் கங்கை கொண்ட சோழனைப்பற்றிய குறிப்புக்களும்,கரிகால் வளவன் இமயத்தில் கல்பொறித்த வரலாறும் கிடைக்கின்றன. அக்கால அரசர் இயல்புகள், படைக்கலப் பயிற்சி, உடைவாளை அரையில் கொள்ளுதல், அரச அவையில் அரசன் அரசியோடு இருத்தல், அரசன் புறம்போகும்போது தான தருமம் செய்தல் முதலிய முற்காலப் பழக்க வழக்கங்கள் தெரியவருகின்றன.

சிறப்புச் செய்திகள்

கலிங்கத்துப்பரணி பல்சுவைக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. கடைதிறப்பில் உவகைச் சுவையும், பேய்கள் கூழட்டு உண்ணும் பகுதியில் நகைச் சுவையும், கொழுநரைத் தேடிப் போர்க்களம் புகும் மங்கையர் குரலில் அவலச் சுவையும், கலிங்கன்மேல் குலோத்துங்கன் கொண்ட கோபத்தில் வெகுளிச் சுவையும், தேவியை வழிபடும் வீரர்களைக் குறிப்பிடுமிடத்து வீரச்சுவையும் வெளிப்படுகின்றன.

கடைதிறப்பில் ஒரு காட்சி: ‘கலிங்கப்போர்’ சென்று வருகிறார்கள் வீரர்கள். வெற்றிபெற்றவர்களாக வீடு நோக்கிக் காலந்தாழ்த்தி வருவதால் கதவடைப்பு நடத்தி ஊடல் காட்டுகின்றனர் காரிகைமார்; இதைக் கவினுறத் தீட்டுகின்றார் சயங்கொண்டார்.

சுரிகுழல் அசைவுற அசைவுறத்
துயிலெழும் மயிலென மயிலெனப்
பரிபுர ஒலியெழ ஒலியெழப்
பனிமொழி யவர்கடை திறமினோ. (கலிங். 23.)

" பனிபோல் குளிர்மொழி பேசும் பாவையரே! நெளிவும், பொலிவுமுடைய கோதை அசையவும், கால்களில் அணிந்துள்ள கிண்கிணிகள் ஒலி எழுப்பவும், தூங்கி எழும் மயில்கள்போல் அழகுற நடந்துவந்து வீட்டு வாயில் கதவுகளைத் திறவுங்கள்" என்று நங்கையரின் நடையழகைச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

குலோத்துங்கனுடைய சேனை கலிங்கரோடு போருடற்ற எழுந்தது. எழுந்ததும் இப்பாரின் முதுகு முறிந்தது; காடும் மலையும் நிலைகுலைந்து விழுந்தன; எண்திக்கும் வெறுந்தரையாயின. இதை,

எழுந்தது சேனை யெழலும்
இரிந்தது பாரின் முதுகு
விழுந்தன கானும் மலையும்
வெறுந்தரை யான திசைகள் (கலிங். 358.)

என்று திடுமெனப் படை எழுவதைப் போன்ற சந்தத்துடன் பாடியுள்ளார்.

போர்க்களத்தில் வெட்டுண்ட வீரர்கள் வீழ்ந்து கிடக்கின்றார்கள். பருந்தினங்களும், கழுகினங்களும் வந்து உண்ணும்பொழுதும் அவர்களின் முகங்கள் மலர்ந்தே இருக்கின்றன. இக்கருத்தை,

விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின் பார்மின்
(கலிங். 477.)

என்ற உவமைச் சிறப்பமைந்த பாட்டால் உணர்த்துகின்

ஞர். விருந்தினரை விரும்பிப் போற்றும் சான்றேர்போல் இறந்த வீரர்களும் அப்பறவை இனங்களுக்கு ஊனுணவு அளிக்கின்ருர்களாம்!

இவ்வாறு ஓசைமிக்க சொற்களால், கருத்தைக் கவரும் கற்பனைகளால், பதப்படுத்தப்பட்ட பல்சுவைப் பகுதிகளால் கலிங்கத்துப்பரணி சிற்றிலக்கியங்களில் சிறந்ததாகத் திகழ்கின்றது.

ii. இரண்டாம் குலோத்துங்கசோழன் உலா

ஒட்டக்கூத்தர்

கம்பருடைய சமகாலப்புலவர் ஒட்டக்கூத்தர். விக்கிரம சோழன் அவைக்களத்தே பாவலர் திலகமாக விளங்கினர். இவர் சைவப் புலவராகக் கருதப்படுகின்ருர். கலைமகளின் திருவருள் பெற்றுப் பல மக்களுடைய வெட்டுண்ட தலைகளைப் பொருந்துமாறு செய்தாரென்ற ஒரு கதையும் உண்டு. இவர் தோன்றிய குடி விளங்க ஈட்டியெழுபது என்னும் நூலைப் பாடினர். வள்ளல் காங்கேயன்மீது நாலாயிரக்கோவை என்ற நூலைச் செய்தார். இன்னும் தக்கயாகப்பரணி, அரும்பைத்தொள்ளாயிரம், இராமாயண உத்தர காண்டம் முதலியவற்றையும் வழங்கினர். விக்கிரம சோழன்மீதும், இரண்டாம் குலோத்துங்கசோழன்மீதும், இராசராசன்மீதும் தனித்தனி உலாப் பிரபந்தங்கள் (சிற்றிலக்கியங்கள்) பாடியுள்ளார்.

சிறப்புச் செய்திகள்

இரண்டாம் குலோத்துங்கசோழன் உலாவில் அவனின் முன்னேர் பெருமையை முறைப்படுத்தி, வரலாற்றுக் கண்ணேட்டத்தோடு வண்ணமுற வழங்குகின்ருர். பிறகு அவன் தில்லையில் செய்த திருப்பணிகள் பலவற்றையும் சிறப்புறச் செப்புகின்ருர்.

இவன் உலாவிற்குப் புறப்படும் செய்தி அடுத்தாற்போல் பேசப்படுகின்றது. வாள் முதலிய ஐம்படைகள்

இருளைப் போக்க, விற்கொடி, மீன்கொடி, புலிக்கொடி நிலைபெற தென்னன் முதலானோர் சேவிப்ப, மண்ணுலகு விண்ணுலகாய் விளங்க இவன் பொற்றொடியார் சூழ்ந்த மாடவீதி யணைகின்றான்.

மாடங்களிலும், நிலாமுற்றங்களிலும் செறிந்துநின்று இவனைப் பார்க்கும் சேயிழையார், காதலுணர்வு விஞ்சி வெப்பம் மிக, வீசுதென்றலைக் கோடைக் காற்றினும் கொடி தென்கின்றார்கள். அவிழ்ந்த கூந்தலராய் அவன் அழகைப் பருகுவார்போல் பார்த்துக்கொண்டே இருக்கின்றார்கள்.

பேதைப் பருவத்துப் பெண்களும், பெதும்பைப் பருவத்துப் பெண்களும் இவனை எண்ணி ஏங்குகின்றனர். மங்கைப் பருவப் பெண்ணொருத்தி இவன் உலாவைக் கண்டு மனமகிழ்ந்து நீலநிற மலர் சூடி, நீலமணி பூண்டு நீலநிறத் துயிலுடுத்தலை விரும்புகின்றாள்; மலர்வாவிபோன்றும், கற்பகக் கொடிபோன்றும், தளிர்த்த மாங்கொம்புபோன்றும் விளங்குகின்றாள். "கிளியே! நீ சென்று யானைமீது செல்லுகின்ற தலைவனிடம் மணம் நிறைந்த ஆத்திமாலையொன்று கேள்! வண்டே இவனை நீ பிரியாதே! அன்னமே! என் பெருமானை என்னிடம் கொண்டுவா!" என்று நிலைகலங்கிப் பிதற்றுகின்றாள்.

சோழன் அடுத்த நாள் உலா வரப்போவதைப்பற்றித் தோழியர் கூறக்கேட்ட அரிவைப் பருவப் பெண்ணொருத்தி கலங்கி, 'இப்பேரிரா என்றுதான் விடிவது' என்று எண்ணுகின்றாள்; இரவு முழுதும் உறங்காது இருக்கின்றாள். அடுத்த நாள் காலையில் அணியெடுத்துப் புனைந்து அவன் வரும் கோல மறுகைக் குறுகுகின்றாள்; அவனைக் கண்டு காதல் கொண்டு மயங்குகின்றாள். அவனோ அவளுக்கு மெலிவு தந்து வழியோடு ஏகுகின்றான். "அன்னங்காள்! நீங்கள் சென்று அறிவியுங்கள். பாவைகாள்! எம்மைப்போல் உயிரில் பாவையாகின்றாள் என்னும் குறிப்புணரக் கொல்யானை போகாமல் பரந்த அடிமுன்னே பணியுங்கள்!" என்று அவ்வரிவைப் பருவத்தாள் அவைகளைப் பார்த்துக் கூற அவைகள், "நாங்கள் கூறியும் கேளாது சென்றனன்" என்கின்றன.

இவர்களைப்போன்றே தெரிவை, பேரிளம்பெண் என்ற பல பருவத்தினரும் மதிமயங்குகின்றனர். இவ்வாறு ஏந்திழையர் வருந்த,

நீரேழும் பாரேழும் பேணும்
ஒருகுடையான் போந்தான் உலா

என்று ஒட்டக்கூத்தர் உரைக்கின்றார்.

பாட்டுடைத் தலைவன் வீதியில் உலா வரும்பொழுது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுவகைப் பருவப் பொதுமகளிரும் அவன்பால் காதல்கொண்டு மகிழ்வதையும், மனங் கலங்குவதையும் ஒவ்வோர் உலாவும் அடிப்படையாகக் கொண்டு வருவதைப்போல் இரண்டாம் குலோத்துங்க சோழன் உலாவும் வந்துள்ளது. இந்நூல் சோழனுடைய அழகு, ஆண்மை, குலம், கல்வி, செல்வம், இரக்கம் ஆகியவற்றை உரைப்பதோடு சோழநாட்டு அரசியல் பொருளியல் நிலைகளையும், மக்கள் பழக்க வழக்கங்களையும் நாகரிகக் கலாச்சாரங்களையும் அறிவிக்கின்றது.

iii. நளவெண்பா

புகழேந்தி

புகழேந்தி, ஒட்டக்கூத்தர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு பெரும் புலவர். இவர் வைணவ மதத்தைச் சார்ந்தவராகக் கருதப்படுகின்றார். பாண்டியன் அரண்மனையில் சிறந்த புலவராகத் திகழ்ந்தாரென்றும், பாண்டியன் மகளைச் சோழன் மணந்தபொழுது அவளோடு இவரும் சோழன் அவைக்கு அனுப்பப்பட்டாரென்றும் கூறுவர்.

இவர் செய்திருக்கும் சிறந்த சிற்றிலக்கியம் நளவெண்பாவாகும். இது வழிநூல்வகையைச் சார்ந்தது. வியாச முனிவர் செய்துள்ள வடமொழி மகாபாரதத்துள் ஆரணிய பருவத்தில் கூறப்பட்டுள்ள "நளோபாக்கியான பருவம்" இதற்கு முதனூலாகும். இந்நூல் சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என்று மூன்று காண்டங்

களையும் 411 செய்யுட்களையும் கொண்டிலங்குகின்றது. இந் நூல் முழுதும் வெண்பாவினால் ஆகியுள்ளது. வெண்பா பாடுவதில் புகழேந்தி சிறந்து விளங்கிய காரணத்தால் "வெண்பாவிற் புகழேந்தி" என்று இவரை அறிஞர்கள் போற்றுவராயினர். இவர் அல்லிஅரசாணி மாலை, பாண்டவர் வனவாசம், புலந்தரன் களவு போன்ற பிற நூல்களையும் செய்துள்ளார்.

சிறப்புச் செய்திகள்

நளவெண்பாப் பாடல்கள் இயற்கை வருணனையும், கற்பனைச் செறிவும், கருத்தாழமும், சொல்லழகும் பொருந் தியவை; இன்பச் சுவையும், துன்பச் சுவையும் மிகுதியாகக் கொண்டவை.

சுயம்வர காண்டத்தில் ஒரு நயம் மிக்க பா. நானிலத்து வேந்தர் பலர் நற்குணத்தாள் தமயந்தியின் சுயம்வரத்திற்கு வந்து சுடரரங்கில் அமர்ந்திருக்கின்றனர்கள். அவளின் தோழி சொல்லுகிறாள் மன்னர்களின் நல்நாட்டின் வளம் பலவும்.

குருநாடென்றென்று; அங்கு வாவிகளும், வயல்களும், விரைந்தோடும் நீரோடைகளும் நிறையவுண்டு. செங்கழு நீர் மலர்கள் செறிந்து மலர்ந்து செழிப்புடன் விளங்கு கின்றன. மலராமல் இருக்கும் மொட்டுகளை நச்சரவின் பைந்தலை யென்று அஞ்சி நாரைக்குஞ்சு இரவெல்லாம் ஏங்க, அதைக் கண்ட தாய்நாரை அதன் துயர்தீரத் தாலாட் டுப் பாடல் பாடுகின்றதாம்!

> தெரியல் இவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
> அரவின் பசுந்தலையென் றஞ்சி — யிரவெல்லாம்
> பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புள் தாலாட்டும்
> வள்ளைக் குருநாடர் மன்.

இவரின் பாடல்கள் பல்வகை அணியலங்காரங்களோடு படிப்போர் உள்ளங்களைப் பிணிக்கும் பிற சிறப்பியல்பு களையும் பெற்றுள்ளன.

iv. தஞ்சைவாணன்கோவை

புகழேந்தியின் காலத்தில் வாழ்ந்த மற்றொரு சிறந்த புலவர் பொய்யாமொழிப் புலவர். இவர் தஞ்சைவாணன் கோவை என்னும் அழகிய சிறுகாப்பியத்தை நாற்கவிராச நம்பியகப்பொருள் இலக்கணத்திற்குப் பொருந்திய இலக்கியமாக இயற்றியுள்ளார். இதில் நானூற்றிருபத்தைந்து அகத்துறைகள் வந்துள்ளன.

கோவையின் விளக்கம்

பன்னிருபாட்டியல் கோவையின் இலக்கணத்தைப் பற்றி,

> கோவை என்பது கூறுங்காலை
> மேவிய களவு கற்பெனும் கிளவி
> ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
> முந்திய கலித்துறை நானூ றென்ப

என்று கூறுகின்றது. அஃதாவது ஒத்த தலைவனும், தலைவியும் இறையருளால் களவில் கூடிக் கற்பு வாழ்க்கை வாழ்வதைக் கூறுவதாகும். இது நானூறு கட்டளைக் கலித்துறைகளால் அமைவதாகும்.

சிறப்புச் செய்திகள்

தஞ்சைவாணன்கோவையில் ஒரு தலைவன் ஒரு தலைவியைத் தனிமையில் பார்க்கின்றான். அவளுடைய அழகுத் தோற்றம் அவனை ஐயமடையச் செய்கின்றது. "இவ்வழகி நிலமகளோ! பாற்கடல் தாமரையில் வாழும் திருமகளோ! மலைவாழ் மங்கையோ! நீர்வாழ் நேரிழையோ! நெஞ்சமே, இவள் யாரோ!" என்று வியக்கின்றான். இக் கருத்தமைந்த பாடல்:

> பாரணங் கோதிருப் பாற்கட லீன்றபங் கேருகத்தின்
> ஓரணங் கோவெற் புறையணங் கோவுயர் பாவலர்க்கு
> நீரணங்கோ நெஞ்ச மேதனி யேயிங்கு நின்றவரே.

இதன் பாடல்கள் பாகுபோல் இனிக்கக் கூடியவை; இன்பச் சுவையை இன்றமிழில் தரவல்லவை.

17. உரையாசிரியர்களும் உரைநூல்களும்

சங்ககாலத்திலும், பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் தோன்றிய இன்றமிழ் இலக்கண, இலக்கியங்களுக்குக் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு தொடங்கி 16 ஆம் நூற்றாண்டு முடிய நிலவிய காலங்களில் வாழ்ந்த தமிழ்ப்பேரறிஞர்கள் விளக்கவுரைகள் திறனாய்வு முறையில் எழுதியுள்ளனர். இலக்கண அமைதிகளும், இலக்கிய அருமைகளும் புலவர்களுக்கேயன்றிப் பாமரமக்களுக்கும் புரியுமாறு விளக்கி அரிய பணியை இதன் வாயிலாய் ஆற்றியுள்ளார்கள்.

இளம்பூரணர்

உரையாசிரியர்களில் உயர் சிறப்புடையவர் இளம்பூரணர். இவர் தொல்காப்பிய எழுத்திற்கும், சொல்லிற்கும், பொருளிற்கும் தெளிவான பொலிவான உரை வகுத்துள்ளார். இவரது செயற் சிறப்பால் "உரையாசிரியர்" என்ற பெயர் இவருக்கே உரித்தானதாக வழங்குகின்றது. பிற உரையாசிரியர்களும் இவரது உரைக்கு உரிய மதிப்புத் தந்தே உரைவகுத்துள்ளனர்.

நச்சினார்க்கினியத்தையும், பேராசிரியத்தையும்விட இளம்பூரணம் கருத்து விளக்கமும், தெளிவும் மிக்கதாகவே இலங்குகின்றது. வடசொல் கலப்பின்றி வகை, தொகையில் வளமுடையதாக விளங்குகின்றது. பொருள் விரிக்க வேண்டியவிடத்து அளவோடு விரித்தும், சுருக்கவேண்டிய விடத்து அளவோடு சுருக்கியும் திறம்படச் செய்துள்ளார். "தொல்காப்பியம் என்ற கலைக்கோவிலிலே முதன்முதல் திருவிளக்கேற்றி ஆங்குள்ள வியத்தகு பொருள் நுட்பங்களை அறிஞர் கண்டு மகிழச்செய்த பெருமை இளம்பூரணரையே சாரும். இவரைப் பின்பற்றிய வழியில்தான் பிற உரையாசிரியரும் அவ்வரும் பெரும் பொருள் நுட்பங்களைப் பற்றிய மாசுகளைந்து தூசு படியாதவாறு தொண்டு செய்தனர்" என்று பேராசிரியர் எம். இரம்போலா மாஸ்கரேனஸ்

அவர்கள் தம் 'இலக்கியப் பொழிலில்' இளம்பூரணரின் உரைச்சிறப்பை எழில்படக் கூறியுள்ளார்கள்.

பேராசிரியர்

பேராசிரியர் என்ற உரையாசிரியர் தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுவதற்கும் உரையெழுதியுள்ளார். இவருடைய உரை தெளிவுமிக்கதாகத் திகழ்கின்றது. மாணிக்க வாசகருடைய திருக்கோவையாருக்கும், குறுந்தொகையில் 380 பாடல்களுக்கும் இவர் உரைவகுத்துள்ளார்.

சேனாவரையர்

சேனாவரையர் பேராசியருக்குப் பிறகு சொல்லதிகாரத்திற்குமட்டும் தர்க்க முறையில் உரை கண்டிருக்கின்றார். சொல்லிற்கு இவரது உரையே சிறந்ததென்று சிவஞான முனிவர் போற்றியுள்ளார். மற்ற உரையாசிரியர்களை மறுத்து, காரணங்காட்டி உயரிய கருத்துக்களைத் தந்துள்ளார். வடமொழிப் பயிற்சி உடையவராக இருந்தாராதலால் அம்மொழிச் சொற்களும், கருத்துக்களும் இவரது உரைப் பகுதியில் அமைந்துள்ளன.

இவர் கிளவியாக்கத்தில் செப்பும், வினவும் என்பவற்றிற்குப் பின்வருமாறு உரையெழுதுகின்றார்: "செப்பென்பது வினய பொருளை அறிவுறுப்பது. அஃது இரண்டு வகைப் படும், செவ்வன் இறையும் (நேர்விடை) இறை பயப்பதும் (நேரன்றிக் குறிப்பாக அல்லது சுற்றுவழியாக விடை தருவது) என. உயிர் எத்தன்மையது என்று வினயவழி உணர்தல் தன்மைத்து என்றல் செவ்வன் இறையாம் (நேர்விடை). உண்டியோ என்று வினயவழி வயிறு குத்திற்று என்றல், உண்ணேன் என்பது பயந்தமையின் இறை பயப்பதாம்.

"கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா எனப் பருநூல் பன்னிரு தொடி என்பது செப்புவழுவாம். சொல் எப் பொருள் உணர்த்தும் என்று வினயவழிச் சொல் ஒரு பொருளும் உணர்த்தாது என்பது அது, வினய பொருளை

வினவால் உணர்ந்து வினய பொருளையன்றித் தான் குறித்த பொருளைச் செப்பால் உணர்த்துகிருனுகலின் என்பது.''
இவருடைய உரையில் நல்ல விளக்கமும் எடுத்துக்காட்டுக் களும் இருக்கக் காண்கின்றேம்.

நச்சினர்க்கினியர்

நச்சினர்க்கினியர் சேனவரையர் கூறியுள்ள பல கருத்துக்களை மறுத்துள்ளார். இவர்தான் பழமையான பல நூல்களுக்கும் உரையெழுதியவர். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களுக்கும் உரையெழுதியதோடு, பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி முதலியவற்றிற்கும் உரைகள் கண்டுள்ளார். குறுந்தொகையில் பேராசிரியர் பொருள் காணுது விட்ட 20 செய்யுட்களுக்கு இவர் உரை கண்டிருக்கும் செய்தி இவரது உரைச் சிறப்புப்பாயிரத்திலிருந்து தெரியவருகின்றது. இவருடைய உரைகள் எல்லாவற்றிற்குமே விளக்கமாக அமைந்துள்ளன. ''உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர்'' என்று போற்றியுரைக்கப்படுகின்றர். இவரது உரைவிளக்கம் ஐரோப்பிய உரை விளக்க முறையில் அமைந்துள்ளதென்று டாக்டர் பவர் என்பவர் குறிப்பிடுகின்றர்.

அடியார்க்குநல்லார்

அடியார்க்குநல்லார் நச்சினர்கினியருக்குப் பின் வாழ்ந்தவர். சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரைவழங்கியிருப்பவர். ஆனல், நூல் முழுவதற்கும் இவர் உரை கிட்டாமல் முதலிலிருந்து கானல்வரி நீங்கலாக ஊர்சூழ்வரி முடியவே கிட்டியுள்ளது என்று டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் சிலப்பதிகார முகவுரையில் குறிப்பிடுகின்றர்கள். இவரது உரையானது சிலவிடத்துப் பதவுரையாயும், சிலவிடத்துப் பொழிப்புரையாயும் எழுதப்பட்டு, சொன்னயம், பொருணயங்களை இனிது புலப்படுத்தி உரியவிடங்களில் இயற்றமிழ்ப் பகுதியாகிய ஐந்திலக்கணங்களையும், இசைத் தமிழ் நாடகத் தமிழின் பகுதிகளையும் பலநூல் மேற்கோள் முகமாக நன்கு விளக்கும் விசேட உரையோடு கூடி மிக விரிவாக அமைந்துள்ளது.

பரிமேலழகர்

13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் பரிமேலழகர். இவர் திருக்குறளுக்குச் செய்திருக்கும் உரை மிகச் சிறந்ததாகப் பல்லோராலும் போற்றப்படுகின்றது. தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என்ற மற்றையோரும் திருக்குறளுக்கு உரைகண்டுள்ளார்கள். இவர்களின் உரைகளைவிட, "பரிமேலழகர் ஒருவரது உரையொன்றே வள்ளுவர் நூலின் பெருமைக்குத் தக்கபடி அமைந்து அதன் புகழை வளர்க்க வல்லதாயுளளது" என்று பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் தம் 'தமிழ்ச் சுடர் மணிகள்' என்ற நூலில் எழுதுகின்றார். பரிமேலழகரின் தெளிந்த பேரறிவும், ஆராய்ச்சித் திறனும், மிகப் பரந்த கல்வியும், மொழித திறமும் இவரது சீரிய உரையில் திகழ்கின்றன.

> என்பி லதனை வெயில்போலக் காயுமே
> அன்பி லதனை அறம்

என்னும் குறளுக்கு இவர் வகுத்திருக்கும் உரை இவரின் திறத்திற்கு ஒரு சான்றாகும். "'என்பிலது' என்றதனான் உடம்பு என்பதூஉம், 'அன்பிலது' என்றதனான் உயிர் என்பதூஉம் பெற்றாம். வெறுப்பு இன்றி எங்கும் ஒருதன்மைத்து ஆகிய வெயிலின்முன் என்பில்லது தன் இயற்பாற் சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்து ஆகிய அறத்தின்முன் அன்பில்லது தன் இயல்பால் கெடும் என்பதாம். அதனை, 'காயும்' என வெயில், அறங்களின்மேல் ஏற்றினார், அவற்றிற்கும் அவ் இயல்பு உண்மையின். இவ்வாறு 'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்' (நான்மணிக். 84.) எனப் பிறரும் கூறினர்."

இதில் அன்பில்லா உயிரை அறம் தானே சென்று அழிக்காதென்றும், அதன்பால் வந்து அன்பில்லா உயிர் தானே கெடுமென்றும் சொல்லும் திறம் போற்றற்குரியது.

வைணவ உரையாசிரியர்கள்

ஆழ்வார்கள் செய்தருளிய நாலாயிர திவ்விய பிரபந்தத்திற்குப் பதினான்கு, பதினைந்தாவது நூற்றாண்டுகளிலே

தோன்றிய வைணவ ஆசிரியர்கள் மணிப்பிரவாள நடையில் உரைகளை எழுதியுள்ளனர். இவர்களுடைய திருப்பணியால் தமிழ்மொழியில் வடமொழிச் சொற்கள் வரையறையின்றி கலந்தன. இக்காலத்தைப்போல் வடசொற்கலப்பு இதற்கு முன்பும் பின்பும் இருந்ததில்லையென்று கா. சு. பிள்ளையவர்கள் கருதுகின்றார்கள்.

11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த நாதமுனிகள் என்பார் நம்மாழ்வாரின் திருவாய்மொழியினை எல்லோரும் படித்தின்புறும் வகையில் பதப்படுத்தித் தந்தார். அவருடைய தொண்டால்தான் இந்நூலுக்கு நல்ல மதிப்பேற்பட்டது. திருக்குருகைப் பிள்ளான் என்பவர் திருவாய் மொழிக்கு ஆறாயிரப்படி என்னும் உரையை இயற்றினார். நஞ்சீயர் என்பவர் திருவாய்மொழிக்கு உரை இயற்றினார். நம்பிள்ளை என்பார் திருவாய்மொழி உரை ஒன்பதினாயிரப் படியையும், திருப்பள்ளியெழுச்சி உரையையும், திருவிருத்த உரையையும், பெரியதிருமொழி உரையையும் இயற்றினார். பெரியவாச்சான் பிள்ளை என்பார் நாலாயிர பிரபந்தத்திற்கு உரை இருபத்துநான்காயிரப் படியை இயற்றினார். வடக்குத் திருவீதி பிள்ளை என்பவர் திருவாய் மொழிக்கு முப்பத்தாறாயிரப்படி என்ற உரையை இயற்றினார். அழகிய மணவாளப் பெருமாணையினார் திருப்பாவை உரை ஆறாயிரப்படியைச் செய்தார். பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்பவர் பல வைணவ நூல்களுக்கும் உரை வகுத்தார்.

பல நூற்றாண்டுகளில் தோன்றிய நூல்களுக்கும் உரை வகுத்த உரையாசிரியர்களின் தொண்டால் தமிழிலக்கிய, இலக்கண அறிவு தமிழின்பால் ஈடுபாடு காட்டிய சாதாரண மக்களுக்கும வாய்த்தது. ஆனால், வைணவ உரையாசிரியர்களின் வடமொழிப் பற்று, தமிழின் தூய்மையைச சிதைத்தது. அவர்களின் உரைநூல்களைத் திறந்து படித்துப் படித்துப் பார்த்தாலும் தமிழ்மட்டுமே அறிந்தவர்களுக்குப் பொருள் புலனாகாது போயிற்று.

மூன்றாம் பாகம்

III. பிற்காலத் தமிழ் இலக்கியங்கள்

18. பிரபந்தங்கள்

தமிழ்மொழியில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் உள. பரணி, உலா, கலம்பகம் போன்றவைகள் பிரபந்த வகைகள். இவைகளில் ஒவ்வொரு வகைக்கும் தனித் தனி இலக்கணம் உண்டு.

i. அஷ்டபிரபந்தம்

நாலாயிர திவ்வியபிரபந்தம் தோன்றிய பின்னர் வைணவ சமயச்சார்பாக எழுந்த சிறந்த பிரபந்தம் ''அஷ்ட பிரபந்தம்'' ஆகும். இதன்கண் திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்து மாலை, திருவரங்கத்து அந்தாதி, சீரங்க நாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்து அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என எட்டுப் பிரபந்தங்கள் உள. இதன் ஆசிரியர் அழகிய மணவாளதாசர் என்ற பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். இவர் 'திவ்யகவி' என்று அழைக்கப்படுகின்றார். இவருடைய காலத்தை ஒரு சிலர் கி. பி 12ஆம் நூற்றாண்டென்றும், மற்றும் சிலர் கி. பி. 16ஆம் நூற்றாண்டென்றும் குறிப்பிடுகின்றார்கள்.

அஷ்டபிரபந்தப் பயிற்சி தமிழ்ப் புலமைக்குரிய ஓர் அளவுகோலாகக் கருதப்படுகின்றது. இவ்வுண்மைபற்றியே 'அஷ்ட பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்' என்னும் பழமொழியும் பழக்கமாயிற்று. அந்தாதிச் செய்யுட்களும், யமகம், திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகளும் இதில் இடம்பெற்றுள்ளன. இதன்கண் ஆழ்வார்களுடைய பிரபந்தக் கருத்துக்களும், சொற்களும், சொற்றொடர்களும், ஏராளமாகக் காணப்படுவதால் ஆழ்வார்கள் அருளிச்செய்த பாக்களின் சாரமாக இதைக் கொள்ளலாம்.

இச் சிற்றிலக்கியத் தொகுதியில் காணப்படும் செய்யுட்கள் 751; சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் 8; காப்புச் செய்யுட்

களாகவும், அவையடக்கச் செய்யுட்களாகவும் அமைந்திருப்பவை 22; பிற்சேர்க்கைப் பாடல்கள் 9. இச் செய்யுட்கள் முப்பத்தொன்பதையும் சேர்த்தால் இந்நூலின் மொத்த செய்யுட்கள் 790 ஆகும்.

திருவரங்கக் கலம்பகம்

வேறுபட்ட மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைபோல், வெண்பா, ஆசிரியப்பாபோன்ற பலவகைப் பாக்களால் ஆக்கப்படுவது கலம்பகமாகும். இதில் பாவினங்களும் கலந்து வரும். இஃது அகப்பொருள், புறப்பொருள் துறைகளில் அந்தாதியாகப் பாடப்படுவதுமுண்டு; குறம், மறம், சிந்து, கைக்கிளை, தூது, ஊசல்போன்ற பதினெட்டு உறுப்புக்களைப் பெற்றுத் திகழும்.

சொல்நோக்கும் பொருள்நோக்கும்
 தொடைநோக்கும் நடைநோக்கும்
எந்நோக்கும்காண இலக்கியம்
 ஆவதுஅன்றி இதில்ஈடுபட்டோர்
நல்நோக்கும் புத்தியும்பக்தியும்
 முக்தியுண்டாம் நானென்சொல்வேன்
பல்நோக்கு மணவாளர்பகர்
 அரங்கக்கலம் பகத்தைப் பாரீர்! பாரீர்!

என்ற சிறப்புப் பாயிரச் செய்யுள் திருவரங்கக் கலம்பகம் ஒரு சிறந்த இலக்கியமாவதையும், சிந்தை தெளிவிக்கும் தெய்வநூலாகத் திகழ்வதையும் தெரிவிக்கின்றது. இந்நூல் போன்றே மற்ற நூல்களும் பல்வளங்களுடன் விளங்குகின்றன.

திருவரங்கப் பெருமானைப் பணிந்தால் சேர்ந்திருக்கும் கறையெல்லாம் கரைந்துபோகும் என்று திருவரங்கக் கலம்பகத்தில் பாடுகின்றார் ஆசிரியர்.

காய்இலை தின்றும் கானில் உறைந்தும் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்கள்
தாயினும் அன்பன் பூமகள் நண்பன் தடநாகப்
பாயல் முகுந்தன் கோயில் அரங்கம் பணிவீரே!

என்ற பாடல் நல்ல சொல்லோட்டமும், கருத்துச் செறிவும் கொண்டு இலங்குகின்றது. இவரது பரந்தாமன் பற்றுனது பரமசிவனைப் பலவாறு இகழ்ந்து கூறச் செய்திருப்பது இந் நூலில் காணும் பெருங்குறையாகும். மற்ற இயல்புகளில் இந்நூல் எல்லா மக்களும் போற்றுதற்குரியதே. இதில் காணப்படும் திருமாலின் அவதாரக் கதைகள் கற்போர்க்கு நல்விருந்தாக அமைந்துள்ளன.

ii. குமரகுருபரசுவாமிகளின் பிரபந்தங்கள்

குமரகுருபரசுவாமிகள் செய்திருக்கும் பிரபந்தங்கள் தமிழ் வளம் மிக்கவை; சைவத்தின் மேன்மையை உரைப்பவை. இவருடைய பாக்கள் இன்னோசை உடையவை என்று டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தம்மாராய்ச்சியில் குறிப்பிடுகின்றூர்கள். "இவரின் பாக்களைக் கேட்கும்போது நமக்குத் தென்பாண்டி நாட்டின் பொருநை நதியின் ஓட்டம் ஞாபகத்திற்கு வருகின்றது. சொற்களும், சொற்றொடர் களும் ஒன்றோடொன்று செவிக்கினிமை தரும்வண்ணம் பொருந்தி அமைந்துள்ளன. பொருளிலே நம் கருத்துச் செல்வதற்குமுன் செய்யுட்களின் ஓசை நம் கருத்தை இழுக் கின்றது."

இவருடைய காலம் கி. பி. 17ஆம் நூற்றுண்டாகும். திருநெல்வேலி சீவைகுண்டத்தில் தோன்றினர். பிறந்ததிலிருந்து ஐந்து வயதுவரை ஊமையராய் இருந்தாரென்றும், திருச்செந்தூர் முருகப்பெருமான் கருணையால் பிறகு பேசும் திறம் பெற்றாரென்றும் இவர் வரலாற்றிலிருந்து தெரியவருகின்றது. ஐந்தாம் வயதிலேயே முருகப்பெருமான் மீது கந்தர் கலிவெண்பா பாடினராம். முருகக் கடவுள் இவர் கனவிலே குமர வடிவத்துடன் தோன்றி, "நீ குருபரனுக" என்று அருளியதால் அன்று முதல் இவர் குமரகுருபரரென அழைக்கப்பட்டார்.

இவர் பாடிய மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் இவருக்குப் பெருஞ்சிறப்பைத் தேடித் தந்திருக்கின்றது. இன்னும் மீனுட்சியம்மை குறம், மீனுட்சியம்மை இரட்டை

மணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம் முதலிய பிரபந்தங்களையும் இயற்றியருளியிருக்கின்றார். திருவாரூர் சென்று தியாகராசப்பெருமான்மீது 'திருவாரூர் நான்மணி மாலை'யைப் பாடினார். சிதம்பரம் செல்லும் வழியில் வைதீச்சுரன் கோவிலை அடைந்து குமரக்கடவுள்மீது முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் நூலைப் பாடினார். சிதம்பரம் சென்று நடராஜப்பெருமான்மீது 'சிதம்பர மும்மணிக் கோவை', 'சிதம்பரச் செய்யுட் கோவை', 'சிவகாமியம்மை இரட்டை மணிமாலை' முதலியவற்றைப் பாடினார். தம் ஆசிரியராகிய மாசிலாமணி தேசிகர்மீது பண்டார மும்மணிக் கோவை யென்னும் நூலைப் பாடினார்.

இவரது ஆற்றலைக் கண்ட திருமலை நாயக்கர் இவரை ஆதரித்தார். அவர் கொடுத்த பொருளைக்கொண்டு காசிக்குப் போய் விசுவநாதப் பெருமான்மீது காசிக் கலம்பகம் என்னும் நூலைப் பாடினார். அந்நாட்டு முகமதிய அரசனிடம் இடம்பெற விரும்பிக் கலைமகள்மீது சகலகலாவல்லி மாலை என்னும் எழில் நூலைப் பாடினார். அங்கு இந்துஸ்தான் மொழியை அறிந்து, பல சைவ மடங்கள் அமைத்துக் காசியில் இறைவனடி சேர்ந்தார்.

இவருடைய பிரபந்தங்கள் பலவற்றிலும் தமிழ்மீது கொண்டிருந்த அளப்பரும் பற்று அவர் தமிழைக் குறிக்கப் பயன்படுத்தியிருக்கும் பல சொற்களால் தெரியவருகின்றது. "அருந்தமிழ், இசைமுத்தமிழ், கலைத்தமிழ், தீம்பாலமுதம், கொத்து முத்தமிழ், கொழிதமிழ், கொழுத்ததமிழ், சங்கத் தமிழ், செழுந்தமிழ்த் தெள்ளமுது, தண்டமிழ்" முதலிய சொற்கள் அவருடைய தமிழ்ப்பற்றுக்குச் சான்றுகள்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது தொண்ணூற்றுறுவகைப் பிரபந்த வகைகளுள் ஒருவகை. இஃது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

தெய்வங்களையோ, பெரியோர்களையோ குழந்தையாகக் கருதித் தம் அன்புடைமை தோன்றப் பாராட்டிப் பாடப்

படுவதே இதற்குரிய இலக்கணமாகும். ஆண்பாற் பிள்ளைத் தமிழில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பத்துப் பருவங்களும் கூறப்படும். பெண்பாற் பிள்ளைத்தமிழில் ஆண்பாற்குக் கூறப்பட்ட சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் மூன்று பருவமும் நீக்கி அம்மானை, நீராடல், ஊசல் என்னும் மூன்று பருவமும் கூறப்படும்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் இவருடைய புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இதில் மீனாட்சியம்மையினுடைய காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் என்ற பத்துப் பருவங்களும் பேசப்படுகின்றன.

சிறப்புச் செய்திகள்

தாலாட்டுப் பருவத்தில் மதுரையின் சிறப்பு வருகின்றது. தமிழோடு பொதிகையில் தோன்றிய தென்றல் அங்கு வீசுமாம். சிறுபெண்கள் ஒளிமணியின் நெருப்பில் பவள விறகையடுக்கி, தேனை உலையாக வார்த்துச் சங்காகிய மிடாவில் முத்தாகிய அரிசியையிட்டுச் சோறு ஆக்குதற்குரியதாம் மதுரை.

வாளைமீன் அலைகடலினின்றும் ஆகாயத்தில் மேகங்கெடத் தாவிக் கற்பகக் காடடைந்து சந்திரனின் முயலை நீக்கி, நட்சத்திரங்களைத் தள்ளி முந்நீரில் உள்ள வாளையொடு விளையாடும்படியாய்ப் பழனமும் தமிழும் பொருந்தவுள்ளதாம் மதுரை.

இவருடைய பிரபந்தங்களில் வடசொற்களும், தொடர்களும், இசைச் செய்திகளும், பறவை இயல்புகள் — விலங்கியல்புகள் — மக்கள் இயல்புகளும், மகளிர் விளையாட்டு வகைகளும், இல்லற, துறவறச் செய்திகளும், சைவசித்தாந்தக் கருத்துக்களும் பல தலவரலாறுகளும் செறிந்து காணப்படுகின்றன. இவரின் கற்பனைகளும் கருத்தைக் கவர வல்லவை

வருகைப் பருவத்தில் மீனுட்சியம்மையின் சிறப்புக்கள் பலவற்றைச் சொல்லி 'வருக' என்று ஆசிரியர் அழைக்கின்ருர்.

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

iii. சிவப்பிரகாசசுவாமிகளின் பிரபந்தங்கள்

கற்பனைக் களஞ்சியமென்று போற்றப்படும் சிவப்பிரகாச சுவாமிகள் கி. பி. 17 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த பெரும் புலவர்; தொண்டை நாட்டில் திருமங்கலம் என்னும் ஊரில் பிறந்தார். சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்டவர். இவரின் பிரபந்தங்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதில் இணையற்றவை. இவர் தருமபுர ஆதீனத்து வெள்ளியம்பலவாண சுவாமிகளிடம் முறையாக இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். இவர் திருச்செந்தூர் முருகக் கடவுள்மீது நீரோட்டக யமகம் பாடித் தம் ஆசிரியரை இகழ்ந்துவந்த தமிழ்ப்புலவர் ஒருவரை வென்று தம்மாசிரியருக்கு அப்புலவரை அடிமையாக்கினர்.

பலதலங்களுக்கும் சென்று பாடல்கள் பாடினர். திரு வெங்கை மா நகரத்துப் பழமலை நாதர்மீது திருவெங்கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கை யலங்காரம் என்னும் நான்கு பிரபந்தங்களை இயற்றினர். பிறகு சிதம்பரம் சென்று ஒரு திருமடம் கட்டுவித்து சிவப் பிரகாச விசாகம், தருக்க பரிபாடை, சதமணி மாலை, நால்வர் நான்மணிமாலை என்னும் பிரபந்தங்களைச் செய்தருளினர். காஞ்சிக்குச் செல்லும் வழியில் தாலாட்டு, நெஞ்சுவிடு தூது என்னும் பிரபந்தங்களைப் பாடினர். காஞ்சியை அடைந்து அங்கு இருந்தபொழுது பிரபுலிங்கலீலையைப் பாடினர். திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ் என்ற இரண்டு பிரபந் தங்களையும் அங்கு இருக்கும்பொழுதே பாடினர். பின்னர் விருத்தகிரியை அடைந்து மடமமைத்து அங்கு இருக்கும் பொழுது பழமலை அந்தாதி, பிச்சாடன நவமணி மாலை, கொச்சகக் கலிப்பா, பெரியநாயகியம்மை நெடுங்கழி நெடிலா சிரிய விருத்தம், பெரியநாயகியம்மை கட்டளைக் கலித்துறை என்னும் பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளினர். பிறகு நல்லாற்றூரை அடைந்து திருமடத்தில் இருந்துகொண்டு அபிடேகமாலை, நெடுங்கழி நெடில், குறுங்கழி நெடில், நிரஞ் சனமாலை முதலியவற்றைச் செய்து முப்பத்திரண்டாம் வய தில் இவ்வுலகை நீத்தார்.

சிவப்பிரகாசர் இயற்றிய பிரபுலிங்கலீலையில் கற்பனை யாற்றலைக் காட்டுதற்கே இந்நூலைச் செய்தார் என்றுகூடச் சொல்லலாம். இவரது திருவெங்கோவை நல்லதோர் அகச் சுவை ததும்பி வழியும் நூல். களவியலில் கைக்கிளையில் வரும் ஒரு காட்சி: திருவெங்கை வாணர் வாழும் மலையின் ஒரு சோலையில் ஒருநாள் மாலைப்போது; ஒரு தூமணி இருதனங்களும், கண்களும் கொண்டு எதிர்ப்படுகின்றதாம்!

பூவும் பழுத்த செழுந்தீங் கனியும் பொழியமுதம்
மேவும் குடங்கள் இரண்டுடனேயிரு மீனுங்கொண்டு
சேவுந் தழகர் திருவெங்கை வாணர் சிலம்பின்மலர்
தூவும் பொழிலில் எதிர்ப்பட்ட தாலொரு தூமணியே.

iv. சிவஞான முனிவரின் பிரபந்தங்கள்

கி. பி. 18ஆம் நூற்றுண்டில் சைவத்தின் தனிப் பெருமையைப் பக்தி இலக்கியங்களின் வாயிலாய்ப் பாரில் பரப்பியவர் சிவஞான முனிவர் ஆவார். இவர் பாண்டிய நாட்டில் பொதிய மலேயின் சாரலில் பாவநாசத்தைச் சேர்ந்த விக்கிரமசிங்கபுரத்தில் தோன்றியவர். இளமையிலிருந்தே தமிழில் ஈடுபாடுகாட்டிப் பேராற்றல் பெற்றவர். திருவாவடுதுறை ஆதீனத்தின் தலேவராகவும் திகழ்ந்தார்.

இவர் செய்த பிரபந்தங்கள் பல. திருவேகம்பரந்தாதி, திருமுல்லேவாயிலந்தாதி, கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி, இளசை பதிற்றுப்பத்தந்தாதி, கச்சியானந்த ருத்தரேசர் பதிகம், திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு, செங்கழுநீர் விநாயகர் பிள்ளேத்தமிழ், செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம். திருத்தொண்டர் திருநாமக்கோவை முதலியவைகள் இவருடைய இலக்கிய அறிவை உலகிற்குப் பறைசாற்றும் பிரபந்தங்களாகும். இவர் இலக்கண விளக்கவுரைகளும், தருக்க நூல்களும், தத்துவ நூல்களும், சமய நூல்களும் செய்திருக்கின்றுர்.

நூல்களும் நயங்களும்

இவர் இயற்றிய தொல்காப்பிய சூத்திரவிருத்தி ஆராய்ச்சி நூல்களில் தலேசிறந்தது. இவரது காஞ்சி புராணம் தொண்டைமண்டலச் சிறப்பையும், சித்திரக் கவிச் சிறப்பையும் குறிப்பது. சித்தாந்த மரபு இவரது மறுப்புத் திறமையையும், வடமொழி ஈடுபாட்டையும் எடுத்துரைப்பது. இவர் எழுதிய சிவஞான போதப் பேருரையே திராவிடமாபாடியம் எனப் பெயர்பெற்று இவரது பெரும புகழை என்றும் இவண் நிலேநிறுத்துவதாய் இருக்கின்றது. செங்கழு விநாயகர் பிள்ளேத்தமிழும், அமுதாம்பிகைப் பிள்ளேத்தமிழும் நல்ல கற்பனே வளம் செறிந்தவை. அமுதாம்பிகையின் முகம் மாசு மறுவற்றது; ஒளியை உமிழ்வது. இம்முகத்தை நீல வானத்துக் கோலமதியானது காணுந்தோறும் தன்னிடத்தில் கறையிருப்பதால் நாணமுற்று முன்னிற்கவும் அஞ்சிச் சோலேயில் மறைந்து ஓடுகிறதென்று கூறுகின்றுர்.

சார்பூத்த மறுவுண்ட வெண்கதிர்க் கலைமதி
கவின்றநின் கமலவதனங்
காண்டோறும் மறுவற்ற மதியீ தெனவுட்
கவன்றுமுன் நிற்கவஞ்சிப்
பார்பூத்த தென்குளத்தூர் பொங்கர் காவணம்
பரியமதி னூழையூடு
பையென நுழைந்தொளித் தோட.

இவரின் பாக்கள் நல்ல கலையழகு பொருந்தியவை; அஃதோடு பல்கருத்துச்செறிவும் நிறைந்தவை; உண்மைகளைக் கொண்டு விளங்குபவை. இவரது சோமேசர் முதுமொழி வெண்பாவானது திருக்குறளைப் போற்றிச் சான்று காட்டி விளக்குவதாகும். கல்வி கற்றோரின் உண்மைத் தன்மையை வள்ளுவர், உள்ளம் மகிழக்கூடி உள்ளம் உள்ளப் பிரிதல் புலவர் தொழில் என்கின்றார். அதற்குச் சான்றாகத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் கொண்டொழுகிய நட்பைச் சிவஞான முனிவர் காட்டுகின்றார்.

சம்பந்தர் நாவரசர் பாற்கண்டோம் சார்ந்துவப்ப
தும்பிரிவி னுள்ளுவதுஞ் சோமேசா — நம்பி
உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

19. தமிழில் பாரதம்

பாரத வெண்பா

முதன்முதலில் தமிழ்மொழியில் வடமொழிப் பாரதத்தை இயற்றியவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பெருந்தேவனார் ஆவார். அவருக்குப் பிறகு 9 ஆம் நூற்றாண்டில் பெருந்தேவனார் என்ற மற்றொரு புலவரால் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக பாரத வெண்பா என்னும் நூல் இயற்றப்பட்டதென்று தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 'தமிழ்க் காப்பியங்கள்' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்கள். இதையே, 'கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் ஆட்சியில் இயற்றப்பெற்ற பாரதம் ஒன்றும் நம் தமிழ்மொழியில் இருந்தமை அறியத்தக்க

தாகும்' என்று ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவப் பண்டா ரத்தார் அவர்கள் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்கள். பாரத வெண்பாவில் வெண்பா, ஆசிரியம் என்னும் இருவகைப் பாக்கள் உள்ளன. இடை யிடையே காணும் உரைப்பகுதிகளில் வடமொழிச் சொற் கள் மிகுதியாகக் கலந்து வந்துள்ளன. செய்யுட்கள் பொருட்செறிவின்றிக் காணப்படுகின்றன.

அருணிலை விசாகர் பாரதம்

மூன்றாங் குலோத்துங்க சோழன் காலமாகிய கி. பி. 13ஆம் நூற்றாண்டில் அருணிலை விசாகர் என்பவர் பார தத்தைத் தமிழ்ப்படுத்தினர் என்ற செய்தி வடதிருவாலங் காட்டில் வரையப்பெற்றுள்ள கல்வெட்டொன்றிலிருந்து தெரியவருகின்றது. 'பாரதந் தன்னை அருந்தமிழ்ப்படுத்திச் சிவநெறி கண்டோர்' என்பதே அக்குறிப்பு. இந்த ஆசிரி யர் சிறந்த சிவபக்தரெனத் தெரியவருகின்றார். இவர் இயற்றிய பாரதத்திற்கு அருணிலை விசாகர் பாரதம் என்று பெயர். இந்நூல் இப்பொழுது நமக்குக் கிடைக்காததால் இதைப்பற்றி மிகுதியாயறிய நம்மால் இயலவில்லை.

பிற பாரதங்கள்

பழைய காஞ்சிபுராண ஆசிரியர் ஒரு பாரதத்தை இயற்றி யுள்ளார் என்று அப்புராணச் சிறப்புப் பாயிரம் செய்தி தருகின்றது. ஆனல், அந்நூல் நமக்கு இன்று கிடைக்க வில்லை. பிற்காலத்தில் தோன்றிய நல்லாப் பிள்ளை யென் பவர் வில்லிபாரதத்தையே விரித்துப் பாடியிருக்கின்றார். அரங்கநாதக் கவிராயர் என்பவர் பாரதத்தின் பிற்பகுதிகளைப் பலரும் புரியும் வகையில் விரித்துக் கூறியுள்ளார்.

வில்லிபுத்தூரார் பாரதம்

தமிழில் தோன்றிய பாரதங்களில் பெரும் வழக்குடைய தாக இருப்பது வில்லிபுத்தூரார் பாரதம். இது பரத னுடைய வழித் தோன்றல்களாகிய பாண்டவர், துரியோ தனதியரின் வரலாற்றைக் கூறும் நூலாகும். வடமொழியில் உள்ள மாபாரதமே இந்நூலுக்கு முதனூலாம்.

அமைப்பு

இந்நூல் ஆதிபருவம், சபாபருவம், ஆரணிய பருவம் விராட பருவம், உத்தியோக பருவம், வீட்டும பருவம், துரோண பருவம், கன்ன பருவம், சல்லிய பருவம், சௌத்திக பருவம் ஆகிய பத்துப் பருவங்களைக் கொண்டது. இந்நூலில் 4339 விருத்தப்பாக்கள் காணப்படுகின்றன. வட மொழியில் வியாசரது மாபாரதத்தில் காணப்படும் பதினெட்டுப் பருவங்களில் இந்நூலின்கண் முதல் பத்துப் பருவங்களே இடம்பெற்றுள்ளன.

சிறப்புச் செய்திகள்

இதில் காணப்படும் பாடல்கள் பல்வகை அணிகளைக் கொண்டு விளங்குகின்றன. ஆனால், இந்நூலில் வடசொற்களும், வடமொழித் தொடர்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன. ''இந்நூலுக்கு முற்பட்ட எந்த நூலிலும் இத்துணை வடசொற்கள் காணப்படவில்லையென்று துணிந்து கூறலாம்'' என்கின்றார் பேரறிஞர் சதாசிவப் பண்டாரத்தார்.

வில்லிபுத்தூரார் கவிதைகளில் நல்ல வருணனையும், ஓட்டமும் இருக்கக் காணலாம். பாண்டவர்கள் திரௌபதியை மணத்தற்காகப் பல்லிடங்களையும் கடந்து வருகின்றார்கள். அவர்கள் வழிநடந்து வரும்பொழுது காலை மலர்ந்தது ; அதை,

புலர்ந்தன கங்குற் போதும் பொழிதிரு பனியுஞ் சேர
மலர்ந்தன மனமுங் கண்ணும் வயங்கின திசையும்
பாரும்
அலர்ந்தன தடமுங் காவு மார்த்தன புள்ளும் மாவும்
கலந்தன குருகும் பேடுங் கலித்தன முரசும் சங்கும்

என்று அழகுறப் பாடுகின்றார்.

செவிலித்தாயார் திரௌபதிக்கு அரசர்களை அறிமுகப் படுத்துகின்றபொழுது கன்னன் எப்படிப்பட்டவன் என்பதை மிகச் சிறப்பாகக் கூறுகின்றாள். அப்பாடல்,

பெண்மைக் கிரதி யெனவந்த பெண்ணு ரமுதே பேருலகில்
உண்மைக் கிவனே வலிக்கிவனே யுறவுக் கிவனே
யுரைக்கிவனே
திண்மைக் கிவனே நெறிக்கிவனே தேசுக் கிவனே
சிலேக்கிவனே
வண்மைக் கிவனே கன்னனெனு மன்னன் கண்டாய்
மற்றிவனே

என்பதாகும். இப்பாடல் நல்ல கருத்துச் செறிவும், சந்த அருமையும் கொண்டு விளங்குகின்றது. வில்லிபாரதப் பாடல்கள் எளிமையும், இனிமையும் உடையவை; பல்வகை சுவைகளும் நிரம்பப்பெற்றவை. வீரச்சுவை இவ்விலக்கியத்தின் பெருஞ் சிறப்பிற்குக் காரணமாக நிறைந்துள்ளது.

வில்லிபுத்தூராழ்வார் திருமுனைப்பாடி நாட்டில் சனியூர் என்ற பழம்பதியில் பிறந்தவர். வைணவ சமயத்தினர். இவர் தந்தை பெரியாழ்வாரிடம்கொண்ட அன்பின் காரணத்தால் இவருக்கு இப்பெயரிட்டார். இவர் கற்றுப் பல்லறிவு பெற்ற தமிழறிஞர். தமிழ்மொழியிடத்தும், மூவேந்தரிடத்தும் மிக்க பற்றுடையவர். பாரதத்தைத் தமிழ்ப்படுத்துமாறு வேண்டிக்கொண்ட கொங்கர் கோமானுகிய வரபதி ஆட்கொண்டானுடைய விருப்பத்தை நிறைவேற்றவும், கண்ணபிரானிடத்துத் தாம் கொண்டிருந்த அளப்பரும் பற்றைத் தமிழகத்திற்கு அறிவுறுத்தவுமே பாரதத்தை இயற்றினர். தமிழகத்தின் எல்லா இடங்களிலும் இதன் பயிற்சி பரவியிருப்பது ஒன்றே இந்நூலின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

20. தமிழில் தலபுராணங்கள்

தமிழகத்தில் சமய உணர்ச்சி பெருகி மக்கள் உள்ளங்களைப் பெரிதும் பிணித்ததால், இறைவன்மீதும், தமிழ்மீதும் பற்றுக்கொண்ட பாவலர் பலரும் தலங்களின் (கோயில்) சிறப்புகளைத் தொகுத்துப் புராணங்களாகப் பாடி மகிழ்ந்தனர். ஒவ்வொரு தலத்திற்கும் பல புராணங்கள் தோன்றியுள்ளன. சிதம்பரத் தலத்திற்கே மூன்றுக்கும் மேற்பட்ட புராணங்கள் உள. இவ்வாறு பார்க்கும்போது தமிழில் தலபுராணங்கள் நூற்றுக்கணக்கில் தோன்றியுள்ளன.

பல தலபுராணங்கள்

பரஞ்சோதி முனிவருடைய திருவிளையாடற்புராணமும், கருணைப்பிரகாசர் செய்த சீகாளத்திப்புராணமும் சிறந்த தலபுராணங்கள். இவைகளில் காணும் தமிழ் நயங்களும் வரலாற்றுக்குறிப்புக்களும், புராணச்செய்திகளும் பலரையும் ஈர்த்து விரும்பிக் கற்கச்செய்கின்றன.

திரிகூடராசப்பக் கவிராயரது குற்றாலத் தலபுராணத்தில் குற்றாலநாதரின் பெருமையும், இலக்கிய நற்சுவையும், இசைச்சொல் அருமையும் செறிந்து காணப்படுகின்றன. கவி வீரராகவ முதலியார் கழுக்குன்ற புராணம் செய்துள்ளார்கள். ஞானக்கூத்தர் என்பவர் விருத்தாசல புராணமும் கச்சியப்ப முனிவர் திருவானைக்கா புராணமும் செய்துள்ளனர்.

எல்லப்ப நாவலர் என்ற புலவர் அருணசல புராணம், திருவெண்காட்டுப் புராணம், செவ்வந்திப் புராணம் (திரிசிராமலைப் புராணம்) என்பவைகளை எழில்படப் பாடியுள்ளார். இவர் பாடியிருக்கும் செவ்வந்திப் புராணம் திருச்சிராப்பள்ளியிலிருக்கும் மலைக்கோயிலுக்குரியதாகும். இத்தலத்தின் பெருமையை விளக்கும் மற்றொரு புராணம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய உறையூர்ப் புராணமாகும். திரிசிராமலைப் புராணம் என்னும் செவ்வந்திப் புராணம் தமிழிலக்கிய நலமும், சைவ சித்தாந்த நுட்பமும், சொல்-பொருள் சுவைகளும் நிரம்பப்பெற்றது.

செவ்வந்திப் புராணம்

இந்நூல் திருமலைச் சருக்கம்முதல் தாயான சருக்கம் முடிய பதினொரு சருக்கங்களைக் கொண்டுள்ளது. இதை,

சூதமுனி முனிவரர்க்குப் பரிவாற் சொன்ன
தோற்றமிகு சிவபுரா ணத்திற் கண்டு
கோதமனுர் பலமுனிவர் விரும்பிக் கேட்பக்
கூறியிடுஞ் சிராமலையின் புராணந் தன்னை
யேதமற வடநூலைத் தமிழ் நூலாக்கி
யினிய சருக்கங் களொரு பதினொன்ருகப்
போதமிகு திருவிருத்தம் ஐந்நூற் றைம்பால்
பொருந்திட விக்கதை விரித்துப் புகலலுற்றேன்

என்ற இவரது திருமலைச் சருக்கப் பாடலால் நாமறிகின்

ரேம். மேலும் இப்பாடல் இந்நூலுக்கு முதல்நூல் வட மொழி நூலென்பதையும் தெரிவிக்கின்றது.

திருச்சிராப்பள்ளித் தலத்தின் பெருமையை,

அத்தலந் தனக்கிணை அமரர் நாட்டிலை
இத்தலத் துளதென இயம்ப லாகுமோ
வித்தக விலிங்கமந் தீர்த்த மேன்மையவ்
உத்தம தலத்தலால் உலகில் வேறுண்டோ

என்ற இப்பாடல் இயம்புகின்றது. இத்தலத்தையொத்த பிறதலம் விண்ணகத்திலும், மண்ணகத்திலும் இல்லையாம். சிவலிங்கப் பெருமானுடைய மேன்மையும், தீர்த்தங்களின் சிறப்பும் இத்தலத்தன்றி வேறு தலங்களில் காண்பதரிதாம்.

இந்நூலைச் செய்த சைவ எல்லப்ப நாவலர் சிவபெரு மான்மீது தீராக் காதலுடையவர் என்பதுவும் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சைவசித்தாந்த நூல் களையும் நன்கு கற்றுத் தெளிந்தவர் என்பதுவும் இவரின் பாடல்களால் நாமறியும் உண்மைகள்.

தனியூர்ப் புராணம்

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோன்றிய மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் செய்த சீரிய நூல்கள் தல புராணங்களாகும். மொத்தம் பதினுறு தல புராணங்கள் பாடியிருக்கின்ருர். அவைகளில் திருவுறந்தைப் புராணம், மாயூரப் புராணம், கோயிலூர்ப் புராணம், திருமயிலைப் புராணம், திருநாகைக்காரோண புராணம் முதலியவை கள் குறிப்பிடத் தக்கவை. இவர் செய்திருக்கும் தனியூர்ப் புராணம் சோழவளநாட்டில் மாயூரத்திற்கு அருகிலுள்ள தனியூர் சிவத்தலத்தின்மேல் பாடப்பட்டது. இங்கு எழுந் தருளியிருக்கும் இறைவன் பெயர் புனுகேசர் என்பது. இங்கே புனுகு பூனையொன்று சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றதாம்.

இத்தலபுராணத்தைப் பாடும்படி பிள்ளையவர்களைப் பேரறிஞர் சாமிநாதையரவர்கள் அடிக்கடி வற்புறுத்தினுர் களாம். அதன் காரணத்தால்தான் இந்நூல் தோற்றம்

பெற்றதாம். இது திருநாட்டுப் படலம் முதல் சிவாலய தரிசன விதிப்படலம் முடிய எட்டுப் படலங்களைக் கொண்டது.

புனுகுபூனையானது சிவலிங்கப்பெருமானைக் கண்டு காதல்கொண்டு மகிழ்ந்தது. மகிழ்ந்து, 'பசிக்கு வாய்த்த மருந்தோ! வறுமையாளர்க்கு வாய்த்த வண்ணப் பொன் வைப்போ! வாடும் பயிர்க்கு வாய்த்த மழையோ! தளர்வுற்றவர்க்கெதிர்ந்த தென்றலோ!' என்று சிவபெருமானை எண்ணி வியந்ததாம். அதை,

மண்டு தீப்பசி யாளருக் கெதிர்ப்படு மருந்தோ!
மண்டு மாமிடி யாளர்நேர் உற்றபொன் வைப்போ!
மண்டு கோடையால் சுருள்பயிர் எதிர்படு மழையோ!
மண்டு சோகமுற் றவர்முகத் தெதிர்ந்த தென்வளியோ!

என்று பாடுகின்றார். இப்பாடலின் சொல்லழகும், பொருளழகும் இந்நூலின் பெருமையை எடுத்துக்காட்டப் போதுமானவையாகும். திருநாட்டுப் படலத்தில் சோழநாட்டில் தென்னை, கரும்பு, நெல், கமுகு, வாழை முதலியவை வளரும் அருமையும், பலன் வழங்கும் அருமையும் அழகுச் சொற்களால் அறிவிக்கப்படுகின்றன.

இவ்வாறு தமிழில் காணும் தலபுராணங்கள் தமிழகத்துக் கோயில்களின் வரலாற்று நூல்களாகவும், இயற்கை அழகைப் படம்பிடித்துக் காட்டும் எழிற் சித்திரங்களாகவும், பக்திச் சுவையூட்டும் பாமாலைகளாகவும், பாவலர்களின் புலமைத் திறங்கூறும் தெள்ளுதமிழ் இலக்கியங்களாகவும் திகழ்கின்றன.

21. தமிழ்ப் புலவர்களும் தனிப்பாடல்திரட்டும்

பொதுச் செய்திகள்

சங்ககாலத்தில் திகழ்ந்த பற்பல புலவர் பெருமக்களின் கவித்திறமை, முற்காலத்தில் தொகுக்கப்பட்ட புறநானூறு, அகநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்களில் தெரிகின்றது. அதுபோல் பிற்கால மூவேந்தர் அவையிலும்

அவர்களுக்குப்பின் தமிழை வளர்த்துவந்த வள்ளல்கள், செல்வர்கள் ஆதரவிலும் சிறப்புற்று ஓங்கிய புலவர்களின் எண்ணிறந்த சொல், பொருள் நயங்கள், 'தனிப்பாடல் திரட்டு', 'தனிச்செய்யுள் சிந்தாமணி', 'பெருந்தொகை' என்ற பாக்களின் தொகுப்புக்களால் நமக்குத் தெரியவருகின்றன. "முற்காலப் புலவர்கள் கருத்து நுட்பத்தையும், பிற்காலப் புலவர்கள் சொல் நுட்பத்தையும் குறிக்கோளாகக் கொண்டனர். ஆதலால் இருவகையார் பாடல்களும் தமிழன்னையின் திருவடிக் கமலங்களுக்கு உவப்பாகச் சாத்தப்பெற்ற பாமாலைத் தொகுதிகளே" என்று பேராசிரியர் கா. சு. பிள்ளையவர்கள் தனிப்பாடற்றிரட்டு முன்னுரையில் குறிப்பிடுகின்றார்கள்.

தமிழகத்தின் பல பகுதிகளில் தோன்றிய புலவர்கள் இயற்கைக்காட்சிகளில் ஈடுபட்டு, மக்கள் மேற்கொண்டொழுகிய பல்வேறு பழக்கவழக்கங்களைக் கண்டு களிக்க நாடெங்கும் சுற்றித்திரிந்தனர். அவ்வாறு திரியுங்கால் நெஞ்சில் பதியும் நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும் கண்டு, அவைகளில் ஈடுபட்டுக் கற்பனையும், கவின் கருத்துக்களும் தோன்ற நல்ல நடையில் பாக்களைப் பாடி மக்களை மகிழ்வித்தனர். அப்பாடல்களில் பல தொகுக்கப்பட்டிருக்கும் தனிப்பாடல் திரட்டில் நகைச்சுவை மலிந்த பாக்களும், சிலேடைப் பாக்களும், தெய்வங்களின்மேல் தொடுக்கப் பட்ட பாக்களும் உள்ளன.

காளமேகப்புலவர்

காளமேகப்புலவர் 15ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். வைணவராயிருந்து மோகனங்கி என்னும் திருவானைக்கா சிவன்கோயில் தாசியின்பொருட்டுச் சைவராய் மாறினர். திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கும் அகிலாண்ட நாயகியின் திருவருள் பெற்று வரகவியானர். இவர் சிறந்த ஆசுகவியாக விளங்கினர். சிலேடை அமையப் பாடுவதிலும், நகைச்சுவை பொருந்தப் பாடுவதிலும் வல்லவர். இவர் பாடிய முதல்நூல் திருவானைக்கா உலா என்பதாகும். சிவபெருமானே முழுமுதற் கடவுளென்று

காட்ட பரப்பிரம்ம விளக்கம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார். இவர் அதிமதுரகவி என்பாரோடு புலமையில் வாதிட்டு வென்றார்.

பொருள் பொதிந்த பாடல்கள்

இவர் பாடியவையாக 187 பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் காணப்படுகின்றன. பாம்புக்கும், எள்ளுக்கும் சிலேடையாக இவர் பாடிய பாடல் பலருக்கும் பழக்கப்பட்ட பாடலாகும்.

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கில் முகங்காட்டும்—ஓடிமண்டை
பற்றில் பரபரெனும் பாரில்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது

ஒருசமயம் இவர் திருமலைராயனிடம் சென்று அவனது அவையில் பாவலராக இருந்த அதிமதுரகவியையும், அவரின் அறுபத்துநான்கு மாணவர்களையும் பார்த்து, "நீங்கள் யாவர்?" என்று கேட்டார். அவர்கள் தங்களைக் "கவிராயர்" என்று காளமேகத்திற்கு அறிவித்தனர். அதைக் கேட்ட இவர்,

வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்

என்று தம் செருக்குத் தோன்றவும், நகைச்சுவை ததும்பவும் பாடினார். கவிராயர் என்பதற்குக் காளமேகம் கொண்ட பொருள் 'குரங்குத் தலைவர்கள்' என்பதாகும்.

இவ்வாறு காளமேகப்புலவர் ஆணவங்கொண்டலைந்த பல புலவர்களையும் வசைமொழியால் அடக்கியது பற்றி 'வசைபாடக் காளமேகம்' என்று போற்றப்பட்டார்.

இரட்டையர்கள்

இரட்டையர் என்ற இருபுலவர்கள் காளமேகப்புலவர் காலத்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் சோழ

நாட்டில் ஆலந்துறையில் தோன்றியவர்கள். ஒருவர் ஒரு பாட்டின் முதற்பகுதியைப் பாட மற்றொருவர் அதன் பிற்பகுதியைப் பாடி முடிப்பது வழக்கம் இவர்களில் ஒருவர் முடவர்; மற்றொருவர் குருடர். முடவர் வழிகாட்டக் குருடர் அவரைச் சுமந்து செல்வாராம். திருவாமாத்தூர்கலம்பகம், தில்லைக்கலம்பகம், ஏகாம்பரநாதருலா, கச்சிக் கலம்பகம் முதலிய நூல்களை இவர்கள் பாடியுள்ளார்கள். கலம்பகம் பாடுவதிலே இவ்விருவரும் சிறந்தவர்களாய் விளங்கிய காரணத்தால் 'கலம்பகத்திற்கு இரட்டையர்கள்' என்று இவர்களைப் போற்றுவது வழக்கம். வரபதியாட்கொண்டான் என்னும் கொங்குமன்னன் இவர்களைப் பெரிதும் ஆதரித்தான்.

பாங்கான பாடல்கள்

இவர்கள் பாடியவையாக 12 பாக்கள் தனிப்பாடல்திரட்டில் காணப்படுகின்றன. ஒருசமயம் குன்றும், குழியும் நிறைந்த பாதைவழியே இவர்கள் செல்லவேண்டியிருந்தது. அவ்வழியில் துயருற்று ஒருவர் 'இத்துன்பம் என்று நீங்குமோ?' என்று பாட மற்றொருவர் 'ஈயாதவர்களைப் பாடுவதால்தான் இத்துன்பம்' எனப் பாடி முடித்தார்.

குன்றுங் குழியுங் குறுகி வழிநடப்ப
தென்று விடியுமெமக் கென்கோனே—ஒன்றும்
கொடாதானைக் கோவென்றும் காவென்றுங் கூறில்
இடாதோ நமக்கிவ் விடி

இப்பாடலில் அவர்கள் பல இடங்களிலும் சுற்றித் திரிந்து பலர்மீது பாடல் பாடிய உண்மை நன்கு தெரிகின்றது.

பெரும் புலவராக விளங்கிய காளமேகம் இறந்துபட சுடுகாட்டில் அவரது உடல் அழிவுற்றதற்கு அருந்துயருற்று வருந்தி ஒரு பாடலைப் பாடினர்கள்.

ஆசு கவியால் அகில உலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே—பூசுரா
விண்கொண்ட செந்தணலாய் வேகுதே—ஐயையோ
மண்தின்ற பாணமென்ற வாய்

ஆசுகவியால் அவரது புகழ் அகிலமெங்கும் பரவிற்றும். மண்தின்ற பாணம் என்ற தொடையை அருமையாகப் பாட்டிலமைத்துக் கூறிய அவரது வாயானது வானை நோக்கி எரிகின்ற சிவந்த நெருப்புச் சுவாலையில் வெந்தழிகின்றதாம். அதற்காக இவர்கள் அழுகின்றுர்களாம். என்னே இவர்களது அன்பு!

அந்தகக்கவி வீரராகவ முதலியார்

அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவர் 17ஆம் நூற்றுண்டில் தொண்டைமண்டலத்தே புதூரில் பிறந்து வாழ்ந்தவர். இவர் பிறவிக்குருடர். இவரை, 'ஏடாயிரங் கோடி எழுதாது தம்மனத்து எழுதிப் படித்த விரகர்' என்று போற்றுவார்கள். சேயூர்முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்பகம், திருவாரூருலா, கழுக்குன்றமாலை, சந்திரவாணன் கோவை, கழுக்குன்றப் புராணம் முதலியன பாடியுள்ளார்.

இவர் ஈழம் சென்று பரராசசேகர மன்னனைப் பாடிப் பரிசில் பெற்றுராகையால் இவரது புகழ் ஈழத்திலும் பரவிற்று. வள்ளல்களாய் உள்ளவர்களையும், சிற்றரசர்களையும் பாடிப் பரிசில் பெற்று வாழும் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்.

உள்ளமள்ளும் பாடல்கள்

இவர் பாடியவையாக 20 பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் காணப்படுகின்றன.

ஒருசமயம் இவர் சீகை என்னும் பதியில் குடியிருந்த தானனென்னும் வள்ளலிடஞ் சென்று வாய்திறந்து தமக்கு வேண்டியதை நயந்து கேட்டபொழுது சோறும், பழைய துணியும் தராமல் யானையொன்றைக் கொடுத்தான். அதைப் பெற்று வியந்து,

இல்லெனும்சொல் லறியாத சீகையில்வாழ்
தானனைப்போய் யாழ்ப்பா ணன்யான்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும்
பழந்தூசும் பாலியாமல்
கொல்லநினைந் தேதனது நால்வாயைப்
பரிசென்று கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென தொருவாய்க்கும் நால்வாய்க்கும்
இரையெங்கே துரப்பு வேனே

என்று பாடினர்.

'நால்வாய்' என்பது தொங்குகின்ற வாயையுடைய யானையைக் குறிக்கும். இதன்மூலம் இவரின் நகைச் சுவையையும், நன்றி மறவாத் தன்மையையும் தெரிந்து கொள்கின்றோம்.

ஔவையார்

ஒட்டக்கூத்தர், புகழேந்தி இவர்கள் வாழ்ந்த 12ஆம் நூற்றாண்டிலேயே ஔவையார் என்ற பெண்பாற்புலவரும் புலமைசான்றவராய் விளங்கினர். இவர் இயற்றிய சிறு காப்பியம் அசதிக்கோவை. இஃதேயன்றி ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நீதிநூல் களையும், அட்டாங்கயோகக் குறள் என்ற ஞானநூலையும் இயற்றியுள்ளார். இவர் பாடிய பாடல்களாகப் பல தனிப் பாடல்திரட்டிலும் காணப்படுகின்றன.

ஒருசமயம் ஔவையாருக்கும், கம்பருக்கும் போட்டி ஏற்பட்டது. சிலம்பி என்னும் தாசி 500 பொன் கொடுக்க கம்பர் பாதிப்பாடலைமட்டும் பாடி மற்றப் பாதியைப் பாடாது விட்டுவிட்டார். ஔவையார் அவர் பாடாது விட்ட மீதியை அவளிடம் குடிக்கக் கூழ் பெற்று அதற்கீடாகப் பாடி முடித் தார். அப்பாடல்,

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே—பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு

என்பது. இவ்வாறு ஔவை பாடி முடிக்கவே அதைக்

கேள்வியுற்ற கம்பர் பொறுமைகொண்டு பெண்பாற் புலவரை 'அடி' என்று சொல்ல விரும்பி, "ஒரு காலடீ நாலிலைப் பந்தலடீ" என்று இருபொருள்பட சிலேடையாகச் சொல்லி பொருள் கேட்டார். அவரது மனத்தை நன்கு அறிந்துகொண்ட ஔவையார் அவரை 'அடா' என்றதோடு எருமையென்றும், கழுதையென்றும், குட்டிச்சுவரென்றும், குரங்கென்றும் கூறி அவரது ஆணவத்தை அடக்கினார். அவர் பாடிய பாடல்,

எட்டேகா லட்சணமே எமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னு யடா

என்பதாகும். இந்நிகழ்ச்சியை நோக்கும்போது சங்க காலத்து ஔவையாரிடத்துக் காணும் மனவலிமை கம்பர் காலத்து ஔவையாரிடமும் காணுவதைத் தெளிவாகத் தெரிகின்றோம். இவரது பிற தனிப்பாடல்கள் நகைச்சுவை பொருந்தியவையாகவும், செருக்கு நிறைந்தவையாகவும் காணப்படுகின்றன.

கல்வியொழுக்கம், நன்னூற் கோவை, நான்மணிக் கோவை, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்துப்போன்ற பிற சிறந்த எளிய நூல்களையும் ஆக்கியளித்து தமிழிலக்கியத்தை வளப்படுத்தியுள்ளார்.

தனிப்பாடல்திரட்டில் ஔவையார் பாடிய பாடல்கள் எழுபதும், கம்பர் பாக்கள் அறுபத்தெட்டும், ஒட்டக்கூத்தர் பாடியவை நாற்பத்தொன்றும், பொய்யாமொழிப் புலவர் பாடியவை எட்டும், சொக்கநாதப் புலவர் பாடல்கள் நாற்பதும், மதுரகவிராயர் பாடியவை பதின்மூன்றும், கடிகை முத்துப்புலவர் பாடியவை நூற்றுஏழும், இன்னும் பிற புலவர்கள் பாடிய பாடல்கள் பலவும் காணப்படுகின்றன. இப்பாடல்களெல்லாம் பல்பொருள் பற்றியவை; தனிப்பட்ட புலவர்களுடைய உணர்வுப் பேழைகள்; படிப்போர் உள்ளங்களுக்கு இன்பமூட்டிப் பல்துறை அறிவைப் பயக்க வல்லவை.

நான்காம் பாகம்

IV. தற்காலத் தமிழ் இலக்கியங்கள்

22. மேல்நாட்டார் தமிழ்த் தொடர்பும் தொண்டும்

i. மேல்நாட்டுக் கிறிஸ்துவர்

மேல்நாட்டுக் கிறிஸ்துவத் துறவியரின் தமிழ்த்தொண்டாலும் தமிழ்மொழி பல்வளம் பெற்று விளங்குகின்றது. நம்மொழியை நன்கு ஆராய்ந்து இதன் அருமைபெருமையை உலகமக்களுக்கு அறிவித்தவர்கள் இவர்களே. மேலும், ஐரோப்பிய மொழிகளில் இருந்த சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து மேல்நாட்டு அறிவைப் பரப்பியவர்களும் இவர்களே. இவர்களது பணியால் நமது இலக்கணமும், இலக்கியமும் பல புதிய போக்குகளையும், அமைப்பு முறைகளையும் மேற்கொண்டு நல்வளர்ச்சியுற்றிருக்கின்றன.

தத்துவ போதகர்

இராபர்ட் தே நோபிலி என்னும் தத்துவபோதகர் கி. பி. 1577ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உரோம் நகரில் பிறந்தார். 1596இல் சேசு சபையில் சேர்ந்தார். 1605 மே 20ஆம் நாள் கோவா நகர் வந்து சேர்ந்தார். 1606 நவம்பர் 15ஆம் நாள் மதுரையை அடைந்தார். அன்றிலிருந்து அவர் தமிழ்மக்களோடு பழகுதற்கு உரிய வழியாகிய தமிழ்மொழியை முயன்று கற்றார். இம்மொழி அவரைப் பெரிதும் கவர்ந்ததால், 'அழகுமிகுந்து வளப்பம் பொருந்தி மிகவும் பண்பட்டு விளங்குவது' என்று தமிழை மேனாட்டாருக்கு அறிமுகப்படுத்தினார். இவருக்குத் தாய்மொழி இத்தாலி. அவ்வாறிருந்தும் தமிழிலேயே பேசுவதும், எழுதுவதுமாக வாணாளைக் கழித்தார்.

ஆக்கிய நூல்கள்

ஞான உபதேச காண்டம் என்ற இவரது நூல் ஐந்து காண்டங்களை உடையது. இவற்றுள் முதல் மூன்று காண்டங்கள் அச்சாகியுள்ளன. 1889இல் ஆத்தும நிர்ணயம் என்னும் நூல் அச்சாயிற்று. ஞான உபதேசம் என்ற நூல் இவருடைய சொற்பொழிவுகள் அடங்கிய ஒரு தொகுப்பாகும். இந்நூலில் இருபத்தாறு சொற்பொழிவுகள் உள்ளன. இஃது, பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் வணிக்கத்திற்குரிய ச. இராசமாணிக்கம் சே. ச. அவர்களால் ஆய்ந்து செம்மைப் படுத்தப்பட்டு, தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழகத்தினரால் அருமையாக வெளியிடப்பட்டுள்ளது. புனர் சென்ம ஆட்சேபம். தூஷணத் திக்காரம் போன்ற நூல்கள் இன்னும் அச்சேறவில்லை. இவர் எழுதிய ஞானதீபிகை, விசுவாச சல்லாபம், உபதேச சல்லாபம் போன்ற நூல்கள் கிடைக்கவில்லை. இன்னும் மந்திரமாலை, தத்துவக் கண்ணாடி, சிறிய குறிப்பிடம், பெரிய குறிப்பிடம் போன்ற நூல்களும் இவரால் செய்யப்பட்டவை என்கின்றனர். 16ஆம் நூற்றாண்டில் தமிழ்மொழியில் இத்துணை உரைநடை நூல்கள செய்த தமிழ்ப்பெரியார் இவர் ஒருவரே. இவரைத் 'தமிழ் உரை நடையின் முன்னோடி' என்று தமிழகம் போற்றக் கடைமைப் பட்டுள்ளது.

சீகன் பால்கு ஐயர்

புரோட்டெஸ்டாண்டு கிறிஸ்துவ மதத்தை முதன் முதலாகத் தமிழ்நாட்டில் பரப்பிய பெரியார் இவரே. 1706இல் இவர் தரங்கம்பாடிக்கு வந்ததிலிருந்து தமிழை முயன்று கற்றார். இவர் நற்செய்தி நூலை (The Bible) தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'தமிழ்-இலத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு' என்னும் அரிய நூலை ஆக்கித் தமிழின் சிறப்பை உலகிற்கு எடுத்து உணர்த்தியிருக்கின்றார்.

வீரமாமுனிவர்

இவர் கி பி. 1680ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8ஆம் நாள் இத்தாலியிலுள்ள 'காஸ்திகிலியோன்' என்னும் இடத்தில் பிறந்தார். பல கலைகளையுங் கற்று 1709ஆம்

ஆண்டு சேசுசபைத் துறவியானர். 1710ஆம் ஆண்டு கத்தோலிக்க சமயத்தைத் தமிழகத்தில் பரப்பத் தமிழ்நாடு வந்தடைந்தார் தமிழகத்தில் அருட்சமயத் திருப்பணி செய்த தோடு அருந்தமிழ் மொழிக்கும் பெரும்பணியாற்றினர். பல கடமைகளுக்கிடையே தமிழை முறையாகக் கற்ருர். கற்றதோடு நிற்காது காவியம், பிரபந்தம், உரைநடை, அகராதி, இலக்கணம், மொழிபெயர்ப்பு என்னும் துறைகளி லெல்லாம் ஈடுபட்டு எழில்மிக்க நூல்கள் பல படைத்துத் தமிழ் மொழியை வளப்படுத்தினர்.

ஆக்கிய அருந்தமிழ் நூல்கள்

தமிழுணர்வு கொண்ட எவரும் வீரமாமுனிவரது தமிழ்த் தொண்டை மறக்கமுடியாது. சமயத்தைப் பரப்பு வதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த இவர் தமிழையும் கட்டிக்காக்க எடுத்துக்கொண்ட முயற்சிதான் நம்மை யெல்லாம் இன்று இவரைப் போற்றத் தூண்டுகிறது. சமயச் சார்பான நூல்களைமட்டும் இவர் செய்திருந்தால் சமயத்தைப் பரப்பமட்டுந்தான் தமிழைக் கற்ருர் என்று சொல்லிவிடலாம். ஆனல், நிகண்டுகளுக்குப் பதிலாக சதுரகராதி செய்தமையும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் தொகுத்துத் தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூல் செய்த தன்மையும், கொடுந்தமிழிலக்கணம் செய்த அருமையும், தமிழ்மறையின் அறத்துப் பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்த மேன்மையும் இவர் தமிழுக்காக—தமிழ் வளர்ச்சிக்காக வாழ்ந்தார் என்ற உண்மையைத் தவிர வேறு எதை விளக்குகின்றன?

உரைநடைக்கு இவர் ஆற்றியிருக்கும் உயரிய பணி நாமெல்லாம் உன்னிப் போற்றவேண்டியதொன்ருகும். திருக்காவலூர் கலம்பகம், கித்தேரி அம்மாள் அம்மானை போன்ற செய்யுட்களும் தேம்பாவணி என்னும் காப்பி யமும் தவிர வேதவிளக்கம், வேதியர்ஒழுக்கம், ஞானக் கண்ணுடி, செந்தமிழிலக்கணம், பரமார்த்தகுரு கதை, வாமன் கதை போன்ற உரைநடை நூல்களும் இவரது ஆழ்ந்த தமிழ்ப்பற்றையும், அறிவின் ஆழத்தையும் அளந்து காட்டக்கூடியன.

தேன்சொட்டும் தேம்பாவணி

இவரின் இலக்கியப் படைப்புக்களிலெல்லாம் தலைசிறந்து நிற்பது தேம்பாவணி யென்னும் தீந்தமிழ்க் காப்பியப் பூங்காவாகும். சங்ககாலத்து இலக்கியங்களையும், பிற்காலத்து இலக்கியங்களையும் எவ்வளவு ஆவலுடன் — ஆய்வுடன் கற்றுத் தெளிந்து தமிழிலக்கிய மரபு தெரிந்து இலக்கியம் செய்திருக்கின்றார் என்பதைத் தேம்பாவணியால் உணரலாம்.

அமைப்பும் சிறப்பும்

இக்காப்பியம் மூன்று காண்டங்களையும், முப்பத்தாறு படலங்களையும், மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து விருத்தப்பாக்களையும் கொண்டு விளங்குகின்றது. இதன்கண் தூய சூசையப்பரின் வாழ்க்கை வரலாறு காப்பிய நலம் பொருந்தக் கவினுறக் கூறப்பட்டுள்ளது. வீரமாமுனிவரின் இயற்கை வருணனையும், எழில் உவமைகளும், கற்பனைத் திறமையும் கற்போர் உள்ளத்தைக் கவரக்கூடிய வகையில் இதில் இடம்பெற்றுள்ளன. கன்னலின் சாறு கவினுறு கலத்திலே சேர்த்துவைக்கப்பட்டிருப்பதுபோல் இவ்வழகிய நூலிலே தலைசிறந்த தமிழிலக்கியங்களின் சாரங்கள் பல பாவாரங்களாகத் திகழ்கின்றன. குறளின் குருதியும், முத்தமிழ்ச்சிலம்பின் மூச்சும், சீவகசிந்தாமணியின் செவ்வுறுப்புக்களும், கம்பனின் கற்பனைக் கண்களும் மற்றும் பல நற்றமிழ் இலக்கியங்களின் நலன்களும் ஒன்றிக்க உருவான பனுவற் படைப்புதான் தூயவளன் காதையாம் தேம்பாவணி.

யூதேயா நாட்டின் தலைநகரமாகிய செருசலேம் நகரை இனிய சொற்களால் வீரமாமுனிவர் வருணிக்கின்றார். அப்பாடல்,

> பயனிஞல் மறைநூல் ஒக்கும் பகலினை மணியால் ஒக்கும்
> வியனிஞல் உலகம் ஒக்கும் வேலியால் கன்னி ஒக்கும்
> முயலிஞல் அலையை ஒக்கும் முனிமுனி ஒன்ஞர்க் கொக்கும்
> நயனிஞல் உயர்வீ டொக்கும் நகரினை ஒக்கும் வீடே

என்பதாகும்.

தேம்பாவணியின் காப்பியத்தலைவராகிய வளனார் உயிர்களிடத்து அன்பு பூண்டவர். அவரின் அரிய பண்பினைப் பாடுமிடத்துத் திருக்குறளை ஆசிரியர் கொண்டுவந்து புகுத்துவது அவரின் திருக்குறள் பற்றைக் காட்டுகின்றது. அப்பாடல்,

அன்பு வாய்ந்த உயிர்நிலை அஃதிலார்க்
கென்பு தோலுடல் போர்த்ததென் றன்புடை
இன்பு தோய்ந்த நிலையெனத் தானிவண்
துன்பு காய்ந்த உயிர்த்துணை ஆயினன்

என்பதாகும்.

ஓசைமிக்க சொற்களைக்கொண்டு கவிதையாக்குவதிலே வீரமாமுனிவர் கைதேர்ந்தவர். வளனாருக்கும், தேவதாயாருக்கும் திருமணம் நடந்தபொழுது குழலொலியும், பாடுவோர் ஒலியும், வாழ்த்தொலியும் ஒன்றாகச் சேர்ந்து ஒலித்ததை,

முடுகு முரசொலி முடுகு முழவொலி
　　முடுகு முருடொலி முடிவிலாக்
கடுகு பறையொலி கடுகு கலமொலி
　　கடுகு கடலொலிக ளிவெழாத்
தொடுகு குழலொலி தொடுகு குரலொலி
　　தொடுகு துதியொலி தொடுதலாற்
படுகு முகிலொலி படுகு கடலொலி
　　படுத லிலமண மாயதே

என்ற பாட்டால் ஒலித்துக் காட்டுகின்றார். இவருடைய பாக்களில் வரலாற்றுக் குறிப்புக்களும், சமயக்கோட்பாட்டு விளக்கங்களும் செறிந்துள்ளன.

இவரது தமிழ்ப்பணியில் குறிப்பிடத்தக்கது 'அகராதி' அமைத்துத்தந்ததாகும். மேலும், இவர் தமிழ்நெடுங்கணக்கில் சில சீர்திருத்தங்களும் செய்துள்ளார். இவரது பரமார்த்தகுரு கதையானது தமிழில் முதலில் தோன்றிய தலையாய நகைச்சுவை இலக்கியமாகும். இவரது தமிழ் ஈடுபாடானது எழில் தமிழை மேல்நாட்டு முறையில் வளர்ச்சியுறச் செய்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

டாக்டர் வின்ஸ்லோ

டாக்டர் வின்ஸ்லோ என்ற அமெரிக்கர் புரோட்டெஸ்டாண்டு மதத்தைப் பரப்ப 19ஆம் நூற்றுண்டில் தமிழகத்திற்கு வந்தவர். தமிழ்நாட்டுப் பெரும்புலவர் சிலரைக் கொண்டு தமிழ்மொழியைப் பயின்று புலமைபெற்ருர். இவர் முப்பதாயிரம் சொற்கள் கொண்ட தமிழ் - ஆங்கில அகராதியைத் தொகுத்து உதவினுர்.

எல்லீசர்

சென்னை நகரத் தண்டல்நாயகமாக (Collector) வேலை பார்த்து வந்த எல்லீசர் சிறந்த தமிழ் அறிஞராக விளங்கினுர். இவர் திருக்குறளின் முதல் பதின்மூன்று அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் உரையெழுதினுர்.

டாக்டர் ஜி. யு. போப்

டாக்டர் ஜி யு. போப் என்பார் அமெரிக்க நாட்டில் வாணிபம் நடத்திவந்த ஓர் ஆங்கிலேயருடைய மகனுர். இவர் 1820ஆம் ஆண்டில் தோன்றினுர். நற்கல்வி பெற்றுக் கிறிஸ்துவப்பணி செய்ய 1839ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்தார். தமிழை முறையாகக் கற்ருர். திருக்குறளையும், திருவாசகத்தையும், நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தமிழின் பெருமையை மேல்நாட்டில் பரப்பினுர். சிவஞானபோதத்தையும் இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவர் இலக்கணத் துறையிலும் ஈடுபட்டு உரைநடையில் முதன்முதலில் இலக்கணத்தை ஆக்கித் தந்தார்.

நாற்பது ஆண்டுகள் தமிழ்நாட்டில் இருந்து தமிழ்த் தொண்டு புரிந்தார். திருக்குறளைப்பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும் உயர்வெண்ணங்கள் பல கொண்டிருந்தார். இவருடைய தமிழ்ப் பற்று அளவிடற்கரியது. எப்பொழுதும் ஒரு தமிழ்மாணவஞக இருக்கவும்—அவ்வாறு அழைக்கப் படவுமே இவர் விரும்பினுர்!

டாக்டர் கால்டுவெல்

டாக்டர் கால்டுவெல் என்பார் தமிழகத்தில் சமயத்தைப் பரப்பவந்த பன்மொழிப் புலவர். அப்புலமையினைத்

தென்னாட்டு மொழி ஆராய்ச்சியில் பயன்படுத்தி திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (The Comparative grammar of Dravidian Languages) என்ற அரிய நூலை ஆங்கில மொழியில் ஆக்கினார் அவரது ஆராய்ச்சியின் பயனால்தான் தமிழ்மொழியின் பல்வேறு சிறப்புக்கள் தெரியவந்தன. தமிழ், மலையாளம், கன்னடம், துளு. தெலுங்கு போன்ற திராவிட மொழிகள் ஓரினத்தைச் சார்ந்தவை என்றும் அவைகளில் தமிழே மிகத் தொன்மைவாய்ந்ததென்றும் சான்று பல காட்டி உண்மையை நிலைநாட்டியவர் இவரே.

மேலே குறிப்பிடப்பட்ட இவர்களேயன்றி இன்னும் எண்ணிறந்த மேல்நாட்டுப் பெரியார்கள் தமிழ்மொழிக்குப் பல்லாற்றாலும் தொண்டுபுரிந்துள்ளார்கள்.

ii தமிழ்நாட்டுக் கிறிஸ்துவர்

கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த நம் நாட்டுப் பெரியார் களும் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் வாழ்விற்கும் அருந் தொண்டாற்றியுள்ளார்கள். வீரமாமுனிவர் காலத்தவரான அஃதோணிக்குட்டி அண்ணாவியார் என்பவர் யேசுபெருமான் மீது செந்தமிழ்ப்பாக்கள் பல பாடியுள்ளார். புலவர் கிருட்டிண பிள்ளை என்பவர் இரட்சணிய யாத்திரிகம் என்னும் காப்பியத்தை யேசுபெருமான் மீது பாடியுள்ளார். இந்நூல் யேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியை விளக்குகின்றது. கிறிஸ்துநாதர் தம் சீடர்களுக்குத் திருவிருந்து அளித்தது முதல் அவர் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்து, இவ்வுலகில் நாற்பது நாட்கள் இருந்து உயிர் தாங்கிய உடலோடு விண்ணகம் சென்றதுவரைக்கும் உள்ள வரலாற்றுச் செய்திகள் இந்நூலில் காணப்படு கின்றன.

யேசுபெருமான் செருசலேம் அருகில் இருக்கும் கெத்சமனே என்னும் தோட்டத்திற்குத் தம் பிதாவை நோக்கி வேண்டப்போகின்றார். அங்கு இருள் சூழ்ந்திருக்கின்றது. சிறிது நேரத்தில் அவ்விருளைப் போக்கும் பான்மதி தோன்றுகின்றது. இதை,

எண்ண ருங்குணத் தெம்பிரான் மனுவுரு வெடுத்திம்
மண்ணு ளோர்வினை தொலைத்தல்போன் மையிரு டொலைந்து
விண்ணி னோங்கிய வெண்மதி வியன்கதி கூட்டும்
புண்ணி யம்மெனத் தண்ணிலாத் தாரைகள் பொழிந்த

என்ற பாடல் உணர்த்துகின்றது. நம் பாவத்தைப் போக்க இறைவன் யேசுகிறிஸ்துவாகப் பிறந்ததைப்போல் இருளைத் தொலைக்க வெண்மதி தோன்றிற்றென்றும், முத்தியளிக்கும் புண்ணியத்தை ஒப்ப அந்நிலவின் கதிர்கள் பரவிற் றென்றும் இப்பாடல் நயமுறக் கூறுகின்றது.

பொல்லாத யூதர்கள் கிறிஸ்துநாதரைப் பிடித்து அடித்து ஆணிகள் கொண்டு அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அந்நேரத்தும் அந்தக் கொடிய யூதர்களுக் காக உயிர்களின் தலைவர் பிதாவினிடத்து வேண்டியதை,

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல்

என்ற அரிய பாட்டு அறிவிக்கின்றது.

இந்நூலில் காணும் பாடல்கள் நல்ல இலக்கிய நயம் செறிந்தவை; யேசுகிறிஸ்துவின் அரிய பாடுகளை உள்ளம் உருக உரைப்பவை.

வேதநாயக சாஸ்திரியார் என்பவர் யேசுநாதரைத் தலைவராகக்கொண்டு பெத்லகேம் குறவஞ்சி என்னும் நூலை இயற்றியுள்ளார். நல்லூர் ஞானப்பிரகாச அடிகளார் மொழி ஆராய்ச்சித் துறையில் சிறந்து விளங்கினர். சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதி, தமிழ்ச் சொற்பிறப்பு ஆராய்ச்சி போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

வேதநாயகம் பிள்ளை

நம் நாட்டுக் கிறிஸ்துவத் தமிழ்த்தொண்டர்களில் தலை சிறந்து விளங்குபவர் வேதநாயகம் பிள்ளையாவார். இவர் திருச்சிராப்பள்ளிக்கு அண்மையிலுள்ள குளத்தூரில்

1826ஆம் ஆண்டு அக்டோபர் 14ஆம் நாள் தோன்றினர். இளமையிலிருந்தே தமிழையும் ஆங்கிலத்தையும் நன்கு கற்று, சிறந்த புலமைபெற்றார். இவர் திருச்சிராப்பள்ளி வழக்கு மன்றமொன்றில் பதிவுப் பொறுப்பாளராகவும் (Record Keeper), பிறகு முறைமன்றத் தலைவராகவும் விளங்கினர் தரங்கம்பாடியிலும், சீர்காழியிலும், திருமயிலாடுதுறையிலும் (மாயூரம்) முறைமன்றத் தலைவராகப் பல்லாண்டு வேலைபார்த்தார்.

இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடன் நெருங்கிய நட்புக்கொண்டிருந்தார். தாம் இயற்றிய நீதிநூலை அவரைக்கொண்டு அரங்கேற்றினர். பெண்களின் பெருமையைக் கூற எண்ணிப் பெண்மதி மாலை என்னும் அரிய நூலை வெளியிட்டார். பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம், ஆகிய இரண்டும் இவருடைய புதினங்கள் (நாவல்). பிரதாப முதலியார் சரித்திரம் தமிழ்மொழியில் முதன்முதல் தோன்றிய சீரிய நாவலாகும். இதன்கண் வாழ்விற்குத் தேவையான பல கருத்துக்களை நகைச்சுவை தோன்ற எடுத்துக் கூறியுள்ளார். இப்புதினந்தான் தற்காலத் தமிழ்ப் புதின ஆசிரியர்கட்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தது. இவர் தேவமாதா அந்தாதி, திருவருள் அந்தாதி, திருவருள் மாலை, பெரியநாயகி அம்மாள் பதிகம் போன்ற சிற்றிலக்கியங்களையும் செய்துள்ளார். இவரது இசை ஈடுபாட்டை இவர் தம் சத்தியவேதக் கீர்த்தனை, சருவசமய சமரசக் கீர்த்தனை முதலிய நூல்களால் நாம் அறியலாம் இவர் செய்திருக்கும் பணி பெரிது. இன்னும் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார். உரைநடைக்கும், புதினத்திற்கும், இசைத் தமிழிற்கும் இவர் செய்திருக்கும் தொண்டைத் தமிழகம் என்றும் மறக்காமல் போற்றக் கடமைப்பட்டுள்ளது.

மேல்நாட்டுக் கிறிஸ்துவப் பெரியார்களும், தமிழகத்து கிறிஸ்துவப் புலவர்களும் மற்றைய சமயப் பெரியார்களைப் போல் தமிழ்மொழிக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளார்கள். மேல்நாட்டுக் கிறிஸ்துவத் தமிழ்த் தொண்டர்களால்தான் தமிழ்மொழியின் பெருமை உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

23. இசுலாமிய இலக்கியங்கள்

நற்றமிழ்நாட்டில் நபிநாயகத்தின் நன்னெறி

அரபுநாட்டு மக்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் வாணிபத்தின்பொருட்டு மிகத் தொன்மையான காலத்தி லிருந்தே தொடர்பு இருந்துவந்திருக்கின்றது. கி. மு. 178ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு வந்த கிரேக்கப் பயணி தமிழகத்தில் சபேயியா (Sabaea) என்ற ஊரில் அரபியர் கட்கு மிகுந்த செல்வாக்கு இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். கி. பி 7ஆம் நூற்றாண்டில் அரபியாவில் அற ஒளியாகிய முகமதுநபிகள் தோன்றினார்கள். அவர்களின் அருமைத் தோழர்களாகிய தமீம் அன்சாரி என்பவரும் உக்காசா சகாபி என்பவரும் தமிழகத்திற்கு வந்து முகமதுநபிகள் காட்டிய கடவுள் நெறியைப் பரப்பினார்கள். அக்காலம் துடங்கி இசுலாமிய சமயப் பெரியார்கள் பலர் தமிழகத்திற்கு வந்து சமயத்தைப் பரப்பினர். கி. பி. 13ஆம் நூற்றாண்டில் எகிப்து மன்னனுடைய கொடுமைக்கு அஞ்சிப் பல அரபிக் குடும்பங்கள் கடல் கடந்து வந்து தமிழகத்துக் காயல் பட்டினத்தில் குடியேறின. பாண்டியநாட்டை ஆண்டு வந்த சுந்தர பாண்டிய தேவன் அவர்களை அன்புடன் வரவேற்று ஆதரவு நல்கினான்

முசுலிம் பெருமக்கள் மூவேந்தர்களுக்கு மெய்ப்பாது காவலர்களாகவும், குதிரைப்படை வீரர்களாகவும், தளபதி களாகவும் விளங்கினார்கள். கி. பி. 1300 இல் தென்னகம் நோக்கிப் படையெடுத்துவந்த அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூர், வீரபாண்டியனின் முசுலிம் படைத் தளபதியைத் தன்னோடு சேர்ந்து பாண்டியனைப் புறமுதுகிடச்செய்ய உறுதுணை புரியவேண்டும் என்று வேண்டிக்கொண்ட காலத்து, "தமிழகம் எங்கள் தாய்; நாங்கள் அவளின் சேய்கள்" என்று முழங்கி பாண்டியன் தளபதி மாலிக்காபூரை நாணச்செய்தானாம். எனவே, முசுலிம்மக்கள் தமிழகத்தையும், தமிழ் மொழியையும் தங்களுடையவை யாகவே கருதிப் போற்றினர் என்பது எவரும் ஒத்துக் கொள்ளும் உண்மை.

அரபிமக்கள் தமிழ்மக்களோடு கலந்து வாழ்ந்ததால் பல அரபி, பார்ஸி, உருதுமொழிகளின் சொற்கள் தமிழ் மொழியோடு கலந்து காணப்படுகின்றன அசல், கஜானா, ஜாமீன், ஜில்லா, தாலூகா, முன்சீப், வக்கீல், மாகூல், வசூல் போன்ற நானூறுக்கும் மேற்பட்ட சொற்கள் நம்மொழிச் சொற்களோடு கலந்துவிட்டன.

தமிழ்த் தொண்டு

இசுலாமியர்கள் தமிழ்மொழியை வளப்படுத்தக் கருதி தங்கள் மதப்பெரியார்களின் வரலாறுகளைக் காப்பியங்களாகக் கன்னித்தமிழில் பாடினர். மேலும், சீறாப்புராணம் திருக்காரணப் புராணம் போன்ற புராணங்களையும், மக்காக் கலம்பகம், மதீனக் கலம்பகம் போன்ற கலம்பகங்களையும், நாகையந்தாதி, திருமதீனத்தந்தாதி போன்ற அந்தாதிகளையும், சந்தத் திருப்புகழ், நவரத்தினத் திருப்புகழ் போன்ற திருப்புகழ்களையும், நபிநாயகம் பிள்ளைத்தமிழ், நாகூர் பிள்ளைத்தமிழ் போன்ற பிள்ளைத்தமிழ் நூல்களையும், நவமணி மாலை, திருமணி மாலை போன்ற மாலைகளையும், இன்னும் பல்வேறுபட்ட இலக்கியப் படைப்புக்களையும் படைத்திருக்கின்றார்கள். அம்மானை பலவும், சிந்து பலவும், கும்மி கோவைகள் பலவும், நாடகம் பலவும், ஞானப் பாடல்கள் பலவும் செந்தமிழ் மொழியில் செய்து தந்திருக்கின்றனர்.

சிந்தையள்ளும் சீறாப்புராணம்

இவர்களின் பேரிலக்கியங்களில் பெருமைக்குரியதாக இருப்பது சீறாப்புராணமாகும். இதை இயற்றியவர் உமறுப் புலவராவார். இவர் கி. பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறங்கியவர். இளமையிலிருந்து தமிழ் மொழியை முறையாகக் கற்றார். பிறகு எட்டையாபுரத்து சமத்தானப் புலவராகிய கடிகைமுத்துப் புலவரின் மாணவராகி அருந்தமிழ் நூல்களைப் பாடங்கேட்டார். நான்காண்டுகள் இலக்கண-இலக்கியங்களை வரன்முறையாகப் பயின்று சிறந்த புலமை பெற்றார்.

இவரது பேராற்றலால் இவரின் ஆசிரியருக்குப்பின் இவரே எட்டையாபுரத்து அரசவைப் புலவராக விளங்கினர். இவர் நபிநாயகத்தின் அருள் பெற்றுச் சீருப் புராணத்தைப் பாடத் தலைப்பட்டார். இதைப் பாடுவதற்குப் பெரிதும் தூண்டுகோலாய் இருந்தவர் வள்ளலாகிய சீதக்காதி மரைக்காயர் ஆவார். இந்நூல் அரங்கேற்றம் ஆவதற்குமுன் மரைக்காயர் இறைவனது திருவடி எய்தியதனல் அவரின் அன்பு நண்பராகிய அப்துல் மரைக்காயர் முன்னிலையில் சீருப்புராணத்தை அரங்கேற்றினர்.

இச்சீருப்புராணம் இறைவழிகாட்ட வந்த முகமது நபி நாயகம் அவர்களின் வரலாற்றை வண்ணமுறத் தண்டமிழில் வகைப்படுத்திக் கூறுவதாகும். "திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்ச் சிறந்து" என்னும் இறை வணக்கத்துடன் தொடங்கி, நபிகள் அவர்களின் நற்றுணைத் துணையாகக் கொண்டவர்கள் என்னென்ன நற்பேறுகளைப் பெறுவார்கள் என்று எடுத்துரைத்து, பிறகு உலகத்தின் பல பகுதிகளிலும் தோன்றிய நபிமார்களை இந்நூலில் உமறுப் புலவர் நலமுற வாழ்த்துகின்றார். அப்பால் அல்லாவின் இறுதித் தூதுவராகிய நபியவர்கள் பிறந்த அரபு நாட்டின் அருமையினை எழில்பட எடுத்து இயம்புகின்றார். இப்பகுதியில் உமறுப் புலவரின் தமிழ்ப்பற்று நீலவானத்துக் கோலமதிபோல் சாலச் சிறந்து விளங்குகின்றது அரபு நாட்டைத் தமிழ்நாடாகவே காட்டுகின்றார்.

அங்கு மலைகளில் மழையானது பெய்ய, அதனல் பெருக்கெடுத்த வெள்ளம் பல பொருள்களையும் அடித்துக்கொண்டு இழிந்தோடுவதானது விலைமாதொருத்தி மன்னன் ஒருவனைச் சார்ந்து மயக்கி அவனிடமிருந்து பொன்னையும், பொருளையும், மணியையும், மாபெரும் முத்துக்களையும் 'சுருட்டிக்'கொண்டு அவனை விட்டோடுவதைப்போல் இருக்கின்றதாக விளம்புகின்றார்.

மலையெனும் அரசன் புயங்களைத் தழுவி
மகிழ்ச்சி செய்து அவனுழைச் சிறந்த
நிலைகெழு பொன்னும் முரசுசெம் மணியும்
நித்தில ராசியுங் கவர்ந்து
தொலைவிலாப் பண்டம் அனைத்தையும் வாரிச்
சுருட்டியே எல்லைவிட் டகலும்
விலைமகள் போன்று பலபல முகமாய்
வெள்ளருவித் திரள் சாயும்

கோசல நாட்டில் ஓடும் சரயுநதியைக் கம்பன் கற்பனை நயந் தோன்றக் காட்டுவதுபோல் அரபு நாட்டில் ஓடும் இந்நதியையும் இவர் அழகு பல பொருந்தக் காட்டுவது இலக்கியச் சுவை ஊட்டுவதாக இருக்கின்றது.

காப்பிய நலன்கள் பலவும், கருத்துச் செறிவுகள் பலவும், கற்பனைக் கவின்கள் பலவும், கன்னித் தமிழழகு பலவும் கொண்டிலங்கும் செய்யுட்கள் இந்நூலில் 4969 காணப்படுகின்றன. இது சபை அலங்காரப் படலத்துடன் தொடங்கி உறணிக்கூட்டத்தார் படலத்துடன் முடிவடைகின்றது. உறுதிப் பொருள்கள் நான்கும் நவிலும் நன்னூலாய், நற்றமிழ் இலக்கியப் பேழையாய், நல்லோருள்ளத்தே தள்ளா இடம் பெற்று விளங்குகின்றது.

செய்குதம்பிப் பாவலர்

முசுலிம் புலவர்கள் பட்டியலில் சேகனுப் புலவர், காசிம் புலவர், ஆலிம்புலவர், ஜவ்வாதுப் புலவர் போன்றவர்கள் மக்களுள்ளத்தே மறையாப் புகழுற்று விளங்குகின்றனர். 20ஆம் நூற்றாண்டில் இருந்து மறைந்த இசுலாமியப் பெரும் புலவர் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் ஆவார். இவர் நாஞ்சில்நாட்டில் கோட்டாற்றை அடுத்த இலங்கடை என்னும சிற்றூரில் பிறந்தவர். இவர் அவ்வூர்ச் சங்கரநாராயணர் என்னும் புலவரிடம் மாணவராக இருந்து தமிழிலக்கண, இலக்கியங்களை முறையாகக் கற்றுக் கரைகண்டார். இவர் சம்சுத்தாசீம் கோவையையும், நாகைக் கோவையையும், கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழையும், திருநாகூர் திரிபந்தாதியையும், திருக்கோட்டாற்றுப்

பதிற்றுப்பத்தந்தாதியையும் பாடிப் பைந்தமிழ்ச் சீர் பரவி யிருக்கின்ருர். இன்னும் கீழக்கரையில் வாழ்ந்த கல்வத்து நாயகமென்னும் அருளாளர்மீது கல்வத்து நாயகம் இன்னிசை மாலை என்ற ஒன்றையும் பாடியுள்ளார். இதில் கல்வத்து நாயகத்தின் அருள்வேண்டி பல அடியார்கள் சங்கிலித் தொடர்போன்று நிற்கத் தான்மட்டும் கக்கிவிட்ட வெற்றிலைபோன்று வீதியிலே கிடப்பதாகப் பாடுகின்ற பாடல் இவரது பாவன்மையைப் பாங்குறக் காட்டுகின்றது.

கொக்கி விட்ட சங்கிலிபோல்
கூண்டெழுந்து நும்மடியார்
சொக்கிவிட்ட நல்லருட்கே
தோய்ந்துநின்ருர் அந்தோநான்
உக்கிவிட்ட நெஞ்சினனுய்
உள்ளுடைந்து மெய்ம்மயங்கி
கக்கிவிட்ட தம்பலொத்தேன்
கல்வத்து நாயகமே.

இவர் அவதானம் செய்யும் திறம்பெற்று விளங்கினுர். பற்பல ஊர்களுக்குச் சென்று பாமாரியும், சொன்மாரியும் பொழிந்தார். பல்லோரும் வியக்கப் பாவலராக விளங்கிய இவர் 1959ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் நாள் திங்கட்கிழமை தம்முடைய 74வது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவ்வமயம் இவரது இழப்பைப் பொறுக்க முடியாத கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்,

ஓரவதானம் ஒருநூறு செய்திர்தப்
பாரில் புகழ்படைத்த பண்டிதனைச்—சீரிய
செந்தமிழ்ச் செல்வனைச் செய்குதம்பிப் பாவலனை
எந்நாள் காண்போம் இனி

என்று இரங்கி இசைத்தார்.

பல்வேறு காலங்களில் தோன்றிய முசுலிம் நல்லிசைப் புலவர்கள் தொல்லிசைத் தமிழ்த்தாய்க்குச் செய்திருக்கும் தொண்டு,பல்லிசைப் பாக்களால் பைந்தமிழைப் பதப்படுத்தி இருக்கும் பாங்கு எல்லோருள்ளங்களையும் இனிது பிணிக்கக் கூடியவை. இவர்கள் இயற்றிய இசுலாமிய இலக்கியங்கள் எழில்தமிழ் இலக்கியப் பொழிலில் பொலிவுடன் ஒளிரும் நளிவுறு மலர்கள்.

24. பெருமைக்குரிய நாடகப் பிரபந்தங்கள்

சிலப்பதிகாரம், சூளாமணி, சிந்தாமணி, வளையாபதி போன்ற பெருங்காப்பியங்களில் இசையோடுகூடிப் பாடுவதற்கான வரிப்பாடல்கள் வந்துள்ளன. நாயன்மாரும், ஆழ்வாராதியரும் அருளிய அருட்பாசுரங்களிலும் 'வரிப் பாடல்' அமைப்புடைய பண்களைப் பார்க்கின்றோம். சித்தர் பாடல்களும், இராமலிங்க அடிகள் பாடல்களும் இவ் வியல்பைக் கொண்டே இலங்குகின்றன. இவைகளெல்லாம் தனித்தனி வரிப்பாடல்களும், அவ்வமைப்புங் கொண்டவைகளேயன்றி கதையைத் தழுவி வரப்பெற்றவையல்ல. இடைக் காலத்தில் கதையைத் தழுவி வந்த இலக்கியங்களுள் சில எளிய பாடல்களையுங் கொண்டு எழுந்தன. அவை இராச ராச நாடகம், புலியூர் நாடகம் போன்றவையாகும். பிற்காலத்தில் பாமரமக்கள் பாடியாடுதற்கு ஏற்றனவாய் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் என்ற மூவகை நாடகப் பிரபந்தங்கள் தோன்றின. இவை தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கதைபோல் அமைத்துக் கூறுவன.

பள்ளில், பள்ளரும் பள்ளியரும் பண்ணைக்காரனும் முக்கிய பாத்திரங்கள். குறவஞ்சியில் ஒரு கவின்மிகு தலைவியும், குறவனும், குறத்தியும் தேவையான சிறப்புறு உறுப்பினர்கள். நொண்டி நாடகத்தில் நொண்டியொருவனே இடம்பெற்றுத் திறம்பட நடிப்பான். நொண்டி நாடகங்களில் மிகச் சிறந்தது மதுரகவிராயர் செய்த திருக்கச்சூர் நொண்டி நாடகமாகும். இது 18ஆம் நூற்றாண்டில் தோன்றியது.

பள்ளு—விளக்கம்

பள்ளுப் பிரபந்தத்திற்குரிய இலக்கணம் பிரபந்த இலக்கண நூல்களில் காணப்படவில்லை. பன்னிருபாட்டியலில் உழத்திப் பாட்டிற்குரிய இலக்கணமே காணப்படுகின்றது. ஆனால் இதைக்கொண்டு உழத்திப் பாட்டினின்றும் பள்ளுப்

பாட்டு தோன்றிற்றென்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் உழத்திப்பாட்டு பள்ளினின்றும் வேறானதாகத் தெரிகின்றது. 17ஆம் நூற்றாண்டிலிருந்துதான் பள்ளுப் பிரபந்தங்கள் தோன்றியிருக்கவேண்டும். நாயக்கர்கள் காலத்தில் கவிவாணர்கள் புதிய முறையில் இலக்கியங்கள் படைக்க முற்பட்டனர். அவ்விலக்கியங்களுககுப் பொது மக்களையும், அவர்களுடைய வாழ்க்கை முறைகளையும் உரிய பொருள்களாகக் கொண்டனர்.

பள்ளுப் பிரபந்தத்திற்குரிய உறுப்புக்கள் பல உள. கோவை முதலிய பிரபந்தங்கள்போலவே பாட்டுடைத் தலைவன் பெயர்மட்டுமே கூறப்படும். உறுப்பினர்களுக் குரிய பெயர்கள் உரைக்கப்படமாட்டா. பள்ளியருள் மூத்தவள் பாட்டுடைத் தலைவனது ஊர் அல்லது நாட்டின் பெயரைச் சார்த்தியும் இளையவள் அயலூர் அல்லது நாட்டின் பெயரைச் சார்த்தியும், வழங்கப்படுவர். இவ்விருவருள் ஒருத்தி சிவனடியாள்; மற்றவள் விஷ்ணுவின் அடியாள். வைணவப் பள்ளாகிய முக்கூடற் பள்ளில் இம் மூவரும் முறையே அழகக்குடும்பன், முக்கூடற் பள்ளி, மருதூர்ப் பள்ளி என்று பெயர்பெறுகின்றார்கள். சைவப் பள்ளாகிய திருவாரூர்ப் பள்ளில் வன்மீகப் பள்ளன், வன்மீகப் பள்ளி, சீரங்கப் பள்ளி என்று பெயர்பெறுவர். பிற பள்ளுப் பிரபந்தங்களுக்கும் இவ்வியல்புகளே பொருந்தும்.

முக்கூடற்பள்ளு

18ஆம் நூற்றாண்டில் தோன்றிய முக்கூடற்பள்ளு மற்றைய பள்ளுப் பாட்டுக்களைவிட பல்வகைச் சிறப்புடையதாகும். இதைச் செய்த ஆசிரியர் பெயர் இன்று நமக்குத் தெரியாது மறைந்தது வியப்பாக இருக்கின்றது. எனினும் அவரை முக்கூடற்பள்ளாசிரியர் என்று அழைத்து நாம் மகிழ்கின்றோம்.

கதைப்போக்கு

சிறப்புமிக்க ஒரு பண்ணையில் அழகக்குடும்பன் என்பான் பயிர்த்தொழில் செய்துவருகின்றான். அவனுக்கு முக்கூடற் பள்ளி, மருதூர்ப் பள்ளியென இருமனைவியர் உளர்.

இளையவளாகிய மருதூர்ப் பள்ளியின் மோகத்தில் பள்ளன் இடைவிடாது மூழ்கிக் கிடக்கின்றான். இந்நிலையில் மழை பெய்து ஆற்றுநீர் வருகின்றது. அழகக்குடும்பன் வேலையை மறந்திருக்கின்றான். மூத்தவள் பண்ணைக்கார னிடம் முறையிடுகின்றாள். பள்ளனைப் பண்ணைக்காரன் கடிந்துரைத்து இறுதியில் தொழுவில் மாட்டுகின்றான். மூத்தவள் பள்ளன்மேல் இரக்கங்கொண்டு அவனை விடு விக்க ஏற்பாடு செய்கின்றாள். அவன் சென்று உழுகின்ற பொழுது மாடு முட்டுகின்றது; அவன் மயங்கி விழுகின்றான். பள்ளியர் வருந்துகின்றனர். இறுதியில் பயிர் விளைய அதிக நெல்லை இளைய பள்ளிக்குக் கொடுத்துவிட்டா னென்று மூத்தவள் முறையிட இருவரிடை ஏசல் மூளு கின்றது. முடிவாகப் பள்ளியர் இருவரும் சமாதானமாகிப் பள்ளனோடு ஒத்து வாழ்கின்றார்கள்.

சிறப்புச் செய்திகள்

இந்நூல் முதலில் கடவுள்வணக்கத்தோடு தொடங்கு கின்றது. பிறகு பள்ளியர் வரவு கூறப்படுகின்றது. முக் கூடற் பள்ளி நெற்றியில் குங்குமத்தால் பொட்டிட்டு இருக் கிறாள். மற்றொரு திருநாமப் பொட்டும் திகழ்கின்றது. கொண்டை இரண்டாய் வகுக்கப்பட்டு வனப்புடன் விளங்கு கின்றது. கையில் கரும் பொற்காப்பும், வாயில் வெற்றிலை பாக்கும் கொண்டவளாய்த் தோன்றுகின்றாள். அவளை யடுத்து இளையவளாகிய மருதூர்ப் பள்ளி மையுண்ட கண் களிரண்டும் கெண்டைகள்போல் துள்ளக் கொள்ளையழ குடன் தோன்றுகின்றாள். அடுத்தாற்போல் பள்ளன் கருங் கிடாய் மருப்புப்போல் முறுக்கு மீசையுடன் வரவு தரு கின்றான். இப்பகுதிகளெல்லாம் இசைப் பாக்களால் எழில் பெற்று இனிக்கின்றன. நாட்டுவளம், நகர்வளம் பேசிய பிறகு மழைக்குறி குறிப்பிடப்படுகின்றது.

ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி – மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே

நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக் குதே—கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடு குதே
சேற்று நண்டு சேற்றைக் குழைத்
தேற்றடைக் குதே—மழை
தேடி யொரு கோடி வானம்
பாடி யாடுதே
போற்று திரு மாலழகர்க்
கேற்றமாம் பண்ணைச்—சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்
துள்ளிக் கொள்வோமே.

அதற்கப்பால் ஆற்று வெள்ளப் போக்கும், பண்ணைக் காரன் வரவும், மூத்த பள்ளி முறையீடும், பள்ளியர் ஏசலும் சிறந்த பகுதிகளாக அமைந்துள்ளன.

பள்ளியர் ஏசல் நல்ல நகைச்சுவைப் பகுதியாகும். இளைய பள்ளி மூத்த பள்ளியைப் பார்த்து,

தொண்டை கட்டக் கூப்பிடாதே
கூப்பிட்டென்னை—வைது
சொன்ன பேச்சை பண்ணையார்க்குச்
சொல்லுவே னடி

என்கின்ருள். அதற்கு மூத்த பள்ளி,

சொன்னுலெனக் கென்ன பயம்
மருதூர்ப்பள்ளி—சென்று
சொல்லி லுன்கால் சலியாது
சொல்லடி போடி

என்கின்ருள். அதற்கு இளையவள்,

என்னுலேயா காததுண்டோ
முக்கூடற்பள்ளி—பள்ளன்
இங்குவந்தா லுன்சலுகை
யெல்லாந் தெரியும்

என்கின்ருள். அதற்கு மூத்தவள்,

சலுகையில் லாமலென்ன
மருதூர்ப்பள்ளி—நானும்
தன்னூர்விட் டுனைப்போல் ஓட்டுச்
சார்பில் வந்தேனோ

என்கின்றாள். அதற்கு இளையவள்,

வலுச்சலுகை பேசாதேநீ
முக்கூடற்பள்ளி—உன்போல்
வழக்கிட்டுக் கணக்கிட்டு
வந்தேனோ போடி

என்கின்றாள். இந்த அளவுக்குச் சொல் 'தடித்த' பிறகு இனி ஏசலுக்கு அளவேது?

இந்நூலில் ஒன்பான் சுவைகள் வகைவகையாக வளத்துடன் வண்ணப் பாக்களில் பின்னிக்கிடக்கின்றன. பாமரமக்கள் படித்தும், நடித்தும், பார்த்தும், கேட்டும் மகிழ்தற்குரிய எளிய இலக்கியந்தான் முக்கூடற்பள்ளு. பள்ளியரின் ஏசலும், பள்ளியரின் காதல் விளையாட்டும் பல்சுவைகளை அள்ளித்தருகின்றன.

முக்கூடற்பள்ளைத் தவிர ஏறத்தாழ நாற்பது பள்ளுப் பிரபந்தங்கள் தமிழ்மொழியில் தோன்றியுள்ளன. அவைகளில் ஞானப் பளளு, வடகரைப் பள்ளு, சீர்காழிப் பள்ளு தில்லைப் பள்ளு முதலியன குறிப்பிடத்தக்கவை. தமிழ் மக்கள் இவற்றையெல்லாம் படித்துப் பயன்பெறல் வேண்டும். இவையெல்லாம் நம் இலக்கியத்தின் வளத்தைப் பெருக்கிப் பெருமைப்படுத்தியுள்ளன.

குற்றாலக் குறவஞ்சி

குற்றாலக் குறவஞ்சி மற்றொருவகை நாடகப் பிரபந்தம். இந்நூல் குறவஞ்சிப் பிரபந்தங்களில் மிகச் சிறந்தது. முன்காலத்தில் குறத்தி குறிகூறுதலைக் குறிப்பிடுகின்ற குறத்திப்பாட்டு என்றொன்று இருந்திருக்கின்றது. இதற்குரிய இலக்கணம் பன்னிருபாட்டியலில் காணப்படுகின்றது. குறத்திப்பாட்டை ஒட்டிக் கலம்பகத்துள் குறம் என்ற ஒரு செய்யுள் இடம்பெற்றது. இதன் அடிப்படையில் பிற்காலத்

தில் குறம் என்ற வேறு ஒருவகை நூல் தோன்றிற்று. குமர குருபர சுவாமிகள் செய்த மீனாட்சியம்மை குறம் இதற்கு எடுத்துக்காட்டாகும். இக்குறத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பிற்காலத்துப் புலவர்கள் குறத்தி குறி கூறுவதை ஒரு நாடகமாக்கிவிட்டனர்.

சிறப்பு

குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். இவர் குற்றாலத் தலத்தைப்பற்றிப் பதினான்கு பிரபந்தங்களும், ஒரு புராணமும் பாடியுள்ளார். இவர் செய்துள்ள பிரபந்தங்களில் மிகச் சிறந்தது குற்றாலக் குறவஞ்சியாகும். "இப்பொழுதுள்ள குறவஞ்சிகளில் மிகவும் சிறந்தது திருக்குற்றாலக் குறவஞ்சியாகும்; அதனைப் பின்பற்றிப் பல குறவஞ்சிகள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன" என்று டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் திருக்குற்றாலச் சிலேடை வெண்பா முகவுரையில் குறித்துள்ளார்கள்.

செய்திகள்

திருக்குற்றாலநாதர் பவனி வருகின்றார். வசந்தவல்லி என்பாள் அவரைக் கண்டு காதல்கொண்டு கலங்குகின்றாள். அவளுடைய தோழியர் வந்து அவளது நொந்த உள்ளத்திற்கு ஆறுதல் கூறுகின்றனர்; அவளோ அலமந்து ஒரு தோழியைத் தலைவன்பால் தூதனுப்புகின்றாள். அதற்கடுத்தாற்போல் ஒரு குறத்தி மலைவளம், நாட்டு வளம் கூறிக்கொண்டுவந்து தலைவிக்குக் குறி கூறுகின்றாள். இறுதியில் தலைவி குறத்திக்குப் பலவகைப் பொருள் கொடுத்து அனுப்புகின்றாள்.

முதலில் திரிகூடநாதர் உலாவருதலைக் கட்டியக்காரன் கூறுகின்றான். உடனே உலாவருந் தலைவனைக் காண ஒண்டொடியர் திரண்டு வருகின்றனர். இதை,

> ஒருமானைப் பிடித்துவந்த பெருமானைத்
> தொடர்ந்துவரும்
> ஒருகோடி மான்கள்போல் வருகோடி மடவர்

என்கின்ருர். பந்து விளையாடிக்கொண்டிருக்கும் வசந்த வல்லி திரிகூடநாதரைக் காணுகின்ருள்; மயங்குகின்ருள்.

அரிக்கண் பார்வையாலென் அங்கம் தங்கமாக
உருக்கிப் போட்டார் கண்டவுடனே தான்

என்கின்ருள். வெண்ணிலாகூட அவளுக்கு வெப்பத்தை நல்குகின்றதாம்.

தண்ணமுதுடன் பிறந்தாய் வெண்ணிலாவே-அந்தத்
தண்ணளியை ஏன் மறந்தாய் வெண்ணிலாவே
பெண்ணுடன் பிறந்ததுண்டோ வெண்ணிலாவே-என்றன்
பெண்மை கண்டும் காயலாமோ வெண்ணிலாவே.

இவ்வாறு தலைவி வருந்த, தோழி ஒருத்தி தலைவனிடம் தூது செல்லுகின்ருள். அவ்வமயம் குறத்தி ஒருத்தி வருகின்ருள். அவள் மலைவளம் கூறுகின்ருள். வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சுமாம். மந்திசிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சுமாம். அவள் மலை வயிரமுடன் மாணிக்கம் விளையும் மலையாம். பிறகு வசந்த வல்லி குறிகேட்க குறத்தி சொல்லுகின்ருள். அதைக்கேட்டு வசந்தவல்லி நாண,

"நன்னகரில் ஈசருனை மேவவருவார்-இந்த
நாணமெல்லாம் நாளைநானுங் காணவேபோறேன்
கைந்நொடியிற் பொன்னிதழி மாலைவருங்காண்-இனிக்
கக்கத்தில் இடுக்குவையோ வெட்கத்தையம்மே"

என்கிருள் குறத்தி. பிறகு அவளுக்குப் பரிசளித்து அனுப்புகின்ருள் வசந்தவல்லி.

குற்ருலக் குறவஞ்சி அகச்சுவை ததும்பி வழியும் எழிலிலக்கியம். இசையின்பம் பெருக்கெடுத்து இனிக்கும் சொல்லடுக்குகள் மனத்தைப் பிணிக்கும். இவ்வரிய நாடகப் பிரபந்தத்தை நற்றமிழ் மக்கள் பற்றுக்கொண்டு கற்றுக் களிப்புற வேண்டும்.

25. வளமளித்த வல்லவர்கள்

தற்காலத்தில் தோன்றிய நற்றமிழ் அறிஞர் பலர் கவிதைகளாலும், கதைகளாலும், கட்டுரைகளாலும் நாடகங்களாலும், நல்ல பலமொழி பெயர்ப்பு நூல்களாலும் தமிழ் மொழிக்கு வளமளித்த வல்லவர்களாக, நலம் பயந்த நல்லவர்களாக விளங்குகின்றார்கள். அவர்களில் சிலரை இங்கறிவது சாலும்.

i. தாயுமான சுவாமிகள்

தாயுமான சுவாமிகள் என்பார் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்து வளமிகுந்த பாடல்கள் பாடி உலகோர்க்கு உள நலம் வழங்கினார். இவரின் தந்தை கேடிலியப்ப பிள்ளை என்பார் திரிசிரபுரத்து விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரின் கணக்கராகப் பணியாற்றிய காலத்து. தாயுமானவராகிய சிவனருளால் இவர் பிறந்ததால் இப்பெயர் பெற்றார். இளமையில் வடமொழி, தென் மொழிகளில் நல்ல புலமை பெற்றார். தந்தையார் இறந்த பிறகு அவர் பார்த்து வந்த வேலையையே இவர் மேற்கொண்டார். ஆனால், நீண்ட நாள் அவ் வேலையில் நிலைத்திருக்காது இராமநாதபுரம் சென்று தம் தமையனாரோடு வாழ்ந்து வந்தார். பிறகு திருமணம் நிகழ்ந்து தம் மனைவியோடு உறையுங்கால் மனைவி இறைவனடி சேர இவர் துறவு பூண்டு சைவசமயத்தின் சீரிய கருத்துக்களைச் செந்தமிழ்ப் பாக்களில் செறித்து வழங்கினார்.

பாக்கள்

இவரின் பாடல்களின் தொகுப்பு '**தாயுமான சுவாமிகள் பாடல்**' என்று பெயர்பெறும். ஆசையெனும் தலைப்பின் கீழ் நாற்பது பாடல்கள் பாடியுள்ளார். ஆசையென்பது பெருங்காற்றாம். இதற்காளாகிய மனம் இலவம்பஞ்சு போன்றதாம். மோசம் வருமாம் இதனாலே; கற்றதும், கேட்டதும் கழிந்திடுமாம். முத்தி கிட்டாதாம். ஆகவே, இறைவனை அடைதற்கு நமதாசை நம்மைவிட்டு ஓட

வேண்டும் என்கின்றார். சாட்டையானது பம்பரத்தைத் தன்னிட்டப்படி ஆட்டுவித்தல்போல் ஆண்டவன் நம்மை அவன் எண்ணப்படி இயங்கச்செய்கின்றானும். ஆகவே, அவனருளைப் பெறவேண்டும் நெஞ்சே என்கின்றார்.

சாட்டையில் பம்பர சாலம் போலெலாம்
ஆட்டுவான் இறையென அறிந்து நெஞ்சமே
தேட்டமொன் றறவருள் செயலில் நிற்றியேல்
வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே.

பராபரக் கண்ணி என்ற தலைப்பின்கீழ் முந்நூற்று எண்பத்தொன்பது கண்ணிகள் பாடியுள்ளார். ஒவ்வொன்றும் 'பராபரமே' என்ற சொற்றொடரைக் கொண்டு முடிகின்றது தாயுமானவரது நெஞ்சப்பாங்கை இப்பாக்கள் தெளிவாகத் தெரிவிக்கின்றன. இறைவன் அன்பின் உருவானவன்; இன்பத்தைப் பொழிபவன் என்பதை இவர்தம் பாக்கள் எங்கும் பரக்கப் பேசுகின்றன. இறைவனோடு ஒன்றித்த நிலையில்,

ஞாலத்தை மெய்யெனவே நம்பிநம்பி நாளுமென்றன்
காலத்தைப் போக்கியென்ன கண்டேன் பராபரமே

என்பதால் தெளிவிக்கின்றார்.

இவரின் 1452 பாடல்களும் வாடாமலர்களாய், கேடறுக்கும் படைகளாய், வீடடைய வழிகளாய் விளங்குகின்றன.

ii. இராமலிங்க அடிகளார்

திருவருட்பா பாடிய இராமலிங்க அடிகளார் 19ஆம் நூற்றாண்டில் பாவலர்த் திலகமாய்த் திகழ்ந்தவர். சமரச சுத்த சன்மார்க்கத்தை உலகில் பரப்ப முயன்றவர். உருவ வழிபாட்டை வெறுத்து ஒளிவழிபாட்டைப் போற்றியவர். கொல்லாமையை வலியுறுத்தி உயிர்களிடத்து அருள் சுரக்கப் பாடல் பாடியவர்.

இவர் தென்னாற்காடு மாவட்டத்தில் திகழ் மருதூரில் பிறந்தார். தில்லைக்கூத்தன்பால் எல்லையில்லா அன்பு

கொண்டு பாக்கள் பல பாடிப் பரவினர். இவரின் பாக்களனைத்தும் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவர் பாடல்களை இவருடைய மாணவர்கள் திருவருட்பா என்றழைத்தனர்.

திருவருட்பா

இறைவனைப் போற்றிய சைவத் திருநெறித் தலைவர் நால்வர்பால் இவர் கொண்டிருந்த அளப்பரும் பற்று பல பாடல்களில் பாங்குடன் விளங்குகின்றது. ஒருகடவுட் கொள்கை உடையவர் என்பதைச் "சிற்றம்பலத்தோனே கடவுளாம்" என்ற அடி தெரிவிக்கின்றது. இவர் தம்மையே தாழ்த்திக்கொள்ளும் இயல்பினர் என்பதைப் "புழுக்களிலும் கடையேன்" என்பதால் அறிகின்றோம். "உடுத்திலேன் என்பானுக்கும் உண்ணிலேன் என்பானுக்கும் கொடுத்திலேன்" என்று தம் செயலுக்காகத் தாமே வருந்துகின்றார். தம்மை முழுதும் இறைவனுக்கு உரிமையாக்கிவிட்டதால் "பாட்டுவித்தால் பாடுகின்றேன்; கூட்டுவித்தால் கூடுகின்றேன்; ஆட்டுவித்தால் ஆடுகின்றேன்" என்கின்றார். உலகில் எல்லோரும் ஒருதன்மையாய் இன்புற்றிருக்கவேண்டுமென்று எண்ணினர்; ஆகையால் "ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும். ஒற்றுமையுளராகி உலகியல் நடத்த வேண்டும்" என்று இறைவனை வேண்டுகின்றார்.

இவரின் பாடல்கள் தேன்போல் தித்திக்கும்; தென்றல் போல் மகிழ்வளிக்கும்; திங்கள்போல் குளிர்ச்சிதரும். இறைவனை நிழல்தரும் மரமாகவும், மரந்தரும் கனியாகவும், ஓடையில் ஓடும் நீராகவும், ஓரங்களில் மலர்ந்த மலராகவும், வீசுந்தென்றலாகவும் அது விளைவிக்கும் இன்பமாகவும், தம்மை மணந்துகொண்ட தலைவனாகவும் சொற்சுவையும் பொருட்சுவையும் அருட்சுவையும் பொருந்தப் பாடியுள்ளார்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண் ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே

மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே

இவ்வளவு இனிமை மிக்க பாக்களைக்கொண்டு விளங்கும் திருவருட்பா தமிழ் இலக்கிய வளர்ச்சியின் கொடுமுடியாய்த் திகழ்கின்றது. இதனாசிரியராகிய இராமலிங்க அடிகளார் கவிதை வெள்ளத்தால் மக்கள் உள்ளத்தைப் பள்ளமின்றி நிரப்பித் தெள்ளத் தெளிவாக இறையருளைப் பெரும் வழியைக் கள்ளமறுக்கும் பாக்களால் காட்டுகின்றார்.

iii. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

19ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த மற்றொரு புலவர் மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையாவார். இவர் திருவாங்கூர் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக விளங்கினார். இளமையிலிருந்தே தமிழிடத்து அன்பு பூண்டு கற்றுப் புலமைபெற்றார். தமிழில் சிறந்த நாடகங்கள் இல்லையென்ற ஒருபெருங்குறையைப் போக்கக்கருதி ஆங்கில ஆசிரியர் லிட்டன் பிரபு எழுதிய ‘இரகசிய வழி’ (Secret Way) என்ற நூலைத் தழுவி தமிழில் மனோன்மணீயம் என்னும் சிறந்த இலக்கிய நாடகத்தை உருவாக்கினார். இதில் சொற்சுவையும், பொருட்சுவையும் மலிந்திருப்பதோடு பல புதிய கருத்துக்களும் இடம்பெற்றிருக்கின்றன. இதனுடைய நடையும், கவிப்போக்கும், கதைப்போக்கும், காவிய உறுப்புக்களும் மிகுதியாகப் பழைய முறைகளையே தழுவி இருக்கின்றன.

மனோன்மணீயம்

இதில் பல பகுதிகள் நல்ல இலக்கியச் செறிவு நிறைந்தவைகளாக இருக்கின்றன. குறிப்பாக குடிலன் கூறும் நாஞ்சில்நாட்டு நல்வளம் கற்பனைக் கவினும், பற்பல அணியழகும் பொருந்திய பகுதியாக இருக்கின்றது. இதேபோல் நடராசனின் இயற்கை ஈடுபாட்டைத் தெரிவிக்கும் பகுதி இயற்கை எழிலை உயரோவியமாகக் காட்டவல்லதாய் உள்

ளது. மேலும், வாணியின் வாழ்க்கையிலும், மனோன்மணியின் வாழ்க்கையிலும் இன்பச் சுவையையும், துன்பச்சுவையையும் அள்ளியள்ளித் தருகின்றது. புருடோத்தமனின் கூற்றில் காணும் வெகுளிச் சுவையும், வீரச் சுவையும் நம்மையெல்லாம் கொள்ளைகொள்ளுகின்றன. எடுப்பார் கைப்பிள்ளையாகத்தோன்றும் ஜீவகவழுதியும் படைகளுக்கு உரைபகருங்கால் பாண்டியன் குடிக்குரிய திறன் தெரிய வீரத்தோடு பேசுவது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

பாத்திரப் படைப்பு

பாத்திரங்களைப் படைப்பதில் மனோன்மணீய ஆசிரியர் நல்ல வெற்றி கண்டிருக்கின்றார். குடிலனைச் சூழ்ச்சிமிக்கவனாகக் காட்டியிருப்பதும், வாணியையும் நடராசனையும் நம் மதிப்பைப் பெறுமளவிற்கு நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் படைத்திருப்பதும், புருடோத்தமனையும் மனோன்மணியையும் கருத்தொருமித்த காதலர்களாகப் பொருத்தி இருப்பதும், சுந்தரமுனிவரை நம் வணக்கத்திற்குரியவராக வடித்திருப்பதும், நாராயணனை நம் போற்றுதலுக்குப் பொருந்தியவனாகக் கூறியிருப்பதும், ஜீவகவழுதியை குடிலனுடைய நிழலாக ஆக்கியிருப்பதும் இவ்வாசிரியரது நாடக இலக்கியத் திறமையைப் பறைசாற்றுகின்றன.

இந் நாடகம் ஐந்து அங்கங்களையும், இருபது களங்களையுங் கொண்டு ஆசிரிய அடிகளால் ஆகித்திகழ்கின்றது. முத்தமிழ் வளர்ச்சியில் நாடகத்தமிழின் தற்கால நிலை மனோன்மணீயத்தால் கணிக்கப்படுகிறது. மேலைநாட்டு இலக்கியத் தொடர்பால் நம் மொழி நாடகத்துறையிலும் நல்வளம் பெற்றுள்ளதென்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும்.

iv. ஆறுமுகநாவலர்

ஆறுமுக நாவலர் 19ஆம் நூற்றாண்டில் தோன்றித் திகழ்ந்த சிறந்த தமிழ் உரைநடை ஆசிரியராவார். இவர் ஈழத்திலுள்ள யாழ்ப்பாணத்து நல்லூரைச் சார்ந்தவர். தமிழறிவைக் கல்வியின் வாயிலாகப் பரவச்செய்தற்குச் சிதம்

பரம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் கல்லூரிகள் ஏற்பட ஏற்பாடு செய்தார். சைவசமயத்தைப் பரப்புவதையும் தம் தலையாய பணிகளில் ஒன்ருகக் கொண்டார். சென்னையில் அச்சுயந்திரசாலையை நிறுவிப் பல தமிழ் நூல்களைப் பிழைபோக்கிப் பதிப்பித்து வெளியிட்டார். நல்ல உரைநடை நூல்கள் பலவும் இயற்றி மாணவர்களையும், மற்றையோரையும் தமிழ்பற்றுக் கொள்ளச் செய்தார். இவர் மொத்தம் எழுபது நூல்கள் வெளியிட்டதாகத் தெரியவருகின்றது. பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை, நன்னூல் காண்டிகை, சேனவரையம், கந்தபுராணம், சேதுபுராணம் முதலியன அச்சியற்றப் பட்டன. பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம் முதலிய நூல்கள் இவரால் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. இவர் பள்ளிச் சிறுவர்களுக்கான சில உரைநடைப் புத்தகங்களும் எழுதினர். அவற்றில் மிகச்சிறந்தது பாலபாடம் என்பதாகும். இவர் பாக்கள் இயற்றும் புலமைசான்றும் விளங்கினர். இவர் பாடியவையாகச் சில பிரபந்தங்களும், தனிப்பாடல்களும் காணப்படுகின்றன. அக்காலச் ' சித்தி விநாயக விருத்தம் ' இவரால் இயற்றப்பட்ட செய்யுள் நூலாகும்.

இவரை, "வசனநடை கைவந்த வல்லாளர்" என்கின்ருர் காலஞ்சென்ற வி. கோ. சூரியநாராயண சாத்திரியார். "நாவலரின் வசனம் இலக்கண முறைகளை அனுசரித்து ஒழுங்காக எழுதப்பட்ட நடையை உடையது; பொருளில் தற்காலப் பான்மை ஒன்றும் இல்லாவிட்டாலும் இவருடைய நடையின் எளிமை போற்றத்தக்கது" என்று தமது 'தற்காலத் தமிழ் இலக்கியம்' என்ற நூலில் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் எழுதுகின்ருர்.

இவர், பி. பெர்சிவல் (Rev. P. Percival) என்ற பாதிரியார் விவிலியநூலைத் தமிழில் மொழிபெயர்க்கப் பெரிதும் உதவினர். கிறிஸ்துவ சமய நூல்களைப்போல் வினவிடை முறையில் சைவ சமய நூல்களையும் இயற்றினர். அவற்றில் குறிப்பிடத்தக்கது சைவ வின விடையாகும். ஆங்கில முறையில் தமிழ் உரைநடையை வளர்த்துப் பைந்தமிழை வளப்படுத்திய வல்லவராவார் இவர்.

V. மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை

இவர் 19ஆம் நூற்றுண்டில் பெருமளவில் பாக்களி யற்றிப் பெருமை பெற்றவர். டாக்டர் உ. வே. சாமி நாதையரவர்கள் இவரின் மாணவராக இருந்து தமிழைப் பயின்ருர். மேலும், பல மாணவர்களுக்குத் தமிழறிவை ஊட்டியவர். இவர் நாளொன்றுக்கு முந்நூறு பாட்டுப் பாடும் பாவன்மை பெற்றிருந்ததால் பதிறு தலபுராணங் களைப் பாடியும், பத்துப் பிள்ளைத்தமிழ் நூல்களை ஆக்கியும், பதிறு அந்தாதிகளைப் படைத்தும், நான்கு மாலைகளை நயமுடன் தொடுத்தும், திருவிடைமருதூர் உலா, காழிக்கோவை முதலிய சிறுகாப்பியங்களைச் சமைத்தும் பிற்காலக் கம்பர் என விளங்கினுர். இவர் சித்திரக் கவிகளை யும் சித்திரித்ததோடு தனிப்பாடல்கள் பலவும் செய்தார். இவரின் தலபுராணங்களில் மிகச்சிறந்தது திருநாகைக் காரோணப்புராணம். இவரது சேக்கிழார் பிள்ளைத்தமிழ் மிகவும் பாராட்டற்குரியது. அதில் சேக்கிழாரை, "பத்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று பாடிப் பரவுகின்ருர்.

> தத்திப் புனல்வாய் குன்றைத் திருமுனி
> தாலோ தாலேலோ
> சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்
> தாலோ தாலேலோ

என்று தாலாட்டுப் பருவத்தில் தமிழ்ச்சுவை ஊறப் பாடுகின்ருர்.

இவருடைய காலத்தில் வாழ்ந்த புலவர்பெருமக்கள் வேதநாயகம் பிள்ளை, ஆறுமுகநாவலர் முதலியோராவர். வேதநாயகம் பிள்ளையவர்கள் பாடிய நீதிநூலுக்கு இவர் சாற்றுக்கவிகள் பல பாடிப் போற்றியிருக்கின்ருர். இவர் குமரகுருபர அடிகளது வரலாற்றையும், சிவஞான முனிவரது வரலாற்றையும் திறம்படத் தீஞ்சுவைச் செய்யுட்களில் செய்திருக்கின்ருர். குசேலோபாக்கியானம் இவரால் இயற்றப்பட்டது என்பர்.

இவர் சிலகாலம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குரிய பெரும்புலவராக விளங்கினர். அவ்வமயம் சாமிநாதையர் இவரிடம் கல்வி கற்றுப் புலமை பெற்றதால் இவர் இறந்த பிறகு நன்றி மறவாமல் இவரது புகழ் உலகிற்குத் தெரிய 'மீனாட்சிசுந்தரம் பிள்ளை வரலாறு' என்று உரைநடையில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். தமிழறிஞர் தியாகராசச் செட்டியாரும் பிள்ளையவர்களின் மாணவராவார். இவ்வாறு கவிமழை பொழிந்து புவி புகழ வாழ்ந்ததோடன்றித் தமிழ்ப் பேரறிஞர்களை உருவாக்கித் தமிழை உய்யச் செய்த பெருமையும் இவருக்குண்டு.

vi. சூரியநாராயண சாத்திரியார்

இவர் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞராவார். சென்னை கிறிஸ்துவக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கினர். இவர் வாழ்ந்த குறுகிய காலத்தில் தமிழ் மொழிக்குத் தொண்டு பலவகையில் ஆற்றி மேன்மையுற்றார். 1903 நவம்பர் இரண்டாம் நாள் இவர் இறந்த பொழுது இவருக்கு வயது முப்பத்துமூன்றுதான். 1892இல் பி. ஏ. பட்டம் பெற்றார். அதிலிருந்து பத்தாண்டுகள் அருந்தமிழ் வளர்ச்சிக்குப் பெரும் முயற்சி செய்தார்.

நூல்கள்

இவர் பெரும் புலவராகவும் நாடக ஆசிரியராகவும், வெளியீட்டாசிரியராகவும் விளங்கினர். நான்கு ஆண்டுகள் ஞானபோதினியின் துணை ஆசிரியராகப் பணியாற்றினர். அதன்மூலமாகத் தமிழின் பெருமையைப் பறைசாற்றினர். ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் என்னும் மூன்று நாடகங்களை இயற்றி நாடகத் தமிழ் வளத்தைப் பெருக்கினர். இவரது 'நாடக இயல்' என்ற நூல் நாடக இலக்கணத்தைக் கூறுவதாகும். இவரது 'பாவலர் விருந்து' என்னும் நூல் இவரின் பல்துறையறிவை நனிவிளக்கி நிற்பதாகும். மதிவாணன் என்னும் இவருடைய கதை மிகச் சிறந்த உரை நடையில் அமைந்து விளங்குகின்றது. இவரது "தமிழ் மொழியின் வரலாறு" மேனாட்டு ஆராய்ச்சி முறையில்

அமைந்து தமிழ்மொழியின் சிறப்பியல்புகளைத் தொகுத்துரைக்கின்றது. டாக்டர் போப், டாக்டர் மில்லர், பேராசிரியர் கெல்லட் போன்றவர்கள் இவர்தம் அறிவின் ஆழத்தையும், தமிழ்மொழித் திறமையையும் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

இவரது ஆங்கில அறிவு தமிழை ஆய, அரிய உண்மைகளை எடுத்தறிவிக்க உறுதுணைபுரிந்தது. மேலும், மேலை நாட்டறிஞர் தொடர்பும் இவரைத் தமிழ்ப் பணியில் ஊக்குவித்தது. இவர் கொண்ட தமிழ் ஈடுபாடானது சூரிய நாராயண சாத்திரியார் என்னும் இவரது வடமொழிப் பெயரைத் தமிழ்மொழியில் பரிதிமாற் கலைஞர் என மாற்றியமைக்குமாறு செய்தது. இவருடைய உரைநடை வளமும், மொழி ஆராய்ச்சி நுட்பமும், நாடகத் தமிழ் ஆர்வமும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உரங்களாக அமைந்தன. கற்பனைக் கதைகள் வரைவதிலும் இவர் காட்டிய முயற்சி போற்றற்குரியதாகும். இவ்வாறு, இவர் சீரிளமை குன்றாத முத்தமிழை வாழவைக்க வழிகண்ட நேரத்தில் இரக்கமில்லாக் காலன் இவரை வாழவைக்கவில்லை.

vii. டாக்டர் உ. வே. சாமிநாதையர்

இவர் 20ஆம் நூற்றாண்டில் தமிழ்த்தொண்டு புரிந்து மறைந்த மாபெரும் தமிழறிஞராவார். தஞ்சை மாவட்டத்தில் உத்தமதானபுரம் என்னும் சிற்றூரில் இவர் பிறந்தார். இவரின் தந்தையார் வேங்கடசுப்பையர் தமிழ்ப் பயிற்சியுடையவராகவும், இசைப்புலமை மிக்கவராகவும் இருந்தால் இவருக்கும் அத்துறைகளில் புலமை வாய்த்தது. துடக்கக் கல்வியைத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் முடித்துவிட்டு அரியலூர்ச் சடகோப ஐயங்காரிடம் தமிழ் கற்கத் தொடங்கித் திருவரங்கத்தந்தாதி, திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி முதலியவற்றைப் பாடங் கேட்டார். இறுதியாகத் தமிழ்க் கல்விக்கடலாகிய மகா வித்துவான் மீனாட்சிசுந்தரனாரிடம் ஆறு ஆண்டுகள் வரன்முறையாகக் கல்வி கற்றுத் தமிழில் பாண்டித்தியம் பெற்றார்.

தமிழ்த் தொண்டு

தியாகராசச் செட்டியாருக்குப் பிறகு இவரே கும்பகோணம் கல்லூரியில் ஆசிரியரானார். மாணவர்களுக்குப் பாடம் சொன்ன நேரம் போக மற்ற நேரங்களைப் பல நூல்களைப் படிப்பதிலும், ஆய்வதிலும் செலவிட்டார். 1887ஆம் ஆண்டில் பல ஓலைச்சுவடிகளையும் ஆய்ந்து பார்த்த பிறகு சீரிய முறையில் சிந்தாமணியை வெளியிட்டார். 1888ஆம் ஆண்டு பத்துப்பாட்டை ஆராய்ந்து வெளியிட்டார். மக்கள் இவருடைய ஆராய்ச்சித் திறத்தையும், தமிழ்ப்பணியையுங் கண்டு பெரிதும் ஆதரவளிக்க முன்வந்தனர். ஆகவே, 1892ஆம் ஆண்டில் சிலப்பதிகாரத்தையும், 1898ஆம் ஆண்டில் மணிமேகலையையும் வெளியிட்டார். புறநானூற்றையும் நல்ல முறையில் சிறந்த குறிப்புக்களுடன் வெளிக்கொணர்ந்தார்.

1903ஆம் ஆண்டு ஐயர் அவர்கள் சென்னை மாநிலக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். ஆங்குச் சென்றபிறகு ஐங்குறுநூற்றையும், பதிற்றுப்பத்தையும் வெளிப்படுத்தினார். இவரது புகழ் எங்கும் பரவியது. பல பல்கலைக் கழகங்களின் தமிழ்க் குழுக்களில் உறுப்பினராக இருந்து தமிழ்த்தொண்டு புரிந்தார். இவருக்குப் பெரும்பேராசான் (மகாமகோபாத்தியாய) என்ற சிறப்புப் பெயரும், தெற்கத்தியக் கலைச்செல்வன் (திராவிட வித்யா பூஷணம்) என்ற சிறப்புப் பெயரும், இலக்கியப் பேரறிஞர் (டாக்டர்) என்ற பட்டமும் வழங்கப் பட்டன. இவர் மொத்தம் 39 பெரும் நூல்களையும், சிறு நூல்களையும் ஆய்ந்து அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். புதியதும் பழையதும், தமிழ்நெறி விளக்கம், சங்கத்தமிழும் பிற்காலமும் போன்ற அரிய உரைநடை நூல்கள் பத்து வரைக்கும் எழுதி வழங்கினார்.

இவரது பெருந்தொண்டால் ஓலைச் சுவடிகளில் இருந்து மண்ணுக்கும், கறையானுக்கும் உணவாகிக்கொண்டிருந்த தமிழ் இலக்கியச் செல்வங்கள் புதிய முறையில் அச்சிட்டு வெளிக்கொணரப்பட்டன. தமிழகத்தில் ஆங்காங்குச் சிதைந்தும் சீரழிந்தும் இருந்த ஓலைச்சுவடிகளைத் தேடிப் பெற்று, அவைகளை ஒப்பிட்டு ஆய்ந்து, உரைக்குறிப்புகள்

வரைந்து வாழ்வளித்த இந்த மாபெரும் தமிழரறிஞரால் தான் இன்று நமது இலக்கியம் பெருமை பெற்றுள்ளது. இவரைத் தமிழுக்கு வளமளித்த வல்லவரென்றும், நலமளித்த நல்லவரென்றும் போற்றுவது மட்டும் இவர் ஆற்றிய தமிழ்த் தொண்டிற்குப் போதியனவாகா.

viii. மறைமலையடிகள்

இவர் தஞ்சை மாவட்டத்தில் நாகையை அடுத்த காடம்பாடி என்னும் சிற்றூரில் 1876ஆம் ஆண்டில் தோன்றினார். இவருக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் **வேதாசலம்** என்பதாகும். ஆரம்பக் கல்வியை நாகை 'வெஸ்லியன் மிஷன்' பள்ளியில் பெற்றார். இவரது குழவிப் பருவத்திலேயே தந்தை இறந்ததால் பள்ளிப்படிப்புக்குத் தடை ஏற்பட்டது. அப்படியிருந்தும் ஊக்கத்துடன் தன் முயற்சி கொண்டு கல்வி கற்கலானார். தமிழறிஞராகிய நாராயணசாமிப் பிள்ளையவர்களிடம் கருத்தாகக் கல்வியைக் கற்றார். தமிழ்ப் புலமையும், ஆங்கிலப் புலமையும் வரப் பெற்றார்.

பதினேழாம் வயதில் இவருக்குத் திருமணமாயிற்று. இவருக்கு வாய்த்த சவுந்திரவல்லி அம்மையார் ஏற்ற வாழ்க்கைத் துணையாக இருந்து இவரை ஊக்குவித்தார். இவர் 'முருகவேள்' என்னும் புனைப்பெயருடன் நாகை நீலகேசினி, பாஸ்கர ஞானோதயம், திராவிட மந்திரி போன்ற பத்திரிகைகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். பரிதிமாற் கலைஞருடைய பெரும் முயற்சியால் இவர் 1898ஆம் ஆண்டு சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் தமிழாசிரியரானார். ஆராய்ச்சியில் ஈடுபட்டு முல்லைப்பாட்டிற்கும், பட்டினப்பாலைக்கும் மாணவர்களின் உதவி கொண்டு உரை எழுதி வெளியிட்டார். பிறகு முன் மொழிப் பிரகாசிகை, திருவொற்றியூர் முருகர் மும்மணிக் கோவை, சோமசுந்தரக் காஞ்சி முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். கல்லூரி விடுமுறை நாட்களில் தமிழ் நாடெங்கும் சென்று சைவசித்தாந்தச் சொற்பொழிவுகளும், தமிழ்மொழியாக்கச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தினார்.

இவருக்கு மூன்று பெண்மக்களும், நான்கு ஆண் மக்களும் தோன்றினர். அவர்களுக்கெல்லாம் அழகுத் தமிழ்ப்பெயர்களை இட்டு மகிழ்ந்தார். 1916ஆம் ஆண்டு தனித் தமிழ் ஆர்வம் ஏற்பட அன்றிலிருந்து பெயரும் தனித் தமிழாயிற்று. பேச்சும், எழுத்தும் தனித்தமிழாயின. இவர் துறவு உள்ளங்கொண்டு வாழத்தலைப்பட்டார். ஆயினும், மனைவி மக்களை விலக்கவில்லை. 1916ஆம் ஆண்டு அச்சுக் கூடம் நிறுவி பல நூல்கள் வெளிவர ஏற்பாடு செய்தார். இவருக்கும், திரு. வி. கலியாணசுந்தரனுருக்கும் இவ்வாண் டிலிருந்து நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

தனித்தமிழ் ஆர்வம்

மறைமலையடிகளார், மாணிக்கவாசகர் வரலாறும் கால ஆராய்ச்சியும்போன்ற பல ஆராய்ச்சி நூல்களையும், சிந்தனைக் கட்டுரைகள் போன்ற கட்டுரைகளையும், சாகுந்தலம் போன்ற நாடகங்களையும் எழுதி வெளியிட்டார். மொத்தம் முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட சிறந்த தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டுத் தமிழ் வளத்தைப் பெருக்கி யுள்ளார். இவரது தனித்தமிழ்ப்பற்று தமிழ்த் தூய்மையைப் பாதுகாத்து இன்று பேச்சிலும், எழுத்திலும் தனித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி மொழியின் செம்மையைப் பாது காக்க வழிகாட்டிற்று. இவரது பெருந்தொண்டால் தனித் தமிழ் ஆர்வம் தழைத்தோங்கித் தமிழ் உரைநடையின் வரலாற்றில் ஒரு திருப்பமும், புதுமலர்ச்சியும் தோன்றத் தமிழ்த்தாய் புதுப் பொலிவு பெற்று விளங்குகின்ருள்.

ix. திரு. வி. க.

தமிழ்த்தென்றலென்று போற்றப்படும் ஏற்றமுறு தமிழ்ப் பேரறிஞர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் 1883ஆம் ஆண்டு சென்னைக்கு அருகாமையிலுள்ள துள்ள மென்னும் சிற்றூரில் தோன்றினர். இவர் இளமையி லிருந்து தமிழ்ப்பற்றுடையவராகக் காணப்பட்டார். உயர் நிலைப்பள்ளியில் படிக்குங்கால் தமிழ் ஆர்வமிக்கவராக இருந்ததால் யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளைஎன்னும் தமிழாசிரியர் இவரை ஊக்குவித்தார். பல நூற்களையும்

இத்தமிழாசிரியரிடம் பாடங்கேட்டார். அதன்பிறகு மயிலை தணிகாசல முதலியாரிடம் பல நூல்களைக் கற்றார். அவரிடம் வடமொழி அறிவும் பெற்றார். 1917ஆம் ஆண்டு நாட்டில் விடுதலை வேட்கை மிகவே தன்னுரிமைக் கட்சியுடன் சேர்ந்து வேலைசெய்தார். இவ்வாண்டே தேசபக்தன் பத்திரிகை ஆசிரியராக அமர்ந்து நற்றொண்டு செய்தார். இனிக்கும் உரை நடையில் எழுதினார். எல்லோரும் அவரது எழுத்தைப் பார்த்து எழுச்சிகொண்டனர். அதன்பிறகு நவசக்தி என்னும் கிழமை வெளியீட்டைத் தொடங்கித் தொடர்ந்து ஏறத்தாழ இருபது ஆண்டுகள் தொண்டாற்றினார். 1921ஆம் ஆண்டு காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போரைத் தென்னாட்டில் திறம்பட நடத்தினார். இவரோடு டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, ஈ. வே. ரா. முதலியோர் சேர்ந்து வேலை செய்தனர். சென்னையில்தான் முதன்முதலாகத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டது. அது நிறுவப்படு வதற்கு முயற்சி செய்தவர்களில் ஒருவர் திரு. வி. க.

தமிழ்த்தென்றல்

1912இல் இவருக்குத் திருமணம் நடந்தது. இவருக்கு வாய்த்த மாதரசியாகிய கமலாம்பிகை ஆறு ஆண்டுகள் மட்டும் இவரோடு வாழ்ந்து மறைந்தார். பிள்ளைகள் இரண்டு பிறந்து இறந்தன. இவர் மறுமணம் செய்து கொள்ளாது தமிழை வாழ்விக்க வாழ்ந்தார். பல நூல்களையும் எழுதி வெளியிடுவதிலே முனைந்தார். பெரிய புராணத்திற்கு அரும்பதவுரை, உரைநடை முதலியன எழுதிப் பகுதி பகுதியாகத் திங்கள்தோறும் வெளியாக்கினார். பெண்களின் பெருமையை உணர்த்த 'பெண்ணின் பெருமை' என்னும் எண்ணுதற்குரிய நூலை எழுதினார். தாம் பல்லிடங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்துத் 'தமிழ்த்தென்றல்' என்னும் பெயர் தந்து வெளிப்படுத்தினார். இவர் பாடிய பாடல்களைக் கொண்ட சிறு நூல்களும் உள.

இவர் நாற்பது நூல்கள் வரைக்கும் எழுதியுள்ளார். அவை இந்தியாவும் விடுதலையும், கிறிஸ்துவின் அருள் வேட்டல், பொதுமை வேட்டல் போன்ற பல்வேறு பொருள்

கள் பற்றியன. இவருடைய தமிழ் உரைநடை இவருக்கென்று கைவரப்பெற்றது. ஓசை அழுத்தமும், பொருட் செறிவும், தெளிவும் பெற்றுப் படிப்போரை மெய்மறக்கச் செய்யும் வல்லமை பெற்றது இவரது நல்ல உரைநடை. தமிழுக்கு இனிமை என்பது பொருள் என்பதை இவரது உரைநடை நூல்களைப் படிப்போர் நன்கறிய முடியும். இவ்வாறு நூல் பல செய்து தமிழ்தனை வளர்த்துத் திகழ்ந்த இவரே தீந்தமிழர் போற்றும் திரு. வி. க. பெரியாராவார்.

X. பேராசிரியர் சம்பந்த முதலியார்

திரு. பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் நாடக உலகில் பெருங்கலைஞராக இன்றும் ஏற்றத்துடன் விளங்குகின்றார். உரைநடையில் எழுதப்பட்ட நாடகங்களில் இவருடைய நாடகங்களே மிகச் சிறந்தவை. பழைய காலத்துக் கதைகளும், தற்கால மக்கள் வாழ்க்கையும் நாடகங்களுக்கு உரிய பொருள்களாய் அமைந்துள்ளன. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாடக மேடை சீர்கேடான நிலையில் இருந்ததால் அதை வீறு பெற்று எழச்செய்யும் எண்ணத்தோடு இவர் எண்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதித் தமிழ் நாடக உலகில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளார். இவரின் நாடகங்களில் மிகச் சிறந்தது "மனோகரா" வாகும். "லீலாவதி சுலோசனா" என்ற நாடகந்தான் முதன் முதலில் உரைநடையில் அச்சிடப்பட்ட நாடகமாகும். இவரின் நாடகங்களில் நாடக இயல்புகள் பலவும் நன்கு அமைந்துள்ளன. சாதாரண மக்களும் பார்த்து, கேட்டு, புரிந்து கொள்ளும் அளவில் எளிய உரைநடையில் நாடக நூல்களை அமைத்துள்ளார். இவர் 'சேக்ஸ்பியர்' போன்ற மேலை நாட்டு ஆசிரியர்களின் நாடகங்களை நன்கு கற்றதால் அவைகளில் காணும் பல சிறப்பியல்புகளும் பொருந்த இன்ப துன்ப முடிவுகள் அமையும்படி எழில்பட எழுதியுள்ளார்.

நடிகர் — நாடகாசிரியர்

இவர் நாடகங்களை எழுதியதோடு நில்லாமல் மேடைகளில் ஏறி நடிக்கவும் செய்தார். நாடகமாடுவோரை

மக்கள் 'கூத்தாடிகள்' என்று கூறி மதிக்காததைக் கண்டு மனந்துடித்து அவ்விழிநிலையைப் போக்கும் பணியில் விரைந்து வீறுகொண்டு ஈடுபட்டார். பட்டம் பதவி பெற்றோர்களையும் நாடகங்களில் நடிக்கச் செய்தார். 1891 இல் சென்னை நகரில் 'சுகுண விலாச சபை' என்ற நாடக மன்றம் ஒன்றை உருவாக்கித் தமிழகத்தின் பல இடங்களில் நாடக மன்றங்கள் ஏற்பட வழிகாட்டினார்.

இவர் உரைநடையில் நாடகங்களை ஆக்கி மக்களை அவற்றில் நல்ல ஈடுபாடு கொள்ளச்செய்து, நாடகக் கலைஞருக்கிருந்த இழிவை நீக்கி ஏற்றம் தந்து, இன்று கலைஞர்களும், அரசாங்கமும், பொதுமக்களும் போற்றிப் புகழத் தமிழ் நாடகத் தந்தையாக விளங்கிக்கொண்டிருக்கின்றார்.

26. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சி

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் பன்முக வளர்ச்சி பெற்றுள்ளது. அச்சடிக்கும் முறையால் பலவகையான வெளியீடுகள் உலவுகின்றன. இவைகளின் வாயிலாய் உரைநடையும், கவிதையும் நல்ல வளர்ச்சியுற்றுள்ளன. எழுத்திலும், பேச்சிலும் செந்தமிழ் நடை, தனித்தமிழ் நடை, மறுமலர்ச்சி நடை எனப் பல புதிய போக்குகளைப் பார்க்கின்றோம். நாடகங்கள் வாயிலாகவும், திரைப்படங்கள் வழியாகவும், வானொலி மூலமாகவும் பல்லோர் தமிழை வளர்த்து வருகின்றனர். நல்லோரின் முயற்சியால் நம் மொழியில் அறிவியல் நூல்களும், பல்துறை ஆராய்ச்சி நூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களும் நாளும் பெருகி வருகின்றன. அரசியலாரும் தமிழ் வளர்ச்சியில் ஓரளவு அக்கறைகாட்டி வருகின்றனர். இன்றையத் தமிழ் வளர்ச்சியில் தனியார் முயற்சியே பெரிதும் போற்றற்குரியது.

i. வளர்தமிழும் உரைநடை வரலாறும்

பழங்கால உரைநடை

ஆரியம்போல் உலகவழக்கு அழியாமல் ஆண்டாண்டு தோறும் வளர்ந்து வருவது நம் வண்டமிழ் மொழியாகும். இதனின் இன்றைய வளர்ச்சிக்கும், வளத்திற்கும் காரணமாக இருப்பவை உரை நடையில் தோன்றும் எண்ணற்ற எழில் இலக்கியங்களாகும். இம்மொழியில் உரை நடையானது தொன்மையான காலத்திலேயே தோன்றிவிட்டது' தொல்காப்பியர் காலத்திற்கும் முன்னும், பின்னும் தமிழ் உரை நடையானது உருப்பெற்று ஓரளவு வளர்ச்சியுமுற்று இருந்தது என்பதைத் தொல்காப்பியம் நமக்குக் காட்டுகின்றது. நான்கு வகையான உரை நடை நூல்கள் தோன்றின. இவ்வுண்மையை,

பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின்று எழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்என்று
உரைவகை நடையே நான்கென மொழிப
(தொல். செய்யுளியல்: 171.)

என்ற நூற்பா உணர்த்துகின்றது.

'பாட்டிடைவைத்த குறிப்பு' என்பது ஒரு பாட்டிற்கும் மற்ருெரு பாட்டிற்கும் இடையே எழுதப்படும் உரை நடையாகும். இம்முறையில் முன்பு தகடூர்யாத்திரை என்று நூல் இருந்தது. பெருந்தேவனர் பாரதத்திலும் இவ்வுரைமுறை காணப்படுகின்றது. 'பாவின்று எழுந்த கிளவி' என்பது உரை நடை நூல் (Prose works) என்று பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தனர் 'இலக்கியக் கலையில்' குறிப்பிடுகின்ருர். 'பொருளொடு புணராப் பொய்ம்மொழி' என்பது பொய்ப் புதினம் (Fiction) என்றும், 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' என்பது புதினம் (Novel) என்றும் இவரே மேலும் குறிப்பிடுகின்ருர். இவ்வாறு இருந்த உரை நடையைப் பிற்காலத்தவர் காக்காததால்தான் அழிந்து விட்டது. இஃது அறியாத ஒருசிலர், தமிழில் முன்பு உரைநடையே இல்லை என்று கூறவும் முற்படுகின்றனர்.

கி. பி. 3ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் உரைநடை காணப்படுகின்றது. இளங்கோவடிகள் தம்மிலக்கியத்தை, "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" என்றே பதிகத்தில் குறிப்பிடுகின்றார். இதில் காணும் 'உரைபெறு கட்டுரை' உரைநடையால் ஆனதாகும்.

பிற்கால உரைநடை

கி. பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றிய இறையனார் அகப்பொருள் உரை நக்கீரரது உரைநடை வளத்தைக் காட்டுகின்றது. இறையனார் அகப்பொருளுக்கு இவர் செய்திருக்கும் உரைப்பாயிரம் மிகச் சிறந்தது.

சமணரும், பௌத்தரும் தமிழில் பல நூல்கள் செய்துள்ளார்கள். சமணர் சமைத்த ஸ்ரீபுராணம் தமிழும், வடமொழியும் கலந்த மணிப்பிரவாள உரைநடையில் ஆனதாகும். 14ஆவது, 15ஆவது நூற்றாண்டுகளில் விளங்கிய வைணவ உரையாசிரியர்கள் மணிப்பிரவாள நடையில் நாலாயிர பிரபந்தத்திற்கு விளக்கவுரை எழுதியிருக்கின்றார்கள். இளம்பூரணர், சேனாவரையர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், அடியார்க்குநல்லார் போன்ற உரையாசிரியர்கள் விளக்கவுரைகளைச் சிறந்த உரைநடையில் ஆக்கியுள்ளார்கள். இவர்கள் உரைநடை வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கினர். (இவர்களைப்பற்றி 'உரையாசிரியர்களும், உரைநூல்களும்' என்ற பகுதியில் காண்க.)

மேலைநாட்டிலிருந்து சமயத்தைப் பரப்பவந்த கிறிஸ்துவத்துறவிகள் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றியுள்ளார்கள். 16ஆவது நூற்றாண்டில் கிறிஸ்துவத் வேதோபதேசம் என்ற நூல் முழுதும் உரைநடையில் ஆக்கப்பட்டது. கிறிஸ்துவ வணக்கம் என்ற நூலும் அதையடுத்துத் தோன்றிற்று. 17ஆம் நூற்றாண்டில் சேசு சபையை சேர்ந்த இராபர்ட் நோபிலி என்னும் தத்துவ போதக சுவாமி என்பவர் பல தமிழ் உரைநடை நூல்கள் எழுதினார். அதே நூற்றாண்டில் அருளானந்தர் என்னும் அடிகளாரும் சில உரைநடை நூல்களை ஆக்கினார். 18ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த வீரமாமுனிவர் சிறந்த உரைநடை

நூல்களை உருவாக்கினர். இவரைத் தமிழ் உரைநடையின் தந்தை என்றுரைப்பது சாலும். வேதியர் ஒழுக்கம், பரமார்த்தகுரு கதை, வேதவிளக்கம், தொன்னூல்விளக்கம் முதலியன இவரின் உயர்ந்த உரைநடை நூல்கள். இதே நூற்றுண்டில் மாதவச் சிவஞான சுவாமி என்பார் சித்தாந்த மரபு கண்டனம், சிவசம்வாதவுரை மறுப்பு முதலிய உரைநடை நூல்களைச் செய்தார்.

19ஆம் நூற்றுண்டில்தான் உரைநடை நூல்கள் மிகுதியாக எழுதப்பட்டன. வேதநாயகம் பிள்ளையவர்கள் இயற்றிய பிரதாபமுதலியார் சரித்திரமும், சுகுணசுந்தரி சரித்திரமும் உரைநடை வளர்ச்சிக்கும், புதின வளர்ச்சிக்கும் வழிகாட்டின. ஆறுமுக நாவலர் பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், பாலபாடம், சைவவினு விடை முதலிய உரைநடை நூல்களைச் செய்தார். திருவருட்பா பாடிய இராமலிங்க அடிகள் ஜீவகாருண்ய ஒழுக்கம், மநுமுறை கண்ட வாசகம் என்னும் நூல்களை இயற்றினர். பாரதியாரும் கதைகளாலும், கட்டுரைகளாலும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குத் துணைபுரிந்தார்.

இன்றைய உரைநடை

தனித்தமிழ் உரைநடையைத் தோற்றுவித்தவர் மறைமலையடிகளாவார். திரு. வி. க. வினுடைய உரைநடை தனி வனப்பு வாய்ந்தது. இவ்விருவரும் உரைநடையில் நல்ல முன்னேற்றங்களைத் தோற்றுவித்தனர். மேலும், டாக்டர் உ. வே. சாமிநாதையரும், மு. கதிரேசஞ் செட்டியாரும், கா. சுப்பிரமணிய பிள்ளையும், வேங்கடசாமி நாட்டாரும், வையாபுரிப் பிள்ளையும், சோமசுந்தர பாரதியாரும், சேதுப் பிள்ளையும் தமிழ் உரைநடைக்குப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார்கள்.

இன்றைய மறுமலர்ச்சி நடைக்கு உயிரூட்டியவர் அறிஞர் சி. என். அண்ணுதுரையாவார். இவரது எழுத்தில் எழிலுண்டு; இனிமையுண்டு; எளிமையுண்டு; எதுகை மோனை நயங்களுண்டு. இன்றைய இளைஞர்கள் இவரது உரைநடையைப் போற்றுகின்றனர். காரணம், இவர்தம்

எழுத்துநடைக்கு ஈர்க்கும் சக்தியுண்டு; எழுச்சியூட்டும் ஆற்றலுண்டு; எவரையும் உணர்ச்சிவலையில் சிக்க வைக்கும் திறனுண்டு.

டாக்டர் மு. வரதராசனுர், டாக்டர் மா. இராசமாணிக்கனுர், டாக்டர் வ. சுப. மாணிக்கனுர், டாக்டர் துரையரங்கனுர், பேராசிரியர் சி. இலக்குவனுர், பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள் இந்நாளில் உரைநடையைத் திறமான முறையில் வளர்த்து வருகின்றனர். இந்நூற்ருண்டில் பல ஆராய்ச்சி நூல்களும், வரலாற்று நூல்களும், திறனய்வு நூல்களும், வழிச் செலவு நூல்களும், அறிவியல் நூல்களும், கதைகளும், கட்டுரைகளும் தமிழ் உரைநடை நூல்களாகத் திகழ்வது தமிழ் வளர்கிறது என்பதை நன்கு உணர்த்துகின்றது.

உரைநடை வளர்ச்சியால் தமிழ் நன்கு வளர்கிறது; வளமுறுகிறது. ஆனல், சில எழுத்தாளர்களும், பத்திரிகைக்காரர்களும் பேச்சுத் தமிழில் ஆர்வமுற்றுப் பல பயனற்ற வேலைகளைச் செய்கின்றனர். அவர்கள் எழுதுவதெல்லாம் கொச்சைத் தமிழாக இருப்பதால் அவர்கள் உருவாக்கும் இலக்கியங்கள் நீடித்து நிற்கும் திறனின்றிச் சிதைந்து போகின்றன. அவர்கள் இயற்றும் இலக்கியங்களும் வாழ வேண்டுமென்பதுதான் தமிழன்னையின் எண்ணம்.

ii. விரைந்து வளரும் வெளியீடுகள்

அச்சுப்பொறி வரலாறு

இந்நாளில் தமிழ்மொழியில் பற்பல வெளியீடுகள் [பத்திரிகைகள்-நூல்கள்] தோன்றிப் பற்பல வகையில் மொழியை வளப்படுத்துகின்றன. நாளிதழ்களும், வார இதழ்களும், மாத ஈரிதழ்களும், மாத இதழ்களும், கவிதைகளையும், கட்டுரைகளையும், கதைகளையும் தாங்கி வெளிவருகின்றன. பொதுமக்களுக்கும் தமிழிலக்கியத்திற்கும் சிறந்த தொடர்பை ஏற்படுத்துபவை வெளியீடுகளேயாகும். இவ்வாறு வெளியீடுகள் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பது அச்சியற்றும் முறையாகும். முன்பெல்லாம்

நம்மவர்கள் பனையோலையில் நூல்களை எழுதினர். அவ் வோலைகள் அழியாமல் நீடித்து நிற்கும் இயல்பு கொண்ட வையல்ல. ஆகவேதான் தமிழில் எழுந்த ஏராளமான நூல்கள் காலமென்னும் கறையான் வாயில் சிக்குண்டு சிதைந்து போயின. ஐரோப்பியர்கள் இங்கு வந்த பின்னர்தான் நூல்களை அச்சடித்து வெளியிடும் முறையும், செய்தித்தாள்களை வெளியாக்கும் வகையும் தெரியவந்தன.

இந்திய மொழிகளில் முதலில் அச்சுப் புத்தகம் வெளி வந்தது தமிழில்தான். சமயத்தைப் பரப்ப வந்த சேசு சபையினர் கொச்சியிலும், திருநெல்வேலியிலும், புன்னைக் காவிலும் அச்சுப்பொறிகளை ஏற்படுத்தினர். கி. பி. 1577இல் "கிறிஸ்துவ வேதோபதேசம்" என்னும் புத்தகம் முதன்முதலில் தமிழில் அச்சடிக்கப்பட்டது. 1579இல் கிறிஸ்துவ வணக்கம் அச்சாயிற்று. 1713இல் சேர்மனி யிலிருந்து வந்த அச்சுப்பொறிகளைக் கொண்டு அச்சகம் ஒன்று தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது. 1761இல் சென்னை வேப்பேரியில் ஆங்கிலேயர் அச்சகம் நிறுவினர். அதி லிருந்து அரசாங்கப் புத்தகங்களும், வேதபுத்தகங்களும் வெளியிடப்பட்டன.

வெளியான வெளியீடுகளின் வரலாறு

கி. பி. 19ஆம் நூற்றுண்டில்தான் நூற்றுக்கணக் கான அச்சுப்பொறிகள் இங்குக் கொண்டுவரப்பட்டன. அந்நூற்றுண்டில்தான் செய்தித்தாள்கள் தொடங்கப் பட்டன. 1831இல் சென்னை மதத்துண்டுப் பிரசுரக் கழகம் "தமிழ்த்தாள்" என்ற தாளை வெளியிட ஆரம்பித்தது. 1840இல் "சுவிசேஷ பிரபல விளக்கம்" என்ற மாதவெளி யீடு நாகர்கோவில் பிரசார சபையால் வெளியிடப்பட்டது. 'நற்போதம்" என்ற மாத வெளியீடு பாளையங்கோட்டை யிலிருந்து வெளியாயிற்று. 1841இல் யாழ்ப்பாணத்து மிசின்காரர்களால் "உதயதாரகை" என்ற தாள் வெளி யிடப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் "தத்துவபோதினி" என்னும் தாள் இந்துமதப் பிரசார சபையாகிய 'சென்னை வேத சமாஜம்' என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது 20ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தி

லிருந்து தனிப்பட்டவர்களும் அச்சகங்களை நிறுவி நூல்களையும், பத்திரிகைகளையும் வெளியிடத் தலைப்பட்டனர். இன்று பலவகையான வெளியீடுகள் விரைந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன.

மேலைநாட்டார் தொடர்பால் நாம் எத்தனையோ நன்மைகளைப் பெற்றிருக்கின்றோம். அவற்றிலே மிகச் சிறந்தது புத்தகங்களையும், பத்திரிகைகளையும் அச்சிட்டு வெளியிடும் செயலாகும். இதன்மூலமாகப் பல்வளம் பெற்றுத் தமிழ் இலக்கியம் வளருகின்றது; நம்மவர்கள் தமிழ்க் கல்வி பெறுவதற்குச் சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. அரசியல் பொருளாதார அறிவும், அறிவியல் அறிவும், கலைவளர்ச்சிபற்றிய அறிவும், இன்னபிற பல்துறை அறிவும் வாய்க்கும் வழியாக வெளியீடுகள் அமைந்துள்ளன.

வெளியீடுகளும் தமிழறிஞர்களும்

பாரதியார் 'சுதேசமித்திரன்' வழியாகப் பல கவிதைகளையும், கட்டுரைகளையும், கதைகளையும் வெளியிட்டுத் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். திரு. வி. க. வும், வ. வே. சு. ஐயரும் 'தேசபக்தன்' பத்திரிகை மூலமாகத் தமிழ்ச் சேவை செய்தனர். மறைமலை அடிகள் இளமையில் நாகை 'நீலலோசனி', 'பாஸ்கர ஞாநோதயம்', 'திராவிட மந்திரி' போன்ற பத்திரிகைகள் வாயிலாய்த் தமிழின் அருமையை நல்ல உரைநடையில் எழுதி வெளியிட்டார். 1916இல் தமக்கென ஓர் அச்சகத்தை நிறுவினர். பல தனித் தமிழ் நூல்களை வெளியிட்டார். நம்மவர்கள் வெளியுலகத்தை அறியவும் அரிய வாய்ப்பு வழங்கியது வெளியீட்டு வளர்ச்சியாகும். நில நூல்களும், வான நூல்களும், உயிர் நூல்களும், கணித நூல்களும், வரலாற்று நூல்களும் தமிழ் மொழியில் தோன்றித் தமிழை வளப்படுத்தியுள்ளன. பத்திரிகைகள் சிறுகதைகள், தொடர்கதைகள், நாடகங்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் முதலியவற்றை வெளியிட்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெரும் தொண்டு செய்துவருகின்றன. இன்னும் மொழிச் சிறப்பு அமைந்த செய்தித் தாள்களும், இதழ்களும் தோன்றவேண்டியது வேண்டற்பாலது.

iii கதைகள் வளர்ச்சியும் கன்னித்தமிழ் மலர்ச்சியும்

மேல்நாட்டாரைப் பின்பற்றி நம்மவர்கள் உரை நடையில் சிறுகதைகளையும் (Short Stories) புதினங்களையும் (Novels) படைக்கத் தலைப்பட்டனர். இன்று பல வெளியீடுகள் சிறுகதைகளாலும், புதினங்களாலுந்தான் உயிர் பெற்று உலவிவருகின்றன. ஆண்களும், பெண்களும் கதைகள் படிப்பதில் மிக்க ஆர்வங்காட்டுவதே இதற்குக் காரணம்.

சிறுகதை எழுத்தாளர்கள்

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்குள் சிறுகதைகள் தமிழில் ஏராளமாகப் பெருகிவிட்டன. சிறுகதை எழுத்தாளர்களில் மிகச் சிறந்தவர்கள் காலஞ்சென்ற 'புதுமைப்பித்தன்', கு. ப. இராஜகோபாலன், 'கல்கி' என்போராவார்கள். புதுமைப்பித்தனுடைய சிறுகதைகள் வாழ்க்கைத் தத்துவங்களை வடித்துக் காட்டுவதில் இணையற்றவை. அவர் எழுதிய சிறுகதைகள் இறவா இலக்கியங்களாக விளங்குகின்றன. கல்கி எழுதிய சிறுகதைகள் பல நகைச்சுவை பொருந்தியவையாக, எக்காலத்தும் நின்று வாழ்பவையாக இருக்கின்றன. வ. வே. சு. ஐயரவர்களும் சிறந்த சிறுகதைகளை எழுதியுள்ளார்கள். அவர்களது 'குளத்தங்கரை அரசமரம்' என்ற கதை குறிப்பிடத்தக்கது. பி. எஸ். இராமையா, கி. வா. செகந்நாதன், மாயாவி, ஜீவா, அகிலன், செகசிற்பியன், இராஜாஜி போன்றவர்கள் சிறந்த சிறுகதைகளை எழுதிவருகின்றார்கள். அகிலனுடைய கதைகள் பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

சிறுகதை அமைப்பு

தமிழ்ச்சிறுகதை எழுத்தாளர்கள் தக்க முறையில் கதைகளை அமைக்கவேண்டும். இஃது ஒரு சீரிய கலையாகும். ஆகவே இவ்வகை இலக்கியத்தில் நல்ல கலைத்தன்மை மிளிர வேண்டும். இளங்கோவடிகள் சிறுகதைகளை நன்முறையில் சிலப்பதிகாரத்தில் கையாண்டுள்ளார். காட்டாக அடைக்

கலக் காதையில் குரங்கு தேவஞன கதையை நாம் கொள்ள லாம். மணிமேகலையில் வரும் ஆபுத்திரன் கதையும் சிறு கதைக்கு ஒரு சான்ருகும்.

சாதாரண மனநெகிழ்ச்சிகளை வைத்துக்கொண்டு சிறு கதை வடிக்கவேண்டும். சமுதாயத்தின் தேவையுணர்ந்து சமுதாயத்திற்காக எழுதவேண்டும். கதாசிரியன் வாழ்க் கையை மறக்கக்கூடாது; அதைவிட்டு விலகக்கூடாது.

ஆங்கில எழுத்தாளரான ஸ்டீவன்சன் சிறுகதை அமைப் பதற்கு மூன்று வழிகளைக் கூறுகின்ருர். ஒரு கருவைத் (Plot) தேர்ந்தெடுத்து அதற்கேற்ற பாத்திரங்களை அமைக்கலாம். ஒரு பாத்திரத்தைத் (Character) தேர்ந்தெடுத்து அதன்மீது நிகழ்ச்சிகளை அமைக்கலாம். ஒரு சூழ்நிலையைத் தேர்ந் தெடுத்து அதற்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளையும், பாத்திரங் களையும் இணைத்து உருவாக்கலாம்.

சிறுகதையைப் படைக்கும் ஆசிரியன் கற்பனை வளம் பொருந்தியவஞகவும், வாழ்க்கை உண்மைகளை அறிந்த வஞகவும், கூரிய நோக்கு உடையவஞகவும் இருக்க வேண்டும். ஆசிரியன் பாத்திரப் படைப்பையும், நிகழ்ச்சி அமைப்பையும் சிறப்பாக அமைக்கவேண்டும். இந்நாளில் சிறுகதை ஆசிரியர்கள் நிகழ்ச்சிகளைத் தேடிப்பிடித்துக் கதை களை அமைத்துவிட்டால் போதுமென்று எண்ணுகின்ருர் கள்; இதுமட்டும் போதாது. ஆசிரியரின் கற்பனையும், கூறுந் திறமையும் கதையில் சிறப்பிடம் பெற்றிருக்கவேண்டும். இவ்வகைக் கதைகள் உணர்ச்சிகளைச் செறித்துக்காட்ட வேண்டும். நல்ல நடை கதையின் வெற்றிக்கு ஒரு காரணம்.

சிறுகதைகள் நம்மொழியில் காதலைமட்டும் பொரு ளாகக் கொண்டு ஏராளமாகத் தோன்றிக்கொண்டு இருக் கின்றன. மனிதனுடைய பிறவுணர்வுகளையும் அடிப்படை யாகக் கொண்ட கதைகள் தோன்றிஞல் சிறுகதை இலக்கியப் பகுதி இன்னும் சிறக்கும்.

புதின ஆசிரியர்கள்

புதினத்தை முதன்முதல் தமிழில் தோற்றுவித்தவர் வேதநாயகம் பிள்ளையாவார். இவருடைய பிரதாபமுதலியார்

சரித்திரம் தமிழில் தோன்றிய முதல் புதினம். சுகுணசுந்தரி சரித்திரத்தையும் இவரே படைத்து வெளியிட்டார். இவரைப் பின்பற்றிக் கமலாம்பாள் சரித்திரத்தை இராஜம் ஐயரும், பத்மாவதி சரித்திரத்தை மாதவ ஐயரும் எழுதி வெளியிட்டனர். வடுவூர் துரைசாமி ஐயங்கார் பல நாவல்களை எழுதியுள்ளார். கல்கி அவர்கள் கள்வனின் காதலி, சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, சோலைமலை இளவரசி போன்ற புதினங்களைத் தீட்டியுள்ளார்கள். ஆரணி குப்புசாமி முதலியார் கற்கோட்டை, கற்பகச்சோலை, அற்புதக் கொலை, மஞ்சள் அறையின் மர்மம் போன்றவற்றை எழுதியுள்ளார். 'இலட்சுமி' என்பவர் படித்த மனைவி, பெண்மனம், மிதிலா விலாஸ் போன்றவற்றைத் தீட்டியிருக்கின்றார். அகிலன் சிநேகிதி, பாவைவிளக்கு, வேங்கையின் மைந்தன் போன்ற புதினங்களைப் படைத்துள்ளார். டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் செந்தாமரை, அல்லி, பெற்றமனம், மலர்விழி போன்ற அருமையான நெடுங் கதைகளைப் படைத்துத் தமிழ்மக்களுடைய பேராதரவைப் பெற்றிருக்கின்றார்கள். இன்னும் எத்துணையோ எழுத்தாளர்கள் நூற்றுக்கணக்கான புதினங்களைப் படைத்துத் தமிழ் இலக்கிய வளத்தைப் பெருக்கிவருகின்றார்கள்.

புதின அமைப்பு

வாழ்க்கையின் பெரும்பகுதியைச் சித்திரிப்பது புதினமாகும். வாழ்க்கையின் சிறு பகுதியை மட்டும் சித்திரிப்பது சிறுகதையாகும். புதினம் வாழ்க்கையின் பல்வேறு உண்மைகளை, வாழ்க்கைத் தத்துவங்களை விளக்கக்கூடியதாக இருக்கவேண்டும். ஆகவே, புதினத்தைப் படைக்கும் ஆசிரியன் நல்ல அறிவுசான்றவனாக, அநுபவம் உடையவனாக இருக்கவேண்டும்.

புதினங்கள் சிறந்த சூழ்ச்சியையும் (Plot), பாத்திரங்களையும் (Characters), உரையாடலையும் (Dialogue), கால இடப்பொருத்தங்களையும் (Time and Place of action) கொண்டிலங்கவேண்டும். புதினத்தின் பிண்டம் (Subject Matter) உயர்ந்ததாக இருப்பது மிக இன்றியமையாதது.

புதினத்தின் சூழ்ச்சி கலைத்திறமை பொருந்தியதாகவும், கட்டுக்கோப்புடையதாகவும் அமைவது நல்லது. சூழ்ச்சியை உதிரிச் சூழ்ச்சி (Loose Plot) என்றும், ஒட்டுச் சூழ்ச்சி (Organic Plot) என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். புதின ஆசிரியன் உயர்ந்த பாத்திரங்களைப் படைத்து நம்மத்தியில் அழியாப் புகழுடன் வாழும்படி செய்யவேண்டும். பாத்திரங்களைப்பற்றிப் புதின ஆசிரியன் சொல்லுவதைவிட பாத்திரங்களின் பேச்சு, செயல் இவைகளின் வாயிலாய்ப் படிப்பவர்களையே பாத்திரங்களைப்பற்றி அறிந்துகொள்ளச் செய்வது நல்லது.

கற்பனைப் புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள் (Historical Novels) என்று புதினங்கள் இருவகைப்படும். நம் மொழியில் கற்பனைப் புதினங்கள் ஓரளவு தோன்றுகின்றன. ஆனால், வரலாற்றுப் புதினங்கள் தேவையான அளவு தோன்றவேண்டும்.

சிறுகதைகளும், புதினங்களும் இந்நூற்றூண்டில் நம் மொழியில் நல்ல முறையில் வளர்ச்சியுற்றிருக்கின்றன. ஆனால், மேலைநாட்டில் தோன்றியிருக்கும் புதினங்களைப் போல் சிறந்த உரைநடையில் கருத்துச் செறிவுள்ள பல புதினங்கள் நம் மொழியில் தோன்றவேண்டும். அப்பொழுது தான் நம் மொழி மேலும் சிறந்த வளர்ச்சியும், மலர்ச்சியும் பெறும்.

iv. புதிய பாக்களின் போக்கும் புன்மையறுத்த புலவர்களும்

இருபதாம் நூற்றூண்டு எல்லாத் துறைகளிலும் மாற்றங்கள் பெற்று, ஏற்றங்கள் கண்டு இறும்பூதெய்துவதால், இலக்கியத்துறைகளிலும் எழுச்சியும், மலர்ச்சியும், கிளர்ச்சியும் இடம் பெறுவதை அறிகின்றோம். இதன் காரணத்தால் பொலிவும் பொருள் பொதிவும் உடைய புதிய கவிதைப் பூக்கள் பூக்கின்றன நாளும்.

பிறநாட்டு மொழிகளினுடைய பெரும் வளர்ச்சியைக் கண்ணுற்ற நம்மவர்கள் நம் மொழியினுடைய நலத்திற்கும்,

வளத்திற்கும் பல வழிவகைகளைக் கையாளத் தலைப்பட்டனர். கவிதைகளில் கடினமான சொற்களைக் கைவிட்டனர்; சீர்களைப் புணர்த்தி எழுதும் சிக்கலையும் நீக்கினர். உணர்ச்சியும் ஊக்கமும் ஊட்டும் எளிமையும் இனிமையும் உடைய சொற்களை எதுகை மோனை நயங்களோடு எடுத்தாள முனைந்தனர். இம்முறையை நம்மொழியில் முதலில் புகுத்தி முழு வெற்றி கண்டவர் பாரதியார்.

பாட்டுக்கொரு புலவன் பாரதி

'வேதியராயினும் ஒன்றே; அன்றி வேறு குலத்தினராயினும் ஒன்றே' என்று பாட்டிசைத்தவர் பாரதி. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்று பறையறைந்தவர் பாரதி. 'மன்னும் இமயமலை எங்கள் மலையே மா நிலமீது அதுபோல் பிறிது இலையே' என்று தமிழில் இயம்பியவர் பாரதி.

செந்தமிழ் நாடென்று பாடும்போது இன்பத் தேன் வந்து பாயுதாம் காதினிலே! வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டதாம் இத்தமிழ்நாடு! இவரறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோமாம். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை நாம் செய்தல் வேண்டுமாம். தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டவர் இங்கு அமரர் சிறப்புக் கண்டவராம்.

சொந்த நாட்டில் பிறருக்கு அடிமையாகித் துஞ்சக் கூடாதென்று எண்ணினர். ஆகவே, துள்ளு தமிழ் நடையிலே எண்ணற்ற பாக்களை எழுதி மக்களை எழுச்சி கொள்ளச் செய்தார். விடுதலை வேட்கையைப் பாட்டின் மூலமாகப் பரப்பினர். கேட்டவர் எல்லோரும் கூட்டமாய்க் கூடி விரட்டினர் வெள்ளையரை.

வரலாறு

நாட்டின் நிலையறிந்து பாட்டிசைத்த பாரதி 1882ஆம் ஆண்டு எட்டையபுரத்தில் தோன்றினர். இளமையில் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கற்றார். காசி

சென்று தங்கியிருந்தகாலை இந்தி, வடமொழி முதலியவற்றை முயன்று கற்றார். இவர் தமிழாசிரியராகவும், சுதேசமித்திரனின் துணையாசிரியராகவும் பணியாற்றினார். வ. உ. சிதம்பரனாரின் நட்புக் கிடைத்த பிறகு முழுதும் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். தேசீய உணர்ச்சியூட்டும் பாடல்களையும் கட்டுரைகளையும் எழுதினார். 1907ஆம் ஆண்டு 'இந்தியா' என்ற வெளியீட்டின் ஆசிரியரானார். விடுதலைப் போரில் ஈடுபட்டுப் புதுவை சென்று வாழ்ந்த காலத்தும் சுதேசமித்திரனுக்குத் தேசீய பாடல்களையும், கதைகளையும், கட்டுரைகளையும் எழுதிவந்தார்.

பாக்களின் போக்கு

பாரதநாட்டைப்பற்றிப் பத்தொன்பது தலைப்புக்களில் பல பாக்களைப் பாடினார். தமிழ்நாட்டைப்பற்றி ஆறு தலைப்புகளில் இனிய பாடல்கள் இயற்றினார்.

சீனமிசிரம் யவனரகம் — இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் — கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு

என்று தமிழ்நாட்டின் பெருமையை முழங்கியிருக்கின்றார். மேலும், சுதந்திரத்தைப்பற்றியும், தேசீய இயக்கங்களைப் பற்றியும், தேசீயத் தலைவர்களைப்பற்றியும், பிற நாடுகளைப் பற்றியும் பல பாடல்களைப் பாடினார். தோத்திரப் பாடல்கள் என்றும், ஞானப் பாடல்களென்றும் இறையுணர்வு மேலிட எண்ணற்றப் பாக்கள் இசைத்துள்ளார்.

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்

என்று மனிதனுக்கு வேண்டுவன எவையெனக் கூறுகின்றார்.

நீதிபற்றியும், சமூகம்பற்றியும், சான்றோர்பற்றியும் பாக்கள் பாடியதோடு பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார். வசனகவிதைகளும் வாரி வழங்கியுள்ளார். இவையேயன்றி

கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு என்ற முப்பெரும் பாடல்களையும் பாடி 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்று பாரோர் போற்றும்படி அழியாப் புகழ்பெற்று விளங்குகின்றார் தம் கவிதைகளின் மூலம்.

இவருக்கு முன்பு தோன்றிய புலவர்கள் பழைய மரபைப் பின்பற்றியே கவிதை புனைந்தனர். ஆனால், இவரோ காலத்திற்கேற்ப பொதுமக்கள் புரிந்துகொள்ளும் தமிழில் கருத்துக்குவியல்களை அள்ளிக் கொடுத்தார். இசையோடு கூடி முழங்குதற்குரிய பாக்கள் பலவும் பதப்படுத்தித்தந்தார். கண்ணன் பாட்டில் அவன்பால் இவர் கொண்ட ஈடுபாட்டைப் பக்திச்சுவை சொட்டப் பாடியிருக்கின்றார். குயில் பாட்டில் கற்பனை நயத்தையும், இயற்கை எழிலையும் சொற்கள் கொண்டே வரைந்து காட்டியிருக்கின்றார்.

இவரின் பாக்கள் எளிமையும், இனிமையுங் கொண்டவை; பொலிவும் வலிவும் பொருந்தியவை; புரட்சி நிறைந்தவை. இழிவை அழிக்கும் எஃகு உள்ளம்படைத்த பாரதி பாக்களின் வழியாகப் புதுமைகளைப் புகுத்தியதால் ஒப்பற்ற ஒரு புலவராய், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புலவராய் விளங்குகின்றார்.

கன்னித்தமிழ்க் கவிமணி

வரலாறு

கன்னித்தமிழில் மணியான கவிதைகளை ஆக்கித்தந்த தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் 1876இல் நாஞ்சில் நாட்டில் (கன்னியாகுமரி மாவட்டம்) நாகர்கோவிலுக்கருகிலுள்ள தேரூரில் பிறந்தார். இவருடைய தந்தையார் நல்ல தமிழறிஞர். ஆகவே, இவருடைய தந்தையாரும் பாட்டனாரும் இளமை முதற்கொண்டு தமிழில் இருக்கும் இனிப்பைக் கவிமணிக்கு வழங்கினர். மேலும், தேரூரில் உள்ள திருவாவடுதுறை ஆதீன மடத்திலிருந்த சாந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுணர்ந்தார்.

இவர் எப். ஏ. வரையில் படித்தார். அதன் பிறகு உமையம்மை என்பவர்களை மணந்து இல்லற வாழ்க்கை

யைத் தொடங்கினார். மனைவியார் இவருக்கு உற்ற துணையாக அமைந்து விளங்கினார்கள்.

இவர் நாகர்கோவிலில் கோட்டாறு என்னும் பகுதியில் இருந்த பள்ளியில் ஆசிரியர் தொழில் பார்க்கத் தலைப்பட்டார். மாணவர்களுடைய உள்ளத்தைப் பிணிக்கும் வகையில் பாடம்சொல்லி நல்ல புகழ்பெற்றதால் திருவாங்கூர் அரசினர் இவரை 'மகாராசா பெண்கள் கலாசாலையில்' தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தினார்கள். அங்கு 1895ஆம் ஆண்டிலிருந்து 1931ஆம் ஆண்டு வரைக்கும் நற்றொண்டாற்றினார். பிறகும் பல பொதுப் பணிகளில் ஈடுபட்டுத் தமிழும், தமிழ்மக்களும் வாழ வழிகாட்டினார். பிறருக்காக வாழ்ந்த பெரும் புலவராம் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை 1954ஆம் ஆண்டு நம்மை விட்டுப் பிரிந்தார்.

பதமான பாக்கள்

இவர் ஆசியசோதி, மலரும் மாலையும், நாஞ்சில் நாட்டு மருமக்கள் மான்மியம், உமர்கய்யாம் பாடல், தேவியின் கீர்த்தனங்கள் முதலிய சிறந்த கவிதை நூல்களைப் படைத்து உலகிற்குத் தந்துள்ளார்.

இவரது 'ஆசிய சோதி' புத்தரின் அருமை பெருமையைப் பாடுவதாகும்.

பாரில் உயிரெல்லாம்—அருளால்
பாது காக்க வந்தோன்
சீரிய நன்மொழிகள் உள்ளம்
தெளிந்து கூறுகின்றான்

என்று கவிமணி எளிய நடையில் எழில்பட புத்தரை நமக்குக் காட்டுகின்றார். புத்தர் ஏழைச் சிறுவன் ஒருவனுக்குச் சாதியில்லையென அறிவுறுத்துகின்றார்.

ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவதுண் டோஅப்பா ?

இவரது கவிதைச் சிறப்பைக் கண்டுணர்ந்த இந்நாள் நாமக்கல் கவிஞர்,

தேசிக விநாயகத்தின் கவிப் பெருமை
தினமும் கேட்பதென் செவிப் பெருமை
ஆசிய சோதி யெனும் புத்தர் போதம்
அழகுத் தமிழில் சொன்னான் அது போதும்

என்று பாடிப் பரவுகின்றார்.

மருமக்கள் மான்மியம் தமிழில் மலர்ந்துள்ள ஒரு புதுமை இலக்கியமாகும். மருமக்கள் வழியைச் சார்ந்த ஒரு குடும்பத்தின் மிக்க சீர்கெட்ட நிலையைக் கற்பனையும், உயர்வு நவிற்சியும் இன்றி உள்ளபடி தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டும் இலக்கியமாகும். இதில் நகைச்சுவை ததும்பி வழிகின்றது. நல்லூரில் தோன்றிய தலைவி ஒருத்தி பஞ்ச கல்யாணிப் பிள்ளைக்கு ஐந்தாவது மனைவியாக வாய்த்து மாமியின் தொல்லைக்கு ஆளாகின்றாள். மாமியின் அரசியற் படலத்தில்,

அரிசியை நிதமும் அளந்து வைப்பாள்
நல்ல மிளகை நறுக்கி வைப்பாள்
கொல்ல மிளகைக் குறுக்கி வைப்பாள்
உப்பில் புளியை உருட்டி வைப்பாள்
கடுகையும் எண்ணிக் கணக்கிட்டு வைப்பாள்

என்று அம்மாமியின் கொடுமையைக் கூறுகின்றார்.

இவர் இயற்கைக் காட்சிகளைப் படம்பிடித்துக் காட்டுவதில் கைதேர்ந்தவர். தோட்டத்தில் பசும் புற்றரையில் பசுவொன்று மேய்கின்றது. பக்கத்தில் கன்றொன்று பாய்கின்றது. அதை,

தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி
அம்மா என்குது வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது கன்றுக் குட்டி
நாவால் நக்குது வெள்ளைப் பசு — பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக் குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப் பசு—மடி
முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி

என்று கன்றுபோல் நம் உள்ளமும் துள்ளப் பாடுகின்றார்.

கன்னித்தமிழ்க் கவிமணியின் பாடல்கள் எழுச்சியுற்ற மன்பதைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகள். இன்றைய இளைஞர்கள் உள்ளத்திற்கு, உணர்விற்கு உணவளித்து, தோளுக்குத் தினவளித்து, தமிழ்ப் பணி புரிய அணிவகுத்து ஆர்ப்பரிக்கச் செய்யும் ஆற்றல் பெற்றவை.

பாவாற்றல் பெற்ற பாரதிதாசன்

பாரதியார் காட்டிய பாதையிலே பாட்டிசைத்துக் கேடறுத்த பாவலன்தான் பாரதிதாசன். அறியாமையை அகற்றி, அறிவொளி பரப்பி, தமிழ் அருமையை எடுத்துச் சொல்லி, தமிழுணர்வு ஊட்ட ஊட்டமிக்க பாக்களைப் பாடி 'புரட்சிக் கவிஞன்' எனப் பெயர்பெற்றுத் திகழ்ந்த செந் தமிழ்க் கவிஞன்தான் பாரதிதாசன்.

வரலாறு

இவர் 1891 ஆம் ஆண்டு புதுச்சேரியில் தோன்றினார். சுப்புரத்தினம் எனப் பெயரிட்டழைத்தனர் இவரின் பெற்றோர். பதினெட்டு வயதிற்குள் தமிழ்ப் பெரும் புலவராய் விளங்கியதால் புதுவை அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரானார். இவருக்கு முத்தமிழிலும் இளமை தொட்டே ஈடுபாடு இருந்துவந்தது. நண்பர் ஒருவரின் திருமணத்தில் பாரதியாரைச் சந்தித்து அவருடைய நட்பைப் பெற்றார். பாரதியாருக்கும் இவரின்பால் அதிக அன்பு ஏற்பட்டது. அவருடைய ஆணைக்கிணங்கி,

எங்கெங்குக் காணினும் சக்தியடா—தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா—அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா

என்று தொடங்கும் பாட்டை இவர் பாடினார். இதன் மூலமாக இவர் சிறந்த கவிஞரெனப் புகழப்பட்டார். பாரதியாரிடம் இவர் பத்து ஆண்டுகட்குமேல் தொடர்பு கொண்டு, அவருடைய உணர்வைப் பெற்று உண்மைக் கவிஞராக மாறினார்,

புரட்சிமிக்க பாக்கள்

இவர் சிறந்த காவியங்களைப் படைத்துள்ளார். அவைகளில் சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய், பாண்டியன் பரிசு முதலியவை சிறந்தவை. சஞ்சீவி பர்வதத்தின் அழகை இளவஞ்சி என்பாள் தன் அத்தானிடம் அழகுசொட்டப் பாடுகின்றாள் :

சாரல் அடைவோமே காதலுக்குத் தக்க இடம்
சாரலும் தண்மாலை நாயகியைச் சாரக்
குயில் கூவிக் கொண்டிருக்கும் ; வாசமுடைய நற்
காற்று குளிர்ந்தடிக்கும் ; கண்ணாடி போன்ற நீர்
ஊற்றுக்கள் உண்டு கனிமரங்கள் மிக்க உண்டு.

இவர் இயற்கையில் நல்ல ஈடுபாடுஉடையவர். மாலைப் பொழுதில் சோலையில் முல்லை இவரைப் பார்த்துக் குலுக் கென்று சிரித்ததாம் ! அதை,

சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க் கொடி கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே

என்று பாடி மகிழ்கின்றார்.

இவருக்கிருக்கும் தமிழ்ப் பற்றை எவரே அளந்து கூறவல்லார்! தமிழுக்கு அமுதென்று பேராம்; அந்தந் தமிழ் நம் உயிருக்கு நேராம்! தமிழுக்கு மதுவென்று பேராம்; இன்பத் தமிழ் நம் உரிமைச் செம்பயிருக்கு வேராம்! தமிழ் நம் இளமைக்குப் பாலாம் ; இன்பத் தமிழ் நல் புலவருக்கு வேலாம்! தமிழ் கரும்பு தந்த தீஞ்சாறும் ; கனிதந்த நறுஞ்சுளையாம் ; கவின் செய் முல்லையாம்! அரும்பு தந்த வெண்ணகையாம் ; அன்பாம் ; கட்டியாம் !

இவ்வாறு தமிழோடு தமிழாய் ஒன்றித்துவிட்ட, இரண்டறக் கலந்துவிட்ட தமிழ்க் கவிஞன் இந் நாளில் நமக்கு வாய்த்திருந்தது நம் தமிழ்த்தாய் செய்த தவமேயன்றி நாம் செய்த தவமன்று !

பெண்களுக்கு ஒரு நீதி கூறும் பேதையர்களைக் கண்டு நெஞ்சம் பதைபதைக்க,

கல்யாணம் ஆகாத பெண்ணே—உன்
கதிதன்னை நீ நிச்சயம் செய்க கண்ணே !

என்று கூறுகின்றார்.

வல்லமை பேசியுன் வீட்டில்—பெண்
வாங்கவே வந்திடுவார்கள் சிலபேர்கள் ;
நல்ல விலை பேசுவார்—உன்னை
நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்
கல்லென உன்னை மதிப்பார் — கண்ணில்
கல்யாண மாப்பிள்ளை தன்னையுங் காட்டார் ;
வல்லி உனக் கொரு நீதி—இந்த
வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்சவேண்டாம்

என்று வஞ்சக நிலைக்காக வருந்துகின்றார்.

பாவாற்றல் பெற்றுத் தமிழ்மக்களின் தனிப்பெரும் புலவரா கவிளங்கிய இவரைக் கூற்றுவன் 1964 ஏப்ரல் 21ஆம் நாள் நெருங்கி உயிரைப் பறித்துச் சென்றுவிட்டான். எனினும், இம்மாபெரும் புலவரின் மூச்சும் பேச்சும் நம்மை முயற்சியில் முடுக்கிவிட்டு மொழியைக் காக்க, அதன் முன்னேற்றத்திற்கு உழைக்க என்றும் நம்மைத் தூண்டிக் கொண்டே இருக்கும்.

கவிஞர் கண்ணதாசன்

இன்று படக்காட்சித் துறையில் பல புலவர்கள் ஈடுபட்டு இனிமையான பாக்களை எழுதி மக்களை மகிழ்விக்கின்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் கவிஞர் கண்ணதாசனாவார். இவர் நல்ல பாவன்மை பெற்றவர் மாங்கனி, ஆட்டனத்தி, ஆதிமந்தி போன்ற காவியங்களையும், பல்சுவைப் பாக்களையும் இயற்றியிருக்கின்றார். இவரின் படக்காட்சிப் பாட்டுக்கள் சொல்லழகும், பொருளழகும் பொதியப்பெற்றவை. 'மாலையிட்ட மங்கை' யென்ற படத்தில் பாடப்படும் ஒரு பாட்டு: போர்வந்த நேரத்து வீரமிக்க தாய் ஒருத்தி தன் மகனைப் பார்த்து:

அன்னையின் நாட்டைப் பகைவர்கள் சூழ்ந்தார்
புறப்படு மகனே புறப்படடா!
உன்னரும் மாமன் படைகொண்டு வந்தார்
வேலொடு மகனே புறப்படடா!
திருமணம் முடித்து மணமகளோடு
செல்வாய் என நான் நினைத்திருந்தேன்—என்
மருமகள் வெற்றித் திருமகள் உன்னை
வாவென் றழைக்கிருள் புறப்படடா!
புறப்படு மகனே புறப்படடா!

என்று மிடுக்கு நடையில் அடுக்குமொழியில் அழகுசொட்ட எழுதுகின்ருர்.

இக்காலப் பாக்களெல்லாம் மக்களுக்குரிய பாக்களாக, மக்களது வாழ்க்கையை வரைந்து காட்டும் பாக்களாக, மாண்புடைய வாழ்க்கையை வகுத்துக்காட்டும் பாக்களாக, வண்ண வண்ணப் பாக்களாக, வளமுள்ள பாக்களாக மலர்கின்றன. எல்லோரும் படித்தின்புறக்கூடிய எளிய முறையில் அமைவதே இன்றைய பாக்களின் சீரிய போக்காகும். இப்புதிய போக்கு வளர்க! வாழ்க!

V. தமிழ் இலக்கியம் அன்றும் இன்றும்

சங்ககாலத்தில் தமிழகத்திலே தோன்றிப் பாட்டிசைத்த பாவலர்கள் அன்றைய சூழ்நிலைக்கேற்ப அரசர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அவர்களைப் போற்றியும் புகழ்ந்தும், இழிவுகண்டவிடத்து இகழ்ந்தும் இடித்துரைத்தும் நாட்டு மக்களுடைய அகவாழ்க்கையையும் புறவாழ்க்கையையும் அருமையாக வடித்தும், வாழ்க்கை வழிகாட்டிகளாக வாழ்ந்தார்கள். ஒவ்வோர் அறத்தையும் வலியுறுத்தத் தனித்தனிப் பாட்டிசைக்காது வாழ்க்கை முழுதையுமே பாக்களிலே படம்பிடித்துக் காட்டி எந்தெந்தக் கருத்துக்களை எந்தெந்த அளவோடு சொல்ல வேண்டுமோ அந்தக் கருத்துக்களை அந்தந்த அளவோடு சொல்லியிருக்கின்ருர்கள். போரைப் போற்றினர்கள்; ஆனல், போரறத்திற்கு மாருகச் சென்ற அரசர்களைத் தூற்றினர்கள்.

ஐந்திணைக் காதலே அருமையுடைத்து என்றார்கள்; பெருந்திணையும், கைக்கிளையும் பிழைகொண்டவை என்றார்கள்.

முத்தமிழை வளர்த்தார்கள்; மூவேந்தர்கள் அவர்களுக்கு ஆதரவளித்தார்கள். அரசர் மன்றங்களிலே புலவர்கள் பாமாரி பொழிந்தனர்; புரவலர்கள் காதுக்கினிய விருந்தாக உண்டு மகிழ்ந்தனர். பொன்னையும், பொருளையும், முத்தையும், மணியையும் கரிகள்மீதும் பரிகள்மீதும் தேர்கள்மீதும், "கொண்டு செல்லுங்கள்" என்று அள்ளிக் கொடுத்தனர் வள்ளியோர் பலர். அன்று புலவர் வாழ்ந்தனர் புரவலராலே; தமிழ் வாழ்ந்தது இவ்விருவராலுமே.

இடைக்காலத்தில் எத்தனையோ மாற்றங்கள். ஆரிய மொழியும், ஆரிய கருத்துக்களும் தமிழகத்தில் ஆதிக்கம் பெற்றன. தமிழ் வளர்த்த மூவேந்தர் பரம்பரை தாழ்வுற்றது. பல்லோர் படையெடுப்பு நாட்டை நிலைகுலையச் செய்தது. பல்லவர் ஆட்சியும், நாயக்கர்கள் ஆளுகையும், முசுலிம்கள் படையெடுப்பும், வெள்ளையர்களின் தொல்லையும் ஏறத்தாழ ஆயிரத்தைந்நூறு ஆண்டுக்காலம் நமது மொழி வளர்ச்சியைக் குன்றச்செய்தன. புலவர்கள் புராணங்கள் பாடுவதிலும், தனிப்பட்டோரை வாழ்த்துவதிலும் காலத்தைக் கழித்தார்கள். மொழித்தூய்மை கெட்டது. இலக்கியவளம் குன்றிற்று. நாட்டிலே தமிழ் ஆர்வமும் தழைக்காது போயிற்று.

இன்று நம்மவர் மொழியின் முற்காலத்து முன்னேற்றத்தை யறிந்து அஃது அன்றுபோல் இன்றும் பெருமை சிறக்க, பெரும்வளம் பிறக்க வாழவேண்டுமென்ற எண்ணங்கொண்டு எளிமை மிக்க கவிதைகளாலும், இனிமை மிக்க கட்டுரைகளாலும், கதைகளாலும், நாடகங்களாலும், படக்காட்சி முறைகளாலும், பதமான பாட்டிசைக்கும் பாங்காலும் வளர்க்க முனைந்துள்ளனர். இன்று தோன்றும் இலக்கியங்கள் எல்லாவகையிலும் புதுமைப் போக்குடையன.

அகமும் புறமும் என்ற இரண்டு பாகுபாட்டின் அடிப்படையை இன்று இலக்கிய ஆசிரியர்கள் அவ்வளவாகக்

கருத்தில் கொள்ளாது பூவைப்பற்றியும், புல்லைப்பற்றியும், தொழிலாளரைப்பற்றியும்,தோழர்களைப்பற்றியும், மண்ணைப் பற்றியும், விண்ணைப்பற்றியும் கவிதை பாடுகின்றார்கள்; கற்பனைக் கதை வடிக்கின்றார்கள்.

மொழித்துறையில் பல ஆராய்ச்சிகள் நடக்கின்றன. எழுத்தாராய்ச்சி, சொல்லாராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி இவைபோன்ற பல. இன்றைய உரைநடை வளர்ச்சியொன்றே தமிழ் அன்றைவிட இன்று புதிய போக்கில் போய்க்கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றது.

மனித வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட, அம்மாற்றங்களுக்கேற்ப அவன் பேசும் மொழியும், எழுதும் இலக்கியமும் மாறிக்கொண்டுதானிருக்கும். நம்முடைய தமிழிலக்கியமானது அன்றைவிட இன்று எத்துணையோ முன்னேற்றங்களை எய்தி இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. எனவே, பழையன கழிதலும் புதியன புகுதலும் இலக்கிய மரபாகலான், புதியனவாகப் பூத்துக்குலுங்கும் இக்கால இலக்கியங்களையும் இன்முகத்துடன் வரவேற்று, உள்ளத்திற் பொதித்துத் தமிழின்பம் பெற்றின்புறுவோமாக!

பல்கலைக் கழக வினாத்தாள்கள் :

1. ஏப்ரல்—1960

1. "தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலமே தலைசிறந்த காலம்"— இக் கொள்கையை ஆராய்க.

(அல்லது)

பாண்டியர் மதுரையில் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தார்கள் என்பதற்குச் சான்று தருக.

2. பரணிப் பாட்டு, பள்ளுப் பாட்டு — இவற்றுள் ஒன்றன் அமைப்பும் நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக.

2. செப்டம்பர்—1960

1. சங்கத்தமிழின் சிறப்பியல்புகளைச் சுருக்கமாக உணர்த்துக.

(அல்லது)

பிள்ளைத் தமிழ், குறவஞ்சி—இவற்றுள் ஒன்றன் அமைப்பும், நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக.

2. மேலைநாட்டு நல்லறிஞர் தமிழ் மொழிக்குச் செய்துள்ள சேவையை மதிப்பிடுக.

3. ஏப்ரல்—1961

1. சங்க இலக்கியத்தின் தனிச் சிறப்பியல்புகளைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)

தமிழ் இலக்கியத்தில் உரையாசிரியர்கள் பெற்றுள்ள இடத்தையும் சிறப்பையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

2. கிறிஸ்தவப் புலவர்கள் தமிழிலக்கியத்திற்குச் செய்த தொண்டு.

(அல்லது)

இருபதாம் நூற்றுண்டில் தமிழ் நாடக வளர்ச்சி என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

4, செப்டம்பர்—1961

1. தமிழில் பெருங்காப்பியம் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறுக.

(அல்லது)

சங்ககாலத்து நீதி நூல்களின் சிறப்பை எழுதுக.

2. சிறுகதையின் இலக்கணம் கூறி, அது ஒரு சிறந்த, இலக்கிய வகையாகும் என்பதை ஆராய்க.

5. ஏப்ரல்—1962

1. புறநானூறு (அல்லது) பத்துப்பாட்டு பற்றிய இலக்கிய வரலாறு என்ன ?

(அல்லது)

கம்பர் காலத்துத் தமிழ் இலக்கியம் பற்றி நீவிர் அறிவன யாவை ?

2. பௌத்தர்கள் தமிழ்த் தொண்டு (அல்லது) நாடக நூலாசிரியர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

6. செப்டம்பர்—1962

1. கம்பருக்கு முற்பட்ட தமிழ்க் காவியங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

பக்தி இலக்கியம் வளர்ந்த வரலாறு பற்றி எழுதுக.

2. முஸ்லிம் தமிழ்ப்புலவர்கள் அல்லது உரைநடை இலக்கிய வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.

7. ஏப்ரல்—1963

1. புறநானூறு அல்லது பதிற்றுப்பத்து வரலாற்று நூலாகவும் விளங்குகிறது என்பதைத் தெளிவு படுத்துக.

(அல்லது)

இசைத் தமிழின் இலக்கிய வரலாறு யாது?

2. இருபதாம் நூற்றுண்டு பற்றிய இலக்கிய வரலாற்றை எழுதுக.

8. செப்டம்பர்—1963

1. தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியத்தின் சிறப்பை மதிப்பிடுக.

(அல்லது)

பதினெண் கீழ்க்கணக்கின் இலக்கிய வரலாறு யாது?

2. தமிழ் உரைநடையின் வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

9. ஏப்ரல்—1964

1. சமணர்கள் அல்லது ஐரோப்பியர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு பற்றி மதிப்பிடுக.

2. தேவார திருவாசகம் அல்லது நாலாயிர பிரபந்தம் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

தமிழில் சிறுகதையும் நாவலும் பற்றிய வரலாற்றை எழுதுக.

100581

28/12/82